
கொங்கணவர் வாதகாவியம் 3000

(மூலமும் உரையும்)

பாகம் - 2



தாமரை நூலகம், சென்னை - 600 026.

கொங்கணவர் வாதகாவியம்

இரண்டாம் காண்டம்

கருத்துரையுடன்

பதிப்பாசிரியர்
ஆர். சி. மோகன்

தொலை பேசி - 4800249.

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி,
வடபழனி, சென்னை - 600 026.

தாமரை வெளியீடு	:	94
முதல் பதிப்பு	:	மே 1993
இரண்டாம் பதிப்பு	:	ஜூலை 2002.
மூன்றாம் பதிப்பு	:	அக்டோபர்
நான்காம் பதிப்பு:		**ஜனவரி : 2022**

நூலைப் பற்றி

உரிமை பெற்றது.

நூலின் பெயர்	:	கொங்கணவர் வாதகாவியம் இரண்டாவது காண்டம்
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி, வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	**ஜனவரி : 2022**
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	21 செ. மீ. ஷ 14 செ. மீ.
தாளின் தன்மை	:	14.4 வெள்ளைத்தாள்
அட்டை	:	13.8 சேஷசாயி
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	346 + 8
பிரதிகள்	:	1000.
பைண்டிங்	:	செக்ஷன்
விலை	:	ரூ. 175
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆஃப்செட், சென்னை - 34.

பதிப்புரை

கொங்கணவரின் பாடல்களிலே தமிழ் கொஞ்சி விளையாடுகிறது. குற்றாலத்து அருவியைப்போல் சொற்கள் கொட்டு கொட்டென்று கொட்டு கின்றன. அப்பப்பா என்ன வேகம்? என்ன கம்பீரம்? என்ன அழகு? இந்தப் பாடல்களைப் படிக்கக் புண்ணியம் செய்து வைத்திருக்க வேண்டும்.

திருமலையில் சமாதி கொண்ட என் ஐயா கொங்கணவரே! உன் திருவாய் பொழிந்த தமிழ் அமுதை இவ்வளவு காலம் எப்படி ஐயா இந்தத் தமிழகம் செவிமடுக்காதிருந்தது? தமிழ் இனத்தின் தமிழுணர்ச்சி செத்துப் போனதாலா? அன்னிய ஆதிக்கத்தின் வெறித்தனத்துக்குப் பயந்து ஆமை போல் ஐந்தடங்கி ஊமையாய்ச் சுருண்டு விட்டதாலா? தமிழனின் அறிவோடு புலன்களும் ஆரிய மோகம், ஆங்கில மோகம் என்ற படுகுழிகளில் விழுந்து புதையுண்டு போய் விட்டதாலா?

கொங்கணவா, ஆயினும் தமிழ் இனம் நன்றி மறந்ததோர் இனம் அல்ல ஐயா! அதற்கு நானே சாட்சி! உன்னுடைய கொட்டுகின்ற தமிழ் மழையில் நான் குளித்தது போல் இந்த உலகமும் குளிக்க வைப்பேன். என் உணர்ச்சிகளைத் தீபமாக்கி ஒவ்வொரு தமிழனின் வீட்டிலும் சென்று ஒளியேற்றி வைப்பேன்.

சித்தர்கள் மீண்டும் உலகத்திற்கு வரவேண்டிய காலம் வந்துவிட்டது. தமிழன் தலைநிமிர்ந்து நின்று உலக மக்களுக்குச் சவால் விடக்கூடிய நாள் வெகு தொலைவில் இல்லை. அந்தத் திருநாளின் வரவுக்கு முகமன் கூறிய பெருமையில் எனக்கு அணுவளவு பங்கு உண்டு என்ற எண்ணத்தில் பூரித்துப் போகின்றேன். மறுபடியும் கொங்கணவர் நூலைப் பார்க்கின்றேன்.

மலையுள்ளே இருந்து வாழும்
　　மறைந்த நல் ரிஷிகள்சித்தர்
கலையுள்ளோர் வாசியோர்கள்
　　கைகண்ட யோகத்தோர்கள்
நிலையுள்ள மயக்கந்தீர
　　நேர்பட விந்த நூலைச்
சிலையுள்ள பதுமை போலே
　　தெளிவுறச் சொன்னேன் பாரே!

கல்லைச் சிலையாகச் செதுக்கி வைத்தாற்போல் பளிச்சென்று தெரியும்படியாக, கண்டோர் மயங்கும் கவின் பெற்றதாக இந்த நூலில் சொல்லி வைத்திருக்கிறேன் என்கிறார் கொங்கணவர்.

மலைகளுக்குள்ளே, அதாவது குகைகளில் மறைந்து வாழ்கின்ற ரிஷிகளும், சித்தர்களும் வாசியோகத்தில் நிலைத்து நிற்பவர்களாவார். வாசியோகத்தில் நிலைத்து நிற்பவர்களாலேயே காலம் கடந்து யுகம் யுகமாக வாழ்ந்து கொண்டிருக்க முடியும். அப்படிப்பட்டவர்களுக்கு ஏற்படக் கூடிய மயக்கமும் தீரும்படியாக இந்த நூலைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன் என்கிறார் கொங்கணவர்.

கொங்கணவரின் கவி நயத்துக் எடுத்துக்காட்டாக எத்தனையோ பாடல்களை எடுத்துக்காட்டலாம். இங்கே ஒன்றிரண்டு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

காரிவங்கம் அப்பிரகம்
கனத்த கிளிஞ்சில் அண்டத்தோல்
நேரி நிமிளை வெண்கலமும்
நிறைந்த தூாவும் கெந்தியுடன்
சேரி சாரம் சிலையுடனே
தெவிட்டாச் சிங்கி சவ்வீரம்
பாரிற் புனுகும் இரும்புக்குப்
பகை சத்துருவாம் வெள்ளையென்னே!

இரும்புக்கு பகையான உலோகங்கள், மற்ற பொருள்களைப் பற்றிக் கூறும் பாடல் இது.

காரி வங்கம் அப்பிரகம்
கனத்த கிளிஞ்சில் அண்டத்தோல்

சொற்கள் எவ்வளவு வேகமாக வந்து விழுகின்றன என்பதைப் பார்க்கும் போது வியப்பாக உள்ளது.

காரி – காரீயம்
வங்கம் – (மற்றதான) வெள்ளீயம்

காரி, வங்கம் என்று இரண்டு முறை கூறியதால் காரீயம், வெள்ளீயம் என்று பொருள் கொள்கிறோம்.

அப்பிரகம் – அப்பிரகம்

கனத்த கிளிஞ்சில் – கிளிஞ்சில் என்று சொன்னவுடனே அதன் கனம் தான் நினைவுக்கு வருகிறது. நண்டின் ஓடு, நத்தையின் ஓடு, முட்டையின் ஓடுபோல் கிளிஞ்சில் லேசான பொருள் அல்ல.

91/4

தொடர்ந்து வரும் அண்டோடு என்ற சொல் கனம் குறைந்த இலேசான வகைக்கு எடுத்துக்காட்டாக வருகிறது.

இப்படி ஒவ்வொரு பாட்டாக எடுத்துக் காட்டிக் கொண்டே போவதானால் இந்த நூல் இடம் கொள்ளாது.

கடைசியாக ஓரே ஒரு பாடல்.

மயக்கமும் தெளிந்து போகும்
　　மாயியைப் பூசை பண்ணு
மயக்கமும் தெளிந்து போகும்
　　வாசியைப் பூட்டி வாங்கு
மயக்கமும் தெளிந்து போகும்
　　வன்காய சித்தி பண்ணு
மயக்கமும் தெளியுமையா
　　மகத்துக்கள் பதத்தைப்போற்றே!

இந்தப் பாடலின் பொருள் நினைக்க நினைக்க வியப்பூட்டுவதாகும். மனிதனுக்கு எத்தனையோ வகை மயக்கங்கள் உண்டாகலாம். தலையில் அடிபட்டு நினைவு தவறிப்போவது ஒருவகை மயக்கம். தாங்க முடியாத வலியால் துடித்த உணர்வது தப்புவது ஒரு வகை மயக்கம். இதைச் செய்யலாமா வேண்டாமா என்று குழப்பமடைந்த நிலையில் வருவது ஒருவகை மயக்கம். எதிர்பாராமல் ஒரு உண்மையை அதிசயத்தை, அற்புதத்தைக் கண்டவுடன் ஏற்படுவது ஒருவகை மயக்கம். தேவியைப் பூசை செய்து, பிராணாயாமத்தால் மூச்சை வென்று, உடலை அழியாத நிலைக்குச் சித்தி பண்ணி, பெரியோர்களைப் பூசித்தவர்களுக்கு எல்லாவிதமான மயக்கங்களும் தெளிந்து போகும் என்கிறார் கொங்கணவர்.

மயக்கம், மயக்கம் என்று சொற்கள் திரும்பித் திரும்பி வருவது கொள்ளைப் பிடிப்பையும் உறுதியையும் காட்டுவதோடு பாடலை மெதுவாக மனதில் அசை போட்டுப் பார்க்கவேண்டும் என்ற ஆர்வத்தையும் தூண்டுகிறது.

இப்படி எத்தனையோ பாடல்கள். தமிழ் தந்த அற்புதம் கொங்கணவர் நூல்! நயம் மிகுந்த பாடல்கள்! பொருள் செறிந்த பாடல்கள்! மனிதனை அமரனாக்கும் சாகாக் கலை பற்றி உணர்த்தும் பாடல்கள்! இந்த தமிழ்ப் புதையல் அடியோடு அழிந்துவிடும் நிலையில் இருந்தது என்பதை எண்ணிப் பார்க்கும்போது என்னையறியாமல் கண்ணீர் பெருகுகிறது.

இரண்டாம் காண்டம்

இறைவா தமிழகத்திற்கு ஏன் இந்தச் சோதனையைத் தந்தாய்? தமிழனை எவ்வாறு இத்தகைய இருள் கடலில் மூழ்க விட்டாய்? தமிழ்ச் சங்கத்திற்கு நீ தலைமை தாங்கினாய் என் சொல்கிறார்களே? தமிழுக்கும் இந்த கதி வரலாமா? என்று விம்மி விம்மி அழத் தோன்றுகிறது.

தமிழனே விழித்துக் கொள்! உன்னைப் பற்றித் தெரிந்து கொள்! கடல் கொள்ளப்பட்டதாலும், கரையான் அரித்ததாலும், காலம் அழித்ததாலும் எத்தனையோ செல்வங்களை இழந்து விட்டாய். மீதம் உள்ளதையாவது காப்பாற்றிக் கொள்!

ஒரு வழியாக இந்த நூலின் இரண்டாம் காண்டம் வெளிவந்து விட்டது. தொடர்ந்து மூன்றாம் காண்டமும் தொடர்ந்து பிற நூல்களையும் வெளிக்கொணர விரும்புகிறோம். தமிழ் மக்கள் தொடாந்து ஆதரவளித்துக் காப்பாற்ற வேண்டுகிறோம்.

கடைசியாக ஒரு வார்த்தை. இந்த நூலுக்குத் தம்மால் இயன்றவரை உரை எழுதிக் கொடுத்த டாக்டர் ஆர். கோவிந்தராஜன் அவர்களுக்கு நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறோம். குறை நிறைகள் இருந்தபோதிலும் எத்தனையோ பேர் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்த போதிலும் அவர் தம்மால் இயன்றவரைத் தமது கடமையைச் செவ்வனே செய்திருக்கிறார் என்று நம்புகிறோம்.

எஸ். பி. இராமச்சந்திரன்
தாமரை நூலக நிறுவனர்

பொருளடக்கம்

இரண்டாம் காண்டம்

உ

கடவுள் துணை

கொங்கண நாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

வாதகாவியம் 3000

இரண்டாம் காண்டம்

நடுக்காண்டம் பாடுகிறேன் பூரணமேகாப்பு
நலமான சுண்ணாம்புக் காடுகாடு
அடுக்கின்ற வங்கமொன்று நாகமொன்று
அப்பனே ஈயமொன்று உருகும்போது
தடுக்கின்ற சூதமொன்றும் அதிலேவிட்டுத்
தாளகமாஞ் சுன்னமொன்றும் அதிலேதூவி
மடுக்கின்ற உப்பாலே பூரச்சுன்னம்
மூட்டியோர் எடையிட்டு வறுத்திடாயே (பா. 1)

நடுக்காண்டம் சொல்வதற்கு, இதில் முதலாவதாக சுன்னங்களைப் பற்றிப் பாடுகிறேன். பூரணப் பொருளே காப்பாக அமைய வேண்டு கிறேன். வங்கம் ஒரு பங்கும் நாகம் ஒரு பங்கும் ஈயம் ஒரு பங்கும் சேர்த்து குகையில் வைத்து உருக்கி அதனுடன் சூதம் ஒரு பங்கும் கூட்டிப் பின்பு இதனுடன் தாளகச் சுன்னம் ஒரு பங்கும் கல்லுப்பால் கட்டிய பூரச்சுன்னம் ஒரு பங்கும் கூட்டி கரண்டியில் வைத்து வறுக்க வேண்டும்.

வறுத்தவதைக் கரண்டியிலே கிண்டித்தூளாய்
வாங்கி அதில் நாலிலொன்று வீரம்கூட்டி
நிறுத்தி தனைக் கருவாலே வில்லைகட்டி
நேராக வூதப்பா சுண்ணாம்பாகும்
கறுத்ததுதான் கண்டாக்கால் வீரங்கூட்டிக்
கைமுறைபாய்க் கருவாலே வில்லைகட்டி
மறுத்ததனைச் சுண்ணாம்புக் குகையிலிட்டு
மாட்டிநன்றா யூதிடவே சுண்ணாம்பாமே. (பா. 2)

வறுத்த தூளுடன் நாலில் ஒரு பங்கு வீரம் சேர்த்து முட்டையின் வெண்கருவால் அரைத்து வில்லை தட்டிக் குகையில் வைத்து ஊதினால் சுண்ணமாகும். இச்சுண்ணத்துடன் வீரம் சேர்த்து முட்டையின் வெண்கருவால் அரைத்து வில்லைதட்டி குகையில் வைத்து ஊதினால் சுண்ணமாகும்.

ஆமிந்தச் சுண்ணத்தை நீற்றிக்கொண்டே
அந்தெடைக்குச் சாரமிட்டே ஆட்டநீறாம்
ஓமிந்த நீருக்குள் சூதம்வார்த்தே
உத்தமனே அசைத்தாட்ட மெழுகாய்ப்போகும்
தாமிந்தச் சூதத்தை ஐஞ்சுன்னக் குகையில்
தாக்கிவைத்துப் புடம்போடச் சுன்னமாகும்
வேமிந்தச் சுன்னத்தால் உபரசமும்சாகும்
வேகிறதோர் விதிமெல்லாம் விளம்புறேனே. *(பா. 3)*

இச்சுண்ணத்தை ஒருநிறையாக எடுத்து அவ்வெடைக்கு சரிசமமாக சாரம் சேர்த்து அரைத்தால் நீராய்ப் போகும். இந்நீரில் சூதத்தைச் சேர்த்து அரைத்தால் மெழுகாகும். இம்மெழுகை ஐந்து சுண்ணக் குகையில் வைத்துப் புடம் போட்டால் சுண்ணமாகும். இச்சுண்ணத்தால் உபரசங்கள் அனைத்தும் சாகும் உபரசங்களில் இச்சுண்ணத்தைக் கூட்டும் முறையைக் கேள்!

விளம்புறேன் சுன்னத்திற் புழுகுசீனம்
வேதித்தே உபரசத்தில் சரக்கில்பூசி
விளம்புறேன் ஊதிடவே எல்லாஞ்சுன்னம்
வெவ்வேறாம் நவலோகம் சாரகாரம்
விளம்புறேன் சுண்ணாம்பாய் கோடாகோடி
வேதைசொல்ல முடியாது வேகந்தானும்
விளம்புறேன் சுன்னத்தில் சவ்வாதுகாரம்
வேதித்துப் பதனமாய் விளங்கச்செய்யே. *(பா. 4)*

சூதச்சுண்ணத்துடன் புனுகும், சீனமும் சேர்த்து அரைத்து உபரசத்தின் மேல்பூசி குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும். அதேபோல் சூதச்சுண்ணத்தை நவலோகத்தின் மேலும் காரசாரத்தின் மேலும் பூசிப் புடம்போட்டால் அனைத்தும் சுண்ணமாகும் இச்சுண்ணத் தால் கோடானுகோடி வேதைகள் உண்டாகும். சூதச்சுண்ணத்துடன் சவ்வாதும் காரமும் சேர்த்து மததித்து.

செய்யப்பா சவாதெடுத்து உபரசமுஞ்சரக்கும்
தேய்த்தவுடன் மணிபோலத் திரண்டேஆடும்
மெய்யப்பா மெய்யப்பா பார்த்தபடி சொன்னேன்
வேறொன்றும் ஒளிப்பில்லை வெளியாய்ச் சொன்னேன்
பொய்யப்பா என்னாதே பார்த்துரைத்துச் சொல்லு
புகழான ரசச்சுன்னம் தொட்டேஏறக்
கையப்பா எட்டாது நினைவெட்டாது
காற்றிலிட்ட தீப்போலே கலருந்தானே. (பா. 5)

உபரசத்தின் மேல் பூசித் தேய்த்தால் நிமிஷத்தில் மணிபோல் திரளும். இவையாவையும் நான் பார்த்தபடி கூறியுள்ளேன். இதில் ஒளிவு மறைவேயில்லை. இச்சூதச்சுண்ணத்தை போட்டு எந்தச் சரக்கை உருக்கினாலும் தலைதூக்காமல் உடனே மடியும்.

தானென்ற சுன்னத்தாற் பூரம்தொட்டுத்
தாளகத்தால் வங்கத்தால் நிமிளைதொட்டு
ஊனென்ற சாரத்தால் துரிசிதொட்டே
ஓங்கியதோர் வீரத்தால் பறியைத்தொட்டுக்
கானென்ற சரக்குமுதல் காரசாரங்
கையிலிட்ட உபரசமும் மாளும்மக்காள்
வானென்ற தாயவள் மனோன்மணிக்குமப்பால்
மகத்தான உப்பேது பொட்டிலையாமுப்பே. (பா. 6)

சூதச் சுன்னத்துடன் வீரம் சேர்த்து தங்கத்தின் மேலும், சாரம் சேர்த்து துரிசின் மேலும், பூரம் சேர்த்து தாளகத்தின் மேலும் வங்கத்தின் மேலும் நிமிளையின் மேலும் பூசி ஊதினால் அனைத்தும் சாகும். சூதச்சுண்ணத் துடன் மேற்கூறிய அனைத்து சுண்ணத்தையும் சேர்த்து உபரசத்தின் மேல் பூசினால் அனைத்தும் மாளும். தாயான மனோன்மணிக்கு அப்பால் வேறு ஒரு தெய்வமும் இல்லாததுபோல் பொட்டிலுப்புக்கு மிஞ்சியது எதுவும் இல்லை. (பொட்டிலுப்பு - வெடியுப்பு)

வெடியுப்புநீர்

பொட்டிலை உப்ப தெட்டு
புளி ஆறு சீனம் ஒன்று
விட்டமாம் சாரம் ஒன்றும்
இயல்பெற இடித்தே நையத்

தட்டியே வில்லை போலத்
தணலிலே கொளுத்து வீரேல்
சிட்டரே சுழன்று வெந்து
செய்தது சுண்ண மாமே. (பா. 7)

சுண்ணத்தைப் பனியில் வைக்கச்
சுழன்றது துடியாம் பின்னர்
பன்னுற்ற சாரம் கட்டும்
பகர்ந்த நற் சீனம்கட்டும்
என்னுற்ற தூரிசி காரம்
இயல்பட இறுகிக் கட்டும்
மன்னுற்ற சூடன் கட்டும்
மாநாகம் கட்டும் பாரே. (பா. 8)

பொட்டிலுப்பு எட்டுப் பலமும், புளி ஆறுபலமும் சீனம் ஒரு பலமும் சாரம் ஒரு பலமும் ஒன்றாகச் சேர்த்து இடித்துத் தணலில் கொளுத்தினால் சுழன்று வெந்து சுண்ணமாகும். இச்சுண்ணத்தைப் பீங்கானில் இட்டுப் பனியில் வைத்தால் செயநீராகும். இச்செயநீரினால் சாரம், சீனம், துரிசு, காரம், சூடம், நாகம், போன்ற சரக்கெல்லாம் இறுகிக்கட்டும்.

பாரும் நீரிந்த நீரில்
பரியுடன் சாரம் ரெண்டு
தாருயிர் காரம் ஒன்று
தனியரை வீரங் கூட்டிச்
சேருயிர் பூரங் காலாய்ச்
சேர்த்தரை இந்த நீரில்
நீருயராக வார்த்து
நெகிழவே குப்பி வையே. (பா. 9)

வைத்திடுங் குழம்புக் குள்ளே
வளம்பெறக் குடவன் காய்ச்சிப்
பைத்திடத் தோய்த்து வாநீ
பருவமாய்ப் பதினைந் தாக
மைத்திடச் செம்பு வர்ணம்
வளம்பெற உள்ளே புக்கும்
எய்த்திடத் தகட்டு மேலே
லேபன மருந்து கேளே. (பா. 10)

சாரம் இரண்டுபலம் காரம் ஒரு பலம் வீரம் அரைப் பலம் பூரம் கால்பலம் ஆக இந்நான்கு வகை சரக்கையும் வெடியுப்புச் செயநீரால் அரைத்து குழம்பு பதத்தில் குப்பியில் எடுத்து வைத்துக் கொண்டு இக்குழம்பில் பித்தளை தகட்டைக் காய்ச்சித் தோய்க்க வேண்டும். இவ்வாறு பதினைந்து முறைசெய்தால் பித்தளை செம்பின் நிறம் உடையதாக மாறும். செம்பு வர்ணமான இத்தகட்டின் மேல் பூசுவதற்கு மருந்தைக் கூறுகிறேன் கேள்!

சுண்ணமுறை

கேளுநீ துருசுச் சுன்னங்
கெடிபடும் வீரச் சுன்னம்
வாளுயர் சூதம் பூரம்
வளம்பெறுங் கார மைந்தும்
தாளுயர் கோழிப் பிச்சால்
சாரவே அரைத்து வைத்து
யேளுயர் குடவன் மேலே
இதம்பட இசையப் பூசே. (பா. 11)

பூசி நீவரட்டி மெள்ளப்
புகழுறப் புடத்தில் வைத்து
மாசிலாக் காரங் குத்தி
வளம்பெற உருக்கிப் பார்க்கக்
கோசிலா மாற்றோர் ஏழு
குமட்டி டுமாணிக் கொக்க
வாசிலா வாத்தாள் சொல்ல
அறைந்த நூல் மூலக்கட்டே. (பா. 12)

துருசுச்சுண்ணம், வீரச்சுண்ணம், சூதம், பூரம், காரம் ஆகிய ஐந்துவகை சரக்கையும் கோழிப்பிச்சால் அரைத்து மேற்படி தகட்டின் மேல்பூசிப் புடம்போட்டு எடுத்துக் கொண்டு அத்தகட்டுடன் காரம் சேர்த்து உருக்கினால் ஏழு மாற்றுள்ள தங்கமாகும். ஆணிப் பொன் மாற்று வித்தையான இம்முறையை தாய் சொல்லக் கேட்டு நான் இந்த நூலில் கூறி வைத்தேன்.

திருவின நின்ற சூதம்
திசையெலாங் குருவே யாகும்
மருவிய சூதந் தொட்டே
அணைத்திடு நிமிளைக் கென்றார். (பா. 18)

என்றநன் நிமிளை தானும்
இயல்பட விந்த நீரில்
தன்றிடு நிமிளை நீற்றைச்
சாற்றிடு பரியின் மேலே
அன்றிய புடமொன்றாகி
அகண்டிடும் விரிந்து சொர்னம்
வன்றிய வாத மென்னும்
வாருதி கெற்ப மாமே. (பா. 19)

இவ்வீர குருவை சூதத்துடன் சேர்த்தரைத்துப் புடம் போட்டால் சூதம் குருவாகும். இச்சூத குருவை நிமிளையின் மேல் பூசி புடம் போட்டால் நிமிளை சுண்ணமாகும் (16 ஆம் பாடல் முதல் இந்நிமிளைச் சுண்ணம் வரை கூறிய புடம் முறைகள் யாவும் சூரிய புடமாகும். சரக்குகளை சுண்ணத்துடன் சேர்த்து செயநீரால் அரைத்து சூரிய ஒளியில் வைத்தால் சரக்குகள் சுண்ணமாகும். இம்முறைக்கே சூரிய புடம் என்று பெயர்.) இந்நிமிளை சுண்ணத்தை தங்கத்தகட்டின் மேல் பூசிப்புடம் போட்டால் தங்கம் விரிந்து சுண்ணமாகும். இச்சுண்ணத்தால் வா தூ என்ற பொன் பெய்யும் தொழில் சித்தியாகும்.

ஆமதே இந்த மார்க்கம்
அறுபது மாகுஞ் சுன்னம்
போமதே உப ரசங்கள்
புகட்டிய சத்தே யாகும்
காமது சூதத் தூட்டிக்
கடுகியே விடுவிச் சேர
வோமெனுங் கமன மார்க்கம்
ஓடலாம் ஓட லாமே. (பா. 20)

மேற்கூறியதைப் போல் இத்தங்கச் சுண்ணத்தை அறுபத்துநாலு பாஷாணங்களுடனும் சேர்த்துப் புடம் போட்டால் அவை எல்லாம் சுண்ணமாகும். அதுமட்டுமின்றி இத்தங்கச் சுண்ணத்தை உபரசங்களுடன் சேர்த்துப் புடம் போட்டால் உபரசங்கள் சத்தாகும். மேலும் இத்தங்கச் சுண்ணத்தை சூதத்துடன் சேர்த்து மத்தித்தால் சூதம் திரண்டு குளிகையாகும். இக்குளிகையால் கெவுனசஞ்சாரம் சித்தியாகும்.

ஓடலாஞ் செய சூதத்தில்
ஊட்டிச் சாரணையே செய்யில்
நாடெலாந் திரியலாங் கேள்
நமனுக்கு மெய்திடார் கேள்
ஊடலாம் வாசி யோடும்
உறவுற்ற பூரணத்தில்
கூடலாம் ஆத்தாள்பாதம்
குறைவறப் பூசை பண்ணே. *(பா. 21)*

சாதாரண சூதத்தை செய்ததுபோல் செய சூதத்துடன் சேர்த்து சாரணை தீர்த்து வைத்துக் கொண்டால் சகல லோகங்களையும் சுற்றி வரலாம். எமன் அருகே வரமாட்டான். வாசியானது மூலத்தில் ஓடி ஒடுங்கும். அதுமட்டுமன்றி மனமும் புத்தியும் உருவமற்ற பூரணத்தில் ஒடுங்கும். இவையாவும் சித்தியாக தேவியான ஆத்தாளை பூசை செய்ய வேண்டும்.

பண்ணிடு முப்புச் சுன்னம்
படுமுன்னே சூதம் சாகும்
தண்ணுயிர்க் காரச் சுன்னஞ்
சகலமுஞ் சத்து பண்ணும்
விண்ணுயர் வீரந் தங்கம்
வேண்டிய குளிகை யாகும்
கண்ணிடுங் கருமால் தேவி
காட்டு முன் ஈயமாமே. *(பா. 22)*

உப்புச் சுண்ணத்தை சூதத்துடன் சேர்த்தால் சூதம் கழன்று மாளும். காரச்சுண்ணத்தை எச்சரக்குடன் சேர்த்து உருக்கினாலும் அச்சரக்குகள் சத்தாகும். வீரச்சுன்னத்தாலும் தங்கச்சுன்னத்தாலும் குளிகைகள் சித்தியாகும். அரிதாரச்சுண்ணத்தால் சகல உலோகங்களும் ஈயமாகும்.

ஈயமாம் லோக மெல்லாம்
இயல்பெற வின்னுங் கேளு
காயமே செயிக்க வேண்டிற்
கண்டுண்ணு சூதச் சுன்னம்
தோயமாந் துருசுச் சுன்னந்
தொடுமுன்னே யெல்லாஞ் சாகும்
பாயவே சுன்னத் தோடு
பாய்ச்சுநீ சவாது கூட்டே. *(பா 23)*

காய்த்தை சித்தி செய்ய வேண்டுமானால் சூதச்சுண்ணத்தை உட்கொள்ள வேண்டும். துருசுச்சுண்ணத்தால் சகல சரக்குகளும் மடிந்து ஈகும். ஆனால் மறக்காமல் சுண்ணத்துடன் கட்டாயமாக சவ்வாது கூட்ட வேண்டும்.

கூட்டவே குருவி னோடு
குலாவிய சாரங் கேளு
ஆட்டிய அண்டம் போலே
அடைவாகச் சாரஞ் சீவி
நீட்டவே பல மொன்றாக
நிறுத்ததை வைத்துக் கொண்டு
பூட்டவே அபினி அஞ்சு
பொறிமிளகு அஞ்சுங் கூட்டே. *(பா. 24)*

சாரக்கட்டு (வேறு)

கூட்டே ரெண்டுபல மொன்றாய்க்
குமுற மேனிச் சாற்றரைத்துக்
காட்டே சாரந்தனை மேலே
கவசம் போட்டு ரவியிலிடு
நீட்டே தினந்தான் பதினொன்று
நெறியாய் ரவியிற் காய்ந்தபின்பு
ஆட்டே கழட்டியதை வாங்கி
யப்பாற் சுன்னச் சீலையொன்றே. *(பா. 25)*

சாரத்தை அண்டம் போல் சீவி ஒரு பலம் நிறுத்து எடுத்துக் கொள்ளவும். அபினி ஐந்து பலமும் மிளகு அஞ்சு பலமும் சேர்த்து குப்பைமேனிச் சாற்றால் அரைத்து சாரத்தின் மேல் கவசமாகப் பூசி பதினொறு நாள் ரவியில் வைத்துப் பின்னர் அக்கவசத்தை நீக்கி அச்சாரத்தின் மேல் சுன்னத்தால் சீலை செய்ய வேண்டும்.

ஒன்றாஞ் சுன்னச் சீலையின்மேல்
உறவா யிளக்கி அரக்கதனை
நன்றாய்க் கவசம்போற் கட்டி
நாட்டி லிணங்கன் சாணியப்பிப்
பன்னும் ரவியில் உலர விட்டுப்
பருகி வங்க முருகும்போக்
கொன்றே அழுத்தி ஆறவிட்டுக்
கொட்டிக் கிழித்து வாங்கிடுமே. *(பா. 26)*

காரக்கட்டு (வேறு)

வாங்கிநீ சாரம் பாரு
வளம்பெறுந் தந்தம் போலே
பாங்கிய சாரச் சுத்தி
பதைப்பறக் கட்டு மாகும்
ஓங்கிய காரங் கட்ட
வொன்றிய முறையைக் கேளு
தாங்கிய வெண்ணெய் போகச்
சாணியாற் கழுவிப் போட்டே. (பா. 27)

இச்சுன்ன சீலையின் மேல் அரக்கை உருக்கி கவசமாக வார்த்து அதன்மேல் சாணிபூசி ரவியில் உலர்த்தி வாட்டிக் கவசத்தை கிழித்து பார்த்தால் சாரம் சுத்தியாகி தந்தம் போல் கட்டியாக இருக்கும்.

காரத்தை கட்டும் முறையைக் கேள்! காரத்தை முதலில் சாணியால் கழுவ வேண்டும். காரத்தை சாணியால் கழுவினால் அதிலுள்ள எண்ணெய் அகலும்.

கழுவிய காரந் தானும்
கடுகவே பல மொன்றாக
முழுக நாயுருவிச் சாற்றில்
மூட்டிநீ ரவியில் போடு
மழுவெனக் காயக் காய
வளம்பெறத் தோய்த்துப் போட்டே
யெழுவிய தினமோ ரேழில்
இயல்பட வெளுக்கும் பாரே. (பா. 28)

பாருநீ சாரக் கட்டைப்
படுமுன்னே யெல்லாம் சாகும்
ஆருமிக் கார சாரம்
அறிவில்லா ரறிந் திடார்கள்
சேருமித் திறன் இரண்டில்
சேருநீர் முறையைக் கேளு
காருஷிமாய் குழற்றாய் சொல்லக்
கைகண்டேன் கைகண்டேனே. (பா. 29)

பின்பு சுத்தித்த சாரத்தை ஒரு பலம் எடுத்து நாயுருவிச் சாற்றில் தோய்த்து ரவியில் காய வைக்க வேண்டும். இவ்வாறு ஏழு நாட்கள்

தோய்த்து தோய்த்து காய வைத்தால் ஏழாம் நாள் முழுமையாக கட்டும் சாரக் கட்டால் அனைத்துச் சரக்குகளும் சாகும். காரசாரக்கட்டு முறைகளை அறிவில்லாத வாதிகள் அறிந்திருக்க மாட்டார்கள். இம்முறைகளை தாயான தேவி சொல்லக்கேட்டு நான் அறிந்துகொண்டேன்.

கண்டதோர் தொழிலின் மார்க்கங்
கவருறு மந்திியைப் போல்
கொண்டதோர் சுன்ன மார்க்கங்
கோடிக்குங் கோடி தாண்டும்
பண்டிதை யறிந்த சித்தர்
பரையவ ளருளினாலே
தண்டிடில் சூத மார்க்கம்
சாற்றிடார் சாற்றி டாரே. (பா. 30)

இக்கார சாரத்தை சரக்குடன் சேர்த்துப் புடம் போட்டால் சகல சரக்குகளும் சுண்ணமாகும் இச்சுன்னத்தால் வேதையும் சித்தியாகும். இம்முறையை அறிந்தவர்கள் வெயியே சொல்ல மாட்டார்கள். இனி சூதத்தை சுண்ணமாக்கும் முறையைக் கூறுகிறேன் கேள்.

சூதக்கட்டுச் சுன்னம்

சாற்றிட சூதக் கட்டைத்
தனிபெறச் சுன்ன மாக்க
வேற்றிய வராக னாலு
மெ . ..ந்துநீ மலைபோற் செய்து
கோற்றிடு வீரச் சுன்னம்
கூட்டிடு துருசிச் சுன்னம்
மாற்றியே பூசிப் பூசி
மனம் பெற ரவியிற் போடே. (பா. 31)

சூதத்தை நாலு வராகன் எடை எடுத்து அதை மலை போல் கூட்டி விரச்சுன்னத்தையும் துருசுச் சுன்னத்தையும் கலந்து பூசி ரவியில் காய வைத்துக் கொள். பின்பு மணிக்கு குகை செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள்.

போட்டபின் குகைதான் செய்யப்
புகட்டிய சுன்னங் கேளு
காட்டிய கடலின் மேலே
கலந்திடு நுரையின் சுன்னம்

கூட்டிடு உப்பில் பாதி
கொட்டுமுன் அண்ட நீரை
நீட்டியே அரைத்துக் காய்ந்து
நிலைபெற வூதிப் போடே. (பா. 32)

போடது உப்புச் சுன்னம்
பொலிவுறு சீனம் ரெண்டில்
நாடது முன்போ லூது
நலம்பெறச் சுன்ன மாகும்
தேடிய சீனச் சுன்னம்
சேர்ந்திடு மிணங்கன் ரெண்டில்
ஆடிய இணங்கன் ஒன்று
மணைத்திடு சூடன் ரெண்டே. (பா. 33)

கடல் நுரைச் சுன்னத்துடன் சரிபாதி கல்லுப்பு சேர்த்து அண்டச் செயநீரால் அரைத்துக் காய வைத்து குகையில் ஊதினால் உப்பு சுன்னமாகும். இவ்வுப்புச் சுண்ணத்தை ரெண்டு பங்கு சீனத்துடன் சேர்த்தரைத்து ஊதினால் சீனம் சுண்ணமாகும். இச்சீனச் சுண்ணத்துடன் இரண்டு பங்கு வெடியுப்பை சேர்த்தரைத்து குகையில் வைத்து ஊதினால் வெடியுப்பு சுண்ணமாகும். இவ்வெடியுப்புச் சுண்ணத்தை இரண்டு பங்கு சூடனுடன் சேர்த்தரைத்து.

ரெண்டெனும் சாரச் சுன்னம்
ரெட்டிடு காரம் ரெண்டில்
கண்டெனும் கார மொன்றில்
கலந்திடு மால் தேவிக்கு
வொண்டியே எட்டுச் சுன்னம்
ஒருநிறை குகைபோற் பண்ணி
வண்டணி குழலே சூத
மாத்திரை அதற்குள் வையே. (பா. 34)

குகையில் வைத்து ஊதினால் சூடன் சுண்ணமாகும். இச்சூடன் சுண்ணத்தை இரண்டு பங்கு சாரத்துடன் சேர்த்தரைத்து குகையில் வைத்து ஊதினால் சாரம் சுண்ணமாகும் இச்சாரச் சுண்ணத்தை இரண்டு பங்கு காரத்துடன் சேர்த்தரைத்து ஊதினால் காரம் சுண்ணமாகும். இக் காரச் சுன்னத்தை இரண்டு பங்கு அரி தாரத்துடன் சேர்த்து அரைத்து ஊதினால் அரிதாரம் சுண்ணமாகும். இந்த எட்டு வகையான சுண்ணத்தையும் ஒன்றாகச் சேர்த்து குகைபோல் செய்து இதற்குள் முன்பு காயவைத்துள்ள சூதத்தைவைத்து,

வைத்துநீ குகையை மூடி
வளம்பெறப் புடமே செய்யக்
கைத்தல நெல்லிக் காய்போல்
கைகண்ட சூதச் சுன்னம்
எய்த்திடா முனிவர் சித்தர்
இவர்களுக் கெய்து மார்க்கம்
மற்றவர்க் கெய்தி டாது
வாசியோர்க் கெய்து மென்னே. *(பா. 35)*

குகை வாயை மூடிப் புடம்போட்டால் சூதம் சுண்ணமாகும். இந்தசூதச் சுண்ணமானது வாசியோகம் புரியும் சித்தர்களுக்கும் முனிவர் களுக்கும் சித்தியாகும். மற்றோர்க்கு சித்தியாகாது. (பா. 36)

என்ற நற்றங்கம் நாவியி
லிடுவொன்று சூதச் சுன்னம்
மன்றவே கொடுத்து மெள்ள
மணியது போலே வாங்கித்
தன்றிய துருசுச் சுன்னம்
சவ்வீரச் சுன்னத் தோடு
பொன்றுறப் பூசிப் பொன்னா
வரையிலைக் கவசங் கட்டே. *(பா. 36)*

கவசித்த இலையி னோடு
கலறு கல்லுப்புச் சுன்னம்
அவசித்துச் சீலை செய்தே
அமளியாய்ப் புடமே போடப்
புவசித்த தங்கந் தானும்
பொலிந்து வெண் சுண்ணமாகும்
தவசித்த யோக ஞானத்
துய்யவர்க் கெய்து மென்னே. *(பா. 37)*

இச்சூதச் சுண்ணத்தை ஒரு பங்கு எடுத்து நாலு பங்கு தங்கத் துடன்சேர்த்து குகையில் வைத்து உருக்கி மணியாய் வாங்கிக் கொண்டு இம்மணியின் மேல் துருசுச்சுண்ணத்தையும் சவ்வீரச் சுண்ணத்தையும் பூசி பொன்னா வரையின் இலையால் கவசம் செய்து இக்கவசத்தின் மேல் கல்லுப்புச் சுண்ணத்தால் சீலை செய்து புடம் போட்டால் தங்கம் நீறி வெண்மை நிறமுள்ள சுண்ணமாகும். இச்சுண்ணம் சித்தர்களுக்கும் ஞானிகளுக்கும் யோகிகளுக்கும் மட்டுமே சித்தியாகும்.

என்றிந்த தங்கச் சுன்னம்
எடுத் தைந்து காசுதூக்கித்
தன்று முன் சாரக்கட்டு
தனிலஞ்சு காசு தூக்கு
பன்றியக் காரக் கட்டு
பாய்ச் சஞ்சு காசுதூக்கி
மன்றவே ஒன்றாய்க் கூட்டி
வளப்புடம் போட்டுக் கட்டே. (பா. 38)

கட்டிய குருவுக் குள்ளே
காட்டிய தொழிலைக் கேளு
வொட்டிய குருவை வீரத்
துறப்போடச் சிவப்பு மாகும்
தட்டிய சிவப்பிற் சீனம்
சாங்கமாய்ச் சீலை யூட்டி
அட்டிய வீரன் மேலே
அடைவாகச் கவசம் பண்ணே. (பா. 39)

தங்கச் சுண்ணம், கட்டிய சாரம், கட்டியகாரம் போன்ற சரக்குகளை வகைக்கு ஐந்து காசெடை எடுத்து ஒன்றாய்ச் சேர்த்துப் புடம் போட்டால் குருவாகும். (குருச்சுண்ணமாகும்). இக்குருச் சுண்ணத்தை வீரத்துடன் சேர்த்து உறைத்தால் சிவப்பு நிறமாகும். இச்சிவப்புடன் சீனம் சேர்த்து வீரத்தின் மேல் கவசம் செய்து,

பண்ணிய கவச மேலே
பாய்ச்சு நீயுப்புச் சுன்னம்
எண்ணிய தணலிற் போட்டே
இயல்பெற விதமா யூதப்
பண்ணிய கோடி மாறு
பருவத்துச் சுன்ன மாகும்
உண்ணிய நீறும் வீரம்
உறப்போடச் சிவக்கும் பாரே. (பா. 40)

பாருநீ சிவப்பி னோடே
பாய்ச்சிடு லிங்கந் தன்னை
வாரிதை மெழுகு போலே
மத்தித்து வைத்துக் கொண்டே

யாரிதை நவலோ கத்தி
லாவது நூற்றுக் கொன்று
சேரிந்தக் கொடுப் பினாலே
திசையெலாந் தசமாற் றாமே. (பா. 41)

இக்கவசத்தின் மேல் உப்புச் சுண்ணத்தைப் பூசித் தணலில் வைத்து வாட்டி குகையில் வைத்து ஊதினால் சுண்ணமாகும். இச்சுண்ணத்துடன் வீரம் சேர்த்து உறைத்தால் சிவந்த நிறங்கொள்ளும். இச்சிவப்புநிற சுண்ணத்துடன் லிங்கத்தை சேர்த்து மெழுகுபோல் மத்தித்து நவலோகங்களில் நூற்றுக்கு ஒன்று கொடுத்தால் லோகங்கள் பத்து மாற்று தங்கமாகும்.

இரசித மார்க்கம்

ஆகவே ரசித மார்க்க
மறையுறேன் பாரு பாரு
போகநல் வெள்ளி நாலு
புகழ்சூதச் சுன்ன மொன்று
மேகமா யுருக்கு வுண்டை
எடுத்ததன் மேலே பூசத்
தாகநல் வீரச் சுன்னம்
தாளகச் சுன்னம் பூசே. (பா. 42)

பூசுமேல் பொன்னா வாரை
புகழ்பெற உப்புச் சுன்ன
மூசுமேற் சீலை சுற்றி
யுளவதாய்ப் புடமே போடே
மாசிலா ரசிதந் தானும்
வளந்தரக் குருவே யாகும்
கோசுநல் ரசிதச் சுன்னங்
கொடுமலை வெள்ளி யாமே. (பா. 43)

இரசித மார்க்கம் சொல்கிறேன் கேள்! நாலு பலம்வெள்ளியுடன் ஒரு பங்கு சூதச் சுண்ணத்தை சேர்த்து குகையில் வைத்துருக்கி மணியாய் வாங்கிக் கொள். இனி இம்மணியின்மேல் பூசுவதற்கு மருந்துகளை கூறுகிறேன் கேள். வீரச்சுண்ணம், தாளகச் சுண்ணம் இவை இரண்டையும் மணியின் மேல் பூசி, அதன் மேல் பொன்னாவரை இலையால் கவசம் செய்து அக்கவசத்தின் மேல் கல்லுப்புச் சுண்ணத்தை சீலையாக பூசி புடம்போட்டால் (ரசிதம்) வெள்ளி சுண்ணமாகும். இச்சுண்ணம் பட்ட இடமெல்லாம் வெள்ளியாகும்.

ஆமிந்த ரசிதச் சுன்ன
மைவஞ்சு வராகன் தூக்கிப்
போமிந்துஞ் சார மஞ்சு
பொலிந்த வெண் காரமஞ்சு
சேமிந்த வகைகள் மூன்றுஞ்
சேரவே பொடிய தாக்கிக்
காமிந்தப் புடத்தைப் போட்டுக்
களங்கற வுடைத்துக் கொள்ளே. *(பா. 44)*

கொண்டந்த குருவினாலே
கூட்டுறேன் ரசித மார்க்கம்
தண்டிய வாசி யோரே
சதுர்மறை யந்தத் தோரே
விண்டநல் வெளியி னோரே
விபரமா யான் சொன்னூலை
உண்டென வுணர்ந்து பார்க்க
வொருகோடி ரசித மாமே. *(பா. 45)*

ஐந்து வராகன் வெள்ளிச் சுண்ணமும், ஐந்து வராகன் கட்டிய சாரமும், ஐந்து வராகன் கட்டிய காரமும் எடுத்துக் கொண்டு ஒன்றாய்ச் சேர்த்து பொடித்து புடம் போட்டால் வெள்ளி சுண்ணம், குருச்சுண்ணமாகும். ஏ! வாசியோகம் புரியும் முனிவர்களே, வேதத்தை உணர்ந்த பெரியோர்களே நான் இந்த நூலில் கூறியுள்ளபடி முறையாக இவ்வெள்ளிச் சுண்ணத்தைப் பயன்படுத்தினால் அனைத்தும் வெள்ளியாகும்.

ரசிதமாங்குருவைத் தொட்டு
நாட்டுமால் தேவி வெள்ளை
நிசிதமாஞ் சிங்கி வீரம்
நிறையுற்ற பாஷா ணங்கள்
மசிதமாய்ப் பூசிப் பூசி
வாட்டிட உருகும் பாரு
அசிதமாம் இரும்பு செம்பு
மணிவங்க நாதத் தூட்டே.. *(பா. 46)*

ஊட்டிட முறையைக் கேளு
ஒருநூற்றுக்கு ஒன்றே போடு
நாட்டிட ரசித மல்ல

நலம்பெறு மாற்று மெத்தப்
பூட்டெடை ரசித வேம்பு
புகழுறச் சொன்னேன் சொன்னேன்
காட்டினில் தழைவேர் தேடுங்
கசடரே இதனைப் பாரே. *(பா. 47)*

இந்த வெள்ளிக் குருச் சுண்ணத்தை மால்தேவி, வெள்ளை, சிங்கி, வீரம் மற்றும் பாஷாண வகைகளின் மேலும் பூசி உருக்கினால் உருகி வெள்ளியாகும். அதுமட்டுமின்றி நவலோகத்துடன் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்து உருக்கினால் வெள்ளியாகும். வெள்ளி என்றால் சாதாரண வெள்ளியல்ல, அதிக மாற்று கொண்டதாகும். காடுகளில் இலைகளையும், வேர்களையும் தேடும் கசடர்களே இதை முறையாக அறிந்து செய்து பாருங்கள்.

பாருமுன் சொன்ன அந்தப்
பாரியுட குருவின் மார்க்கந்
தாருமுன் காமம் வாய்நீர்
தனித்திடு முலைப்பால் மூன்றால்
ஆருமிக் குருவைக் கூட்டி
அரைத்ததைக் குழப்பிக் கொண்டு
போருயிர் வீரங் கெந்தி
புகழ்லிங்கம் சிலை பூசே.. *(பா. 48)*

பூசுநீ கெவுரி தொட்டி
புகழ்பெறு மாலின் தேவி
யாசுவில் வெவ்வே றாக
அதையதைப் பூசி வாட்டி
மாசுறு நவலோ கத்தில்
வகை நூற்றுக் கொன்றேசயத்
தேசுவும் வேதை யாகுஞ்
சிலைகளும் ஏமம் ஆமே. *(பா. 49)*

முன்பு கூறிய தங்கக்குருச் சுண்ணத்தை காமநீராலும், வாய் நீராலும், முலைப்பாலாலும் அரைத்து குழம்பு பதத்தில் எடுத்து வீரம், கெந்தி, மனோசிலை, கெவுரி, தொட்டி, மால்தேவி போன்ற சரக்குகளுக்கு தனித்தனியாக இக்குழம்பை பூசி வாட்டி நவலோகங்களில் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்துருக்கினால் லோகங்கள் அனைத்தும் வேதையாகும்.

ஆகவே இன்னங் கேளு
அளவற்ற தொழிலின் மார்க்கம்
வாகநல் தங்கம் நாலு
வளம்பெறு நாகம் நாலு
மேகமாய் உருக்கி மெள்ள
இதிலொன்று சூதச் சுன்னம்
போகவே கொடுத்து மெள்ளப்
புகழுற மணியாய் வாங்கே. (பா. 50)

வாங்கிய மணிக்கு முன்போல்
வளம்பெற மருந்து பூசித்
தாங்கியே புடத்தைப் போடத்
தனிநாகக் குருவாம் பாரு
பாங்கிகே ளிதனில் வேதை
பரிசத்தில் ஏமம் ஆகும்
மாங்கிய குருக்கள் பண்ண
அறையுறேன் அறிந்து கொள்ளே. (பா. 51)

இன்னும் சொல்கிறேன் கேள்! தங்கம் நாலு பலம், நாகம் நாலு பலம், இரண்டையும் ஒன்றாய் சேர்த்துருக்கி இதனுடன் ஒரு பங்கு சூத சுண்ணத்தையும் சேர்த்து மணியாய் வாங்கிக்கொண்டு இம்மணியின் மேல் முன்போல் மருந்து பூசி புடம்போட்டால் நாகம் குருவாகும். இந்நாக குருவால் பரிசவேதையும் குருச்சுண்ணங்களும் சித்தியாகும்.

அறிந்திடு நாகம் போல
அந்தந்தக் குருவின் மார்க்க
மறிந்திடுங் கபரி சத்து
வழங்கிய இரும்போடு ஈயம்
செறிந்திடுஞ் செம்பு காந்தம்
செயப்பட்ட பாஷா ணங்கள்
ஒறிந்திடும் உப ரசங்கள்
ஊட்டி இப்படி நீபாரே. (பா. 52)

நாகத்தைப் போன்று மற்ற எல்லா சரக்கையும் குருவாக செய்துகொள். கபரிசத்தை குருவாக செய்து இரும்புடன் சேர்த்தால் ஈயமாகும். இதே போல் செம்புடனும் காந்தத்துடனும், பாஷாணத்துடனும் உபரசத்துடனும் சேர்த்து உருக்கிப் பார்.

நீபாரு பரத்தை யுன்னி
நிலைபெற முன்னைப் பார்க்கும்
தாய்பாரு அடுக்கக் காண்பான்
தற்பர மணிகாண் பேரு
மாபாரு பாவம் போகும்
வாதமும் வயதுஞ் சித்தி
காப்பாரு முள்ளே யுன்னிக்
கரும்பிஞ்சாங் கற்பந் தின்னே. (பா. 53)

அதேபோல் உன்னுளிருக்கும் பராபரத்தை பார்த்தால் வடுகன் வெளித் தோன்றி பிரகாசிப்பார். வடுகன் வெளித் தோன்றிப் பிரகாசித்தால் பாவம் தொலையும், வாதமும், காயமும் சித்தியாகும். பிறகு கற்பத்தை உட்கொள்.

காய கற்பம்

தின்றிடிற் கற்பந் தானுஞ்
செயப்படு முறையைக் கேளு
மன்றிடு நாத விந்தால்
வளம்பெற வளர்ந்த தேகம்
பன்றிடும் வயது நூறு
பருவமாய் வரைக்கின் றோர்க்கே
என்றிடில் இளமைக் காலம்
இயல் பதினைந்து போமே. (பா. 54)

போகுமே காம மொக்கப்
புணர்ச்சியில் பத்தி ரண்டு
வாகுமே விருத்த கால
வயது போம் இருபதங்கே
தாகுமே நடுவில் நிற்கும்
தனிப்பட நாற்பத் தைந்து
ஆகுமே ராக் காலத்தில்
அழிந்திடும் பாதி தானே. (பா. 55)

கற்பம் செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள்! நாத விந்தால் வளர்ந்த இந்த தேகம் நூறு ஆண்டுவரை வாழக் கூடியதாகும். இந்த நூறாண்டு காலத்தில் பதினைந்து ஆண்டுகள் இளமைப் பருவத்தில் கழிந்துவிடும். இதற்குப் பிறகு இருபது ஆண்டு காலம் தீராத காமத்தில் மனம்

சென்றலைந்தும் பிறகு இருபது ஆண்டுகள் தள்ளாத முதுமையிலும் வீணாகி விடுகிறது. இடையில் உள்ள நாற்பத்தைந்து ஆண்டுகளில் பாதி, இரவு கால தூக்கத் தாலும் வீணாகி விடுகிறது.

பாதியி லென்ன பார்ப்பார்
பலபல நூல்கள் மெத்த
பாதியி லென்ன ஞானம்
பார்க்கையில் எய்த மாட்டார்
பாதியில் என்ன யோகம்
பலிக்குமோ பலியா தப்பா
பாதியிற் காய சித்தி
பலித்திடும் பண்பாய்த் தின்னே. (பா. 56)

மீதியுள்ள பாதிக் காலத்தில் பலப்பல நூல்களைப் படித்து ஞானம் அடையாமலும் யோகம் பலிக்காமலும் வாழ்நாள் வீணாகப் போகும். ஆகவே காலத்தை வீணாக்காமல் காயசித்தி செய்துகொண்டு ஞானயோக மார்க்கங்களில் ஈடுபடுவதே சிறந்தது.

தின்னென்று தேவி சொல்லச்
சிறந்து நானுண்ட மார்க்கம்
பன்னென்ற வல்லோர் கேளும்
பகருவேன் பருவ மாகக்
கன்னென்ற கடுக்காய்க் கற்பம்
கடிந்து நாளிரு பதுண்ணு
வெண்னென்ற குமரி கள்ளிக்
காயதும் இருபது உண்ணே. (பா. 57)

காயசித்தி முறையை தேவி எனக்குச் சொன்னாள் அதைக் கேட்டு நான் நல்லபல கற்பங்களை உட்கொண்டேன். நான் உட்கொண்ட முறையைக் கூறுகிறேன் கேள்! முதன்முதலில் கடுக்காயை இருபது நாள் உட்கொள்ள வேண்டும். பிறகு சோற்றுக் கற்றாழை இருபது நாளும் கள்ளிக்காயை இருபது நாட்களும் உட்கொள்ள வேண்டும்.

உண்ணுநீ மிளகை ஏற்றி
உறுதியாம் அமுரி யாலே
பண்ணுற நூறு தொட்டுப்
பரிந்து மண்டலமே உண்ணு

வெண்ணுகற் கெந்தி தன்னை
இயல்பெறச் சுத்தித்து உண்ணு
சண்ணுநாள் கடந்த பின்பு
சாதிக்கும் முறைமை கேளே. (பா. 58)

முறைமை கேள்நீறுங் கெந்தி
முசிந்திடுங் கெந்தி ரெண்டு
முறைமையாஞ் சூத மேலம்
அளவுக்குக் கால் கால்கூட்டு
திறமையாய் அமுரியோடே
சேர்த்துண்ண வல்லா யாகில்
நிறமையாய்க் காயந் தானும்
நிலைத்தொரு சட்டை போமே. (பா. 59)

பின்னர் நாளொன்றுக்கு ஒரு மிளகு வீதம் நூறு மிளகு வரை உயர்த்தி அமுரியில் உட்கொள்ள வேண்டும். இவ்வாறு மண்டலம் உட்கொண்ட பிறகு கெந்தகத்தை சுத்திசெய்து உட்கொள்ள வேண்டும். பின் கெந்தியின் அளவிற்கு கால் பங்கு ரசம் சேர்த்து இரண்டையும் மத்தித்து அமுரியில் உட்கொள்ள வேண்டும். இவ்வாறு முறையாக உட்கொண்டால் காயம் திடமாகி சட்டை கழலும்.

போகுமே சட்டை யாகில்
புகழ்சித்தி முறையைக் கேளு
வாகுடன் நாத விந்தில்
வளர்ந்திட்ட தேகம் போச்சு
பாகுடன் ரசமே விந்து
பரிந்தநற் கெந்தி நாதம்
வாகுசேர் ரெண்டுங் கூடி
வாசியின் உடல தாச்சே. (பா. 60)

சட்டை கழன்றால் நாதவிந்தால் விளைந்த தேகம் அழிந்து கெந்தி என்ற சக்தி நாதத்தாலும் ரசம் என்ற சிவன் விந்தாலும் தேகம் நிலைபெற்று வாசி தேகமாக மாறும் (நாத + விந்து சேர்க்கையால் வாசியாக மாறும்).

ஆச்சிது ரெண்டாந் தேகம்
வாசியே ஞான வீதி
பேச்சுது ஏறத பொய்யாய்ப்
புத்தியை உரைத்து உண்ணு

வாச்சுது கையில் வாசி
மனமெட்டு மார்க்கத் தோடி
யேச்சுதே மாய வாழ்க்கை
யென்றுநீ எண்ணிப் பாரே. (பா. 61)

ஊண் தேகம் வாசி தேகமாக மாறினால் ஞான வீதி திறக்கும். இறப்பு பொய்யாகும். ஆகவே வாசியை மூலத்தில் நிறுத்தி இவ்வுலக வாழ்க்கையை மாயம் என்றெண்ணி படிப்படியாக எட்டு தளமும் கண்டு மேல்நோக்கி ஏற வேண்டும்.

பாருநீ மலைகள் தோறும்
பலபல கறுத்த கற்பம்
கோருநீ உண்டு உண்டு
கழட்டிடு சட்டை எல்லாம்
காருநீ பத்தியத் தைக்
கடும்புளி உப்பும் பெண்ணும்
வாருநீ சித்த ரோடு
வசனித்து ஞானம் பாரே. (பா. 62)

இப்படி முறையாக பழகுங் காலத்தில் மலைகளில் உற்பத்தியாகும் கறுப்பு நிறமுள்ள மூலிகைகளை உட்கொண்டு அக்ஞானத்தை உண்டாக்கும் தேகத்தை அகற்ற வேண்டும் (சட்டைகளை கழற்ற வேண்டும்). இக்கற்பங்கள் உட்கொள்ளும்பொழுது புளியும், உப்பும், பெண் போகமும் விலக்கி சித்தர்களோடு உறவு வைத்துக்கொண்டு ஞான வழியில் நிற்க வேண்டும்.

ஞானமும் சித்தி யாகும்
நற்றொழில் எட்டு மாகும்
பானமும் ஆத்தாள் பானம்
பரிவுடன் கொண்டு வாநீ
தானமுந் தன்மம் பாவம்
சகலமும் பொய்யிற் பொய்காண்
வானமும் திறந்து போக
வாசியில் ஏறி யாடே. (பா. 63)

முறையாக கற்பமுண்டு ஞான வழியில் நின்றால் ஞானம் சித்தியாகி எட்டுவிதமான சித்திகளும் கிட்டும். மேலும் ஆத்தாளான தேவிக்கு மது வைத்து பூசித்து அதையும் உட்கொண்டு இவ்வுலக வாழ்க்கையும் இவ்வுலகமும். பொய் என்று எண்ணி வானவர் நாடு திறக்க வாசி கொண்டு ஏற வேண்டும்.

ஆடவே குளிகை மார்க்கம்
அடைவுடன் செய்யக் கேளீர்
தாடமால் தேவிச் சுன்னம்
சாற்றிடு வங்கம் மேலே
ஊடவே புடத்தில் போட
வுறுதியாய்ச் சுன்ன மாகும்
கூடவே வங்கச் சுன்னம்
கொண்டிடு நிமிளை பாரே. *(பா. 64)*

பாருநீ புடம தொன்றில்
பரிவுடன் நிமிளைச் சுன்னம்
தாருமுன் வங்கச் சுன்னம்
தனிப்படு நிமிளைச் சுன்னம்
கோருநற் சாரச் சுன்னம்
கொடிய மால்தேவிச் சுன்னம்
ஆருயர் வீரங் கண்டால்
அதிரண்டு சுன்னங் கூட்டே. *(பா. 65)*

குளிகை செய்யும் மார்க்கத்தை கூறுகிறேன் கேள்! மால்தேவிச் சுன்னத்தை வங்கத்தின் மேல் பூசி புடம் போட்டால் வங்கம் சுன்னமாகும். இவ்வங்கச் சுன்னத்தை நிமிளையின மேல்பூசி புடம்போட்டால் நிமிளை கழன்று சுன்னமாகும். பிறகு வங்கச்சுன்னம், நிமிளைச்சுன்னம், சாரச்சுன்னம், மால்தேவிச்சுன்னம், வீரச்சுன்னம், கண்டர்ச்சுன்னம், போன்ற இவ்வாறு வகைச் சுன்னத்தையும்,

கூட்டுநீ ஆறு சுன்னம்
குலாவிய எடை ஒன்றாக
வாட்டுதல் புழுகி ரட்டி
அதனுடன் ஒன்றாய்ச் சேர்த்து
நீட்டிநல் ரவியில் வைத்து
நிலையுறக் கெந்திக் காட்டி
ஊட்டுநல் தைலம் ஆகும்
உறவதிற் சூதம் வாரே. *(பா. 66)*

வார்த்ததை விரலால் மெள்ள
மத்திக்க வெண்ணெய் ஆகும்
கோர்த்ததை உருட்டி மெள்ளக்
கொடுந்தங்கத் தகடு சுற்றிச்

சேர்த்ததை தணலின் மேலே
செழிக்கவே வாட்டு வாட்டு
பார்த்ததைக் குளிகை யாகும்
பக்குவந் தனையும் வாட்டே. (பா. 67)

வகைக்கு ஒரெடை கூட்டி இதனுடன் இரண்டு பங்கு புனுகும் சேர்த்து கலக்கி ரவியில் வைத்தால் தைலமாகும். இத்தைலத்தில் சூதத்தை ஒரு நிறையாய் வார்த்து கையால் மத்தித்தால் வெண்ணையாகும். இச்சூதவெண்ணையை கையால் உருட்டி அதன்மேல் தங்கத் தகடை சுற்றி தீயில் வைத்து வாட்டினால் குளிகையாகும்.

வாட்டிப்பின் குளிகை மேலே
வளம்பெற அரைத்தே அப்பி
யூட்டியே புடத்திற் போடே
இருபத்தோடு அஞ்சு தானும்
நீட்டியே செய்த பின்பு
நிலையுறக் காரங் குத்தி
ஆட்டியே உருக்கி மெள்ள
அதனுட செயத்தைப் பாரே. (பா. 68)

பாருபூ நாகச் சத்தைப்
பாய்ச்சி இச்சூதத் துள்ளே
கோருநீ புடந்தான் போட்டுக்
கொட்டிச் சாரணையே செய்யத்
தேருநீ அசுரன் போலச்
சிறந்துண்ணும் சகல சத்தைக்
காருநீ குளிகை தன்னைக்
கரத்திலே கட்டு கட்டே. (பா. 69)

இக்குளியின்மேல் இருபத்தைந்து வகையான மூலிகைகளை தனித்தனியாக அரைத்து பூசி இருபத்தைந்து முறை புடம் போட்டு பிறகு இக்குளிகையுடன் காரம் சேர்த்து குகையில் வைத்து உருக்கி நாகசத்தை சேர்த்து புடம்போட்டு எடுத்து பார்த்தால் மணியானது அசுரனைப் போல் சத்தை உட்கொண்டிருக்கும். இதேபோல் சகல சத்தையும் இம்மணிக்கு சாரணையாக ஏற்றி குளிகையாக செய்து கையில் கட்டிக்கொள்.

கட்டுநீ வாசி தன்னைக்
கருத்திலே நினைந்து கொண்டு
ஒட்டியே தவத்தை உன்னி
ஓடுநீ குளிகை போட்டு

மட்டிலா சித்தர் கோடி
யாஞ்சித்து வார்த்தை பேசி
எட்டிய சமாதிக் குள்ளே
இயல்பெற இருந்து பாரே. *(பா. 70)*

கையில் குளிகையை கட்டிக்கொண்டு வாசியில் மனதை வைத்து தவத்தில் நின்றால் ஆகாயத்தில் பறக்கும் சித்தியுண்டாகும். இச்சித்தியால் சித்தர்களை கண்டு பேசி சமாதியில் நிலைக்க வேண்டும்.

பாருநீ இன்னும் வாதம்
பரிசின தூபந் தீபம்
தாருநீ லேபம் நாதம்
தனித்த சந்தானத் தோடு
மேருநீ சொரூபி யோடும்
இயம்புதேர் சினத்தோ டெட்டும்
வாருதி உப்பு சாரம்
வழங்கிய காரங் காணே. *(பா. 71)*

காணவே குருவின் பின்னே
காரண சீஷ னாகி
ஊணவே மனமும் வாக்கும்
உண்மை யதாய்ப் பயந்து
பூணவே தொழில்கள் செய்து
போற்றி நின்றா சாரத்தைத்
தோணவே ஆசான் பார்த்துச்
சொன்னபின் வாதங் கேளே. *(பா. 72)*

சமாதியில் நிலைத்து சகலவிதமான வாதத்தையும் அறிந்துகொள். மேலும் பரிசினம், தூபம், தீபம், லேபம், நாதம், சந்தானம், சொரூபி, தேர்சினம் போன்ற எட்டு வகையான குளிகையையும், கல்லுப்பு, சாரம், காரம் போன்றவைகளை அறிய சற்குருவின் பின்னால் சென்று தொண்டு செய்து சீடனாகி மனதையும், வாக்கையும் அடக்கி பணிவிடை செய்து நின்றால் உன்னுடைய வணக்கத்தையும் சீலத்தையும் பரீட்சித்து உனக்கு சகலவிதமானதையும் தொழில் முறைகளையும் போதிப்பார். அப்பொழுது அவரிடம் வாதத்தைப் பற்றிக் கேள்!

கேட்கையில் வருவ தல்ல
கெடிபட முன்நாள் செய்த
வாட்கையாங் குறை யினாலே
வந்திடில் வாத ஞானந்

தாட்கையாஞ் சீடனாகித்
தறுதும்பன் முன்னே சொல்வோன்
வேட்கையில் சோம்பன் காமி
வெறுமையோற்கு எய்தாது என்னே! (பா. 73)

எய்திடில் வாத நூல்கள்
இவர்களுக் கெல்லாம் பொய்யாம்
கைதிடுங் காய சித்துங்
கவனமும் கடிந்து பொய்யாம்
பைதிடு மார்க்கத் தோரைப்
பரிட்சியா வகல நீக்கு
வைதிடு மூல மார்க்கம்
மாயமும் வெளியாய்ப் பாரே. (பா. 74)

வாதம் கேள்வியால் அடையப்படுவதன்று. பூர்வ ஜென்மத்தின் விட்டகுறையாலும் குருவின்கடாக்ஷத்தாலும் வாதம் சித்தியாகும். சோம்பலும் வேட்கையும் கொண்ட காமிகளுக்கு வாதம் சித்தியாகாது. அப்படிக்கிட்டினாலும் அது பொய்யாய்ப் போகும். மேலும் இவர்களுக்கு வாத நூல்களும், காயசித்தும், கவனமார்க்கமும் பலியாது. அது பொய்யாய்ப் போகும். இப்படிப்பட்ட துற்குணமுடைய மாந்தர்களை விலக்கி மூலத்தில் மனதைவைத்து மாயையை அறிந்து நீக்கிப் பரவெளியை காணவேண்டும்.

வெளியிலே நின்ற சோதி
விரைந்து உட்புகுந்து பாரு
களியிலே மூலத் தூன்றிக்
கடக்குமவ் வாறும் பாரு
தெளியிலே எட்டும் நாலும்
சேர்தலும் விடுதலும் பார்
ஓளியிலே வாசி யோடும்
ஒன்றிநீ உற்றும் பாரே. (பா. 75)

உற்றுற்றுப் பார்க்கப் பார்க்க
உரையற்றே உணர்வும் அற்றே
அற்றற்றுப் போனது எல்லாம்
அடங்கியது அந்த நாளில்
சிற்றற்றுத் தெளிவும் ஒத்துச்
சேருநிட் களமாய்க் காணும்
பற்றற்ற சித்தர்க் காத்தாள்
பலித்திடும் வாதம் என்றாள். (பா. 76)

பரவெளியில் நிற்கும் பூரண சோதியை மனதால் உட்புகுந்து பார்க்க வேண்டும். அப்பரஞ்சோதியின் அருளால் மூலத்தை நோக்கினால் அதைச் சார்ந்துள்ள ஆறு தளங்களும் வெளிப்படையாக தோன்றும் அவ் ஆறுவகை தளங்களிலும் வாசி வைத்து நோக்கினால் சகலவிதமான சித்தவிருத்திகளும் ஒடுங்கி தெளிவு ஏற்படும். நிஷ்களங்கமான பிரம்மம் ஒளிபெற்று பிரகாசிக்கும். இம்முறையை தேவி சித்தர்களுக்கு உபதேசம் செய்தாள்.

அஷ்டகர்மம் லிங்கக்கட்டு

என்றுமுன் சொன்ன கார
சாரத்தின் லவணங் கேளு
வென்றுயர் காரம் வீரம்
விளங்கிய சாரம் உப்புத்
தன்றுநல் லவண மார்க்கம்
தனித்தநல் துருசியாகும்
கொன்றவிம் மூன்றின் பேரைக்
கொள்ளுமோர் மூன்று கேளே. *(பா. 77)*

கேளுநீ சாரம் ஒன்று
கெடிபடுங் கல்லுப்பு ஒன்று
ஆளுவேன் காரம் ஒன்று
அப்பனே மூன்றும் மூன்று
தோளுமிம் மூன்றின் மூன்றால்
தொழி லொடு மாட லாகும்
வாளுமிந் தாரங் கண்டால்
வாதிகட் குரைக்க லாமே. *(பா. 78)*

கார சார லவணத்தால் அனைத்து வித்மான தொழிலும் ஆடலாம் இவை மூன்றும் தனித்தனியான வெவ்வேறு ருசிகளை கொண்டது. அதாவது சாரம் ஒரு பங்கு, கல்லுப்பு ஒரு பங்கு, காரம் ஒரு பங்கு, இவை மூன்றையும் கூட்டி எவ்விதமான தொழில் செய்தாலும் பலிதமாகும். இம்முறையை மனதை அடக்கிய வாதிகளுக்கு உரைக்கலாம்.

உரைக்கிறேன் பொன்னே யாக
உற்பன முறையைக் கேளு
துரைக்குரு காரச் சுன்னம்
சுகமுறு துருசுச் சுன்னம்
வரைக்குரு வீரம் மூன்றும்

விதம்பெறச் சமனாய்த் தூக்கி
நரைக்குற பொடியே செய்து
நண்டினங் கொழுப்பிற் போடே. *(பா. 79)*

போட்டபின் மூன்று மொக்கப்
போடதிற் கபரி தானும்
காட்டமுன் அஞ்சு மொக்கக்
கலக்கவே அரைத்துக் கொண்டு
நீட்டவே லிங்கம் ரெண்டில்
நிலைபெறப் பூசி மேலே
ஊட்டவே தங்கந் தானும்
ஒவ்வொரு வரிசை சுற்றே. *(பா 80)*

சுற்றிடுந் தங்கந் தானுஞ்
சொருகியுட் புகுந்த மட்டும்
பற்றுநீ வாட்டு வாட்டு
பலம்பட விறுகும் பாரு
ஒற்றிய லிங்கந் தானு
மோடுற வேதை கேளு
அற்றிய வெள்ளிக் குள்ளே
ஐம்பதுக் கொன்று தாக்கே. *(பா. 81)*

பொன் செய்யும் முறையை கூறுகிறேன் கேள்! காரச் சுன்னம், துருசு சுன்னம், வீர குருசுன்னம் இவை மூன்றையும் சம அளவாய் எடுத்து கொழுப்புடன் (நண்டின் கொழுப்பு) சேர்த்து பின்பு இவ்வெடைக்கு சம அளவு கபரியை சேர்த்து நன்றாக மெழுகுபோல் அரைத்து இரண்டு பலம் லிங்கத்தின் மேல்பூசி அந்த லிங்கத்தின்மேல் தங்கத் தகட்டை சுற்றி நெருப்பிலிட்டு வாட்ட வேண்டும். தங்கமானது லிங்கத்துடன் கலந்து திடப்படும்வரைவாட்டி எடுத்துப் பார்த்தால் லிங்கம் இறுகி கட்டி நிற்கும். இந்த லிங்கத்தால் ஏற்படும் வேதையைப் பற்றி கூறுகிறேன் கேள். இதை வெள்ளியில் ஐம்பதுக்கு ஒரு பங்கு சேர்த்து.

தாக்கிடச் சொர்ன மாகும்
தனித்ததோர் மாற்றும் எட்டே
யாக்கிடு மார்க்கம் போலே
அறைகிறேன் நாலுங் கேளு
வாக்கிய அழுங் கோடுஆமை

வளமயில் உடும்பு நாலும்
போக்கிய கொழுப்பு முன்போற்
புகழ்படத் தொழில் செய்வோமே. (பா. 82)

நெருப்பிலிட்டு உருக்கினால் எட்டு மாற்றுடைய தங்க மாகும். மேற் கூறிய முறையைப் போல இன்னும் ஒரு முறையும் உள்ளது. அதை கூறுகிறேன் கேள். அளுங்கு, ஆமை, மயில், உடும்பு இவை நான்கின் கொழுப்பையும் சம அளவு சேர்த்து முன்போல் செய்து பார்.

செய்யவே அஞ்சும் நாலும்
செய்கிற முறைமை கேளு
பையநல்வீரம் லிங்கம்
வழங்கிய கெவுரி கெந்தி
ஐய நல் தொட்டி அஞ்சும்
பற்பமாய் முன்போல் வாட்டக்
கையினற் கனியே போலக்
களகமாங் கனக மாமே. (பா. 83)

இந்நான்கு சரக்குடன் சேர்க்கும் ஐந்துவித மருந்தின் முறையை கூறுகிறேன் கேள். வீரம், லிங்கம், கெவுரி, கெந்தி, தொட்டி இவை ஐந்தையும் முன்போல் பொடி செய்து கொழுப்புடன் சேர்த்து அரைத்து லிங்கத்தின் மேல் பூசி வாட்டினால் களங்காகும். இதை லோகங்களில் சேர்த்தால் பொன்னாகும்.

ஆமினி ரசித மார்க்கம்
அறைகிறேன் பாரு பாரு
போமினி வெள்ளை யோடு
பொருந்து மால்தேவி ரெண்டு
தாமினி முன்போல் வாட்டித்
தனிவெள்ளி ரேக்கு சுற்றி
யோமினிச் செம்பு நாகம்
உயர் வங்கத் திடவுங்கேளே. (பா. 84)

கேளுநீ ரெண்டி னுக்கும்
கெடிபடச் சூதம் சேரும்
வாளுற வுயறவே யாக்கி
வளம்பெறக் களங்கம் பண்ணு
தேளுமுன் மூன்று லோகம்

சேர்த்திடு நூற்றுக் கொன்று
ஆளுநல் ரசித மார்க்கம்
அடங்காது மலைய மாமே. *(பா. 85)*

இனி ரசித மார்க்கம் கூறுகிறேன் கேள்! வெள்ளையும் மால்தேவியும், சம அளவு எடுத்து முன்போல் கொழுப்புடன் சேர்த்து வெள்ளி ரேக்கு சுற்றி வாட்டிப் பின்பு, செம்பு, நாகவங்கம் இவை இரண்டையும் வாட்டிய சரக்குடன் சேர்த்து பின்னர் இம்மொத்த சரக்கின் எடைக்கு சம அளவு சூதத்தைக் கூட்டி எரித்தால் களங்காகும். இக்களங்கை செம்பு, நாகம், வங்கம் போன்ற லோகங்களில் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்தால் வெள்ளி யாகும்.

மலையுள்ளே யிருந்து வாழும்
மறைந்தநல் ரிஷிகள் சித்தர்
கலையுள்ளோர் வாசி யோர்கள்
கைகண்ட யோகத் தோர்கள்
நிலையுள்ள மயக்கந் தீர
நேர்பட வந்த நூலைச்
சிலையுள்ள பதுமை போலே
தெளிவுறச் சொன்னேன் பாரே. *(பா. 86)*

மலைக் குகையினுள் வாழும் ரிஷிகளுக்கும் சித்தர்களுக்கும், வாசியோகம் பயிலுவோர்களுக்கும், யோகம் பழகுபவர்களுக்கும். சந்தேகமில்லாமல் தெளிவாக எழுதியுள்ளேன்.

பாருநீ பகக்கள் சென்று
பட்சிக்கும லத்தை பார்த்துக்
கோருநீ யெடுத்து வந்து
கொட்டஞ்சு தேங்காய் மட்டும்
வாருநீ அமுரி தானும்
வளர்படி பத்தோ டஞ்சு
சேருநீ கரைத்தே எல்லாம்
செயல்பட வடித்துச் காய்ச்சே. *(பா. 87)*

பசுவின் சாணத்தை ஐந்து தேங்காய் அளவு கொண்டு வந்து அதனுடன் அமுரி வார்த்து நன்றாய் கரைத்து நன்றாய் வடித்துச் காய்ச்ச வேண்டும்.

காய்ச்சுநீ குழம்பாய் வாங்கிக்

கடுரவி தன்னில் வைத்து
ஓச்சியே உலர்ந்த பின்னர்
உருகவே கலயத் திட்டுத்
தாச்சியே கலயத் தூரில்
தமர்விட்டுக் கிண்ணி வைத்து
ஆச்சியாய்ப் புடத்தைப் போட
அதன்கீழே தைல மாமே. *(பா. 88)*

குழம்பு பதம் ஆகும் வரை காய்ச்சி சூரியனின் முன்பாக வைத்து உலர்த்தி அதை ஒரு கலய'த்தில் போட்டு அக்கலயத்தில் துளைசெய்து அத்துளையின் கீழ் பாத்திரம் வைத்து புடம்போட்டால் கலயத்திலுள்ள சரக்கு தைலமாக மாறி பாத்திரத்தில் இறங்கி நிற்கும்.

ஆமிந்தத் தைலம் தன்னில்
அரைக்கவே மருந்து கேளு
மோமந்த உப்பு ரெண்டும்
உடனுறும் காரம் ரெண்டு
தாமந்தச் சாரம் சூடன்
தனியாறின் எடையே கேளு
பாமந்த வகையிரான் றொன்றில்
பலமதோர் அரையுங் கூட்டே. *(பா. 89)*

இத்தைலத்தில் இரண்டு வகையான உப்பும், இரண்டு வகையான காரமும், மற்றும் சாரம், சூடன் போன்ற ஆறு வகையான சரக்குகள் வகைக்கு அரை பலம் சேர்த்து

கூட்டதில் உரந்தான் கால்தான்
குலாவிய வீரம் ஒன்று
நீட்டதில் சூதம் ஒன்று
நேர்படும் பூரம் கால்தான்
ஊட்டதிற் குருவாம் வண்டு
உயர்ந்த நூற்றைம்பத் தொன்று
தீட்டிய நாத விந்து
சேரைநீ அதற்குள் வாரே. *(பா. 90)*

வார்த்துநீ அரைக்குங் காலம்
வளம்பெறப் புகையே போடு
மேர்த்திடு மேலே பட்டால்
இடிந்தது புண்ணே ஆகும்
சேர்த்துநீ தைலத் தோடு

சிறக்கவே குடிக்க வைத்துப்
போர்த்துநீ ரவியுங் காணாப்
புகழ்பட வைத்துக் கொள்ளே. (பா. 91)

பின்னர், உரம் கால் பலமும், வீரம் ஒரு பலமும், சூதம் ஒருபலமும், பூரம் கால்பலமும், நூற்றும்பத்தொன்று குருவண்டும் சேர்த்து இதற்கு மேல் நாதமும் விந்தையும் ஒரு சேராக வார்த்து அரைக்க வேண்டும். அரைக்கும் பொழுது புகைப் போட வேண்டும். அதுமட்டுமின்றி இச்சரக்கை அரைக்கும் பொழுது கவனம் தேவை. இல்லையேல் கை வெந்து புண் ஆகிவிடும். தைலத்தை சரக்குகள் உட்கொள்ளும் மட்டும் அரைத்து சூரியவொளிபடாத இடத்தில் வைக்க வேண்டும்.

கொண்டதோர் மருந்துக் குள்ளே
கூட்டவே மருந்து கேளு
தண்டிய வீரச் சுன்னம்
தனிப்படு துருசுச் சுன்னம்
ஒண்டிய சூதச் சுன்னம்
உடன் மாலின் தேவிச்சுன்னம்
கண்டிய சவுக் காரத்தின்
கடுகிய சுன்னங் கூட்டே. (பா. 92)

கூட்டவே ஐந்து சுன்னம்
கோலிய எடையைக் கேளு
ஆட்டிய வகை ஒன்றுக்கு
அப்பனே கழஞ்சு கூட்டி
நீட்டிய மருந்தி னோடு
நேர்பட உறவ தாக்கித்
தீட்டியே ரவியில் வைத்துச்
சிக்கெனப் பதனம் பண்ணே. (பா. 93)

இவ்வரைத்த மருந்துடன் வீரச்சுன்னம், துருசுச்சுன்னம், சூதச்சுன்னம், மால்தேவிச் சுன்னம், சவுக்காரச் சுன்னம் போன்ற ஐந்து வகை சுன்னங்களை வகைக்கு ஒரு கழஞ்சி எடை கூட்டி நன்றாய் நெகிழ அரைத்து சூரியனின் முன்பாக வைத்தெடுத்து (பதனம் செய்ய வேண்டும்). வெகு ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ள வேண்டும்.

பண்ணிய தைலத்தின் மேல்
பாங்கிய கலய புஷ்ட்டி
மண்ணியே வாங்கிக் கொண்டு
வாரதில் அமுரி தானும்
தண்ணியோர் படிதான் பத்து
சாரவே கரைத்து வைத்தே
அண்ணிய மூன்றாம் நாளில்
அப்பனே இறுத்துக் காய்ச்சே. *(பா. 94)*

முன்பு தைலமெடுத்த கலயத்தில் மீதியிருக்கும் கசடை எடுத்து வேறொரு கலயத்தில் போட்டு பத்துபடி அமுரி விட்டு நன்றாக கரைத்து மூன்றுநாள் அசையாமல் வைத்து தெளிந்த நீரை வாங்கி காய்ச்ச வேண்டும்.

காய்ச்சிய குழம்பாய் வந்த
கடுகிய பதத்தைப் பார்த்து
ஆச்சியாய் முன்னர் வைத்தே
அந்தநன் மருந்தைப் போட்டுத்
தாச்சியாய் வழித்தே நல்ல்
தனித்திடும் பீங்கான் வார்த்து
வோச்சியே ரவியி னுள்ளே
உறுதியாய் வைத்தி டாயே. *(பா. 95)*

நன்றாய் குழம்பு பதமாக காய்ச்சி முன்பு பத்திரப் படுத்தியுள்ள மருந்தை இக்குழம்புடன் சேர்த்து ஒரு பீங்கானில் விட்டு ரவியில் வைத்தால் குருவாகும்.

வைத்தவிக் குருவின் பேரை
வாக்கினால் மன்த்தி னாலும்
எத்தியே உரைக்க வென்றால்
எவர்க்குமே கூடா தப்பா
முத்திய வாதத் துள்ளே
மூத்ததா முத்தாநாமம்
கைத்தலப் புவிகள் ஏழுங்
காட்டுமுன் ஏம மாமே. *(பா. 96)*

இக்குருவின் பேரை மனதாலும் வாக்காலும் கூற முடியாது. இக்குருவே வாதத்திற்கு முதன்மையான குருவாகும். இக்குருவானது அதலம், ஸூதலம் முதற் கொண்ட ஏழுவிதமான லோகங்களையும்

பொன்னாக்கும். (லோகம்-உலகம் பூமியைப் போன்ற ஏழு லோகங்கள்). இக்குருவிற்கு முத்தா என்று பெயர்.

ஆமதே இந்த முத்தா
னடவுடன் பீங்கா னிட்டுப்
போமது கிழிஞ்சில் நீரைப்
புகட்டதில் ஆறு சேரைத்
தாமது கரத்தால் தேய்த்துத்
தனிப்பட ரவியில் வைக்க
வோமென வுள்ளே சுண்டி
உருவெனக் குருவு மாமே. (பா. 97)

இந்த குரு முத்தாவை ஒரு பீங்கானில் போட்டு ஆறு சேர் கிளிஞ்சல் நீரை வார்த்து கையால் அரக்கி தேய்த்து ரவியில் வைத்தால் நீர் சுண்டி குருவாகும்.

குருவெனு முத்தா னுள்ளே
கொடிதான துறையைக் கேளு
அருவிய தூபந் தீபம்
ஆகவே எட்டு மாகும்
பருகிய குளிகை யாகும்
பலபல சித்து யாகும்
சொருகிய விடய மெல்லாம்
சொர்னத்திற் சொர்ன மாமே. (பா. 98)

இக்குருவினால் தூபம் தீப முதற்கொண்ட எட்டு விதமான வேதையும் கைக்குள்ளாகும். அதுமட்டுமின்றி குளிகையும், சித்தும் தங்கம் செய்யும் ஏமத் தொழிலும் கைக்குள்ளாகும்.

சொர்னமே செய்யக் கேளு
சுகப்படக் குருவி னாலே
பன்னவோ ரெடையைக் கீழே
பரப்பிமேல் துருசி ஒன்று
கன்னய வீரம் ஒன்று
கடுமேலே லிங்கம் ஒன்று
மன்னய சூதம் ஒன்று
வைத்துமுன் வரிசை வையே. (பா. 99)

வைத்ததில் மூன்று துள்ளி
வாரதிற் சுக்கிலந் தான்
பத்திய பழத்தின் சாறு
பரிந்து முத்துளியும் வார்த்து
ஒத்திய காந்தி காட்டி
உருட்டிமேற் பரிநால் சுற்று
மொத்திய காந்தத் துள்ளே
முயற்சியாய்ப் பிரட்டிப் போடே. *(பா. 100)*

இந்த முத்தா குருவினால் தங்கம் செய்யும் முறையை கூறுகிறேன் கேள். இம்முத்தா குருவை ஒரு எடை எடுத்து பரப்பிக் கொண்டு அதன்மேல் துருசு ஒரு பலம், வீரம் ஒரு பலம், லிங்கம் ஒரு பலம், சூதம் ஒரு பலம் இவை நான்கையும் வரிசையாக ஒன்றன் மேல் ஒன்றாக வைத்து இவற்றின் மேல் மூன்று துளி சுக்கிலத்தையும், மூன்று துளி பழச்சாறையும் விட்டு சூரிய ஒளியில் வைத்து உருட்டி அதன் மேல் நான்கு பலம் தங்கத் தகட்டை சுற்றி காந்தத்துள் வைத்து பிரட்ட வேண்டும்.

போட்டுநீ உலர்ந்த பின்பு
புகழ் செங்கற் குகைக்குள்வைத்து
நீட்டியே அதனால் மூடி
நேர்லெகு புடத்தைப் போடு
ஆட்டுநற் களங்கின் வர்ணம்
அஞ்சது நிறமே யாகும்
ஓட்டுநீ வெள்ளி தன்னில்
ஓராயிரத் தொன்று பாய்ச்சே. *(பா. 101)*

பாய்ச்சிட நவலோ கங்கள்
பழுக்குமிப் படியே பாரு
ஆய்ச்சிடச சூதம் ரெண்டில்
அணையிந்தக் குருவை ஒன்று
மாய்ச்சிலாச் சுக்கிலத் தால்
வளைத்தரை சூத மாளும்
போச்சுது சூதங் கோடி
புனைந் தேறும் பாருபாரே. *(பா. 102)*

பிரட்டிய பின்பு செங்கல்லால் செய்த குகைக்குள் வைத்து மூடி லகுவாக ஒரு புடம்போட்டு எடுத்துப் பார்த்தால் மஞ்சள் நிறமுள்ள களங்கு கிடைக்கும். இக்களங்கை வெள்ளியுடன் ஆயிரத்துக்கொரு பங்கு

சேர்த்தால் தங்கமாகும். இதேபோல் நவலோகங்களிலும் ஆயிரத்துக்கொரு பங்கு சேர்த்து உருக்கினால் தங்கமாகும்.

முத்தா குருவை ஒரு பங்கு எடுத்து அதனுடன் ரெண்டு பங்கு சூதத்தை சேர்த்து சுக்கிலத்தை விட்டு அரைத்தால் சூதம் சுழன்று மாளும். இச்சூதத்தால் வேதை கோடி வரை பாயும்.

பாருநீ பாஷா ணங்கள்
பலப்பல எல்லாங் கட்டும்
தாருயர் வாட்டி னாலும்
தனித்திடும் அரைப் பினாலும்
கோருயர் வேதை கோடி
கொடுக்கவும் தூர ஓடும்
ஆருய ரென்னைப் பெற்ற
ஆத்தாளுக்கு அரன் அறைந்தவாறே! (பா. 103)

அதேபோல் குருவை பாஷாணங்களுடன் சேர்த்தரைத்து வாட்டிடில் அனைத்தும் கட்டும். மேலும் இக்குருவால் கட்டிய பாஷாணத்தால் வேதைகள் கைக்குள்ளாகும். இம்முறைகள் சிவபெருமானால் பார்வதிக்கு சொல்லப்பட்டதாகும்.

சார நீர்

வாறுகேள் இனியான் சொல்வேன்
வளம்படச் சார நீரைக்
கூறுநற் சுன்ன நீரிற்
கொட்டதிற் கிளிஞ்சில் தன்னைத்
தேறுநற் சவுட்டு வில்லை
திறம்படக் கரைத்துக் கொண்டு
மாறுநல் அடுப்பில் ஏற்றி
வளம்பட எரித்துப் பாரே. (பா. 104)

எரித்தபின் இறக்கி மெள்ள
இயம்படச் சுரண்டித் தேய்த்து
வருத்திய சங்கு போல
வளம்பெற வெளுப்பாம் பாரு
அருத்திய கிழிஞ்சில் தன்னில்
அதிற்பத்துப் பலமே வாங்கிப்
பருத்தநல் லுள்ளே பூசப்
பரிவுடன் மருந்து கேளே. (பா. 105)

சார செயநீரை கூறுகிறேன் கேள்! சுன்னநீரில் சவுட்டு வில்லைகளை கரைத்துக்கொண்டு அதில் கிளிஞ்சல்களை போட்டு அடுப்பேற்றி எரித்து பின்னர் ஆறவிட்டு தேய்த்து பார்த்தால் கிளிஞ்சல்கள் சங்குபோல் வெண்மை நிறமாயிருக்கும். இக்கிளிஞ்சலை பத்துபலம் எடுத்துக் கொள். இதன் மேல் பூச வேண்டிய மருந்தை பற்றி கூறுகிறேன் கேள்!

கேளுநீ கெந்தி யோடு
கெடிபடும் அரிதாரந் தான்
வாளுநீ துருசி யோடு
வகைக்குக் காற்பலமே கூட்டு
ஆளுயர் அமுரி யாலே
அரைத்ததற் குள்ளே பூசி
வேளுநீ உலர்ந்த பின்பு
வெளியிலே புடத்தைப் போடே. (பா. 106)

போட்டிடச் சுன்ன மாகும்
புகழ்சாரம் சமனாய்ச் சுட்டு
ஆட்டிட அரைத்து மெள்ள
அமுக்கிடு குகையின் உள்ளே
நீட்டிடப் புடமே போட்டு
நிலையுறச் சாரங் கட்டும்
கோட்டிட அரைத்துப் பீங்கான்
கொட்டி நீ பனியில் வையே. (பா. 107)

கெந்தி, அரிதாரம், துரிசு இவை மூன்றையும் வ்கைக்கு காற்பலம் எடுத்துக் கொண்டு இவற்றை அமுரியால் அரைத்து கிளிஞ்சலின் மேல் பூசி காயவைத்து புடம் போட்டால் சுன்னமாகும். இச்சுன்னத்திற்கு சமஅளவு சாரம் சேர்த்து நன்றாக இழைத்து குகைக்குள் வைத்து புடம்போட்டால் சாரம் கட்டும். இதை அரைத்து பீங்கானிலிட்டு பனியில் வைக்க வேண்டும்.

வைத்திடச் செயநீ ராகும்
வளம்பெற்ற சாரநீர் தான்
கைத்திடுஞ் சார நீரில்
கரைத்திடு வீரம் பூரம்
உய்த்திடச் செம்பு தன்னை
உருக்கியிந் நீரில் வார்க்கப்
பைத்திடும் ஊறல் அற்றுப்
பளிச்சென்று வெளுக்கும் பாரே. (பா. 108)

பாருநீ நாகம் சாய்க்கப்
பதையாமற் கட்டும் நாகம்
வாருநீ இரும்பை நீரில்
வாகுடன் கரியி லாடும்
தாருநீ துருசி தோய்க்கச்
சளவட்டை யூறல் போகும்
தூருநீ சாய்க்கு மார்க்கம்
துறைபதி னென்றார் சொல்லே. (பா. 109)

பனியில் வைத்த சாரமானது செயநீராகும் . இச்செயநீரில் வீரம், பூரம் சேர்த்து நன்றாய் கலக்கிக் கொண்டு செம்பை உருக்கி இந்நீரில் சாய்க்க செம்பானது ஊறலற்று நன்றாய் வெளுக்கும் மேலும் இந்நீரில் நாகத்தை உருக்கி சாய்த்தால் நாகம் கட்டி திடப்படும். அதேபோல் இரும்பை இந்நீர்விட்டு உருக்கினால் கண்விட்டாடும். மேலும் துருசை தோய்த்து உருக்கினால் ஊறல் நீங்கி வட்டைப்போலாகும்.

அயக்களங்கு

சொல்லிய காந்தம் ஒன்று
துலங்கிய அயமே ரெண்டு
மல்லிமுப் பலமுங் கூட்டி
வளம்பெற ஒன்றாய்ச் சேர்த்தே
எல்லிய பழத்தின் சாற்றால்
இழைத்ததைக் கழுவிப் போட்டே
ஒல்லியே உருக்கு மார்க்கத்
துறப்போடு மருந்து கேளே. (பா. 110)

காந்தம் ஒரு பங்கும், இரும்பு இரண்டு பங்கும் ஒன்றாய் சேர்த்து பழச்சார் விட்டரைத்து கழவிப்போட்டு பின்னர் மருந்துடன் கூட்டி உருக்குவதற்கு முறை கூறுகிறேன் கேள்!

கேளுநீ வீரம் லிங்கம்
கெடிய மால் தேவிசாரம்
வாளுநீ வகைக் கிரண்டு
வளம்பெறக் காசு தூக்கி
மாளுநீ வெண் காரந்தான்
அதிலரைப் பலமே போட
வூளுநற் சார நீறு
முப்புநீ ருறுக வாரே. (பா. 111)

வார்த்திதை அரைத்தே சாமம்
வளம்பெற ரவியில் வைத்தே
யோர்த்திய மறுநாள் தானும்
இப்படி அரைத்து வைத்துக்
கோர்த்திய மூன்றா நாளும்
கொள்கையாய்த் தீர்ந்த பின்பு
நாற்றிசை மெச்ச வந்த
நலம்பெறும் அயத்தில் மாட்டே. (பா. 112)

வீரம், லிங்கம். மால்தேவி, சாரம், இவை நான்கையும் வகைக்கு இரண்டு காசு எடை எடுத்துக் கொண்டு இதனுடன் வெங்காரம் அரை பலம் சேர்த்து சார செய நீரையும், உப்பு செயநீரையும் வார்த்து ஒருசாமம் அரைத்து ரவியில் வைத்து உலர்த்தி மீண்டும் மறுநாள் முன்போல் செயநீரால் அரைக்க வேண்டும்.. இதேபோல் மூன்று நாள் தொடர்ந்து அரைத்து முன் சுத்தி செய்து வைத்துள்ள அயத்தின் மேல் பூச வேண்டும்.

மாட்டவே இன்னும் மற்ற
மருந்து நான் சொல்லக்கேளு
ஆட்டவே அழிஞ்சில் வித்தும்
அதனோடே வாளம் புங்கு
காட்டுக்குள் ஆம ணக்கு
கடுகிய பீர்க்கம் வித்தும்
ஒட்டுக்குள் அமுக்கா வேளை
முயற்சியாம் வேருங் கூட்டே. (பா. 113)

மேலும் இதனுடன் கூட்டும் மருந்தைக் கூறகிறேன் கேள்! அழிஞ்சில், நேர்வாளம், புங்கு, ஆமணக்கு, பீர்க்கன், போன்றவைகளின் விரைகளும், முக்காவேளையின் (முட்காய் வேளை) வேரும் சேர்க்க வேண்டும்.

கூட்டியது ஆறு தன்னிற்
குலாவியது அஞ்சும் வித்து
தீட்டிய தொன்று வேறு
நிறையொன்றில் வராகன் ரெண்டு
வூட்டிய அமுரி யாலே
யுறவரைத் தொக்கக் கேளு
ஆட்டியே அயத்தி னோடே
அரைவியே உருக்கி டாயே. (பா. 114)

உருக்கிய முறையைக் கேளு
ஒருருக் காச்சு தப்பா
மருக்கியிப் படியே நீயும்
வைத்தூது அயத்தை அஞ்சும்
தருக்கிய மணியை வாங்கித்
தனிவங்க நாளத் தூதிச்
சொருக்கிய சார நீரிற்
சுகப்பட வார்த்தி டாயே. (பா. 115)

அதாவது ஐந்து வகையான விரைகளையும், ஒரு வகையான வேரையும் வகைக்கு இரண்டு வராகன் எடுத்து அமுரியால் அரைத்து மருந்து பூசிய அயத்துடன் சேர்த்து உருக்க வேண்டும். இதேபால் ஐந்து முறை மருந்துடன் சேர்த்து குகையில் வைத்து ஊதி மணியாய் வாங்கி அதை வங்க நாளத்தில் வைத்து ஊதி சார செயநீரில் வார்க்க வேண்டும்.

வார்த்திட்ட இரும்புக் குள்ளே
மாற்றுண்டு பொன்னும் உண்டு
வார்த்திட மாட்டா னாகில்
மாற்றில்லை பொன்னு மில்லை
வார்த்திட அறியா தார்க்கு
வாதங் கால்வாத மாச்சு
வார்த்திட வறிவோர் வாசி
மனைக்குள்ளே வாழ்ந்த பேரே. (பா. 116)

இவ்விரும்பினால் பொன்மாற்று அதிகம் உண்டாகும். அதாவது அயத்தை மருந்துடன் சேர்த்து உருக்கி முறையாக அதை சார செயநீரில் வார்த்தால் பொன்மாற்று அதிகம் உண்டாகும். (அதிக மாற்றுள்ள தங்கத்தை உண்டாக்க வல்லதாகும்) முறையாக வார்க்கவில்லை என்றால் பொன் மாற்று அதிகம் உண்டாகாது. இவ்வயத்தால் வாதம் செய்து பார்த்து வாசியோகத்தில் நிலைத்து நில்.

பேரொத்த அயமது ஒன்றில்
பெரும்பறி அரையே கூட்டு
நேரொத்தே உருகும் போது
நீட்டதில் ஒன்று நாகம்
வாரொத்து வாங்கி நிற்கில்
மாட்டதில் ஒன்று லிங்கம்
காரொத்த குழலாள் சொன்னாள்
கைகண்ட வித்தை பாரே. (பா. 117)

மணியாய் வாங்கிய அயத்திலிருந்து ஒரு பங்கு எடுத்து குகையில் வைத்துருக்கி, அதனுடன் தங்கத்தை அரை பங்கும், நாகம் ஒரு பங்கும் சேர்த்து உருக்க வேண்டும். அப்பொழுதும் நாகமானது அயத்தினுள் புகுந்து நிற்கும். பிறகு இதனுடன் லிங்கம் ஒரு பங்கு சேர்த்து வேதைத் தொழிலைச் செய்து பார். இதை பார்வதியின் மூலம் நான் அறிந்துக் கொண்டேன்.

பாருநீ நாகம் பூட்டிற்
பசுமையாம் புகையே வந்தால்
தாருநீ மயங்க வேண்டாம்
தனிக்காரம் சாரம் பூசிக்
கோருநீ கொடுத்த நாகங்
கொடுக்கென உள்ளே வாங்கும்
மாருநீ மணியை வாங்கி
வளம்பட நிறுத்துப் பாரே. (பா. 118)

நாகத்தை அயத்துடன் சேர்த்து உருக்கும்பொழுது அயமானது நாகத்தை வாங்காமல் மஞ்சள் நிறமான புகையை கக்கினால் அதை கண்டு மயங்காமல் காரத்தையும் சாரத்தையும் நாகத்தின் மேல் பூசி அயத்துடன் சேர்த்துருக்கினால் நாகத்தை உள்ளே வாங்கும் இவை அனைத்தையும் (அதாவது ஒரு பங்கு அயம், அரை பங்கு தங்கம், ஒரு பங்கு நாகம் ஒரு பங்கு லிங்கம்) ஒன்றாய் சேர்த்துருக்கி மணியாய் வாங்க வேண்டும்.

நிறுத்திட்ட மணியை மெள்ள
நேர்பட நொறுக்கிக் கொண்டு
மறுத்திட்ட செம்பு வெள்ளி
மாட்டதில் பத்துக் கொன்று
விறுத்திட்ட மாற்றது அஞ்சாகும்
விளங்கிய உப்புக் காவி
கறுத்திட்ட புகையி னுள்ளே
தங்கமு மிறங்கும் பாரே .... (பா. 119)

இம்மணியை நன்றாய் நொறுக்கிக் கொண்டு செம்பு வெள்ளியில் பத்துக்கொரு பங்கு சேர்த்தால் ஐந்து மாற்றுள்ள தங்கமாகும். இத்தங்கமானது உப்புக் காவி மற்றும் புகைக்குள் இறங்கும்.

இறங்கியே கண்ட பின்னே
யிந்தநற் களங்கிற் பாதி
தறங்கிய செய சூதத்தைத்
தாக்கிநீ ஒன்றாய்ச் சேரு
உறங்கிய கெந்தி யிட்டு

ஊட்டுவாய் சமபா கந்தான்
மறங்கிய குப்பிக் கேற்றி
வாலுகை எரித்தி டாயே. (பா. 120)

எரித்திட அய நாகந்தான்
இயல்பட அருண னாகும்
மரித்திடு நவலோ கத்தில்
மாட்டிட நூற்றுக்கு ஒன்று
கருத்தினில் ஒன்றாய்க் கொள்ளக்
காயமும் சித்தி யாகும்
குருத்தினிற் குழந்தைப் பெண்தான்
கூறினாள் கூறி னாளே. (பா. 121)

இக்களங்கிற் சரிபாதி செய சூதத்தை சேர்த்து ஒன்றாக்கி பின்பு இம்மொத்த எடைக்கு சரி அளவு கெந்தி சேர்த்து காசிக் குப்பிக்கேற்றி வாலுகையில் வைத்தெரித்தால் அயநாகம் அருணன்போல் செந்தூரமாகும். இச்செந்தூரத்தை நவலோகத்தில் சேர்த்தால் பொன்னாகும். இச்செந் தூரத்தை அனுதினமும் உட்கொண்டால் காயம் திடமாகும். இதை வாலைப் பெண்ணான தாயார் எனக்கு உபதேசித்தாள்.

கூறிய ஆத்தாள் பாதங்
குறைவறப் பூசித் தோர்க்கு
வேறினி வினையு மில்லை
வெளிக்குளே ஒளியும் காணும்
தேறிநீ உண்ணு கற்பம்
தினமொரு பணமே தானும்
மாறினி மயிரும் போக
மறுமயி ராகும் பாரே. (பா. 122)

வாலைப் பெண்ணான தேவியை பூசித்து அவள் பாதங்களை வணங்கினால் நம்முடைய வினைகள் யாவும் விலகும். அது மட்டும் இன்றி பரவெளியானது வெளியாக தோன்றும். பூசையின் சமயம் அனுதினமும் செயநாக செந்தூரத்தை பண அளவு உட்கொண்டால் நரை மயிரானது உதிர்ந்து கருமை நிறமாய் முளைக்கும்.

லிங்கக்கட்டு

பாருநீர் லிங்கக் கட்டு
பகருறேன் பண்புள் ளோரே
தாருநீ லிங்கம் தானுந்
தலப்பலம் அரையே வாங்கிச்
சாருசம் பழத்தின் சாறு
சாங்கமுச் சேரை ஊட்டி
வேருயர் வேளைச் சாறு
விரைந்தொரு சேரை ஊட்டே. (பா. 123)

ஊட்டுமா தளையின் சாறும்
ஒழுக்கமுச் சேரைப் பின்னே
நீட்டுநல்இ லிங்கந் தானும்
நேர்பட இறுதி நிற்கும்
கூட்டுநற் காரம் ரெண்டு
குலாவிய உப்பு இரண்டு
தாட்டுநற் சாரம் ஒன்று
தான் அஞ்சும் பொடியாய்ப் பண்ணே. (பா. 124)

அரைப் பலம் லிங்கத்தை எடுத்து அதை மூன்று சேர் எலுமிச்சம்பழச் சாறில் போட்டு சாற்றை லிங்கத்திற்கு ஏற்றிய பின்னர் வேளைச்சாறு ஒரு சேரும், மாதளைச் சாறு மூன்று சேரும் ஊட்ட வேண்டும். இவ்வாறு மூன்று வகையான சாற்றையும் லிங்கத்திற்கு ஊட்டுவதால் லிங்கமானது இறுகும். பிறகு இரண்டு வகையான காரமும்,. இரண்டு வகையான உப்பும், ஒரே வகையான சாரத்தையும் பொடியாய் செய்து கொள்ள வேண்டும்.

பண்ணவே அஞ்சு தானும்
பலமும் ரெண்டரையே கூட்டு
தண்ணவே கரண்டிக் குள்ளே
தான்மூன்று பங்கில் ஒன்று
திண்ணவே தீயில் வைத்துத்
திறமுடன் லிங்கம் போட்டே
உண்ணவே தைலந் தானும்
உறுதியாய்ப் பிரட்டிக் கொள்ளே. (பா. 125)

பொடி செய்த ஐந்து வகையான சரக்கையும் வகைக்கு அரைப் பலம் எடுத்து ஒன்றாய்ச் சேர்த்து மூன்று பங்காக்கி ஒரு பங்கை கரண்டியிலிட்டு தீயில் வைத்தால் தைலமாகும். இத்தைலத்தில் லிங்கத்தைப் போட்டு பிரட்ட லிங்கமானது தைலத்தை உட்கொள்ளும்.

பிரட்டியே மூன்று பங்கு
பிழையறத் தீர்ந்த பின்பு
திரட்டிய துருசுச் சுன்னம்
சீர்பெறு காரச் சுன்னம்
அரட்டிய சாரச் சுன்னம்
அரனின்மால் தேவிச் சுன்னம்
தரட்டிய சூதங் கட்டும்
சமனாகத் தூக்கிக் கொள்ளே. (பா. 126)

தூக்கியே வாய்நீர் விட்டுச்
சுழற்றியே அரைத்துக் கொண்டு
தாக்கியே லிங்கத்தின் மேற்
தடவியே வாட்டு வாட்டு
ஆக்கிய சோறு போலே
அதற்குள்ளே சூதஞ் சாகும்
பாக்கிய வான்கட் கப்பா
பலித்திடும் வாதப் பாங்கே. (பா. 127)

இதே போல் மற்ற இரு பங்கையும் தைலமாக்கி அத்தைலத்தில் இந்த லிங்கத்தை முறையாகப் பிரட்டி தீர்த்து பின்னர் துருசுச் சுன்னம், காரச்சுன்னம், சாரச்சுன்னம், அரிதாரச் சுன்னம், கட்டிய சூதம் இவை ஐந்தையும் சம அளவு எடுத்து வாய்நீர் விட்டரைத்து லிங்கத்திஃ மேல் பூசி வாட்டினால் லிங்கம் மேலும் நன்றாய் இறுகும். இந்த லிங்கத்தால் சூதம் சாகும். மேலும் இதனால் வாதம் சித்தியாகும்.

பாங்குடன் கட்டும் லிங்கம்
பாய்ச்சிடு செம்பில் வெள்ளி
வாங்கியே உள்ளே புக்கும்
வர்ணமும் எட்ட தாகும்
தாங்கிமுன் னாம்பூ நாகஞ்
சாற்றிடும் இந்த லிங்கம்
தேங்கிய தச மாற்றாகும்
தேகமும் சித்தி யாமே. (பா. 128)

இக்கட்டிய லிங்கத்தை வெள்ளிக் செம்புடன் சேர்த்து உருக்கினால் தங்கமாகும். அதாவது எட்டு மாற்று உண்டாகும். இந்த லிங்கத்தை பூநாகத்துடன் சேர்த்தால் பத்து மாற்று உண்டாகும். அதுமட்டுமின்றி காயமும் சித்தி யாகும்.

ஆமின்னுஞ் சொல்லக் கேளாய்
அப்பனே கார சாரம்
தாமின்னு முப்பு நீரிற்
தனிச்சூடன் போட்டே மெள்ள
வாமினிக் குழவி கொண்டு
மத்திக்கத் தகடு போலாங்
காமினித் தகட்டை வாங்கிக்
கடுகவே வெயிலில் போடே. (பா. 129)

போட்டந்தத் தகடு தானும்
பொலிவுறக் காய்ந்த பின்பு
மாட்டந்த உப்பு நீரில்
வளம்பெறத் துவைத்துப் போடு
காட்டிந்தச் சூடந் தானுங்
கனலுக்கு மஞ்சா தப்பா
ஆட்டந்தக் கற்பூரத்தை
அப்படித் துவைத்துப் போடே. (பா. 130)

உப்பு செயநீரில் கார சாரத்தை போட்டு கலக்கி அதில் சூடனை போட்டு மத்தித்தால் தகடு போலாகும். இத்தகட்டை வெய்யிலில் காயவைத்து மீண்டும் உப்பு செயநீரில் தோய்த்து வெயிலில் காய வைத்தால் கற்பூரமானது தணலுக்கு எரியாமல் கட்டி நிற்கும். இவ்வாறு மீண்டும் மீண்டும் செயநீரில் துவைத்துத் துவைத்துக் காய வைக்க வேண்டும்.

துவைத்திட்ட பூரந் தானும்
சுகம்பட முழுக் கட்டாகும்
பவைத்திட்ட சார நீறும்
பரிவுடன் உப்பு நீறும்
தவைத்திட நன்றாய்ச் சேரத்
தயிர்போலத் தயங்கி நிற்கும்
புவைத்திடப் பூரம் வீரம்
போட்டதில் அரைத்துக் கொள்ளே. (பா. 131)

அரைத்திட்ட குழம்பு தானும்
அப்பிடு படிகம் மேலே
அரைத்திட்ட குழம்பு தானும்
அப்பிடு உப்பு மேலே
அரைத்திட்ட குழம்பு தானும்
அப்பிடு காரம் மேலே

அரைத்திட்ட குழம்பு தன்னை
அப்பிடாய் துருசுக் கென்னே. *(பா. 132)*

இவ்வாறு தோய்த்து வாட்டுவதால் பூரமானது முழுக்கட்டாகும். இதனுடன் சாரச் சுன்னத்தையும், உப்புச் சுன்னத்தையும் சேர்த்தால் தயிர் போலாகும், இத்தயிரில் பூரம், வீரம், இவை இரண்டையும் சேர்த்து அரைத்துக் குழம்பு போலாக்கி படிகத்தின் மேலும் உப்பின் மேலும், காரத்தின் மேலும், துருசின் மேலும் பூசினால் அனைத்தும் கட்டும்.

சார நீர்

என்றநற் சாரந் தன்னை
இயல்பட உப்பு நீரில்
தன்றியே துவைத்துப் போடு
சமயத்தில் அரைத்துப் போடு
கன்றவே சாரங் கட்டி
கனமதாய் இருக்கா தப்பா
மன்றவே கார சாரம்
மற்றொன்றில் மடங்கி டாதே. *(பா. 133)*

மடங்கினால் கார சாரம்
வாதங் கைவந்த தாகும்
மடங்கினால் கார சாரம்
மலைமுதல் மரமும் பொன்னாம்
மடங்கினால் கார சாரம்
மகத்தான கெவுனம் போகும்
மடங்கினால் கார சாரம்
மாசித்திக் காய மாமே. *(பா. 134)*

சாரத்தை உப்புச் செயநீரில் துவைத்து அரைத்தால் சாரமானது கட்டி திடப்படும். இம்முறையை விட்டால் இச்சாரத்தை கட்டுவதற்கு மற்றொரு முறை கிடையாது. சாரம் கட்டி திடப்பட்டால் வாதம் மிக எளிதில் கூடும். இச்சாரத்தால் மலை முதல் மரம்வரை எல்லாம் பொன்னாகும். மேலும் கெவுன சித்தியும், காய சித்தியும் கைக் குள்ளாகும்.

சித்தியாம் சார நீரிற்
செந்தூர வாதச் செம்பை
மத்திய பலமே ஒன்று
வார்த்திடு பில்லை போல
வத்திய பலம தொன்று
வளமையில் வீரம் போட்டு

குத்திடு சார நீரும்
கூட்டிடு உப்பு நீரே. (பா. 135)

நீரதில் இரண்டுங் கூட்டி
நேர்காரம் எட்டில் ஒன்று
தாரதில் அரைத்து மெள்ளத்
தடவியே வில்லை மேலே
சேரதிற் கீழும் மேலும்
செப்பதில் நெருஞ்சி வைத்து
ஆரதிற் புடமே போட
அதரதில் வீழும் பாரே. (பா. 136)

கட்டிய சாரத்தை பொடி செய்து பனியில் வைத்தால் செயநீராகும். இச்சார செயநீரில் ஒரு பலம் வீரத்தைப் போட்டு கலக்கிக்கொண்டு பிறகு சிகப்பு நிறங் கொண்ட செம்பை ஒரு பலம் உள்ள வில்லைகளாக வார்த்துக் கொண்டு சார செயநீரையும், உப்பு செயநீரையும் ஒன்றாய் சேர்த்து, எட்டில் ஒரு பங்கு வெங்காரத்தையும் சேர்த்து நன்றாய் அரைத்து செம்பு வில்லைகளின் மேல் பூசி பிறகு மருந்து பூசிய வில்லைகளின் கீழும் மேலும் செம்பு நெருஞ்சியை வைத்துப் புடம்போட்டால், பூசியபகுதி தூள் தூளாக உதிர்ந்து வீழும்.

பாருநீ வில்லைக் கப்பா
பாங்குடன் பூசிப் பூசி
தாருநீ வில்லை யெல்லாம்
தனியாத ராகு மட்டும்
கோருநீ புடத்தைப் போட்டுக்
கூட்டியே காரங் குத்தி
மாருநீ உருக்கிக் கொண்டு
வார்த்திடாய் வில்லை என்னே. (பா. 137)

உதிர்ந்தது போக மீதம் உள்ள வில்லையின் மேல் செயநீர்க் குழம்பைப் பூசி நெருஞ்சில் வைத்துப் புடம் போடவும். வில்லை முழுதும் தூளாகும் வரை இவ்வாறு செய்யவும். பிறகு தூளைச் சேகரித்து வில்லையாக்கவும்.

வில்லைக்கே எடையாம் வீரம்
விரைந்துமுன் போலே பூசித்
தெல்லைக்குப் புடமே போட்டுச்
சேர்ந்த தெல்லாம் வாங்கி
மல்லைக்கா முரிக்கு முன்போல்
வாரதை வில்லை போலே

மல்லைக்கு முக்காற் பூசி
முத்தர முருக்கி டாயே. *(பா. 138)*

உருக்கியே பாராய்செம்பை
ஒளிதரும் ஊறல் போகும்
தருக்கியே வெண்மை யாகும்
தறுக்கென்னும் ரசத்தைப் போலே
மருக்கியே வெள்ளீ யத்தில்
மாட்டுநீ எண்ணை தீயும்
வருக்கியே ஏழு மாற்றாய்
வளம்பெறக் காணும் காணே. *(பா. 139)*

இவ்வில்லைகளுக்கு சரி அளவு வீரத்தை பூசி முன்போல் புடம்போட்டு எல்லாவற்றையும் ஒன்றாய் சேர்த்து காரமிட்டுருக்கி மீண்டும் வில்லைகளாய் வார்த்து மீண்டும் மருந்தை பூசி புடம்போட்டு உருக்க வேண்டும் இதுபோல் மும்முறை செய்தால் செம்பின் ஊறல்நீங்கி தூய்மையான வெண்மை நிறங்கொள்ளும். அதாவது பார்ப்பதற்கு பாதரசம்போல் தோன்றும். இச்செம்பை வெள்ளீயத்துடன் சேர்த்து எண்ணை விட்டு உருக்கினால் ஏழு மாற்று உண்டாகும்.

காணுநீ இந்தச் செம்பில்
களங்கற்ற இரும்பைச் சேரு
பூணுநல் தங்கஞ் சேரு
புகழுற்ற நிமிளை சேரு
சேணுநல் லிங்கத் தோடு
சேர்த்தஞ்சும் சமனாய்க் கூட்டி
ஊணுற உருக்கி டப்பா
உறுதியாய்க் களங்க மாமே. *(பா. 140)*

ஆமிந்தக் களங்கந் தன்னை
ஐம்பதுக் கொன்று போடத்
தாமிந்த நவலோ கங்கள்
தப்பாது பத்துக் காணும்
சேமிந்தக்களங்கு தானுஞ்
செய்திடு முப்புக் கப்பா
போமிந்த வேதை மார்க்கம்
பொற்கொடி சொன்ன வாறே. *(பா. 141)*

இந்த செம்புடன் சுத்தித்த இரும்பு, தங்கம், நிமிளை, லிங்கம்

ஆகியவற்றைச் சம அளவு சேர்த்து உருக்கினால் களங்காகும். இக்களங்கை ஐம்பதுக்கொருபங்கு நவலோகங்களுடன் சேர்த்துருக்கினால் பத்து மாற்றுள்ள தங்கம் கிட்டும். இக்களங்கை முதலில் செய்து கொண்டால் உப்பு வேதை கைக்குள்ளாகும். இம்முறையை தேவியிடமிருந்து பெற்றுக் கொண்டேன்.

வாறின்னுஞ் சொல்லக் கேளு
வாழ்கரு நாகம் பத்து
மாறின்னு மஞ்சா றாக்கி
வளம்பெறத் தகடு கட்டு
கூறின்னு நிமிளை ஒன்று
கூட்டதில் வீரம் பாதி
சேறின்னும் பூரந் தானுஞ்
சேர்க்கவே சேர்த்துக் கொள்ளே. (பா. 142)

சேர்த்ததோர் மருந்து மூன்றுஞ்
சிறந்திடும் வாயி னீரால்
கோர்த்ததை அரைத்துக் கொண்டு
குமட்டியே தகட்டிற் பூசி
வார்த்ததை ஓட்டில் வைத்து
மறுஓடு நன்றாய் மூடிப்
போர்த்ததைப் புடத்திற் போடப்
புகழ்தருஞ் சிவப்பாம் பாரே. (பா. 143)

கருநாகத்தை பத்து பலமெடுத்து உருக்கி தகடு போல் தட்டி பிறகு நிமிளை ஒரு பலம், வீரம் அரை பலம், பூரம் (கால் பங்கு), இவை மூன்றையும் ஒன்றாய் சேர்த்து வாய்நீரால் அரைத்துக் கொண்டு தகட்டின் மேல் பூசி ஒட்டில் வைத்து ஒடு மூடிப் புடம்போட்டால் சிவந்து போகும்.

சிவப்புறந் தாரை யெல்லாஞ்
சேர்க்கையாய் வாங்கி வாங்கி
பவப்புறு மருந்து பூசிப்
பாங்குடன் புடமே போடு
புவப்புறு மருந்து தானும்
போதாட்டால் முன்போற் கூட்டித்
தவப்புறப் புடமே போட்டுத்
தனியதாய் வாங்கிக் கட்டே. (பா. 144)

இச்சிவப்பை எல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து மீண்டும் முன்போல் மருந்து

பூசி புடம்போட வேண்டும். தகட்டின் மேல் பூசுவதற்கு மருந்து இல்லை என்றால் மீண்டும் முன்போல் மூன்று சரக்கையும் சேர்த்து வாய்நீரால் அரைத்து பூசவேண்டும். இவ்வாறு புடம்போட்டால் நாகம் கட்டும்.

வீரக்கட்டு

கட்டவே வீரந் தானும்
களங்கறச் சொல்வேன் கேளாய்
அட்டவே தாரம் ஒன்றும்
அதனிடை வீரம் பாதி
புட்டவே பூரங் கால்தான்
போடுநீ குருவண் டொக்கத்
தட்டவே ரெண்டு நீரால்
தாக்கிநீ அரைத்துக் கொள்ளே. *(பா 145)*

வீரக்கட்டைக் கூறுகிறேன் கேள். அரிதாரம் ஒரு பலம், வீரம் அரைப்பலம், பூரம் கால் பலம் ஆக மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்து இதனுடன் சம அளவு குருவண்டையும் கூட்டி இரண்டு வித நீரால் (இரண்டு வகையான செய நீரால்) அரைத்துக் கொள்.

கொண்டதோர் துருசு தானும்
கொள்ளுநா லெடையின் மேலே
பண்டதோர் மருந்தைப் பூசிப்
பாங்குடன் வெயிலிற் போடு
தண்டவே வெளுப்பாம் பாரு
தனியொக்க விரிந்த பின்பு
கண்டதோர் எடைக்கு நேராய்க்
கலந்துமுன் சூடன் கூட்டே. *(பா. 146)*

கூட்டுநீ ரிரண்டு மொக்கக்
குலாவியே பொடித்துக் கட்டி
ஆட்டியே ரவியிற் போடு
அப்பனே உறவு சேரும்
நீட்டிய எடைக் கொப்பாக
நிலைத்தமுன் சூடன் கூட்டு
ஆட்டிய சூடன் தானும்
அடைவுடன் குருவு மாமே. *(பா. 147)*

அரைத்த மருந்தை நான்கு எடையுள்ள துருசின் மேல் பூசி

வெய்யிலில் போட்டால் விரிந்து வெள்ளையாகும் இத்துருசு வெள்ளையை ஓர் எடை எடுத்துக் கொண்டு இதற்கு சம அளவு முன்பு செயநீரில் கட்டிய சுடனைச் சேர்த்து பொடி செய்து வெய்யிலில் போட்டால் இரண்டும் ஒன்றாய்ச் சேரும். ஒன்றாய்ச் சேர்ந்த இம்மருந்துடன் சமஅளவு மீண்டும் சூடனைச் சேர்த்து பொடி செய்து வெய்யிலில் வைத்தால் குருவாகும்.

குருவென்ற சூடன் தானுங்
கோபமாஞ் சரக்குக் கெல்லாந்
தருவென்ற வீரந் தானுந்
தலைசுற்றி இதற்குள் கட்டும்
மருவென்ற சூத யானை
அமைத்தவிக் குழியில் வீழும்
மருவென்ற சரக்கு யாவும்
அணுகுமுன் கட்டும் பாரே. (பா. 148)

இச்சூடன் சகலவிதமான சரக்கையும் கட்டும். மேலும் வீரம் சூதம் போன்ற சரக்குகள் இச்சூடனைக் கண்ட மாத்திரத்தில் கழன்று கட்டும்.

கட்டவே வீரம் தானுங்
கபளிக வாலை மாயி
யொட்டியகதலி கன்னி
யுடன்சூலை எட்டும் நீரில்
அட்டிய வீரந் தோய்த்தே
ஆச்சுடன் குருவிற் புக்கித்
தட்டியே புரட்டி மெள்ளத்
தணலோட்டில் வாட்டு வாட்டே. (பா. 149)

வாட்டியே ஏற்றும் மார்க்க
வகைகேளு மறையாய்ந் தோரே
ஆட்டியே வீரந் தன்மேல்
அதுநாலு சூடன் ஏற்று
பூட்டியே வாட்ட வாட்டப்
பொன்மணி போலே உள்ளே
கூட்டியே அரைக்க ஆடும்
குளிகைபோற் பாரு பாரே. (பா. 150)

வீரத்தை எட்டுவிதமான நீரில் தோய்த்து குருமருந்துடன் சேர்த்து புரட்டி தனியே வாட்ட வேண்டும். வாட்டிய வீரத்தின் மேல் நாலு பலம் சூடனை வாட்டினால் பொன் போல் கண் விட்டாடி பிரகாசிக்கும்.

(பொருள் அரைகுறையாக எழுதப்பட்டுள்ளது)

பாருநீ இந்த வீரம்
படுமுன்னே நவலோ கங்கள்
தாருநீ பரிசம் பண்ணத்
தறுக்கெனப் பொன்னே யாகும்
யாரிது சொன்ன தென்றால்
அகண்டா பூரணத்தாய் சொன்னாள்
ஏருய ரென்தாய் கேட்க
ஈசனும் உரைத்த வாறே. (பா. 151)

இக்கட்டிய வீரத்தை நவலோகங்களுடன் சேர்த்து உருக்கினால் பொன்னாகும். இம்மார்க்கத்தை யாரிடமிருந்து அறிந்துக் கொண்டாய் என்று கேட்பாயாகில் பூரணமான தாய் சொன்னாள். அத்தாயாருக்கு ஈசன்னான சிவபெருமான் உபதேசித்தார்.

வாறுகே ளிந்த வீரம்
வழங்கிய எடைரெண் டொக்கக்
கூறுமுன் காரீ யத்தின்
குலாவிய வதரும் நேர்தான்
தாறுயர் தங்க மொன்று
தனியரை வாய்நீ ராலே
வேறுயர் வில்லை போல
விளங்க நீயுலர்த் திடாயே. (பா. 152)

உலர்த்தியே கிளிஞ்சிற் குள்ளே
யுறவைத்துச் சீலை சுற்றி
அலர்த்தியே மணலுக் குள்ளே
அப்பனே புடத்தைப் போடு
குலர்த்திசை களங்காம் பாரு
கொடுத்திடும் வேதை கேளு
மலர்த்திய செம்பு வெள்ளி
மாட்டுநீ நூற்றுக் கொன்றே. (பா. 153)

ஒன்றெனுங் களங்கு தானும்
ஓடிடும் நவலோ கத்தில்
தன்றவே மாற்றுக் கேளுந்

தழையவே பதினைந் தாகும்
கன்றவே வீரம் போலக்
கடுங்களங்கு ஒன்ப தாகும்
அன்று அரன் சொல்ல ஆத்தாள்
அடியேனுக் களித்த வாறே. (பா. 154)

இக்கட்டிய வீரத்தை இரண்டெடை எடுத்து இதனுடன் முன்பு கட்டிய காரீயத்தை சமஅளவு சேர்த்து மேலும் தங்கம் ஒரு பலமும் கூட்டி வாய் நீரால் அரைத்து வில்லை தட்டி உலர்த்த வேண்டும். பிறகு இவ்வில்லைகளை கிளிஞ்சலுக்குள் வைத்து சீலை சுற்றி மணல் மறைவில் வைத்து புடம்போட்டால் களங்காகும். இக்களங்கை செம்பு வெள்ளியில் நூற்றுக்கொன்று சேர்த்தால் பதினைந்து மாற்று உண்டாகும். அதுமட்டு மின்றி இவ்வீரக்களங்கைப் போல் நவலோகங்களும் களங்காகும். இம்முறையை சிவபெருமானிடமிருந்து கேட்டு தாயானவள் எனக்கு கூறினாள்.

வாறுகேள் முன்னே சொன்ன
வளம்பெற்ற செயநீ ரென்றால்
கூறுகேள் கார சாரங்
கொடுஞ்சரக் கெல்லாங் கட்டுந்
தேறுகே ளொன்றோ டொன்று
சேர்ந்துற வறிந்து கூட்டு
ஆறுகேள் சூதந் தங்கம்
அணைத்திட வேதை யாமே. (பா. 155)

முறையான செயநீரென்றால் காரசாரம் முதல் அனைத்துவிதமான கொடிய சரக்குகளும் கட்டும். கட்டவேண்டிய சரக்குகளை அளவறிந்து சேர்த்தால் அனைத்தும் கைகூடும். சூதமும் தங்கமும் ஒன்றோடு ஒன்று சேர்ந்தால் தான் வேதை பலிக்கும்.

செய நீர்

வேதையு மாக வின்னும்
விளம்புறேன் செயநீர் கேளு
ஆதையு முப்புப் பத்தும்
அதினொடு புளியும் ஏழு
கோதைய சீனம் ஒன்று
கொடியதோர் காரம் ஒன்று
பாதைய மூத்தா னுப்பு

பகரதிற் பலமும் ரெண்டே. *(பா. 156)*

ரெண்டையு மொக்கக் கூட்டி
நிமிரவே இடித்து நையத்
தண்டைய கணலை யிட்டுத்
தாக்கிடச் சுன்ன மாகும்
கண்டைய கல்வத் தூட்டிக்
கடும்பனி படவே வைக்கில்
அண்டையில் சாய்க்க நீர்தா
னப்பனே வருநீ பாரே. *(பா. 157)*

மூத்தான் உப்பு = சிறுநீர் உப்பு

செயநீர் சொல்கிறேன் கேள்! பத்து பலம் உப்பு, ஏழு பலம் புளி, ஒரு பலம் சீனம், ஒருபலம் காரம், மூத்தானுப்பு இரண்டு பலம் ஆக இவை அனைத்தையும் ஒன்றாய் சேர்த்து பொடிசெய்து புடம் போட்டால் சுன்னமாகும். இச்சுன்னத்தை பீங்கானிலிட்டு பனியில் வைத்தால் செயநீராகும்.

பாருநீ ரிந்தநீர் தான்
படியது வொன்று வாங்கிச்
சேருநீ ரிதற்குள் போடத்
திறமாக மருந்து கேளு
ஆருநீ மூத்தா னொன்றும்
அதிலரைப் பலமே வீரம்
காருநீ சூதங் காலுங்
கலவதிற் பூரங் காலே. *(பா. 158)*

காலுக்குள் பாதி கூட்டு
கடியவெள் ளூரத்தைத் தானே
கோலுக்குள் குருவண்டோ தான்
கொட்டதில் நூற்றுப் பத்து
தாலுக்குள் சிப்பி நீரால்
தனியரை எல்லாங் கூட்டிச்
சேலுக்குள் உலர்த்தி நன்றாய்ச்
செயநீரிற் கொட்டி டாயே. *(பா. 159)*

கொட்டியே செயநீர்க் குள்ளே
குழப்பியே வைத்து நீயும்

அட்டியே வஸ்து வாலே
ஆத்தாளைப் பூசை பண்ணி
மட்டிய வாசி யோகம்
வழிகண்டு நோக்கிப் பாரு
கெட்டியாம் வாதந் தானும்
கிடைத்திடும் ஞானந் தானே. *(பா. 160)*

இச்செயநீரில் போட வேண்டிய சரக்கின் அளவுகளை கூறுகிறேன் கேள்! மூத்தானுப்பு ஒரு பலம், வீரம் அரை பலம், சூதம் கால் பலம், பூரம் கால் பலம், வெள்ளுரம் அரைக்கால் பலம், குரு வண்டு நூற்றுப்பத்து ஆக இவை அனைத்தையும் சிப்பி நீரால் அரைத்து வெய்யிலில் உலர்த்தி ஒருபடி செயநீரில் போட்டு நன்றாய்க் குழப்பி தாயாரின் முன்பாக வைத்து வஸ்துவால் பூசை செய்து வாசியோகம் பூண்டு நின்றால் வாதமும் ஞானமும் கைக்குள்ளாகும்.

தான காஞ்சார நீரைச்
சாற்றுறேன் கேளு கேளு
வான தாஞ்சாரம் எட்டு
வாழ்சிப்பிச் சுன்னம் எட்டு
ஏன தாயிழையு நன்றாய்
இயல்பட அரைத்துக் கொண்டு
கோன தாமூத்தா னுப்பைக்
கொட்டிரு பலமும் நீயே. *(பா. 161)*

இருபல மொக்கப் போட்டே
இயல்படக்குகையில் வைத்துக்
கருபலப் புடமே போட்டுக்
கல்வத்திற் போட்டு நீயும்
தருபலப் பனியில் வைத்துத்
தாக்கிநீ யரைக்க நீராம்
அருபலச் செயநீ ராகும்
அப்பனே பீங்கான் வாங்கே. *(பா. 162)*

சார செயநீரைக் கூறுகிறேன் கேள்! சாரம் எட்டு பலம் சிப்பிச் சுன்னம் எட்டு பலம் இவை இரண்டையும் ஒன்றாய் சேர்த்திழைத்து மூத்தானுப்பு இரு பலமும் கூட்டி குகையில் வைத்து புடம் போட்டால் சுன்னமாகும். இதை கல்வத்தில் போட்டு இழைத்து பனியில் வைத்தால் செயநீராகும். இதை பீங்கானில் வார்த்து தெளியவைத்து பத்திரப்படுத்து

வாங்கிநீ தெளிவை எல்லாம்
வார்த்திடு மறு பீங்கானில்
ஓங்கிய நீருக் குள்ளே
உறப்போட மருந்து கேளு
தாங்கிய செயநீர் தானுந்
தனியொரு படியே கூட்டிப்
பாங்கிய மூத்தா னுப்பு
பலமது ஒன்று கூட்டே. (பா. 163)

கூட்டுநீ வீரந் தன்னைக்
கொட்டரைப் பலம் அதற்குள்
நீட்டுநீ சூதம் கால் தான்
நிலைத்திடும் பூரங் கால் தான்
ஒட்டுநல் லுர மரைக்கால்
ஒரு நூறு குருவண் டூட்டித்
தீட்டுநற் கிளிஞ்சி நீரால்
சேர்த்தரைத்து உலர்த் திடாயே. (பா. 164)

இச்செயநீரில் போட வேண்டிய சரக்கைப் பற்றி கூறுகிறேன் கேள். மூத்தானுப்பு ஒரு பலம், வீரம் அரைப்பலம், சூதம் கால்பலம், பூரம் கால் பலம், உரம் அரைக்கால் பலம், குருவண்டு நூறு ஆக இச்சரக்கு அனைத்தையும் கிளிஞ்சிநீரால் அரைத்து உலர்த்திக் கொண்டு

உலர்ந்தபின் சார நீரில்
ஒக்கவே கொட்டிக் கிண்டிக்
கலந்தவப் பதன மாகக்
கட்டிநீர் வைப்பீ ரையா
அலர்ந்திடுஞ் சார காரம்
அறுபத்து நான்கும் சாகும்
குலந்தனிற் குபேர னுக்குக்
கொடுத்தநீர் வாலை தானே. (பா. 165)

வாலையைப் பூசை பண்ணு
வளம்பெற வாசி நோக்கு
சோலையின் வண்டின் கூட்டத்
தொடர்போலே வாத சித்தி
காலையு மாலை ரெண்டுங்
கடுகியே ஒன்றாய்ப் போகும்
வேலையில் வேறு மில்லை

வேதையின் துறையைக் கேளே. *(பா. 166)*

உலர்த்திய சரக்குகளை சார செயநீரில் கொட்டி கிண்டிக் கொண்டு பதனமாக வைத்துக் கொள். இந்நீரால் கார சாரம் முதற்கொண்டு அறுபத்து நாலு சரக்கும் மடிந்து சாகும். இந்த செயநீரை குபேரனுக்கு வாலையான தேவி கொடுத்தருளினாள். ஆகையால் நீயும் இச்செயநீரை வாலையின் முன்பாக வைத்து பூசை செய்து வாசியோகத்தில் நின்றால் வாதம் சித்தியாகும். காலை மாலை என்ற பேதம் அகன்று போகும். (அதாவது இவ்விடத்தில் காலையான சூரியனும், மாலையான சந்திரனும் ஒன்று சேரும் என்று பொருள். உண்மையில் சூரிய நாடியும் சந்திர நாடியும் ஒன்றோடு ஒன்று கலந்து அக்னியான சுழுமுனை நாடியில் சேரும்). இனி வாதத்தின் போக்கை கூறுகிறேன் கேள்!

கேளுநீ சார மொன்று
கெடியுறு கார மொன்று
வாளுநீ மாலின் தேவி
வளம்பெற ஒன்று கூட்டித்
தோளுயர் உப்பு நீரால்
சுகப்பட அரைக்க மூன்றும்
வேளுயர் தீயில் வைத்து
விளங்கிய செயத்தைப் பாரே. *(பா. 167)*

செயப்பட்ட பின்பு தானுஞ்
சேர்வங்கத் தகட்டின் மேலே
கயப்பட்ட வங்கந் தானுங்
கடுகியே நொறுங்கும் பாராய்
அயப்பட்ட வங்கந் தன்னை
அரைத்துநீ வெள்ளி மேலே
பயப்பட்டுப் பூசிவாட்டிப்
பருவமாய்ப் புடத்திற் போடே. *(பா. 168)*

போட்டிட ரசிதந் தானும்
புகழ்பெற்ற குருவேயாகும்
ஆட்டிய குருவில் ரெட்டி
அப்பனே சூதஞ் சேரு
நீட்டிமுன் தாளகத்தை
லேபித்துக் கவச மாக்கி
வாட்டிமேல் வாட்ட வாட்ட

மணிபோலக் கட்டும் பாரே. *(பா. 169)*

பாருநீ இந்தச் சூதம்
பாய்ச்சொரு நூறுவங்கத்
தாருயர் வெள்ளியாகும்
அசையாமல் ஈயம் போட்டால்
தேருயர் ரசித வித்தை
தேவிக்கெம் ஈசன் சொன்னார்
காருயர் நவலோகத்தில்
காட்டிட வெள்ளி யாமே. *(பா. 170)*

சாரம் ஒரு பலம், காரம் ஒரு பலம், மால் தேவி ஒரு பலம், ஆக இவை மூன்றையும் உப்பு செயநீரால் அரைத்து புடம்போட்டால் செயமாகும். செயமான இச்சரக்கை வங்கத் தகட்டின் மேல்பூசி தீயிலிட்டால் வங்கம் நொறுங்கும். நொறுங்கிய வங்கத்தை வெள்ளியின் மேல் பூசி வாட்டி புடம் போட்டால் ரசிதம் குருவாகும். இந்த ரசித குருவின் எடைக்கு இரு மடங்கு சூதத்தைச் சேர்த்து தாளகத்தை லேபனமாக பூசி கவசம் செய்து வாட்டினால் மணிப்போல் கட்டும். இச்சூதமணியை வங்கத்தில் நூற்றுக்கொரு பங்கு சேர்த்தால் உயர்தரமான வெள்ளியாகும். இதே போல் நவலோகத்துடன் சேர்த்தாலும் வெள்ளியுண்டாகும். இந்த ரசித வித்தையை முன்பொரு சமயம் சிவபெருமான் பார்வதிக்கு சொன்னதாகும்.

ஏமவித்தை

ஆமிந்தப் போக்கை விட்டே
அறைகிறேன் ஏமவித்தை
காமிந்தக் காரமொன்று
கடுகிய சாரமொன்று
வாமிந்தக் கெந்தியொன்று
வார்த்தரை உப்புநீரே
சேமிந்தத் தீயில்வைத்துச்
செயத்தைப்பார் செயத்தைப்பாரே. *(பா. 171)*

பாருநீ கெந்திகட்டிற்
பாய்ச்சுபின் கெந்தியொன்று
தாருநீ யரைத்துப் போடத்

தனிரெண்டு மொக்கக் கட்டுஞ்
சேருநீ நாகஞ் சூதஞ்
சேர்த்திதைக் கவசம் பண்ணி
யோருநீ மண்லுக்குள்ளே
உறுதியாய்ப் புடத்தைப் போடே.. (பா. 172)

போட்டிடில் சூதநாகம்
பொலிவுடன் சுழுன்றுகட்டும்
ஆட்டிடிற் கட்டுமட்டும்
அப்பனே பூசிப் போடு
கூட்டியே சூதம்நாகம்
குறியுறச் சேர்ந்தபின்பு
மூட்டியே நாலுக்கொன்று
முயற்சியாய்த் தங்கஞ்சேரே. (பா. 173)

ஏம வித்தையை கூறுகிறேன் கேள். காரம் ஒரு பலம், சாரம் ஒரு பலம், கெந்தி ஒரு பலம் இவை மூன்றையும் உப்பு செயநீரால் அரைத்து தீயில் வைத்து எரித்தால் கெந்தி கட்டும். கட்டிய இக்கெந்தியுடன் ஒரு பலம் சாதாரண கெந்தியைச் சேர்த்தரைத்து புடம் போட்டால் கட்டிப் போகும். கட்டிய இக்கெந்தியுடன் நாகம், சூதம் இவை இரண்டையும் சேர்த்திழைத்து கவசம் செய்து புடம் போட்டால் சூதம் நாகம் இரண்டும் சுழன்று கட்டும். மீண்டும் முன்போல் இழைத்து பூசி புடம்போட்டால் 'சூதமும் நாகமும் ஒன்றோடு ஒன்று கலந்து உருத்தெரியாமல் சுழன்று கட்டும்!

சேர்த்திடத் தங்கந்தானும்
சிறந்துநற் களங்கே யாகும்
கோர்த்திடும் நவலோகத்திற்
கொடுக்குமுன் ஏமமாகும்
ஆர்த்திட ஈவிதன்னில்
ஐம்பதுக் கொன்றே ஈந்து
பார்த்திடாய் ஈசன்என்தாய்
பராபரைக் கருளும் வாறே. (பா. 174)

இச்சூத நாகத்திற்கு நாலுக்கொரு பங்கு தங்கம் சேர்ந்து உருக்கினால் களங்காகும். இதை நவலோகங்களுடன் ஐம்பதுக்கொரு பங்கு சேர்த்துருக்கினால் தங்கமாகும். இம்முறையை சிவபெருமான் பார்வதிக்கு

சொன்னார்.

வாறுகேள் நோயில்லாத
வளம்பெறும் சடத்தைப் பார்த்துத்
தாறுயர் பாண்டத் துள்ளே
தனிமலம் விடவுஞ் சொல்லி
வேறுகேள் அமுரி வார்த்து
விளங்கியே குழம்பு செய்து
கூறுகேள் காய்ச்சி வற்றக்
கொட்டிநீ கலயம் பாய்ச்சே. *(பா. 175)*

நோயில்லாத திடமான சரீரத்தை கொண்ட மனிதனை பார்த்து அவனிடம் ஒரு பாண்டத்தை கொடுத்து அதில் மலங்கழிக்கச் சொல்லி பிறகு அப்பானையை வாங்கி அதிலுள்ள மலத்துடன் அமுரிவிட்டு குழம்புபோல் கிளரி அடுப்பேற்றி நீர்வற்றக் காய்ச்சி மறுகலயத்துள் கொட்டிக் கொண்டு,

(இந்தப்பாடலின் பொருள் சரிதானா என்று கேட்டுச் சில புகழ்பெற்ற சித்த வைத்தியர்களுக்கும், சித்த வைத்தியச்சங்கங்களுக்கும் கடிதங்கள் எழுதினோம், கோவையிலிருந்து திரு கே. குருநாதன் மட்டும் சுத்தமான இடத்திலிருந்து பூநீறு வாங்கி அமுரி விட்டுக் கலக்கிக் கொள்ளவேண்டும் என்பதே இதன் உண்மையான பொருள் என்று எழுதியிருக்கிறார்.)

பாய்ச்சிய கலய வாய்க்குப்
பதையாமல் சில்லுப் போட்டு
ஆச்சிய புடத்தைப் போடில்
அப்பனே தமர் கீழிட்டு
ஒச்சிய தமரின் வாயில்
ஒக்கவோர் கலயம் வைத்துக்
காய்ச்சிவாய் மூடி மேலே
கடுகநீ புடத்தைப் போடே. *(பா. 176)*

போட்டிடத் தைலங் கீழே
புகல்மேலே சாம்பல் நிற்கும்
ஆட்டிய சாம்ப லொன்றில்
அமுரிதான் பத்து வாரு
கூட்டியே கரைத்து வைத்துக்
கொள்ளுநீ மூன்று நாளும்
நீட்டியே தெளிவை வாங்கி

நேர்படக் காய்ச்சி டாயே. *(பா. 177)*

பின்பு அக்கலயத்தின் வாயை சில்லால் மூடி கலயத்தின் கீழ்பாகத்தில் ஒரு துளையிட்டு துளையின்கீழ் மற்றொரு கலயத்தை வைத்து, மேற்பானை மூடியின் மேல் தீமுட்டி எரித்தால் தைலம் அடி பானையில் தங்கும் சாம்பல் மேற்பானையில் தங்கும். இச்சாம்பலை ஒரு பானையில் போட்டு ஒன்றுக்கு எட்டு பங்கு அமுரிவிட்டு கரை த்து மூன்று நாட்கள் அசையாமல் தெளியவைத்து தெளிந்த நீரை மற்றொரு பானையில் விட்டுக் காய்ச்ச வேண்டும்.

காய்ச்சிடு வார்த்து வார்த்துக்
கடுகிய குழம்பில் வாங்கி
யாச்சிடு மிணங்கன் சீன
மதனோடு வீரம் பூரம்
ஓச்சிய சாரத் தோடும்
உ ங்கிய துருசுச் சுன்னந்
தாச்சிய ஆறுங் கேளு
தூ ரித்தனி காசு போடே. *(பா. 178)*

போட்டுநீ தைலம் வார்த்துப்
பு ார்ச்சியாய் அரைத்துக் கொண்டு
மூட்டுநீ குழம்பி னோடே
மூதண்ட ரவியில் வைக்க
வாட்டிய பீங்கான் கிண்ணி
அ ஆற்குள்ளே இதனை வார்த்துக்
கோட்டுநீ ரவியில் வைக்கக்
குழம்பது மூத்தா னாமே. *(பா. 179)*

அதில் உள்ள நீர் வற்றிய பிறகு மீண்டும் அமுரிவிட்டு முன்போல் காய்ச்சி கடைசியில் குழம்பு பதமாய் வாங்கி பின்பு வெடியுப்பு, சீனம், வீரம், பூரம், சாரம், துருசு போன்ற இவ்வாறு சரக்கையும் வகைக்கு ஒரு காசு எடை சேர்த்து அடிக் கலயத்தில் உள்ள தைலத்தைவிட்டு நன்றாய் அரைத்து மு ன்பு காய்ச்சி வைத்துள்ள குழம்புடன் சேர்த்து குழப்பி பீங்கானில் விட்டு வைத்தால் சூரியவொளிபட்டவுடன் குழம்பானது மூத்தானுப்பாகும்.

ஆமிதை மூத்தா னென்றே
அறைந்திட்ட நாமங் கேளு
தாமிது உண்ட உப்பு

தனிப்புளி ரெண்டுஞ் சென்று
காமிது நீரிலுப்பாய்க்
கடும்பல பிணிக ளாச்சு
வேமிது மூலத் தீயின்
விதத்தினால் பிறந்த வாறே. *(பா. 180)*

பிறந்திடு மகிமை யாலே
பேராச்சு மூத்தா னென்று
அறிந்திதை யெடுக்க மாட்டார்
அப்பனே நிஷித்த மென்பார்
பறிந்திடும் வாதந் தானும்
பார்த்திதைத் தூஷித் தோர்க்கு
முறிந்திடும் நூல்க ளெல்லாம்
முற்றிலுங் கிடையா தென்னே! *(பா. 181)*

இதற்கே மூத்தானுப்பு என்று பெயர். அதாவது நாம் உண்டவுடன் உட்கொண்ட புளியும் உப்பும் நம் உடலில் உள்ள நீருடன் கலந்து பலவகையான பிணிகளைத் தோற்றுவிக்கும். பிறகு இதே உப்பானது மூலத் தீயால் வெந்து வெளியேற்றப்படும் பொழுது மூத்தான் என்ற பெயர் பெற்று வாதத்திற்கு ஆதியாய் நிற்கிறது. நான் கூறிய முறைப்படி இவ்வுலகத்தோர்கள் மூத்தானுப்பை எடுக்க மாட்டார்கள். மேலும் இதை "அசிங்கம்" என்று தூஷிப்பார்கள் இப்படிப்பட்ட மானிடர்களுக்கு எவ்வளவு நூல்கள் படித்தாலும் வாதம் பொய்யாகும்.

உப்பு புளி மார்க்கம்

கிடையாத புளியி னுப்பைக்
கேட்கினும் வல்லோர் சொல்லார்
அடையாத புளியி னுப்பின்
அளிவெல்லாஞ் சொல்லக் கேளு
குடையாத சீன முப்பு
கூடினும் ஒருகை யாகும்.
படையாத துருசு சீனம்
பகரிலும் கையொன்றாமே. *(பா. 182)*

ஒன்றான இணங்க னோடு
மூட்டுநீ புளியுமொன்று
தன்றான நாத விந்து

தானதாம் புளியு முப்புக்
கன்றான கெந்தி யோடு
கல்லுப்பே புளியு முப்பு
மன்றானார் என்னைப் பெற்ற
மாயிக்குச் சொன்ன வாறே. *(பா. 183)*

புளியுப்பின் மார்க்கத்தை வல்லோர்களிடம் கேட்டாலும் வெளியாக கூறமாட்டார்கள். ஆனால் நான் உனக்கு கூறுகிறேன் கேள்! சீனம் உப்பு சரக்காகும். துருசு புளி சரக்காகும். இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று இணையும். வெடியுப்பு, உப்பு சரக்காகும். இதற்கு பழம்புளியே புளி சரக்காகும். நாதம் புளி சரக்காகும். விந்து இதற்கு நேர் உப்பு சரக்காகும் கெந்தி புளி சரக்காகும். இதற்கு நேர் உப்பு சரக்கு கல்லுப்பாகும். இதைப்பற்றி சிவபெருமானான ஈசன் என் தாய்க்கு சொன்னார்.

உப்பு ஈசன் – புளி சத்தி

வாறுகே ளுப்பே யீசன்
வழங்கிய புளியே சத்தி
கூறுகேள் ரெண்டி னாலுங்
கொண்டது வாத மெல்லாம்
வாறுகேள் கார சாரம்
வழங்கிய மார்க்கங் கண்டால்
தாறுகே ளாறு தாண்டித்
தனிவெளிப் பரமு மாமே, *(பா. 184)*

உப்பே ஈசன், புளியே சக்தி இவை இரண்டும் கூடினால் வாதம் கைக்குள்ளாகும். இவ்வுப்பு புளியின் மார்க்கம் அறிந்து கூட்டினால் பரப்பிரம்மம் வெளிப்படையாகத் தோன்றும்

ஆமென வின்னுங் கேளாய்
அறைகிறேன் அறிந்த மட்டுந்
தாமென அண்டத் துள்ளே
தனித்தவெண் கருவே யுப்பு
வாமென மஞ்சள் மார்க்கம்
வழங்கிய புளியே யாச்சு
வோமென மேலி னோடும்
உயர்ந்திடு நாத மாமே. *(பா. 185)*

ஆமது சூத முப்பு
அப்பனே புளியாங் கெந்தி
போமது கிளிஞ்சி லுப்பு
புகழ்சதை புளியு மாகுந்
தாமது சங்கே யுப்பு
தனிச்சதை புளியு மாகும்
வாமது நத்தை யுப்பு
வளர்சதை புளியாச் சொல்லே *(பா. 186)*

மேலும் கூறுகிறேன் கேள்! முட்டையின் வெண்கரு உப்பாகும் இதில் உள்ள மஞ்சள் கரு புளிசரக்காகும். முட்டையின் ஓடு நாத சரக்காகும். சூதம் உப்பு சரக்காகும், கெந்தி புளிசரக்காகும், கிளிஞ்சல் உப்பு சரக்காகும், சதை புளி சரக்காகும். அதே போல் சங்கும், நத்தையும் உப்பு சரக்காகும். சங்கின் சதையும், நத்தையின் சதையும் புளிசரக்காகும்.

புளியுப்பு ரெண்டி னாலே
போந்ததிவ் வண்ட மெல்லாம்
புளியுப்பு ரெண்டி னாலே
போந்தது வாத மாச்சு
புளியுப்பு ரெண்டுங் கண்டோர்
புகழ்ச்சியோர் வேறே கண்டாய்
புளியுப்பு ரெண்டுங் கூடில்
புகலண்டச் சுன்ன மாமே. *(பா. 187)*

இந்த உப்பு புளியால் தான் இவ்வண்டங்கள் உண்டாயின. அதேபோல் வாதமும் இவ்வுப்பு புளியால் தான். இவ்விரண்டு வகையையும் அறிந்தவர்கள் மற்றொன்றை அறியத் தேவையில்லை. இவை இரண்டு சரக்குகளும் ஒன்றோடு ஒன்று கூடினால் சுன்னங்கள் பலிதமாகும்.

சுன்னத்தின் மார்க்கஞ் சொல்லத்
தொலையாத தென்னாற் கேளீர்
சுன்னத்தை விட்டகன் றால்
சுகக்கார சாரஞ் சாகா
சுன்னத்தை யறியா தார்க்குச்
சொல்லில்லை குருவு மில்லை
சுன்னத்தின் பெருமை சொல்லச்
சுந்தரர் மயங்கி னாரே. *(பா. 188)*

இவ்விரண்டு வகையான சரக்குகளை அறியாமல் செய்தால் காரமும் சாரமும் சாகாது. மேலும், குரு மருந்துகள் பலிக்காது. ஆக இதன் பெருமையை சொல்ல சிவபெருமானும் மயங்கினார்.

மயக்கமே தீர்த்தென்னாத்தாள்
வடிவாகக் கேட்ட போது
தயக்கமாய்க் காரசாரந்
தவித்திடு மார்க்கங் கேளாய்
கயக்கமா முப்பேசாரங்
கசங்கிய புளி யேகாரம்
பயக்கமாய் ரெண்டுங்கூடிற்
பதையாமற் சாகும் பாரே. (பா. 189)

பாருநீ சாவுதானும்
பரிசித்தில் செத்தும் சாகா
சாருநீ இனத்தைக்கண்டு
சரக்கெல்லாந் தாக்கிக் கொல்லும்
கோருநீ தங்கஞ்சூதங்
கூட்டியே களங்குசெய்யில்
வாருநீ வாய்நீரல்லால்
மற்றொன்றும் வாராதென்னே. (பா. 190)

மயக்கம் தீர வகையைக் கேட்டபோது அதை ஆத்தாள் தீர்த்து வைத்துக் கார சார வகையைக் கூறினாள். உப்பு என்பது காரசரக்காகும். புளி என்பது சாரசரக்காகும். இவை ஒன்றோடு ஒன்று கூடினால்தான் சரக்குகள் மடியும். ஆகவே இவை இரண்டால் சரக்குகளை தாக்கிக் கொல். தங்கமும் சூதமும் சேர்த்து களங்கு செய்யும் பொழுது வாய்நீர்விட்டுச் செய்ய வேண்டும். இல்லையேல் களங்கு பலியாது.

என்னவே காரசாரம்
இயலறு பத்துநாலும்
என்னவே யுபரசங்கள்
இரு நூறு சாரகாரம்
என்னவே நாதவிந்தால்
எடுத்தது காரசாரம்
என்னவே போகநாதர்
இயல்புடன் அருளும்வாறே. (பா. 191)

இக்கார சாரத்தால் தான், அறுபத்து நாலு சரக்கும், உபரசங்கள் இருநூறும், நாதவிந்தும் உண்டாயிற்று. இதை போகநாதர் எனக்கு கூறினார்.

வாறுகேள் புளியுமுப்பாய்
வளர்ந்தது பயித்தார் நாலும்
வாறுகேள் புளியுமுப்பாய்
வளர்ந்தது உபரசங்கள்
வாறுகேள் புளியுமுப்பாய்
வளர்ந்தது நாதவிந்து
வாறுகேள் புளியினுப்பின்
மார்க்கமுந் தொலையாதென்னே. (பா. 192)

என்னவே சீனக்கார
மெழுபூரச் சாரமாகும்
பன்னவே காரத்தோடே
பரிசிக்கில் சூடன்சாரம்
தன்னயக் கிளிஞ்சிற்சாரம்
தனிக்காரந் துரிசியாகும்
மன்னிய வீரங்காரம்
மாட்டண்டம் சாரமாமே. (பா. 193)

ஆமதே யிந்தமார்க்கம்
அறிந்துநீ ஒன்றொடொன்றைத்
தாமது சேர்ப்பாயாகில்
தனித்தனி சாகும்பாரு
வாமது கட்டுத்தேடி
மயங்கிய மடையார்கேளீர்
போமதே இதற்குள் வேதை
ஊட்டிநீ ரறிந்து பாரீர். (பா. 194)

அதே போல் புளியுப்பால் அறுபத்து நாலு சரசக்கும், உபரசங்களும், நாதவிந்தும் உண்டாயிற்று. இப்புளியப்பு மார்க்கத்தை மறந்து விடாதே. சீனாக்காரம், பூரம் இவை இரண்டும் சாரசரக்காகும், மேலும் வெங்காரம், சூடன், கிளிஞ்சில் இவையாவும் காரசரக்காகும் துரிசானது கார சரக்காகும். வீரம் காரசரக்காகும், அண்டம் சாரசரக்காகும். இம்மார்க்கத்தை முறையாக அறிந்து கூட்டினால் அனைத்தும் சாகாகும். இதை விட்டு வேறு முறைகளில் கட்டு முறையைத் தேடி அலைபவர்மூடர். ஆகவே

காரசாரத்தை அறிந்து வேதை செய்து பார்!

பாருமுன் சாரநீரில்
பறியுடன் நாகஞ்சாய்ப்பாய்
ஒருமுன் செம்புசாய்ப்பாய்
உறவுற்ற இரும்புசாய்ப்பாய்
தாருமுன் ஊறல்போகுந்
தனித்தனி களங்குக் காகும்
வாருநீ பதினொன்றேதான்
வகைவகை இனத்துக்கென்னே. *(பா. 195)*

சாரநீரில் தங்கம், நாகம், செம்பு, இரும்பு, இவைகளை உருக்கி சாய்த்தால் ஊறல் நீங்கி களங்காகும். இதேபோல் பதினொறு லோகத்தையும் செய்துகொள்.

துருசுவெள்ளை

என்னவே சாரநீரில்
இயல்படத் துருசு தோய்த்துப்
பன்னவே ரவியிற் போடு
பச்சைபோய் வெள்ளையாகும்
கன்னவே துருசுதானுங்
கடுவெள்ளை மயனமட்டுந்
தன்னவே துருசுவெள்ளை
சமர்த்தருக் கெய்தும் வாறே. *(பா. 196)*

வாளுகே ளிந்தவெள்ளை
வாங்கிநீ பலமேவைத்துத்
தேறுநல் வீரந்தானுஞ்
சேர்த்தரைப் பலமேகூட்டிக்
கூறுகேள் சாரச்சுன்னங்
கூட்டரைப் பலமுமொக்க
வாறுகேள் காரச்சுன்னம்
அதையரைப் பலமும் போடே. *(பா. 197)*

போட்டுநீ ஒன்றாய்க்கூட்டிப்
புகழ்பட அரைத்து வைத்தே
வாட்டிய சரக்குக்கெல்லாம்
அப்பனே சத்தைப்பூசி

நீட்டுநற் சாரநீரில்
நிலையுறத் தோய்த்து வாட்டப்
பூட்டுமே சரக்குஞ் சாகும்
போமதி வேதைதானே. (பா. 198)

சார நீரில் துருசைத் தே'யத்து ரவியில் போட்டால் வெள்ளை நிறமாய் மாறும். இத்துருசுக் ௪ுமெவள்ளையானது சமர்த்தரான யோகிக்கு எய்தும், இ த்துருசு வெள்ளையை ௐரு பலம் எடுத்து அதனுடன் வீரம் அரைப் பலமும் சாரச்சுன்னம் அரைப்பலமும் கூட்டி மேலும் காரச் சுன்னத்தையும் ஒரு பலம் கூட்டி ஒன்றாய்ச் சேர்த்தரைத்து சகலவிதமான சரக்கின் மேல் பூசி சார நீரில் துவைத்து வாட்டினால் சரக்குகள் சாகும். வேதையும் உண்டாகும்.

வே..தயுங் காணவேண்டில்
..ிளங்கிய சூதந்தங்கம்
பா..தயோ கூட்டநன்று
..றிபோனால் வாதம் போச்சு
யே..தயோ சொன்னாிரன்றே
இடும்பரே சூதந்தங்கம்
மா..தயே மறைப்பாயானால்
வாதமும் மயக்கும்பாரே. (பா. 199)

மடிந்த சரக்குடன் சூதமும் தங்கமும் கூட்டி உருக்கினால் வாதம் கைகூடும். தங்கத்தை விட்டால் வாதம் கைக் கூடாது.

மயக்கறக் குடவன்தன்னை
வளம்பெற உப்புநீரில்
தியக்கறக் காய்த்துத் தோய்நீ
செயலுடன் பதினொன்றேதான்
தயக்கறுந் துருசுச்சுன்னந்
..னியுறும் வீரச்சுன்னம்
ப.. ..றும் பூரஞ்சூதம்
..நங்கோழிப் பிச்சுங்கூட்டே. (பா. 200)

கூட்டிய அஞ்சுதானுஞ்
குலாவிய வெடையைக் கேளாய்
ஆட்டிய வகைக்கோர் காசாய்
அரைப்பலந் தானேகூட்டி

நீட்டிய குடவன்தானும்
நீள்பலம் பத்திற்பூசி
வாட்டியே புடத்திற்போட
மாற்றேறிப் பொன்னுமாமே. (பா. 201)

குடவனை (பித்தளையை) தகடாய் தட்டி உப்பு நீரில் காய்ச்சித் தோய்த்து மீண்டும் தகடை காய்ச்சி உப்பு நீரில் தோய்க்க வேண்டும். இவ்வாறு பதினொறு முறை செய்து துருசுச்சுன்னம், வீரச்சுன்னம், பூரம், சூதம், கோழிப்பிச்சு இவை ஐந்தையும் ஒன்றாய்ச் சேர்த்து வகைக்கு அரைபலம் கூட்டி குடவன் மேல்பூசி புடம்போட்டால் பொன்னாகும்.

பொன்னான குடவனுக்கும்
பூட்டுபொன் நாலுக்கொன்று
மன்னான காரங்குத்தி
வளம்பெற உருக்கிவாரு
பன்னான மாற்றோ எட்டுப்
பல்காவி யப்புக் கோடா
தன்னான மாயிசொல்லச்
சாதித்துக் கண்டவாறே. (பா. 202)

இக்குடவனுடன் நாலுக்கொரு பங்கு தங்கம் சேர்த்து காரம் விட்டு உருக்கினால் எட்டு மாற்றாகும். இது காற்றில் களிம்பு பிடித்து மங்காது இம்முறையை தாய் எனக்கு சொன்னாள்.

வாறுகேள் உப்புநீரும்
வளம்பெறு சாரநீரும்
தாறுகேள் சரியாய்க் கூட்டித்
தயக்கிடத் தயிரேயாகும்
வேறுகேள் சாரமொன்று
விளங்கிய காரம் ரெண்டு
ஆறுகேள் உப்பு ரெண்டும்
அதிலொன்று கண்டர்போடே. (பா. 203)

போடுநீ ஆறுந்தூக்கிப்
புகழுறப் பலமேயாறு
தேடுநா யுருவிஉப்பு
சிறந்திடுஞ் சவுட்டுவில்லை

சூடுநீ சூடனோடு
சொல்கடல் நுரையுங்கூட
வாடுறச் சொன்னவஞ்சம்
அரையபரைப் பலமுங்கூட்டே. (பா. 204)

உப்பு செயநீரையும், சார செயநீரையும் சம அளவு எடுத்து ஒன்றாய்ச் சேர்த்து இழைத்தால் தயிர் போலாகும் இதில் சார வகையில் ஒன்று சார வகையில் இரண்டு உப்பு வகையில் இரண்டு துருசு ஒன்று ஆக இவை ஆறையும் வகைக்கு ஒரு பலம் எடுத்து தயிர் போல் இருக்கும். செய நீரில் போட்டு பின்பு, இவை நாயுருவியுப்பு, சவுட்டுவில்லை, சூடன், கடல்நுரை, இவை ஐந்தையும் வகைக்கு அரைப்பலமெடுத்து மேற்படி செயநீரில் போட்டரைத்து.

கூட்டி முன்னீர் தன்னிற்
குலாவுமுன் தயிரை வார்த்தே
ஆட்டிட வரைக்கக் கட்டும்
அப்பனே குழம்பு போல்வை
காட்டிய கடலுக்குள்ளே
கல்லுப்பை உடைத்துக் கொண்டு
தீட்டிய குழம்பைத் தோய்த்துத்
தீக்குளே வாட்டுவாட்டே. (பா. 205)

வாட்டிடை வாட்டவாட்ட
வளம்பெறு முப்புச்சாகும்
மூட்டிடை யுருவியுப்பு
முழங்கிய சூடனோடு
காட்டிடை கடலின் மேலே
கவிழ்ந்திடு நுரையாமூன்றும்
தீட்டிடை அமுரிவிட்டுச்
சிக்கெனத் துவைத்துவாட்டே. (பா. 206)

துவைத்திடுங் குழம்புவற்றிச்
சுண்டியே சுறுக்குத்தாக்க
வவைத்துமே தீயின்மேலே
அமளியாய்த் தட்டுவாட்டு
புவைத்துமே யாற்றியாற்றிப்
போட்டுநீ வாட்டவாட்டப்
பவைத்துமே உப்புதானும்
பரிவுட னடங்கும் பாரே. (பா. 207)

குழம்பு பதத்தில் வாங்கி அதில் கல்லுப்பை தோய்த்து வாட்ட வேண்டும். இதே போல் பலமுறை வாட்டினால் உப்பு மடித்து சாகும். பின்னர் நாயுருவியுப்பு, சூடன், கடல் நுரை, இவை மூன்றையும் அமுரிவிட்டு கரைத்து இதில் மடிந்த கல்லுப்பை தோய்த்து குழம்பு வற்றும் வரை வாட்டி பின்பு தனியாக தீயின்மேல் வைத்துப் பிரட்டி வாட்டினால் உப்பானது அடங்கிகட்டும்.

பாரிந்த உப்புமேலே
பாங்குடன் சவுட்டுச்சுன்னம்
வாரிந்த அமுரிதானும்
வாகுடன் அரைத்துக்கட்டிக்
காரிந்த மேலேயொன்று
கடுஞ் சுன்னச் சீலைசுற்றிப்
போரிந்த உப்புமண்ணைப்
புகட்டிநீ புடத்தைப் போடே. (பா. 208)

போட்டபின் கவசம்நீக்கிப்
பொசுமூற உப்பைவாங்கி
நீட்டமாய் குகையின் உருக்கிப் பாரு
நிகரில்யற்ற மணிபோலாடும்
ஆட்டப்பின் உருகாவிட்டால்
அப்படியே வாட்டிப்போடு
கூட்டப்பா உப்பின் வேதை
கோடிக்கும் கோடிதானே. (பா. 209)

அடங்கிய இவ்வுப்பின் மேல் சவுட்டுச் சுன்னத்தை அமுரி விட்டு அரைத்துப் பூசி, பிறகு இச்சீலைக்கு மேல் கடுஞ் சுன்னத்தையும் சீலையாய் சுற்றி உப்பு மண்ணால் கவசம் செய்து புடம் போட வேண்டும். புடம் ஆறிய பின் கவசத்தை நீக்கி அதிலிருக்கும் உப்பை எடுத்து குகையில் வைத்துருக்கினால் மணி போலாகும். இப்படி உருக்கும் பொழுது உப்பு உருகவில்லையென்றால் மீண்டும் முன் போல் செயநீரில் துவைத்து வாட்டி சுன்னத்தால் சீலை செய்து புடம் போட வேண்டும். இவ்வுப்பு மணியால் வேதை கோடிக்கு பாயும்.

கோடியென்று உரைத்தேன் யானுங்
கொண்டிடிற் கோடிகோடி
ஆடிய குளிகைதானும்

அறுபத்து நாலுஞ் சாகுந்
தேடிய கெந்தியோடு
சேரவுஞ் சத்தே யாகும்
தாடிய தங்கந் தொட்டுச்
சகலமுங் குருவுமாமே. *(பா. 210)*

வேதையானது கோடிக்கு ஒன்று இட்டால் ஏற்படும் என்று நான் கூறினேன். ஆனால் உண்மையில் வேதைக்கு இம்மணியை கோடியிற் கோடி பங்கு இட்டால் போதும் இவ்வுப்பு மணியால் அறுபத்து நாலு சரக்கும் சாகும். இம்மணியுடன் கெந்தியைச் சேர்த்து உபயோகித்தால் அனைத்து வகையான சரக்குகளும் சத்தாகும். இம்மணியுடன் தங்கம் சேர்த்து உபயோகித்தால் சரக்குகள் அனைத்தும் குருவாகும்.

ஆமிந்த யோகமார்க்கம்
அறைந்தவர் மூலமூர்த்தி
வாமிந்த வைந்நூற்றுள்ளே
வகைவகை எல்லாம் பார்த்துக்
கோமிந்து தரித்தமாயா
சொல்லிய நூலையூன்றிக்
காமிந்தக் கபடு மார்க்கங்
கடாவினேன் கைகண்டேனே. *(பா. 211)*

கண்டதோ ருப்பைவிட்டாற்
கட்டில்லை வாதமில்லை
கண்டதோ ருப்பை விட்டாற்
கவனமும் சித்தியில்லை
கண்டதோ ருப்பை விட்டாற்
கடும்ரசச் சத்துமில்லை
கண்டதோ ருப்பையீசன்
கயற்கண்ணிக் கருளினாரே. *(பா. 212)*

இந்த மார்க்கத்தை திருமூலரானவர் தன்னுடைய ஐந்நூறு என்ற நூலில் கூறியுள்ளார். அந்நூலை நான் நன்றாய் ஆராய்ந்து பார்த்து இங்கு சொல்லியுள்ளேன். இவ்வுப்பு மணியை விட்டால் கட்டுவகைகள் வாதம், கவுனம், ரசச்சத்து போன்றவை சித்தியாகாது. இவ்வுப்பு முறையை சிவபெருமான் பார்வதிக்கு உபதேசித்தார்.

அருளின உப்பைநீயும்
அப்பனே தமரைப் போட்டே
அருளின வலக்கரத்தில்

ஆட்டிநீ செபமே செய்யத்
தெருளின சத்தகோடி
தேவதை சித்தியாகு
மருளின வாதமுன்:னே
வாய்பொத்தி நிற்கும்பாரே. *(பா. 213)*

இவ்வுப்பு மணியைத் துளை செய்து மாலையாய்க் கோர்த்து செபம் செய்தால் ஏழுகோடி மஉறா மந்திரங்களும் சித்தியாகும். அதுமட்டு மில்லாமல் இரசவாதம் வாய் பொத்திக் கொண்டு நமக்கு வசமாய் நிற்கும்.

கெந்தகக் குரு

பாருநீ உப்பு வொன்று
பருவியே உருகும் போது
தாருநீ கார மொன்று
தாக்கிநீ உள்ளே வாங்கு
காருநீ ரெண்டுக் குள்ளே
கடுஞ்சாரம் ஒன்றைப் போடு
கீருநீ மூன்றுக் கொக்கக்
கெந்தகம் போட்டி டாயே. *(பா. 214)*

போட்டிடக் கெந்தி தானும்
புகையாமல் உள்ளே வாங்கும்
ஆட்டிய குகைக்கு மேலே
அப்பனே மண்ணைப் பூசி
நீட்டியே புடத்தைப் போடு
நிலைகெந்திக் குருவு மாகும்
பூட்டிடச் சூதஞ் சாகும்
போர்போராய்ச் சாகும் பாரே. *(பா. 215)*

இவ்வுப்பு மணியை ஓர் எடை வாங்கி குகையில் வைத்து உருக்க வேண்டும். அப்படி உருக்கையில் காரம் ஓர் எடை சேர்த்தால் மணியானது காரத்தை தன்னுள்ளே வாங்கும். மேலும் இதுனுடன் கடுஞ்சாரத்தை ஓர் எடை சேர்த்து உருக்கிக்கொண்டு பிறகு இவற்றுடன் மூன்று எடை கெந்தகத்தை சேர்த்தால் மணியானது கெந்தகத்தை தன்னுள்ளே வாங்கும் கெந்தகம் உள்ளே சென்று அடங்கியபின் குகையை மண்ணால் சீலைசெய்து புடம் போட்டால் கெந்தி குரு மருந்தாகும். இக்குருவால் சூத மானது சுருண்டு மாளும்.

பாரிந்தக் குருவைத் தொட்டுப்
பரிசிக்கச் சொர்ணம் நீறும்
பாரிந்தக் குருவைத் தொட்டுப்
பரிசிக்க நாகஞ் சாகும்
பாரிந்தக் குருவைத் தொட்டுப்
பரிசிக்க வெல்லாஞ் சாகும்
பாரிந்தக் குருவைக் கண்டால்
பதையாமற் சூதஞ் சாமே. (பா. 216)

இக்குருவைத் தொட்டு தங்கத்தை பரிசித்தால் தங்கம் நீறும், நாகத்தை பரிசித்தால் நாகம் சாகும். அறுபத்து நாலு வகையான சரக்கையும் பரிசித்தால் அனைத்தும் சாகும். இதனால் சூதமும் சாகும். (பரிசித்தல் - தொட்ட மாத்திரத்தில், தொட்டவுடன்).

சாகவே சரக்கின் மார்க்கஞ்
சாற்றுறேன் இனத்தைக் கேளு
வாகவே உப்பு நின்று
வளம்பட உருகும் போது
போகவே வீரம் போடு
பொலிவுற்ற லிங்கம் போடு
வோகவே வெள்ளை போடு
ஒன்பதுங் கட்டும் பாரே (பா. 217)

கட்டுமே பாஷா ணங்கள்
காட்டெடை உப்பு நீராய்
மட்டுமுன் னறிந்தே யீய
வழங்கிய திசை மாற்றாகும்
ஒட்டிய உப்பின் வேதை
ஓடாது காவிக் கப்பா
பட்டுமே உருகி லோகம்
பளிச்சென்று பொன்னு மாமே. (பா. 218)

இச்சரக்கால் (உப்பு மணியால்) இன்னுஞ் சில மார்க்கத்தை கூறுகிறேன் கேள்! உப்பு குகையில் நின்றுருகும் பொழுது வீரத்தையும் லிங்கத்தையும் சேர்த்து உருக்கிக் கொண்டால் வெள்ளை முதற் கொண்ட பாஷாணங்களும், நவலோகங்களும் கட்டும். இவ்வுப்பால் கட்டிய பாஷாணங்களை முறையான அளவு லோகங்களுடன் சேர்த்தால் பொன்னாகும். உப்பு மணியால் செய்த பொன்னானது காவிக்கு ஓடாது.

குகையில் வைத்து உருக்கினால் பளிச்சென்று பிரகாசிக்கும்.

காரம்

ஆமிந்த உப்பை நீயும்
அரைத்திடு பழச் சாற்றாலே
நாமிந்தக் காரத்தின் மேற்
காட்டிடு நாலுக் கொன்று
சோமிந்த ரவியிற் போடு
சொக்கியே வெளுத்துக் கட்டும்
தாமிந்தக் காரந் தன்னைச்
சாற்றினாற் சீனர்க் கென்னே. *(பா. 219)*

உப்பை பழச்சாற்றால் அரைத்து காரத்தின் மேல் நாலுக்கொரு பங்கு பூசி ரவியில் வைத்தால் காரமானது வெளுத்து கட்டும். இக்கட்டிய காரத்தைப் பழச்சாறுவிட்டு சீனத்தின் மேல் பூசி வாட்டினால் சீனம் கட்டும்.

என்னவே சீனந்தன்னை எடுத்துநீ
இணங்கன் மேலே
பன்னவே ரெண்டுக் கொன்று
பழச்சாற்றால் பூசிப்பூசித்
துன்னவே வாட்ட வாட்டச்
சொக்கியே எலும்பு போலாம்
மன்னவே இருக்கும் பாரு
மகத்தான கட்டு மாமே. *(பா. 220)*

இக்கட்டிய சீனத்தை பழச்சாற்றால் அரைத்து வெடியுப்பின் மேல் ரெண்டுக்கொரு பலம் (இரண்டு பலம் வெடியுப்பின் மேல் ஒரு பலம் சீனத்தை) பூசி வாட்டினால் வெடியுப்பானது எலும்புபோல் இறுகிக் கட்டும்.

கட்டிய உப்பை நீயும்
கலந்தரை பழச்சார் விட்டு
ஒட்டிய சாரன் மேலே
ஊட்டிடு ரெண்டுக் கொன்று
தட்டிய தணலின் மேலே
சாங்கமாய் வாட்ட வாட்டக்
கெட்டியா யிருகுஞ் சாரம்

கெடிபடத் தந்த மாமே. (பா. 221)

இவ்வெடி உப்பை பழச்சாற்றால் அரைத்து சாரத்தின் மேல் ரெண்டுக்கொரு பலம் பூசி தணலின் மேல் வைத்து வாட்ட வாட்ட சாரம் இறுகித் தந்தம் போலாகும்.

ஆமது இந்த சாரம்
அணைத்திடு வீரன் மேலே
வாமது வாட்ட வாட்ட
மணிபோலே உருகிநிற்கும்
நேமது இந்த வீரம்
நியமித்து லிங்கத்துக்கு
மேமது வாட்டிப் பாரு
இயலுடன் வலியுங் காணே. (பா. 222)

காணிந்த லிங்கந் தன்னைக்
கபளித்து மால் தேவிக்குத்
தானிந்த வாட்ட வாட்டத்
தாளகம் உருகும் பாரு
பூனிந்தத் தாளகத்தைப்
பூட்டிடக் கெந்தி சாகும்
நீயிந்த கெந்தகத்தை
நிமிளைக்குக் கட்டி வாட்டே. (பா. 223)

கட்டிய இச்சாரத்தை பழச்சாறு விட்டு அரைத்து வீரத்தின் மேல் பூசினால் வீரம் கட்டும். கட்டிய இவ்வீரத்தை பழச்சாற்றால் அரைத்து லிங்கத்தின் மேல் பூசிவாட்டினால் லிங்கம் இறுகும். இறுகிய இந்த லிங்கத்தை பழச்சாற்றை விட்டரைத்து மால்தேவியின் மேல் பூசி வாட்டினால் மால்தேவி இறுகி கட்டும். கட்டிய இம்மால்தேவியை பழச்சாறு விட்டரைத்து கெந்தியின் மேல் பூசி வாட்டினால் கெந்தி இறுகும். இறுகிய இக்கெந்தகத்தை பழச்சாறு விட்டரைத்து நிமிளையின்மேல் பூசி வாட்டினால் நிமிளை இறுகி பலப்படும்.

வாட்டிய நிமிளை யொன்று
வளம்பட வீரம் ரெண்டு
ஒட்டிய தங்கம் ரெண்டு
உருகையில் இதனை ஈய்ந்து
கூட்டிய குகையோ டொக்கக்
குளிரவே ஆரவிட்டு
தீட்டிய மணியை வாங்கிச்

சேர்த்திட மருந்து கேளே. *(பா. 224)*

வாட்டிய நிமிளை ஒருபங்கு, வீரம் இரண்டுபங்கு, தங்கம் இரண்டு பங்கு இம்மூன்று சரக்குகளையும் எடுத்துக் கொண்டு முதலில் தங்கத்தை குகையில் வைத்துருக்கி இதனுடன் நிமிளை மற்றும் வீரம் இவைகளைச் சேர்த்து நன்றாய் உருக்கி குகையை ஆறவிட்டு மணியை வாங்கிக் கொள்.

கேளுநீ இதுமேற் பூசக்
கெடியான சுன்ன மார்க்கம்
வாளுநீ மூன்றின் தூக்க
வகையான பலமஞ்சாக
தேளுயிர் மணியின் மேலே
சீராகப் பூசக் சுன்னம்
தாளுயர் நாக வங்கம்
தனிக்கண்டர் வீரம் கூட்டே. *(பா. 225)*

கூட்டுநீ இன்னங் கேளு
குமுரிய சூதம் பூரம்
ஆட்டநீ சாரத் தோடு
அப்பனே ஏழுஞ் சுன்னம்
மூட்டநீ வகை ஒன்றொன்று
முழங்கக்கால் பலமே கூட்டித்
தீட்டிநீர் வாய்நீர் விட்டுச்
சிறக்கநீ பூசிப் போடே. *(பா. 226)*

போடுநீ ரவியில் தானே
புகழ்பெற தினமே பத்துக்
கூடுநீ மருந்து வைக்கக்
கொள்கிய குகையைக் கேளு
தேடுநீ உப்புச் சுன்னம்
சிறக்கவே குகையாய்ப் பண்ணி
ஆடுநீ கடல்மேல் நின்ற
அச்சுன்னம் உள்ளே பூசே. *(பா. 227)*

பூசிய குகைமி னுள்ளே
புகட்டுமுன் மணியின் சுன்னம்
மாசிய சில்லுப் போட்டு

வளம்பெறச் சாந்து செய்து
ஓசிய உலையி லிட்டு
ஊதுநீ ஒரு ஊத்தாக
காசிய நிமிளைத் தங்கம்
கடுவீரஞ் சுன்ன மாமே. (பா. 228)

பிறகு இம்மணியின் மேல் பூசுவதற்கு மருந்தைக் கூறுகிறேன் கேள். மணியை ஐந்து பலம் எடுத்துக்கொண்டு இதன் மேல் நாகம், வங்கம், துருசு வீரம், சூதம், பூரம், சாரம் போன்ற இவ்வேழு வகையான சரக்கையும் வகைக்கு கால் பலம் எடுத்து வாய்நீர் விட்டரைத்து (மணிக்கு) பூசி, பத்து நாள் ரவியில் காய வைத்து பின்பு, கல்லுப்புச் சுண்ணத்தால் குகைசெய்து கடல் நுரைச் சுண்ணத்தை குகையின் உட்புறம் பூசி இதற்குமேல் உப்பு மணியின் சுண்ணத்தையும் பூசி ரவியில் காய வைத்துள்ள மணியை குகைக்குள் வைத்து சில்லிட்டு மூடி உலையில் வைத்து ஊதினால் நிமிளைத் தங்கவீரச் சுன்னம் கிட்டும்.

ஆமிந்தச் சுன்னந் தானும்
அப்பனே நிமிளைச் சுன்னம்
ஆமிந்தச் சுன்னந் தானும்
அப்பனே தங்கச் சுன்னம்
ஆமிந்தச் சுன்னந் தானும்
அப்பனே வீரச் சுன்னம்
ஆமிந்தச் சுன்னந் தொட்டு
ஆடலாம் பாட லாமே. (பா. 229)

இதற்கு நிமிளைச் சுண்ணம் என்றும், தங்கச் சுண்ணம் என்றும், வீரச் சுண்ணம் என்றும் பெயர் சூட்டலாம். இச்சுண்ணத்தால் சகலவித வித்தைகளும் புரியலாம்.

பாடலாம் வாசி யோடு
பராபர பரத்தில் கூடி
ஆடலாம் அகண்டந் தாண்டி
அளவில்லை கரையு மில்லை
நீடலா மிதற்கு மொக்கும்
நிலையொத்த நிமிளைச் சுன்னம்
காடெல்லாம் பொன்னே யாகும்
கலந்து சவ்வாது கூட்டே. (பா. 230)

இச்சுண்ணத்தால் பராபர வஸ்துவுடன் கூடி நின்று சித்து விளையாடலாம். இந்நிமிளைச் சுண்ணத்தால் காடு முதல் எல்லாம் பொன்னாகும்.

கூட்டிய சவ்வாதைத் தொட்டு
குறைவறச் சரக்கில் பூசி
ஆட்டியே வாட்ட வாட்ட
அறுபது மணியே யாகும்
நீட்டிய சூதத் தூட்ட
நிமிஷத்தில் விறைத்துப் போகும்
மாட்டிய கல்லு மண்ணு
மகாமேரின் மரத்ததாமே. (பா. 231)

இச்சுண்ணத்துடன் சவ்வாது கூட்டி அறுபத்து நாலு சரக்கின் மேலும் பூசி வாட்டினால் அனைத்தும் மணியாகும். மேலும் இச்சுண்ணத்தை சூதத்துடன் சேர்த்தால் வினாடியில் சூதம் விறைத்துப் போகும். அதுமட்டுமின்றி இதனால் கல் மண் முதல் மஉறாமேரு மலைவரை எல்லாமே பொன்னாகும்.

ஆமிந்தக் குருவுக்கே தான்
ஆண்மைதான் வந்த தென்னில்
வாமிந்த வீசன் பக்கம்
மாயிக்கு முதல்நாள் நாதம்
காமிந்த நிமிளை தானும்
கட்டிய செயமாங் கெந்தி
சோமிந்த வேதை யோடும்
தூரத்தில் தூரம் பாரே. (பா. 232)

இக்குரு சுண்ணத்திற்கு இவ்வளவு சக்தி எங்கிருந்து வந்ததென்றால் மனோன்மணி நாதமான நிமிளையாலும் கட்டிய கெந்தகத்தாலும் வேதைகள் உண்டாயின. (பொருள் தெளிவாக இல்லை)

பாரிந்த நிமிளை பட்டால்
பலபலச் சிலையும் பொன்னாம்
பாரிந்த நிமிளை பட்டால்
பால்முதலாகத் தண்ணீர்
யாரிந்த நிமிளை பட்டால்
பரமனுந் தியாகி யாவான்
பாரிந்த நிமிளைச் சுன்னம்
படுமுன்னே எல்லாஞ் சாமே. (பா. 233)

இந்நிமிளை குருச் சுன்னத்தால் சிலைகளும் பொன்னாகும். பால் முதற் கொண்டு அனைத்து பொருட்களும் தண்ணீராகும். இச்சுன்னம்

பரமசிவனையும் தியாகியாக்கும். அதுமட்டுமின்றி சகல சரக்கும் தண்ணீராகும்.

சாகின்ற ரசத்தை யெல்லாம்
தனித்தனி இனமே கண்டு
பாகின்ற களங்கு பற்பம்
பரவிய வேழு மார்க்கம்
தேய்கின்ற செந்தூரங்கள்
செய்துநீ முடித்துக் கொண்டு
வாகின்ற லோகங் கண்டு
மாட்டிநீ வேதை பாரே. (பா. 234)

ரசம் முதற்கொண்டு சகல லோகத்தையும் மடியச் செய்து, அதன் மூலம் களங்கு பற்பம், செந்தூரங்கள் போன்றவற்றை முடித்துக் கொண்டு அம்மருந்துகளை நவலோகங்களுடன் சேர்த்து வேதை புரிந்து பார்க்க வேண்டும்.

பார்க்கவே செயநீர் மார்க்கம்
பராபரை எனக்குச் சொன்னாள்
ஆர்க்கவே அண்டச் சுண்ணம்
அதில்கடல் நுரையின் சுன்னம்
சேர்க்கவே உப்புச் சுன்னம்
சிறந்திடுஞ் சூடன் சுண்ணம்
கார்க்கவே காரச்சுண்ணம்
கடுஞ்சீனச் சுன்னங் கூட்டே. (பா. 235)

கூட்டுநீ இணங்கண் சுன்னங்
குலாவிய சாரச் சுன்னம்
ஆட்டுநீ தூரிச் சுன்னம்
ஆகிய ஒன்பதுக்கும்
பூட்டுநீ ஒன்பதுக்கும்
புகழ்பலம் ஒன்பதே தான்
தாட்டுநல் சாரந் தானும்
தனிப்பலம் பதினெண் வையே. (பா. 236)

வைத்ததை யெல்லா மொக்க
வளம்பெற மத்திப் பீரேல்
கைத்தல நெல்லிக்காய்ப் போல்

கைகண்ட செய நீராகும்
மொய்த்திடும் பனியில் வைக்க
மூதண்ட செய நீராகும்
எத்திய குபேரனுக்கு
ஈசன்தான் அளித்த நீரே. *(பா. 237)*

பராபரையான தாய் கூறிய செயநீர் மார்க்கத்தை சொல்கிறேன் கேள். அண்டச் சுன்னம். கடல் நுரைச் சுன்னம், உப்புச் சுன்னம், (கல்லுப்புச் சுன்னம்) சூடன் சுன்னம், காரச்சுன்னம், சீனச்சுன்னம், வெடியுப்புச்சுன்னம், சாரச்சுன்னம், துரிசுச்சுன்னம் போன்ற ஒன்பது வகையான சுன்னங்களையும் வகைக்கு ஒரு பலம் எடுத்து ஒன்றாய்ச் சேர்த்து பின்பு இவ்வொன்பது பலச் சுன்னத்துடன் சாரத்தை பதினெட்டுப் பலம் சேர்த்து நன்றாய் இழைத்து பனியில் வைத்தால் செயநீராகும். இதே செயநீரை முன்பொரு சமயம் குபேரனுக்கு ஈசன் கொடுத்தார்.

நீரென்று சொல்வதல்ல
நீருக்குள் தீயாம் நீறு
காரென்ற குழலாள் தேவி
களித்திடுங் காதிற் சொன்னாள்
சேரென்றும் பூரத் துள்ளே
செயநீரைக் குத்திக் கிண்டி
வாரென்ற குகையி லிட்டு
வளம்பெற ஊதிப் போடே. *(பா. 238)*

ஊதியப் பூரச் சுன்னம்
ஒரு அண்ட வோட்டில் நீறும்
ஊதியப் பூரச் சுன்னம்
ஒன்பதும் உரைத்து நீரும்
ஊதியப் பூரச் சுன்னம்
ஒருப்பொட்டில் சூதம் நீறும்
ஊதியப் பூரச் சுன்னம்
ஒப்பொன்று மில்லை காணே. *(பா. 239)*

நீர் என்று சொன்னால் சாதாரண நீர் என்று நினைக்காதே. நீரில் தலைசிறந்த தீ நீராகும். இம்முறையை தாய் என் காதில் கூறினாள். இச்செய நீரில் பூரத்தைப் போட்டு கிண்டி (கிளரி) குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும். இச்சுன்னத்தை அண்ட வோட்டின மீதும் நவலோகங்களின் மீதும், சூதத்தின் மீதும் ஒரு பொட்டளவு தடவி புடம் போட்டால் உடனே சுன்னமாகும். இப்பூரச் சுன்னத்திற்கு நிகரான வஸ்து

வேறொன்றும் கிடையாது.

காணிந்தச் சுன்ன மொன்று
கடியதோர் வீரமொன்று
தேனிந்தத் தேய்க்க வுன்னிச்
சிவப்பதாம் பாரு பாரு
ஊனிந்தச் சிவப்புத் தன்னை
ஒருபொட்டில் தங்கம் நீறும்
வானிந்த தங்க நீற்றை
மாட்டிடாய்த் துரிசிக் கென்னே. *(பா. 240)*

துரிசுதான் நாலு மேலே
சூட்டொன்று தங்கச் சுன்னம்
வரிசையாய் ரவியில் போட
மகத்தான குருவே யாகும்
பரிசிக்க நவலோகங்கள்
படுமுன்னே தங்க மாகும்
உரிசையாய் மதுவைக் கொண்ட
உத்தமி சொன்ன வாரே. *(பா. 241)*

இப்பூரச் சுன்னத்தை ஒரு பலம் எடுத்து அதனுடன் வீரத்தை ஒரு பலம் சேர்த்து மத்தித்தால் உடனே சிவப்பாகும். இச்சிவப்பு மருந்தை தங்கத்தின் மீது ஒரு பொட்டளவு பூசி புடம்போட்டால் சுன்னமாகும். இத்தங்கச் சுன்னத்தை ஒரு பலம் எடுத்து நான்கு பலம் துருசின் மேல் பூசி ரவியில் வைத்தால் வெளுத்து குருவாகும். இத்துருசு குருவால் நவலோகங்களும் தங்கமாகும். இம்முறையை உத்தமித் தாயான பார்வதி எனக்கு சொன்னாள்.

சொன்னமாஞ் சுன்ன மொன்று
துரிசியின் சுன்ன மொன்று
பன்னமாம் பூரச் சுன்னம்
பகுந்தீடு வீரச் சுன்னம்
அன்னயக் காரச் சுன்னம்
அப்பனே சமனாய்க் கூட்டித்
தன்னய பொடித்தே ஒன்றாய்த்
தனிச்சிமிழ் அடைத்துக் கொள்ளே. *(பா. 242)*

அடைத்திடுங் குருவின் பேரு
அப்பனே அறையக் கேளு
நடத்திடும் லயகாயத்தில்

நளினமாம் ருத்திர னாகும்
படைத்திடும் அண்ட மெல்லாம்
படுமுன்னே வெந்து நீறு
கடைத்திடும் நவ லோகத்தில்
காட்டுமுன் சாம்ப லாமே. *(பா. 243)*

தங்கச்சுன்னம். துரிசுச்சுன்னம், பூரச்சுன்னம், வீரச் சுன்னம், காரச்சுன்னம், போன்ற ஐந்து வகையான சுன்னத்தையும் வகைக்கு ஒரு பலமெடுத்து, ஒன்றாகக் கூட்டிப் பொடி செய்து தனிச் சிமிழில் அடைத்து பத்திரமாக வைத்துக் கொள்ளல் வேண்டும், இம்மருந்திற்கு ருத்திர குருச்சுன்னம் என்று பெயர். இக்குருச் சுன்னம் பட்டமாத்திரத்தில் உலகமே வெந்துநீறும். இதை நவலோகத்துடன் சேர்த்தால் வினாடியில் அனைத்தும் சாம்பலாகும்.

சாம்பலாய் எண்ண வேண்டாம்
தனித்தனிக் குருவாம் பேரு
நாம்பலோ நவ லோகத்தில்
நாட்டிடத் தங்க மாகும்
வேம்பலோ திண்ணத் திண்ண
விளங்கிய கரும்பு போல
ஏம்பலோ விதுக்குள் வேதை
இயம்பவும் ஒடுங்கா தென்னே. *(பா. 244)*

சாம்பல் என்று சாதாரணமாக நினையாதே! அனைத்தும் குரு மருந்தாகும். இக்குரு சாம்பலை நவலோகத்துடன் சேர்த்து இழைத்தால் அனைத்தும் தங்கமாகும். ருத்திர குருவால் ஏற்படும் வேதையைப் பற்றி வாயால் கூற முடியாது.

ஒடுங்காத செயநீர்க் குள்ளே
ஊட்டியே சரக்கை வாட்ட
தடுங்காத மயின மாகும்
தனித்தனி வேதை யோடு
மடங்காத சூதந் தன்னில்
மாட்டுமுன் மயின மாகும்
அடங்காத மாத்தாள் பாதம்
அறுபத்து நாலுஞ் சித்தே. *(பா. 245)*

சித்தெல்லாம் ஆட லாகும்
தேகமும் நிறுத்த லாகும்

பத்தெல்லாம் மறையந்தத்தைப்
பகலிரவு ஒன்றாய்ப் போகும்
அத்தெல்லாம் வாசி யோடே
அகண்டத்தில் ஆடலாகும்
வித்தெல்லாம் பொன்னேவித்து
விட்டவர் கெட்டவாரே. (பா. 246)

முன்பு கூறிய செயநீரில் (அதாவது சிவபெருமானால் குபேரனுக்கு அளிக்கப்பட்ட செயநீரில்) சரக்குகளைத் தோய்த்து வாட்டினால் அனைத்தும் மயினமாகும். இம்மடிந்த சரக்கால் வேதையுண்டாகும் இதேபோல் சூதத்தையும் செயநீரில் போட்டுப் பிரட்டினால் உடனே மடியும், மேலும் இச் செயநீரால் அறுபத்து நாலு சித்துக்களும் விளையாடலாம். காயமும் சித்தியாகும். வாசியானது மூலத்தில் ஓடுங்கும். அதுமட்டுமின்றி பூரண வஸ்துவுடன் கூடி விளையாடலாம். இதற்கெல்லாம் ஆதிகாரணம் தங்கச் சுன்னமேயாகும். ஆகையால் தங்கத்தை விட்டவர் நொந்து போவார். (சித்தியாகாமல் மாள்வார்.)

கெட்டது செய நீராலே
கெடிபடுந் தங்கஞ் சூதங்
கெட்டது செய நீராலே
கெடிபடச் சரக்க தெல்லாம்
கெட்டது; செய நீராலே
கெவனித்தப் பிறப்பிறப்பும்
கெட்டது செயநீர்ப் பட்டுக்
கெடியண்டந் தூளதாமே. (பா. 247)

மேலும் இச் செயநீரால் தங்கம், சூதம் போன்ற சரக்கு வகைகள் அனைத்தும் கட்டி மடியும். மேலும் இதனால் பிறப்பும் இறப்பும் அகலும். அதுமட்டுமின்றி செயநீர் பட்ட மாத்திரத்தில் அண்டம் தூள் தூளாய்ப் போகும்.

தூள்ப்பட்ட செயநீர்க் குள்ளே
சூட்டிய வேதை மார்க்கம்
ஆள்ப்பட்டால் ஆத்தாள் சொல்வாள்
அடியேனும் அறியேனையா
வேள்ப்பட்ட பாணத் தொக்க
விரவியே உருக்கப் பொன்னாம்
நாள்ப்பட்ட தூப தீபம்

நலங்கிய பரிச மாமே. *(பா. 248)*

இச்செய நீரால் ஏற்படும் வேதை முறையைப் பற்றி தாயான தேவி எனக்குச் சொன்னாள் - அப்படி அவளால் கூறப்பட்டவைகள் யாவையும் நான் அறியவில்லை. தூளான அண்டத்தை நெருப்பிலிட்டு உருக்கினால் பொன்னாகும். அதுமட்டுமின்றி தூபம், தீபம், ஸ்பர்சம் போன்ற வேதை முறைகள் யாவும் சித்தியாகும்.

பரிச்சித்த செயநீர் பட்டால்
பதையாமல் நாகஞ் சாகும்
பரிச்சித்த செயநீர்ப் பட்டு
பருகிட இரும்பும் ஈயம்
பரிச்சித்த செயநீர்ப் பட்டால்
பளிச்சென்னும் செம்பி னூறல்
பரிச்சித்த செயநீர் வங்கம்
பதையாமல் கட்டும் பாரே. *(பா. 249)*

மேலும் செயநீர் பட்ட மாத்திரத்தில், நாகமானது மடிந்து சாகும். செயநீரை இரும்புடன் சேர்த்து உருக்கினால் ஈயமாகும். அதுமட்டுமின்றி செய்யப்பட்ட மாத்திரத்தில் செம்பின் ஊறல் நீங்கும். வங்கம் சுருண்டு கட்டும்.

கட்டுமே செயநீ ரென்றால்
கரையில்லை கடையு மில்லை
ஒட்டுமே இந்த மார்க்கம்
உத்தம சீஷனுக்குத்
தெட்டுமே துரோகமார்ன்
சிந்தையில்லா மனிதர்க் கெல்லாம்
பட்டுமுன் படாது முன்னே
பளிச்சென்னும் நூறு மாற்றே. *(பா. 250)*

மாற்றுமாம் பொன்னு மாகும்
வணங்கிய சீஷனுக்கு
வேற்றுமாங் குதிரை யேறும்
இயல்பெறும் வாசி சிக்கும்
தோற்றுமாம் கண்டா தாண்டி
சுருதியும் கடந்து தோன்றும்
காற்றுமாங் கடிந்து ஓடும்

கவனமும் ஆகும் பாரே (பா. 251)

இச்செநீரின் பெருமைக்கு ஆரம்பமும் எல்லையும் கிடையாது. உத்தமமான சீடனுக்கும், துரோக மனமில்லாத மனிதர்களுக்கும், செயநீரால் நூறு மாற்றுக் கொண்ட பொன் கிட்டும். ஆகையால் செயநீரை சித்தி செய்து கொண்டு இதன் மூலம் வாசியென்னும் குதிரை ஏறி கண்டத்தை தாண்டி நின்றால் வேதத்திற்கு அப்பாற்ப்பட்ட பரம்பொருள் நம்முன் தோன்றும். அதுமட்டுமின்றி ககன சித்தியும் உண்டாகும்.

சூத சுத்தி

ஆகுமே ரசத்தைச் சுத்தி
அப்பனே செய்யும் மார்க்கம்
பாகுமே அரசம் பட்டை
பதைப்பற இடித்தரைத்து;
வாகுமே வில்லை பண்ணி
வளம்பெறச் சுட்டச் சாம்பல்
தாகுமே படிரெண் டாக்கி
தனிக்குள்ளே அமுரி வாரே. (பா. 252)

வாருநீ அமுரி தானும்
வளம்பெறப் படியும் எட்டு
தேரு நாயுருவிச் சாம்பல்
சேர்ந்தொரு படியும் விட்டுக்
காருநீ மூன்றாம் நாளில்
கவிந்ததோர் தெளிவை வாங்கி
யேருநீ எரித்துக் காச்ச
இறுதியே உப்பு மாமே. (பா. 253)

அரசு மரத்தின் பட்டையைக் கொண்டு வந்து நன்றாய் உலர்த்தி இடித்து வில்லைபோல் செய்து எரித்து சாம்பலாக்கிட வேண்டும். இவ்வரசன் சாம்பலை இரண்டு படி எடுத்து ஒரு பாண்டத்தில் போட்டு எட்டுபடி அமுரிவிட்டு நன்றாய் கரைத்துக் கொண்டு இதனுடன் நாயுருவிச் சுட்ட சாம்பலையும் ஒரு படி போட்டு நன்றாய்க் கரைத்து மூன்று நாள் அசைக்காமல் வைத்து தெளிவை வாங்கி அடுப்பேற்றி காய்ச்சினால் உப்பாகும்.

உப்பது பலமும் நாலு
உயர்ந்திடும் சூதம் எட்டுக்

கப்பதுக் கல்வத் திட்டுக்
கலந்துவார் குமரிச் சாறு
செப்பது அரைப்பா யப்பா
சிறந்துடன் மூன்றுநாள் தான்
அப்புய கஞ்ச தோஷம்
ஆறொன்றும் போகும் பாரே. (பா. 254)

உப்பை நாலு பலம் எடுத்து இதனுடன் சூதம் எட்டு பங்கு சேர்த்து குமரிச்சார் விட்டு மூன்று நாள் கல்வத்தில் அரைத்தால் எத்தனை வகையான தோஷங்கள் இருந்தாலும் அகலும்.

பாரிந்தச் சூதமொன்று
பாச்சுஞன் பதிலே நாகம்
வாரிந்தப் பொடிபோற் பண்ணி
வைவேழங் குழலுக் குள்ளே
தாரிந்த இடையோ டொக்கத்
தனித்ததோர் வீரம் போடு
சேரிந்த மேனிச் சாருஞ்
சேர்க்கவேழ் துள்ளி வாறே. (பா. 255)

வார்த்திதைக் கிண்டி மெள்ள
வைத்திடு ரவியில் தானே
சேர்த்ததின் வாய்க்குச் சீலை
சிக்கென மண்ணைச் செய்து
நேர்த்தியாய் நெல்லுக் குள்ளே
நிமிறவைத் தெரிப்பா யாகில்
பாத்திய நாகந் தானும்
பளிச்செனச் சூத மாமே. (பா. 256)

இச்சுத்தித்த சூதத்தை ஒரு பங்கெடுத்து ஒன்பது பங்கு நாகத்துடன் சேர்த்து நன்றாக பொடி செய்து வேலங்குழலுக்குள் போட்டு பின்னர் பத்து பங்கு வீரத்தையும் இக்குழலுக்குள் போட்டு ஏழு துளி மேனிச் சாரை விட்டு நன்றாய்க் கிண்டி சூரிய ஒளியில் வைத்து பின் குழலின் வாய்க்கு சீலைசெய்து நிமிர்ந்த வாட்டத்தில் நெல்லுக்குள் வைத்து எரித்தால் நாகம் சூதமாகும்.

ஆகின்ற நாகச் சூதம்
அப்பனே செயிக்கக் கேளு
பாகின்ற சாரம் ரெட்டி

பருங்காரச சுன்னம் ஒன்று
ஏகின்ற இணங்கன்சுன்னம்
இதுதானும் ஒன்று போட்டு
வாகின்றி அரைப்பாயாகில்
வளம்பெறச் செயநீராமே. (பா. 257)

இந்நாக சூதத்தை செயிக்கும் முறையை கேள்! இரண்டு பலம் சாரத்துடன் காரச்சுன்னம் ஒரு பலமும் இணங்கன் சுன்னம் ஒருபலமும் போட்டு நன்றாய் இழைத்து பனியில் வைத்தால் செயநீராகும்.

நீருக்குள் சூதம்வார்த்து
நிலையுற எரிப்பாயாகில்
காருத்த வன்னிமிஞ்சுங்
களங்கறும் சூதம் பாரும்
சேரொத்த சூதத்தோடே
சிறந்திடும் நாகஞ்சேரு
காரொத்த கல்வத்திட்டு
கடுகநீ பொடியாய்ப்பண்ணே. (பா. 258)

பொடிக்கிடை சாரங்கூட்டிப்
புணர்ச்சியாய் அறைக்கும் போது
மடிக்கிய உப்புச் சுன்னம்
மாட்டுநீ சாரத்தொக்க
இடிக்கியே அரைப்பாயாகில்
இயலுடன் நாலுசாமம்
தடிக்கிய வீரம் போட்டு
தனிப்பனி வைத்துப்பாரே. (பா. 259)

இச்செயநீரில் நாகசூதத்தை போட்டு எரித்தால் சூதத்தில் உள்ள தோஷங்கள் அகலும். தோஷம் அகன்ற சூதத்துடன் நாகம் சேர்த்து கல்வத்திலிட்டு பொடி செய்து பின்பு இப்பொடியின் எடைக்கு சரி சாரங்கூட்டி நன்றாய் அரைக்க வேண்டும். சரியான பதத்தில் இச்சரக்குடன் உப்புச் சுன்னத்தை சாரத்தின் அளவு சேர்த்து நான்கு சாமம் விடாமல் அரைத்து பின்னர் இதனுடன் வீரம் போட்டு பனியில் வைத்து எடுக்க வேண்டும்.

வைத்திடும் நாகம்ரெண்டு
விஞ்சு பொர்சந்தான்பாரு
கைத்திதை முன்[illegible]

கபளித்து விடுவிப்பீரா
யெத்திசை யென்று கேழ்க்கில்
யேழுதிரம் விடுவிச்சேறு
பத்திசைப் பரிசவேதைப்
பழுக்கிற ருசியைக் கேளே. (பா. 260)

மீண்டும் இதனுடன் முன்போல நாகத்தையும் சாரச் சுன்னத்தையும் கல்லுப்புச் சுன்னத்தையும் சேர்த்தரைத்து வீரம் போட்டு பனியில் வைக்க வேண்டும். இதேபோல் ஏழு முறை செய்தால் பரிசவேதை உண்டாகும் அதன் முறையைக் கூறுகிறேன் கேள்'

கேளிந்தச் சூதத்திற்கு
கெடினாலுக் கொன்றே தங்கம்
தோளிந்த வொன்றாய்க்கூட்டி
தொலைவான் செயநீர்வார்த்து
வாளிந்தப் பூரம்போட்டு
மாட்டிநீ எரிப்பாயாகில்
வேளிந்தத் தங்கமுண்டு
விடுபடும் யானைபாரே. (பா. 261)

ஏழு முறை அரைத்து பனியில் வைத்த சூதத்தை நாலு பங்கு எடுத்து அதனுடன் ஒரு பங்கு தங்கம் சேர்த்து செயநீர் விட்டரைத்து பூரம் போட்டு எரித்தால் சூதமானது தங்கத்தை உட்கொள்ளும்.

யானையாஞ் சூதங்கேளே
அடவிலே பரிசவேதை
பூனையாம் நவலோகங்கள்
பொட்டினால் தங்கமாகுங்
காணவே திரிந்து மூன்று
கனிவெருந் தழையுஞ்சுட்டு
மானமே போக்கவேண்டாம்
வகையுடனித்தைப் பாரே. (பா. 262)

தங்கத்தை உட்கொண்ட சூதத்தை ஒரு (பொட்டளவு) கடுகளவு நவலோகத்துடன் சேர்த்தால் நவலோகங்களும் தங்கமாகும். மனிதர்களே! இந்த எளிமையான முறையை விடுத்து காட்டில் உள்ள இலைகளை தேடித் திரிந்து அதன் மூலம் சரக்குகளை சுட்டு கரியாக்காதீர்.

பாரிந்தச் சூதத்துள்ளே
பரிதன்னைக் கூட்டிக்கூட்டி

வீரிந்த விடுவிப்பீராய்
வெகுமெத்த தூரமோடும்
சேரிந்தச் சூதமார்க்கந்
தேவிக்குச் சிவன்தான் சொன்னார்
காரிந்தக் குழலாளென்மேல்
கடாக்ஷித்தே அளித்தவாரே. *(பா. 263)*

மேலும் கேளுங்கள் தங்கத்தை உட்கொண்ட சூதத்துடன் மீண்டும் முன்போல் தங்கம் சேர்த்து செயநீர் விட்டரைத்து பூரம் போட்டு எரிக்க வேண்டும். இவ்வாறு பலமுறை செய்வதால் வேதையானது வெகு தூரமோடும். இம்முறையை பார்வதிதேவி சிவபெருமான் மூலமாக அறிந்து கொண்டு எனக்கு சொன்னாள்.

லிங்கக் கட்டு

வாறுகேள் லிங்கங்கட்டி
வளம்பெறும் வேதைபோடக்
கூறகேள் உப்புிரெண்டு
கொடிய தோர் காரம்ரெண்டு
தாறுகேள் சாரமொன்று
தனித்திடுந் துருசியொன்று
ஆறுகேள் பலமாறாக
அமட்டிநீ பொடியாய்ப் பண்ணே. *(பா. 264)*

பண்ணிய பொடியை மூன்று
பங்கதால் வைத்துக் கொண்டு
தன்னிய லிங்கந் தானுங்
தனித்தொரு பலமே வாங்கி
அன்னிய லிங்கத் துக்கு
அப்பனே பத்துக் கொன்று
துன்னிய துரிசி சுன்னந்
துப்புநீர் குழைத்துப் பூசே. *(பா. 265)*

லிங்கத்தைக் கட்டும் முறையைக் கூறுகிறேன் கேள்: உப்பு ரெண்டு பங்கு காரம் இரண்டு பங்கு, சாரம் ஒரு பங்கு, துருசி ஒரு பங்கு ஆக இவ் ஆறு பங்கு சரக்கையும் ஒன்றாய் சேர்த்து பொடி செய்து மூன்று பங்காக பிரித்துக் கொள்ள வேண்டும். பிறகு இலிங்கத்தை ஒரு பலம் வாங்கி அதன் மேல் துருசுச் சுண்ணத்தை பத்துக் கொரு பலம் உப்புநீரில் குழைத்து

பூசவேண்டும்.

பூசியே வாட்டிக் கொண்டு
புகழ்படக் கரண்டிக் குள்ளே
ஆசியே மூன்று பங்கில்
அப்பனே ஒரு பங்கிட்டு
நேசியே தீயில் வைத்து
நேருடன் வாட்டி வாட்டிக்
காச்சிய ரெண்டு பங்கு
களங்கற வாட்டிப் போடே. (பா. 266)

மருந்து பூசிய லிங்கத்தை கரண்டிக்குள் வைத்து வாட்டி பின்னர் முன்பு மூன்று பங்காக்கி வைத்துள்ள மருந்திலிருந்து ஒரு பங்கு மருந்தை லிங்கத்துடன் சேர்த்து வாட்டி இதே போல் மற்ற இரு பங்கையும் லிங்கத்துடன் சேர்த்து வாட்ட வேண்டும்.

போட்டபின் லிங்கங் காணீர்
புகழ்பெற இறுகிக் கொள்ளும்
ஆட்டபின் லிங்கத்துக்கு
அதிற்பாதிச் சார சுன்னம்
பூட்டய்யா மேலே நீயும்
புகழ்ச்சட்டி தனிலே வைத்து
நீட்டிய சுருக்குப் போட
நேர்மையின் பாலைக் கேளே. (பா. 267)

இவ்வாறு லிங்கத்தை மும்முறை வாட்டினால் லிங்க மானது இறுகிக் கொள்ளும். இந்த லிங்கத்தின் எடைக்கு சரி பாதி சாரச் சுன்னத்தை எடுத்து லிங்கத்தின் மேல் பூசி பானையில் வைக்க வேண்டும்.

கேளுநீ துண்டிப்பால் தான்
கெடிமூன்றும் படியே வாங்கி
வாளுநற் காரச் சுன்னம்
வளமரைப் பலமே போட்டு
தேளுசிம் பருத்தம் பூவை
சிறக்கமுன் னூறு போட்டு
வேளுயிர் பிழிந்து போடு
வெளுத்துப்போம் பூவைப் பாரே. (பா. 268)

பூவினின் சாறு மெல்லாம்
புணர்ச்சியாய்ப் பாலே யுண்ணும்

காவுடன் பாலின் சாரங்
கபளிக்கும் லிங்கம் பாரு
தேவுடப் பாலை நீயும்
சிறக்கவே சுறுக்குப் போடு
ஆவுடன் லிங்கந் தானும்
அப்பனே முழுக்கட் டாமே. (பா. 269)

பிறகு துண்டிப்பாலை மூன்றுபடி எடுத்து அதில் அரை பலம் காரச் சுன்னத்தையும், முன்னூறு செம்பருத்திப் பூவை போட்டு நன்றாய் கலக்கி பூவை மட்டும் வடிகட்டி நீக்க வேண்டும். வடிகட்டிய பூவை பார்த்தால் வெளுப்பா இருக்கும். அதாவது பூவின் நிறத்தை (சாரமான ரசஂத்தை) பாலானது உட்கொண்டிருக்கும்.

இப்பாலில் லிங்கத்தை சுருக்குப் போட்டு எடுத்துப் பார்த்தால் முழுமையாக கட்டியிருக்கும்.

கட்டிய லிங்க மொன்று
காட்டொன்று தங்கத் தூடே
ஒட்டிய ரெண்டுஞ் சேர்ந்து
உருகிடு மிடை போகாது
அட்டிய ரெண்டுங் கூட
அப்பனே குருவு மாச்சு
ஒட்டிய வேதை யோட
உரைக்கிறேன் கண்டு கொள்ளே. (பா. 270)

கட்டிய லிங்கம் ஒரு பங்கும், தங்கம் ஒரு பங்கும் சேர்த்து உருக்கிக் கொண்டால் இரண்டும் இணைந்து குருவாகும். இக்குருவின் மூலம் வேதை புரிய வகை கூறுகிறேன் கேள்!

கண்டிடுஞ் செம்பு நாலுங்
கடியதோர் வெள்ளி எட்டு
ஒன்றியே உருகி நின்ற
உத்தம இரும்பு ஒன்று
அண்டிய செய சாரந்தான்
அப்பனே அதுவு மிட்டு
மண்டிய லிங்கந் தங்கம்
மாகுரு வொன்று போடே. (பா. 271)
போட்டபின் ஊதிப் போட்டு
போடதில் சமனாய்த் தங்கம்

ஆட்டமின் மாத்துக் கேழ்க்க
அப்பனே பத்துக் காணும்
தீட்டியவேல் போல் கண்ணாள்
தேவிதா னளித்தாள் பார்த்தேன்
ஊட்டிய காய சித்தி
உரைக்கிறேன் அறிந்து கொள்ளே. (பா. 272)

செம்பு நாலு பலம், வெள்ளி யெட்டு பலம், சுத்தித்த இரும்பு ஒரு பலம், செயரசம் ஒரு பலம், லிங்க தங்க குரு ஒரு பலம் ஆக இவ் ஐந்து வகை சரக்குகளையும் குகையில் வைத்து ஊதி இதனுடன் சரி பங்கு தங்கம் சேர்த்தால் பத்து மாற்று உண்டாகும். இம்முறையை தேவியான பார்வதியின் வழியாக அறிந்துக் கொண்டு செய்து பார்த்தேன். மேலும் இத்தங்கலிங்கக் குருவால் காயத்தை சித்திக்கும் வழிமுறையை கூறுகிறேன் கேள்!

கொள்ளிந்தக் கல்ப்பந் தானுங்
குலாவியே தினமே குன்றி
தள்ளிந்தப் புளிப்பு முப்பு
சார்ந்திடும் பெண்ணும் போக்கு
விள்ளிந்த மாய்கை யான
வீட்டையும் விரைந்து பின்னைத்
தெள்ளிந்த மாய்கை நீக்கிச்
சிறந்துநீ கல்ப்பங் கொள்ளே. (பா. 273)

கொண்டிடத் தேகந் தானுங்
குலாவிய சிகப்பே யாகும்
மண்டிய மயக்க மில்லை
மற்றொரு பாதை யில்லை
யெண்டிய நோய்க ளெல்லா
மிதுபடப் பொடியாய்ப் போகும்
தண்டியே யுண்டு நித்தம்
சாதிக்கில் சித்த னாமே. (பா. 274)

இத்தங்க லிங்க குருவை ஒரு குன்றியளவு வீதம் அனுதினமும் புளி உப்பு, பெண் மாய்கை போன்றவைகளை நீக்கி உட்கொண்டால் தேகமானது சிவந்து திடப்படும். இதை விட்டால் வேறொரு வழி கிடையாது. முறையாக குரு மருந்தை உட்கொண்டால் மாயையின் மயக்கம் நீங்கி நோய்களெல்லாம் அகலும். நீயும் ஒரு சித்தனாவாய்.

ஆமென்ற தங்க லிங்கம்
ஆடுற மார்க்கங் கேளு

வாமென்ற செய னாகத்தில்
மாட்டிதை நாலுக் கொன்று
தாமென்ற வெள்ளி செம்பு
தனிப்பட உருகும் போது
நாமென்ற நாலு பத்தில்
நாட்டிநீ வேதை பாரே. *(பா. 275)*

இத்தங்க லிங்க குருவால் வேதை புரிய மேலும் கூறுகிறேன் கேள்! இக்குருவை செய சூதத்தில் நாலுக்கொன்று சேர்த்து உருக்கிக் கொண்டு வெள்ளி செம்பில் நாற்பதுக்கொரு பலம் சேர்த்தால் வேதையாகும்.

பாரிந்த நாக லிங்கம்
பருதிய எடைக்குச் சூதம்
வாரிந்தக் கல்வத்தோடே
மத்திக்கப் பொடியாமுண்டை
தேரிந்த யிடைக்கிரெட்டி
சிறந்திடுங் கெந்தி போட்டு
தாரிந்தத் தங்கங்கூட்டித்
தனிக் குப்பி எரித்துப்பாரே. *(பா. 276)*

பார்த்திடு அருணன்போலே
படிந்தசெந் தூரந்தன்னை
சேர்த்திடு நவலோகத்தில்
இயல்பட நூற்றிற்கொன்று
கோர்த்திடும் வேதையோடும்
குலாவிய திசைமாத்தாகும்
ஆற்றிடு நிறத்தைப்பாரு
ஆற்றொடார் வாதிதானே. *(பா. 277)*

நாகலிங்கத்துடன் சரியளவு சூதம் சேர்த்து கல்வத்திலிட்டு பொடி செய்து இப்பொடியின் எடைக்கு இரண்டு பங்கு கெந்தி கூட்டி தங்கமும் சேர்த்து குப்பியில் அடைத்து புடம் போட்டால் செந்தூரமாகும். இச்செந்தூரத்தை நவலோகத்தில் நூற்றுக்கொரு பங்கு சேர்த்தால் பத்து மாற்று உண்டாகும்.

நவலோகச் சுன்னம்

தானான இணங்கன் சுன்னம்
சாத்தரை நாகத்துக்குக்
கானான புடத்தைப் போடு
கைகண்ட கோரச்சுன்னந்
தேனான செம்புமேலே
சொரிசொரச் சாரச்சுன்னம்
வானான புடத்தைப்போட
வளர்செம்புச் சுன்னமாமே. *(பா. 278)*

வெடியுப்புச் சுன்னத்தை நாகத்துடன் சேர்த்தரைத்து புடம் போட்டால் நாகம் சுன்னம்ாகும். செம்புடன் சாரச் சுன்னத்தை சேர்த்தரைத்து புடம் போட்டால் செம்பு சுன்னமாகும்.

ஆமிந்த இரும்புமேலே
அப்பிடு வீரச்சுன்னம்
தாமிந்தப் புடமேபோடத்
தவளம்போல் சுன்னமாகும்
காமந்தக் கருமால்தேவி
கருகிய சுன்னந்தன்னைச்
சேமந்த வங்கம்ரெண்டில்
சேர்த்திடச் சுன்னமாமே. *(பா. 279)*

இரும்பின்மேல் வீரச்சுன்னத்தை பூசிபுடம் போட்டால் இரும்பானது தவளம் போல் சுன்னமாகும். மால்தேவிச் சுன்னத்தை இரு வகையான வங்கத்தின் மேலும் பூசி புடம் போட்டால் இரண்டு வகையான வங்கமும் சுன்னமாகும்.

சுன்னமாம் வங்கச்சுன்னஞ்
சூட்டிட வெள்ளிமேலே
சுன்னமாம் ரசிதம்பாரு
துலக்குற வெளுப்பேயாகும்
சுன்னமாம் சூதச்சுன்னஞ்
சூட்டிடப் பரியேசுன்னஞ்
சுன்னமாம் நவலோகங்கள்
துடிபடக் குருவுமாமே. *(பா. 280)*

வங்கச் சுன்னத்தை வெள்ளியின் மேல் பூசி புடம் போட்டால் ரசிதம் சுன்னமாகும். சூதச் சுன்னத்தை தங்கத்தின்மேல் பூசி புடம் போட்டால்

தங்கமானது வெளுத்து சுன்னமாகும். (இப்பரிச் சுன்னத்தை நவலோகங்களின் மேல் பூசி புடம் போட்டால் அனைத்தும் குரு சுன்ன மாகும்).

துடிப்பட ஏழுலோகம்
சுயப்பிறப் பான லோகம்
மடிப்பட நாலுலோகம்
வகைகேளு சொல்வேன்யானும்
பிடியிட்ட செம் பில்வங்கம்
பெருகிலெங் கலமேயாச்சு
அடியிட்டி செம்பில்ஈயம்
அணைத்திடத் திராவுமாமே. (பா. 281)

மேற்கூறிய ஏழுவகையான லோகங்களும் பூமியில் இயற்கையாக கிடைப்பவையாகும. இதைத் தவிர மற்ற நான்கு வகையான லோகத்தைப் பற்றி கூறுகிறேன் கேள்! செம்புடன் வங்கத்தை சேர்த்து உருக்கினால் வெங்கலமாகும். செம்புடன் ஈயத்தை சேர்த்து உருக்கினால் திரா என்ற லோகமாகும். (இப்பாடலில் கூறியுள்ள வங்கம், ஈயம் என்ற இரண்டு வகையான லோகமும் முறையே வெள்ளியம், காரீயம் எனப்படும்.)

ஆமிந்த செம்புக்குள்ளே
அணுகிடில் நாகந்தானுங்
காமிந்தக் குடவனாகும்
கண்டவர் பொன்னே என்பார்
சேமிந்த லோகந்தானுஞ்
செம்பியே உருக்குமாகும்
ஓமிந்தப் பதினொன்றான
உலோகமு மறிந்திடாயே. (பா. 282)

செம்புடன் நாகத்தை சேர்த்து உருக்கினால் குடவன் என்ற பித்தளை கிடைக்கும். இப்பித்தளை பார்ப்பதற்கு பொன் போல் பிரகாசிக்கும். இந்நான்கு வகையான லோகத்துக்கும் செம்பே ஆதிகாரணமாகும். இம்மொத்த வகையான லோகத்தின் தொகுப்பே பதினொன்றாகும்.

அறிந்திந்த லோகந்தன்னை
அது அது வெவ்வேறாய்க்கட்டத்
தெரிந்திட வுரைப்பேனப்பா
நினைவுற்றுநீ தான்பாரு
பாரிந்திந்த சாரச்சுன்னம்
பாங்குடன் லோகச் சுன்னம்

பிறிந்திந்தக் காரங்கூட்டிப்
பேரண்ட முன்னீர்வாரே. *(பா. 283)*

வார்த்துநீ அரைக்கும்போது
வாழ்மூன்றுஞ் சமனாய்க் கூட்டி
யேர்த்துநல் நாகந்தன்னை
இயல்புறத் தகடாய்போடு
போர்த்துநல் நாகமேலே
புகழுறப் பரிசும்பண்ணி
கோர்த்துரப் புடங்கள் போடச்
சுகமுரச் சோரஞ்சாமே. *(பா. 284)*

சாகுமே சோரமாகி
தனிய்ண்டம் பொன்னேயாகும்
சாகுமே சோரமென்று
வித்தாலுங் கட்டாதப்பா
சாகுமே சோரமார்க்கஞ்
சந்திர மவுலிகண்டாற்
சாகுமே சோரங்கட்டச்
சாத்தினேன் சாத்தினேனே. *(பா. 285)*

இப்பதினொறு வகையான லோகத்தையும் கட்டு வதற்கு வகைமுறை சொல்கிறேன் கேள்! சாரச்சுன்னம், லோகச்சுன்னம், சாரம் இவை மூன்றையும் சம அளவு கூட்டி அண்ட நீரால் (பேரண்ட செயநீர் இதன் செய் முறை முன்பே இந்நூலில் கூறப்பட்டுள்ளது) அரைத்து நாகத்தை தகடாய் தட்டி அதன் மேல் மருந்தை பூசி புடம் போட்டால் நாகமானது மடிந்து கட்டும். இக்கட்டிய நாகத்தால் உலகமே பொன்னாகும். நாகத்தை கட்டுவதற்கு எத்தனை முறைகளை கையாண்டாலும் கட்டுக்கடங்காது நாகத்தின் கட்டுமுறையை சிவபெருமான் முழுமையாக அறிவார். நானும் அவருடைய அருளால் இந்நூலில் நாகக் கட்டு முறைய்யை வெளியாக கூறினேன்.

சாத்தவே வங்கஈயம்
தனித்தனிக் கட்டக்கேளு
ஏத்தவே இணங்கன்சுன்னம்
இயன்மாலின் தேவிச்சுன்னம்
கோத்தவே காரங்கூட்டிக்
கொட்டிடு அண்டமுன்னீர்

சேத்தமுன் மருந்துமூன்றுஞ்
சேர் சமனாகக் கூட்டே. *(பா. 286)*

கூட்டிய மருந்துதன்னைக்
குலாவியே இருவங்கத்தில்
ஊட்டியே பூசிப்பூசி
ஒவ்வொன்றாய்ப் புடத்தைப்போடு
தீட்டிய வங்கம் ரெண்டுஞ்
சினத்திலே கட்டுங்கட்டும்
ஆட்டிய வேதைகாண
அடங்காதே அப்பாகேளே. *(பா. 287)*

வங்கமும் ஈயமும் கட்டுவதற்கு முறையான மார்க்கத்தை கூறுகிறேன் கேள்! வெடியுப்புச் சுன்னம் மால்தேவிச் சுன்னம், காரம் இவை மூன்றையும் சம அளவு கூட்டி அண்ட செயநீரால் அரைத்து தனித்தனியாக வங்கத்தின் மேலும் ஈயத்தின் மேலும் பூசி புடம் போட்டால் வினாடியில் இரு வகையான வங்கமும் மடிந்து சாகும். இதன் மூலம் வாதம் செய்தால் மாற்று அதிகம் உண்டாகும்.

செம்பு ஊறல் போக

கேளுநீ சாரச்சுன்னம்
கெடிபடுந் துருசிச்சுன்னம்
வாளுநீ காரத்தோடு
வளம்பெறச் சமனாய்க் கூட்டி
தேளுநீ செம்பின்மேலே
சிறக்கவெண் கருவாற் பூசி
ஆளுநீ புடத்தைப்போட
அப்பனே ஊறல்போமே. *(பா. 288)*

சாரச் சுன்னம், துருசுச் சுன்னம், காரம் இவை மூன்றையும் சம அளவு கூட்டி முட்டையின் வெண்கருவால் அரைத்து செம்பின் மேல் பூசி புடம் போட்டால் செம்பானது ஊறல் அற்று பிரகாசிக்கும். (செம்பிலுள்ள மாசுக்கள் நீங்கும்).

போகுமே செம்பினூறல்
பொல்லாது போகாதப்பா
போகுமே ஊறல்போனால்
பொன்னாகுங் குருவுமாகும்
போகுமே ஊறலானால்
புகழ்காயச் சித்தியில்லை

போகுமே ஊறலானால்
பொன்போலே வெளுக்கும்பாரே. *(பா. 289)*

செம்பானது தன்னுள் கொண்டுள்ள மாசுக்களை கக்கினால் வேதைத் தங்கமும், குரு மருந்தும் சித்தியாகும். செம்பிலுள்ள ஊறல் நீங்கவில்லை என்றால் காய சித்தியும் வேதையும் பலியாது.

பாருநீ வீரச்சுன்னம்
பரிவுடன் உப்புச் சுன்னந்
தாருநீ காரங்கூட்டிச்
சமனாகக் கருவிலாட்டி
ஏருநீ இரும்புமேலே
இயல்படப் பூசிவாட்டிக்
காருநீ உருகவப்பா
கண்விட்டு ஆடும்பாரே. *(பா. 290)*

வீரச்சுண்ணம், உப்புச்சுன்னம், காரம் இவை மூன்றையும் சம அளவு கூட்டி முட்டையின் வெண்கருவால் அரைத்து இரும்பின் மேல் பூசி புடம் போட்டால் இரும்பானது மாசு நீங்கி கண் விட்டாடும்.

ஆடுமே இரும்புமானால்
அண்டமும் பிண்டம் பொன்னாம்
ஆடுமே இரும்புமானால்
அளவில்லை வேதைகேளு
ஆடுமே இரும்புமானால்
அப்பனே காயசித்தி
ஆடுமே இரும்பேதென்னில்
அப்பிரேக சத்துகாணே. *(பா. 291)*

இரும்பானது மாசு நீங்கி கண் விட்டாடினால் உலகமே பொன்னாகும். அது மட்டுமின்றி காய சித்தியும் கைக்குள்ளாகும். இவ் இரும்பானது அப்பிரக சத்தைப் போல் பிரகாசித்து கண் விட்டாடும்.

காணிந்த இரும்புதானுங்
கண்விட்டே வுருகுமப்போ
ஆணிந்தத் தங்கந்தானும்
அப்பனே சமனாய்க்கூட்டு
பேணிந்த ரெண்டுங்கூடிப்
பிறந்ததுக் கெட்டுக்கொன்று

வாணிந்தத் துத்தம்போடு
மகத்தான லிங்கம் போடே. *(பா. 292)*

போடுநீ இதற்குள்வீரம்
புகழுடன் ராஜவற்கம்
ஆடுமே துரிசிபோடு
அப்பனே மாலின்தேவி
ஊடுநீ சூதிமொக்க
ஊட்டுப்பூ நாகச்சத்து
தேடுநீ எட்டும்பாதி
சிறக்கநீ நேர்பாயூட்டே. *(பா. 293)*

ஊட்டிட லோகந்தங்கம்
ஒவ்வொன்றாய் விழுங்கும்பாரு
ஆட்டியே கோழிக்கிட்ட
அப்பனே தவிடுபோலே
தீட்டியே இரும்புக்காசுஞ்
சேர்ப்பது எட்டுக்கொன்று
மூட்டிய களங்க வேதை
முப்பதுக் கொன்று போடே. *(பா. 294)*

இரும்பானது கண் விட்டாடுகின்ற சமயத்தில் சம அளவ தங்கம் சேர்த்து உருக்கிக் கொண்டு இவ்விரண்டின் எடைக்கு எட்டில் ஒரு பங்கு துத்தம், லிங்கம், வீரம், ராஜ வர்த்தம், துரிசு, அரிதாரம், சூதம், பூநாகச் சத்துபோன்ற எட்டு வகையான சரக்கையும் ஒவ்வொன்றாய் சேர்த்தால் இரும்பானது கோழிக்கிட்ட உணவைப்போல் அனைத்தையும் தன்னுள் வாங்கும். இவ்விரும்புக் களங்கை வெள்ளியில் முப்பதுக்கொரு பங்கு சேர்த்தால் வேதையுண்டாகும்.

போடுநீ வெள்ளிமேலே
பொலிவுற மாத்துப்பத்து
தேடுநீ செம்புமேலே
சிறந்திடும் பத்துக்கொன்று
ஏடுநீ குடவன்மேலே
இருபதுக் கொன்றுபோடு
ஆடுநீ வேதைபாரும்
அப்பனே அடங்காதென்னே. *(பா. 295)*

மேலுங்கேள் இவ்விரும்புக் களங்கை வெள்ளியில் சேர்த்தால் பத்து மாற்றும், செம்புடன் பத்துக்கொரு பங்கும், பித்தளையுடன்

இருபதுக்கொரு பங்கும் சேர்த்தால் அடங்காத அளவிற்கும் மாற்று உண்டாகும்.

நாகத் தொழிற் செந்தூரம்

அடங்காத நாகத்துக்கும்
அப்பனே தொழிலைக்கேளு
வடங்காத தங்கமொன்று
மாட்டிரண் டெடையேநாகம்
தடங்காத மூன்றுக்கொக்க
தாக்கிடு செயசூதத்தைப்
படங்காத வெல்லாம்ரெட்டிப்
பரிவுடன் கெந்தி கூட்டே. *(பா. 296)*

கூட்டியே எல்லாமொக்கக்
குலாவியே பொடியாய்ப்பண்ணி
ஆட்டியே குப்பிக்குள்ளே
அமரவே அடுப்பிலேற்றி
தீட்டியே தீயைப் போட்டுச்
சிவந்திடும் பதமாம்பாரு
மூட்டியே இருசாமத்தில்
முட்டையும் மதுவும்வையே. *(பா. 297)*

நாகத்தொழிலைக் கூறுகிறேன் கேள், தங்கத்தை ஒரு பலம் எடுத்து அதனுடன் நாகம் இரண்டு பலமும் செய சூதம் மூன்று பலமும் சேர்த்து ஒன்றாக்கி, மொத்த சரக்கின் எடைக்கு இரு பங்கு கெந்தி சேர்த்து பொடி செய்து குப்பிக்குள் வைத்து தீயை மூட்டி இரு சாமம் எரித்தால் சிவந்த நிறங்கொள்ளும். ஆனால் எரிக்கும் பொழுது மறவாமல் முட்டையும் மதுவும் வைத்துப் பூசை செய்ய வேண்டும்.

வைக்கவே மறந்துபோனால்
மகத்தான கௌதையப்பா
தக்கவே குத்திக்குப்பி
தணலிலே போடுவாள் பார்
மைக்கதோர் பசுக்கள் வைத்தால்
வாதமும் பலியாதப்பா
கைக்கதோர் எட்டிக்காய் போல்
கபளிக்காள் கபளிக் காளே. *(பா. 298)*

மறந்தவன் கழுதைக்கு சமமாவான். அதுமட்டுமின்றி தேவியானவள்

தன் சூலத்தால் குப்பியை உடைத்து தணலில் போடுவாள். வாதமும் கைக்கூடாது. செந்தூரமும் பூரித்து நிறங் கொள்ளாது. எட்டிக் காயாக நினைத்துத் தூக்கி எறிந்துவிடுவாள்.

கபளித்துக் கொள்ளாளாகில்
கண்டதோர் வாதம் பொய்யாம்
கபளித்துக் கொள்ளாளாகில்
கடியதோர் சித்திபொய்யாம்
கபளித்துக் கொள்ளாளாகில்
கடுஞ்சுன்னங் காரம் பொய்யாம்
கபளித்துக் கொள்ளாளாகில்
கவனமுங் கருத்தும் பொய்யே. *(பா. 299)*

தாய் மனமகிழ்ச்சிக் கொள்ளவில்லை என்றால் வாதமும். காயசித்தியும், கடுங்காரச் சுன்ன வகையும், கவுன மார்க்கமும் பொய்யாகும்.

பூசை

பொய்யாச்சே ஆத்தாள்பாதம்
புகழுறப் பூசிக்காதால்
மெய்யாச்சே அவளைநோக்கி
விரைந்துநீ மதுவையுண்டால்
கையாச்சு வாசிதானுங்
கடந்தது கவனம்பாரு
தையாச்சு வேதைதானுஞ்
சதகோடிக் கோடும்பாரே. *(பா. 300)*

மேற்கூறியவை யாவும் பூசையின்மையால் பொய்யாகப் போனதாகும். முறையாக தாயான ஆத்தாளை பூசித்தால் அதாவது மதுவைத்து பூசித்தால் வாசியானது மூலத்தில் ஒடுங்கி கவனம் பாயும். வேதையும் சதகோடி மாற்றுவரை ஓடும்.

ஈயக்கட்டு

பாருநீ ஈயக் கட்டில்
பாச்சிடு பாதி தங்கம்
சேருநீ உருகும் போது
செயம்பட்ட லிங்கந் தானுந்
தாருநீ தங்கத் தொக்கத்
தனியிடை லிங்கம் போடு

வாருநீ வாங்கிப் பார்க்க
வளமுற்ற களங்க மாமே. *(பா. 301)*

ஆகின்ற களங்கைக் கேளு
அப்பனே வெள்ளி செம்பில்
தாகின்ற முப்பத் தொன்று
தாக்கிடு மாத்து மெட்டு
வாகின்ற உப்பை மெள்ள
வளமாகச் சுட்டுப் போடு
போகின்ற தொன்று மில்லை
புறையரத் தங்க மாமே. *(பா. 302)*

கட்டிய ஈயத்துடன் சரிபாதி தங்கத்தைச் சேர்த்து உருக்கி அதனுடன் லிங்கத்தை தங்கத்தின் அளவு சேர்த்து உருக்கினால் களங்காகும். இக்களங்கை வெள்ளிச் செம்பில் முப்பதுக்கொன்று சேர்த்து உருக்கினால் எட்டு மாற்றுடைய தங்கமாகும். இக்களங்குடன் உப்பைச் சேர்த்து உருக்கினாலும் தங்கமாற்று அதிகம் உண்டாகும்.

ஆமித கட்டு வங்கத்
தங்குள்ள வேதை கேளு
தாமினி வலிந்த லிங்கந்
தானொன்று தங்கமொன்று
சேமினி செம்பு ரெண்டு
சிறந்திடும் வெள்ளி ரெண்டு
ஓமினி ஒன்றாய்க் கூட்டி
உருக்கிப்பார் மாத்து மேழே. *(பா. 303)*

இக்கட்டு வங்கத்தால் ஏற்படும் வேதையை கூறுகிறேன் கேள்! கட்டு வங்கத்துடன் லிங்கம் ஒரு பலம், தங்கம் ஒரு பலம், செம்பு இரண்டு பலம், வெள்ளி இரண்டு பலம் போன்ற சரக்குகளை சேர்த்து உருக்கினால் ஏழு மாற்றுள்ள தங்கம் உண்டாகும்.

ஏழென்று சொல்லி யெங்கும்
ஏழை காளிதுக்குள் கேளும்
வாளென்ற நாகம் ஒன்று
வளம்பட்ட வங்கம் ஒன்று
தாளென்ற தங்கம் ஒன்று
தனிச்செய சூதம் ரெண்டு

நாளென்றும் உருக்கி மெள்ள
நலம்பெற மணிபோற் செய்யே. (பா. 304)

கட்டிய வங்கத்தை செந்தூரம் செய்யும் முறை கூறுகிறேன் கேள்! நாகம் ஒரு பலம், வங்கம் ஒரு பலம், தங்கம் ஒருபலம், செயசூதம் இரண்டு பலம் ஆக இந்நான்கு வகையான சரக்குகளையும் ஒன்றாய்ச்சேர்த்து உருக்கி மணிபோல் வாங்க வேண்டும்.

செய்ததோர் மணி திரட்டி
சேர்த்திடு கெந்தி தன்னை
பைததோர் மணிக்குப் பாதி
பாச்சிடு சிலையை நீயும்
கைததோர் ஒன்றாய்க் கூட்டி
களங்கறப் பொடியாய்ப் பண்ணி
ஐததோர்க் குப்பிக் குள்ளே
அடைத்துநீ எரித்திடாயே. (பா. 305)

எரித்திட்ட பதத்தைப் பாரு
இயல்புறச் சிவப்பா மப்பா
மறுத்திய செந்தூரத்தை
மாட்டுநீ லோகத்துள்ளே
திருத்திய மாத்துக் கேளு
திசைபெற திசை மாத்தாகும்
அரித்திய ஏம வித்தை
அப்பாகேள் ரசித மென்னே. (பா. 306)

இம்மணியின் எடைக்கு இரண்டு பங்கு கெந்தியையும், மணியின் எடைக்கு பாதி அளவு மனோசிலையும் சேர்த்து மூன்றையும் பொடி செய்து தப்பியிலிட்டு முறையாக எரித்தால் மருந்தானது சிவந்து செந்தூரமாகும். இச்செந்தூரத்தை நவலோகத்துடன் சேர்த்து உருக்கினால் பத்து மாற்றுள்ள தங்கமாகும்.

ரசித வித்தை

என்னதோ ரசித மார்க்கம்
இயல்புடன் அறைவேன் கேளு
தன்னதோர் வெள்ளி ஒன்று
தனிக்கட்டு வங்கம் ஒன்று
தென்னதோர் செயச் சூதத்தைச்
சேர்த்திடும் இதற்குள் ரெண்டு

மன்னதோர் பலங்கள் நாலு
மாவுடன் பொடியாய்ப் பண்ணே. (பா. 307)

பண்ணிய பொடியி னோடு
பாச்சொன்று அப்பிரக சத்து
தன்னிய பலங் களஞ்சுந்
தனியொக்க உருக்கி மெள்ள
தென்னியப் பொடிக்குள் சேர்க்கச்
செப்புறேன் மருந்து கேளு
அன்னிய பலமால் தேவி
அந்திடை வெள்ளை சேரே. (பா. 308)

சேர்த்திடு அதுக்குள் காரம்
சிறக்கவே பலமொன் றாக
ஆர்த்திடும் துகையைக் கேள்
அப்பனே பல மெட்டாச்சு
வார்த்திடு எருக்கம் பாலு
மண்சதிர்க் கள்ளிப் பாலும்
போர்த்தியே அரைத்துக் குப்பிப்
புகழுடன் அடுப்பில் ஏற்றே. (பா. 309)

ரசித மார்க்கம் சொல்கிறேன் கேள்! வெள்ளி ஒரு பலமும், கட்டிய வங்கம் ஒரு பலமும். செயசூதம் இரண்டு பலமும் சேர்த்துப் பொடி செய்து இப்பொடியுடன் அப்பிரக சத்தை சேர்த்து குகையிலிட்டு உருக்கி கல்வத்தில் போட்டு பொடி செய்து இப்பொடியுடன் மால்தேவி, வெள்ளை, காரம் போன்ற மூன்று வகையான சரக்கையும் வகைக்கு ஒரு பலம் சேர்த்து எருக்கம்பாலும் சதுரக்கள்ளிப்பாலும் விட்டு நன்றாய் அரைத்துக் குப்பியிலிட்டு அடுப்பேற்றி எரிக்க வேண்டும்.

ஏற்றியே எரிப்பாய் நீயும்
இயல்பெற ஆறு சாமம்
மாற்றியே குப்பி வாங்கி
மருந்துக்குள் பாலை வார்த்து
தேற்றியே அரைத்து மெள்ளச்
செறுகவே வில்லை பண்ணிக்
கோற்றியே குகைக்குள் இட்டுக்
கொட்டியே புடத்தைப் போடே. (பா. 310)

போட்டிடில் பற்ப மாகும்

பொலியுற்றக் குருவா மையா
ஆட்டிடில் வங்கங் காஞ்சு
ஆட்பறி லன்னூற் றொன்று
தேட்டிய நாகம் ஈயம்
சிறந்திடும் முன்னூற் றொன்று
ஓட்டிய செம்பு லோகம்
ஒருனூற்றுக் கொன்று போடே. (பா. 311)

ரசிதச் சுன்னம்

போடவே அஞ்சு லோகம்
புகழ்பெற வெள்ளி யாகும்
நீடவே வெள்ளி தானும்
நிலை பதினாறு மாத்து
ஊடவே ரசிதந் தானும்
ஒவ்வொரு மலையாம் பாரு
ஆடவே வாசி கண்டோர்க்கு
அருளெல்லாஞ் சித்தி யாமே. (பா. 312)

ஆறு சாமம் விடாமல் எரித்த பின்னர் ஆறவிட்டு குப்பிக்குள் இருக்கும் சரக்கை முன்போல் பால்விட்டரைத்து வில்லை செய்து குகைக்குள்ளிட்டு புடம் போட்டால் பற்பமாகும். இப்பற்பம் சாதாரண பற்பமன்று முழுமையான குரு பற்பமாகும். இப்பற்பத்தை தங்கத்தில் ஐநூற்றுக் கொரு பங்கும், நாகத்துடனும் ஈயத்துடனும், முன்னூற்று கொரு பங்கும், செம்புடன் நூற்றுக்கொரு பங்கும் சேர்த்து உருக்கினால் பதினாறு மாற்று கொண்ட வெள்ளியாகும் இவையாவும் வாசியோகம் செய்வோர்க்கு சந்தேக மில்லாமல் பலிதமாகும்.

சித்தியாஞ் சுன்ன மார்க்கஞ்
செப்புவே னுண்மை கேளு
அத்திய வாசிக் கொக்கும்
அறிந்துபார்க் கடிதாஞ் சுன்னம்
மத்திய அண்டச் சுன்னம்
வளம்பெற ஊதி ஊதி
யெத்திய பலம தொன்று
எடுசுன்ன நீரில் வையே. (பா. 313)

சுன்னம் செய்யும் முறைகளை கூறுகிறேன் கேள்! இச்சுன்ன மார்க்கமானது வாசிக்கு சமமாகும். அண்ட சுன்னத்தை குகையில் வைத்து

ஊதி ஊதி காரமேற்றி ஒரு பலம் எடுத்து சுன்னநீரில் போட்டுக் கலக்கித் தெளிய வைக்க வேண்டும்.

வைத்திட்ட தெளிவை வாங்கி
மாட்டவே மருந்து கேளு
கைத்திட்ட நாபி பூரம்
கடியதோர் வீரஞ் சாரம்
மொய்த்திட்ட படிகி யோடு
முயன்றிடு முரமே சூதம்
பைத்திட்ட புழுகோ டொக்கப்
பறவிய குருவண் டூட்டே. *(பா. 314)*

கடுஞ்சுன்ன அண்டநீர்

ஊட்டிய மருந்து தானும்
ஒன்பதும் மிடையே கேளு
ஆட்டிய வகையியான் றொன்றும்
அப்பனே விராக னொன்று
நீட்டிமுன் சுன்ன நீரால்
நேர்பட அரைத்துக் கொண்டு
கூட்டியே குழம்பு போல
கொட்டொரு சேரை வையே. *(பா. 315)*

தெளிந்த நீரை இறுத்துக் கொண்டு பின்னர் நாபி, பூரம், வீரம், சாரம், படிகி, உரம், சூதம், புனுகு, குருவண்டு போன்ற ஒன்பது வகையான சரக்கையும் வகைக்கு ஒரு விராகன் எடை எடுத்து முன்பு தெளிய வைத்த சுன்னநீரை விட்டு குழம்புபோல் அரைக்க வேண்டும்.

வைத்திடுஞ் சேரைக் குள்ளே
வார்த்திட அண்டங் கேளு
கத்திய அண்ட முன்னீர்
கடுகவொன் பது நீவாரு
மறுத்தியே ஒன்றாய்க் கூட்டி
மர்த்திக்கச் செய நீராகும்
பத்திய செயநீர் மார்க்கம்
பாரப்பா அறியும் பாரே. *(பா. 316)*

பாரிந்த செயநீர்க் குள்ளே
பருகிய துருசி தோய்ப்பாய்

பாரிந்த செயநீர்க் குள்ளே
பருகிய காரந் தோய்ப்பாய்
பாரிந்த செயநீர்க் குள்ளே
படிகியுந் துவைத்துப் போடு
பாரிந்த செயநீர்க் குள்ளே
பண்ணையும் துவைத்துப் போடே. (பா. 317)

கடுஞ்சுன்னப் போக்கு

ஈடவே நாலுங் கட்டிப்
பொருமித்துச் சுன்ன மாகும்
நீடவே நாலுநதான காண்
நிலையுற்ற நாலு வேதம்
ஊடவே நாலுக் குள்ளே
ஊற்றியா றினதைக் கேள்
தேடவே ஆறின் பேரு
செப்புறேன் செப்பு றேனே. (பா. 318)

இக்குழம்பை ஒரு சேர் அளவு எடுத்து இதனுடன் அண்ட நீற்றை ஒன்பது பலம் சேர்த்து மத்தித்தால் செயநீராகும். இச்செயநீரில் துருசு, காரம், படிகி பண்ணை போன்ற சரக்குகளை துவைத்து ரவியில் வைத்தால் சுன்னமாகும். இந்நான்கு வகையான சுன்னங்கள் நான்கு வகையான வேதத்திற்கு சமமாகும். இச்சுன்னங்களைக் கொண்டு மற்ற ஆறு சரக்குகளை சுன்னமாக்க வகை கூறுகிறேன் கேள்.

செப்பிய தூரிசச் சுன்னம்
சேர்சமன் சாரத் தப்பு
ஒப்பியச் சீனச் சுன்னம்
உடன்ரெண்டு உப்பில் புக்க
கப்பிய பண்ணைச் சுன்னங்
காட்டிடு பூரன் மேலே
தப்பிய காரச் சுன்னஞ்
சவுக்க ரூம் இந்தப் பாமே. (பா. 319)

உப்பிட ஆறுங் கட்டும்
உறந்தீட்ட வெயில் போட
ஒப்பிடச் சுன்ன மாகும்
ஓராறு நாலும் பாரு
செப்பிடத் திசைச் சுன்னத்தில்
செயகண்டி தூம வேதைக்

கப்பிட ரவியிற் சுன்னங்
காய்மட்டுங் காத்துக் கொள்ளே. *(பா. 320)*

துரிசு சுன்னத்தை சாரத்தின் சம அளவு எடுத்து பூசி ரவியில் வைத்தால் சுன்னமாகும். சீனச் சுன்னத்தை இரண்டு வகையான உப்பின் மேலும், பண்ணைச் சுன்னத்தை பூரத்தின் மேலும். காரச் சுன்னத்தை சவுக்காரத்தின் மேலும் இந்துப்பின் மேலும் பூசி ரவியில் வைத்தால் ஆறு வகையான சரக்கும் சுன்னமாகும். இந்த பத்து வகையான சுன்னத்தால் தூமவேதைக் கைக்குள்ளாகும். ஆனால் சரக்குகள் நன்றாக ரவியில் காய்ந்து சுன்னமானால் தான் வேதை பலிக்கும்.

கொள்ளுநல் சாஸ்திரங்கள்
கூடிற்ற ஆறும் ஆறாய்த்
தெள்ளுநற் பத்தும் பத்து
சேர்த்திடு வீர மொன்று
அள்ளுநற் கனிபோ லொக்கும்
அப்பனே பொடியாய்ப் பண்ணிப்
பொள்ளுநற் பதினெட் டான
பூரணப் பொருளைக் கேளே. *(பா. 321)*

மேற்கூறிய பத்து வகையான சுன்னத்தையும் வகைக்கு ஒரு பலம் எடுத்து வீரம் ஒரு பலம் கூட்டி அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துப் பொடி செய்து வைத்துக் கொள். இச்சுன்னத்தினால் மடியும் பதினெட்டு வகையான சரக்கை பற்றி கூறுகிறேன் கேள்!

கேளுநீ கௌரி தந்தி
கெடிபடச் சிலைமால் தேவி
ஆளுநீ வீரஞ் சிங்கி
அகண்டிடும் வெள்ளை லிங்கம்
தோளுநீ தொட்டி புத்து
துலங்கிய பொன்னி னப்பா
வாளுநீ கோழி கெந்தி
வழங்கிய கௌரி யாமே. *(பா. 322)*

ஆமிது நிமிளை யோடும்
அடங்குகார் முகிலே கூட்டி
போமது ராசா வர்த்தம்
புகழ்பெறக் குதிரைப் பல்லு
நேமது எருமை னாக்கு
நேர்படப் பதினெட் டாச்சு

தாமது புராண மார்க்கஞ்
சரக்கிது அறிந்து கொள்ளே. (பா. 323)

மனோசிலை, அரிதாரம், வீரம், சிங்கி, வெள்ளை, லிங்கம், தொட்டி, பவளப்புத்து, பொன்னம்பர், கோழித் தலை கெந்தி, கௌரி, நிமிளை, கார்முகில், ராசவர்த்தம், குதிரைப் பல்லு, எருமை நாத்தொட்டி., போன்ற பதினேட்டு வகையான சரக்கும் பதினெட்டுப் புராணத்திற்கு சமமாகும், (பாடலின் துவக்கத்தில் கௌரிதந்தி, என்றும் முடிவில் கௌரி என்றும் வருகிறது. இரண்டு முறை ஒரே சரக்கின் பெயரே வருவதால் பதினெட்டு சரக்கிற்கு ஒரு சரக்கு குறைகிறது. ஆகையால் பாடலின் துவக்கத்தில் கௌரி கெந்தி என்று இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். கந்தகத்தைச் சேர்த்துக்கொண்டால் பதினெட்டுச் சரக்கு சரியாகிவிடும்.)

கொண்டதோர் பதினெட்டுக்குங்
கூட்டுமுன் பத்துச் சுன்னம்
அண்டநீர் தன்னை வார்த்து
அறைத்துநீ அப்புமப்பா
பண்டது வெவ்வேறாகப்
பருகிடும் நாலுக்கொன்று
அண்டவே ரவியிற்போட்டு
அலறவே காச்சிடாயே. (பா. 324)

காஞ்சிடுங் காலத்துள்ளே
கடுகியே பதினெட்டப்பா
மாச்சிடு மடங்கும்பாரு
மகத்துவம் சொல்லக்கூடா
ஆச்சிடுஞ் சித்தவாதி
அகண்டத்தைப் பார்த்தோர்க்கெய்தும்
பேச்சிடுஞ் சோமன்மாரி
பிறப்பென்றும் பிறப்பார் பாரே. (பா. 325)

இப்பதினெட்டு வகையான சரக்கிற்கும் வீரம் சேர்த்து பொடி செய்த பத்து வகையான சுன்னத்தை அண்ட செய நீரை விட்டரைத்து தனித்தனியாக ஒவ்வொரு சரக்கின் மேலும் நாலுக்கொரு பங்கு பூசிக் காய வைத்தால் பதினெட்டு வகையான சரக்கும் மடிந்து சுன்னமாகும் இச்சுன்னத்தின் பெருமையை வாயால் கூறுவதற்கு இயலாது. இச்சுண்ண மானது அகண்ட சச்சிதானந்தப் பொருளை அறிந்தவர்க்கே எய்தும்.

பாருநீ புராணமாகப்
பதினெட்டு மூதச்சுன்னம்

பாருநீ பதினெட்டாலே
பலபல களங்குமாகும்
பாருநீ பதினெட்டாலே
ப்ரஷிசந் தூரமாகும்
பாருநீ பதினெட்டோடே
பரவிய இனத்தைகூட்டே. *(பா. 326)*

பதினெட்டு வகையான இம்மூதச் சுன்னத்தால் களங்குகள், செந்தூரங்கள் போன்றவை சித்தியாகும். ஆனால் இச்சுன்னங்களை சரியான இனங்கண்டும் எடைக் கண்டும் சேர்க்க வேண்டும். இல்லையேல், அனைத்தும் கேள்.

கூட்டிய முறைகள் தப்பில்
கொடிதான துரைகள் பொய்யாம்
கூட்டிய முறைகள் தப்பில்
கொடுக்காது வர்ணம் போகுங்
கூட்டியே யிடையேமிஞ்சில்
கொடுஞ்சரக் கெல்லாந்தூளாம்
கூட்டிய அரைப்புமிஞ்சில்
கொடுஞ்சண்டிப் பாகும்பாரே. *(பா. 327)*

சரக்குகளைக் கூட்டுகிற முறையில் தவறு ஏற்பட்டால் இனமும் எடையும், அரைப்பும், தப்பினால் சரக்குகள் வர்ணம் குறைந்தும், ,ளாகியும், புகைந்துப் பாழாகும்.

பாருநீ கடுஞ்சுன்னத்தை
பகருவேன் பரிவாய் நோக்கு
தாருநீ சீனச்சுன்னந்
தனியண்ட நீரைக்குத்தி
கோருநீ உப்புமேமி
குமட்டினாற் கொண்டுபூசி
ஆறுநீ ரவியிற்போட்டு
அமர்த்தியே குகையில் வையே. *(பா. 328)*

வைத்துநீ உலையிலிட்டு
வளம்பெற ஊதுஊது
கத்திய உப்புதானுங்
டுஞ்சுன்ன மாகும்பாரு
தடூதிய நீரைக்குத்த
தவளம்போல் நீறுமப்பா

அத்திய உப்புச் சுன்னம்
ஆறுபதுங் கட்டுந்தானே. (பா. 329)

கடுஞ்சுன்னத்தால் (மேற்கூறிய பத்து வகையான சுன்னத்தால்) சரக்குகளை மடிக்கும் (கொல்லும்) முறையைக் கூறுகிறேன் கேள், சீனச் சுன்னத்தை அண்டநீர் விட்டரைத்து கல்லுப்பின் மேல் பூசி ரவியில் காய வைத்து பின் குகையிலிட்டு ஊதினால் உபபானது மடிந்து கடுஞ்சுன்ன மாகும். இச்சுன்னத்தில் நீரை தெளித்தால் தவளம் போல் கொதித்து சுன்னமாகும். இவ்வுப்பு சுன்னத்தால் அறுபத்து நாலு வகையான சரக்குகளும் கட்டும்.

காணுநீ காரச் சுன்னங்
கட்டொன்று இணங்கன்நாலில்
பூணுநீ அண்டநீரால்ப்
பொலிவுற அரைத்துப்பூசி
தோணுற ரவியிற் போட்டு
சுகப்படக் குகையிலிட்டு
ஊணுற ஊதுஊது
உறுதியாச் சுன்னமாமே. (பா. 330)

காரச் சுன்னத்தை அண்ட நீரால் அரைத்து வெடியுப்பின் மேல் நாலுக்கொரு பங்கு பூசி ரவியில் காயவைத்து குகையிலிட்டு ஊதினால் சுன்னமாகும்.

சுன்னமாந் துரிசிச்சுன்னம்
சுகப்பட்ட சாரம் நாலில்
பண்ணமா அண்டநீரில்
பரிவுடன் பூசிப்போடு
தன்னமாய் ரவியிற்காய்ந்து
தனியுறச் சென்றபின்பு
மண்ணமாம் குகையிலிட்டு
வளம்பெற ஊதுஊதே. (பா. 331)

துருசுச் சுன்னத்தை அண்ட நீரால் அரைத்து நாலுக்கொரு பங்கு சாரத்தின் மேல் பூசி ரவியில் காய வைத்து குகையிலிட்டு ஊதினால் சுன்னமாகும்.

ஊதவே சூடன்சுன்னம்
ஒன்றினால் காரத்தப்பி

பாதவே ரவியிற்போடு
பட்டுள்ளே உருகுமட்டும்
தீதவே குகையிலிட்டுச்
சிதையமே லூதுஊது
ஆதவே காரச் சுன்னத்
தாண்மையை அறிந்திலேனே. (பா. 332)

சூடன் சுன்னத்தை அண்ட நீரால் அரைத்து நாலுக்கொரு பங்கு சாரத்தின் மேல் பூசி ரவியில் வைத்து காயவைத்தால் இரண்டு சரக்கும் கூடி இளகும். இத்தருணத்தில் சரக்கை குகையிலிட்டு சிதையாமல் ஊதினால் காரம் சுன்னமாகும்.

சீனச் சுன்னம்

அறிந்துநீ பூரச்சுன்னம்
அப்பிடு சீவன்மேலே
பிறந்துநீ ரவியிற்போட்டு
பெலமெல்லாம் போகும்மட்டும்
மறிந்துநீ குகையிலிட்டு
வளம்பெற வூதுஊது
கரிந்துநீ சீனச்சுன்னம்
கடுஞ்சுன்ன மாகும்பாரே. (பா. 333)

பூரச் சுன்னத்தை அண்ட நீரால் அரைத்து நாலுக்கொரு பங்கு சீனத்தின் மேல் பூசி ரவியில் காய வைத்து குகையிலிட்டு வைத்து ஊதினால் சுன்னமாகும்.

பாருநீ சாரச்சுன்னம்
பாச்சினால் துரிசிமேலே
சேருநீ ரவியிற் போட்டு
செந்தூரங் காய்ந்தபின்பு
தாருநீ குகையிலிட்டுத்
தாக்கியே யூதுஊது
போறுநீ சுன்னமாறில்
பூட்டிவா அண்டநீரே. (பா. 334)

சாரச் சுன்னத்தை அண்ட நீரால் அரைத்து நாலுக் கொரு பங்கு துருசின் மேல் பூசி ரவியில் வைத்து காய்ந்த பின்னர் குகையிலிட்டு ஊதினால் சுன்னமாகும். சுன்னமார்க்கத்திற்கு மறவாமல் அண்ட நீரை விட்டு அரைக்க வேண்டும்.

அண்டத்தின் நீரைவிட்டால்
ஆகாது கடிதாஞ்சுன்னம்

பண்டத்தச் சரக்குக்கெல்லாம்
பரவுசத்து ருவைப்பார்த்து
ஒண்டித்து ஊதஊத
உயர்ந்தநற் சுன்னமாகும்
கண்டிந்தப் படினான் சொன்னேன்
காட்டுநீர் வியும்புவாரே. *(பா. 335)*

இவ்வண்ட நீரை விட்டால் சரக்குகளை எளிதில் சுன்னமாக்க முடியாது. மேலும் சுன்னமாக்க வேண்டிய சரக்கிற்கும் சத்துரு சரக்கை அறிந்து அச்சுன்னத்தால் சரக்குகளை வாட்டி ஊதினால், நல்ல உயர்தரமான சுன்னங்கள் கிட்டும். நான் அறிந்தபடி இங்கு கூறியுள்ளேன் இதை நீ அறிந்து செய்துப் பார்!

பாருநீ இந்தமார்க்கம்
பதைப்புறுங் கடிதாஞ்சுன்னம்
சேருநீ இதுக்குள்வேதை
சிவன்சொல்ல தேவிகேட்டாள்
ஆரினி யறியப்போரார்
அறிந்தவர் சித்தரப்பா
தேருநீ திருநாளாகச்
செப்புறேன் வாதங்கேளே. *(பா. 336)*

இச்சுன்ன மார்க்கம் மிகவும் எளிமையாகும். மற்ற முறைகள் மிகவும் கடினம் என்றறிவாயாக. மேலும் இந்தச் சுன்னவகையால் ஏற்படும் வேதை முறைகளை சிவபெருமான் மூலம் பார்வதி அறிந்துக் கொண்டாள். அவளைத் தவிர வேறு யாரும் இதுவரை சுன்ன வேதையை அறிந்ததில்லை. இம்முறைகளை முழுமையாக அறிந்தவனே சித்தனாவான். இனி மற்றொரு வாத முறை கூறுகிறேன் கேள்!

கேளுநீ சூதங் கூட்டி
கெடிபட வேதை போட
வாளுநீ கறுத்த நாபி
வளம்பெற உரைத்துக் கொண்டு
தேளுநீ புனுகு சட்டஞ்
சேர்ந்துற மேலேபூசி
கோளுநீ தீயிலாட்டிக்
குமுறவே புனுகை வாங்கே. *(பா. 337)*

சூதத்தால் வேதை புரியும் முறையைக் கூறுகிறேன் கேள்! கறுத்த நாபியை (கருநாபியை - கருநாபி என்பது விஷத்தன்மை கொண்ட ஒரு

வகை மூலிகை). நன்றாய் அரைத்துக் கொண்டு அதன்மேல் புனுகைப் பூசி தீயிலிட்டு வாட்டி பத்திரமாக சிமிழில் வைத்து பதனம் செய்ய வேண்டும்.

வாங்கிநீ புனுகு தன்னை
வைத்திடு பரணிக் குள்ளே
தேங்கிய கழஞ்சி சூதஞ்
சிறக்கவார்ப் பீங்கானுக்குள்
ஓங்கிய சாரச் சுன்னம்

உயர்ந்தமஞ் சாடி யொன்று
பாங்கியிப் புனுகு தானும்
பரப்புவோர் பணமே தூக்கே. (பா. 338)

தூக்கிடு கெந்தி பாதி
சுகப்பட்ட பூரம் பாதி
தாக்கிடு சாரம் பாதி
தனித்திடும் காரம் பாதி
பாக்கிடு தூக்க மெல்லாம்
பணமரைப் பணமே தூக்கம்
ஆக்கிடு எல்லாம் கூட்டி
அடவுடன் மர்த்திப் பாயே. (பா. 339)

மர்த்திக்கில் சூதந் தானும்
வளம்பெறும் வெண்ணெ யாகும்
மத்திக்கக் கிளிபோல் கட்டி
மற்பிடி சூட்ன்தீப
மத்தித்த சூடன் கட்டி
மறிப்பட இறுகும் பாரு
கொத்தித்த கரண்டிக் குள்ளே
கொட்டின எண்ணெய் குத்தே. (பா. 340)

பிறகு கழஞ்சி அளவு ரசத்தை எடுத்து ஒரு பீங்கானி விட்டு இதனுடன் சாரச்சுன்னம் ஒரு மஞ்சாடியளவும் புனுகு ஒரு பணம் அளவும், கெந்தி, பூரம், சாரம், காரம் போன்றவைகளை வகைக்கு அரைப்பணம் அளவும் சேர்த்து மத்தித்தால் சூதமானது வெண்ணை போலாகும்.

இவ்வெண்ணையை கிளி போல் கட்டி (அதாவது ஒரு துணியில் கட்டித் தொங்கவிட்டு) சூடனைக் கொளுத்தி காண்பித்தால் சூதமானது இறுகி மணி போலாகும்.

குத்தியே தணலில் வைத்து
குழையவே ஊதும் போது
பத்தியே உருகும் பாரு
பதங்கண்டு கொட்டிக் கொண்டு
அத்தியே குகையி லிட்டு
அதட்டியே ஊதும் போது
பொத்தியே காரம் போடு
பொன்போலே ஆடும் பாரே. *(பா. 341)*

பின்னர் ஒரு கரண்டியில் எண்ணைக் குத்தி தணலில் வைத்து ஊதினால் எண்ணையானது சூடேறும். அச்சமயம் கட்டிய சூதத்தைப் போட்டு உருக்கி குகையிலிட்டு காரம் சேர்த்து ஊதினால் பொன்போல் கண்விட்டாடும்.

பாரிந்தச் சூத ராசன்
பகலிர வொன்றாய் பண்ணும்
பாரிந்தச் சூத ராசன்
பறக்குமே யானைக் கொன்று
பாரிந்தச் சூத ராசன்
பகிராத பொருளி லேற்றும்
பாரிந்தச் சூத ராசன்
படுமுன்னே ஏம மாமே. *(பா. 342)*

சூதராசன் என்றழைக்கப்படும் இம்மணியானது பகலிரவை ஒன்றாய்ச் சேர்க்கும். (பகல் - சூரியநாடி, இரவு - சந்திரநாடி ஆக இரண்டையும் சேர்த்து சுழிமுனையில் ஓடச் செய்யும்). மேலும் ஆகாயப் பிரவேச சித்தியும் ஏமத் தொழிலும் கைக்கூடும்.

ஆமிந்த ஈசன் கையில்
அணைத்திடும் ஆதி சேஷன்
வாமிந்தச் சிங்கி பூட்ட
மயங்கிய வாறு போலத்
தாமிந்தச் சித்த னாரும்
தனிச்சித்தன் சிவனே கண்டாய்
யேமிந்த ரசத்தில் பூட்ட
எரிசிங்கி முறையைக் கேளே. *(பா. 343)*

சிவபெருமானின் மேனியில் தவழும் ஆதிசேஷன் இந்த ரசமார்க்கத்தை செய்யவெண்டும் என்று ஆவல்கொண்டார். ஆனால் அவரால் செய்ய முடியவில்லை. மனதில் மயக்கம் உண்டாயிற்று. இம்மார்க்கத்தை முழுமையாக அறிந்த ஒரே சித்தர் சிவபெருமான் என்றறிந்து கொள். இனி எரிசிங்கி முறையைக் கூறுகிறேன் கேள்.

கேளுநீ தூரிசிச் சுன்னம்
கெடிபடக் களஞ்சி ஒன்று
வாளுநீ சவாது ஒன்று
வளம்பெறப் புழுகு ஒன்று
தோளுநீ ஒன்றாய்க் கூட்டித்
துலக்கவே மத்தித் தப்பா
வேளுநீ பீங்கான் கிண்ணி
விரவியே அப்பி வையே. (பா. 344)

அப்பியே ரவியில் வைத்து
அதுமேலே காந்திக் காட்டு
ஒப்பியே உள்ளே சென்று
உருகியே தயில மாகும்
செப்பியத் தயிலத் துள்ளே
சேர்த்திட மருந்தைக் கேளு
கப்பிய கார சாரம்
கடுஅரி தாரங் கூட்டே. (பா. 345)

கூட்டிடு கெந்தித் தொட்டி
கொடிதான வீரம் பூரம்
ஆட்டிடு நாபி யோடு
அப்பனே உரமுங் கேளு
நீட்டிய ஒன்பதுந்தான்
நிறமொரு பணமே தூக்கி
ஊட்டியே தயிலத் துள்ளே
உரைத்துநீ குழப்பிக் கொள்ளே. (பா. 346)

துருகச் சுன்னம் ஒரு கழஞ்சி, சவ்வாது ஒரு கழிஞ்சி, புழுகு ஒரு கழிஞ்சி, ஆக மூன்றையும் ஒன்றாய்க் கூட்டி மத்தித்துப் பீங்கானில் இட்டு ரவியில் வைத்துத் தணலைக் காட்டினால் மருந்தானது உருகி தயிலமாகும். இத்தயிலத்தில் சேர்க்க வேண்டிய மருந்தைப் பற்றி கூறுகிறேன் கேள்!

காரம், சாரம், அரிதாரம், கெந்தி, வீரம், பூரம், நாபி, உரம், தொட்டி பாசாணம் போன்ற ஒன்பது வகையான மருந்தையும் வகைக்கு ஒரு பண அளவு எடுத்து தயிலத்தில் குழப்பிக் கொள்ள வேண்டும்.

கொண்டிடுந் தயிலப்பெரு
கோடுலியரி சிங்கி தான்காண்
தண்டிடும் போட்டால் சூதந்
தலைச்சுற்றி வெறைத்துப் போகும்
ஒன்றிடுந் தயிலங்குத்தி
உறவாக மத்தித்தப்பா
பண்டிடுங் கிளிபோல் கட்டிப்
பருஞ்சூடன் தீயில் வாட்டே. (பா. 347)

வாட்டிப்பின் சூதந்தன்னை
வளமான கரண்டிக் குள்ளே
நீட்டிப்பின் எண்ணெய் குத்தி
நிலைக்கவே உருக்கிவாரு
பூட்டிப்பின் குகைக்குள்காரம்
போட்டதை உருக்குமப்பா
ஊட்டிப்பின் உருக்கச்சூதம்
ஒளிவிட்டு ஆடும்பாரே. (பா. 348)

மருந்துசேர்த்து தயிலத்திற்கு எரிசிங்கி என்று பெயர். இத்தயிலத்தில் சூதத்தை சேர்த்தால் உறைந்து போகும். முதலில் தயிலத்தை எடுத்து அதில் சூதத்தைச் சேர்த்து மத்தித்தால் வெண்ணையாகும். பிறகு இச்சூதத்தை கிளிபோல் கட்டி சூடன் தீயில் வாட்டினால் சூதமானது உறைந்து இறுகும். இச்சூதத்தை கரண்டியில் போட்டு எண்ணை விட்டு உருக்கி குகையில் வார்த்து காரமிட்டு ஊதினால் பொன் போல் பிரகாசித்து கண் விட்டாடும்.

பாரிந்தச் சூதந்தானும்
படுமுன்னே தூரவோடும்
சேரிந்தச் சூதம்போலே
செகத்திலே கட்டுமில்லை
ஓரிந்தந் தழைவோ் சத்தால்
உருக்குவார் சுருக்குசெய்வார்
காரிந்த மடையரப்பா
கடுஞ்சூதக் கட்டென்பாரே. (பா. 349)

கட்டென்பார் சுருக்குப்போட்டுக்
கண்கெட்டாப் போலே நிற்பார்
மட்டென்பார் சூதந் தானும்
மயினம் போல் ஆச்சுதென்பார்
விட்டென்பார் ரெட்டுச்சென்பார்
விடுபட்ட சூதயானை
தெட்டென்பார் வாதிமெல்லாம்
தெறிகெட்டுத் திகைத்தவாறே. *(பா. 350)*

இச்சூதத்தைக் கண்ட மாத்திரத்தில் வாதமானது நமக்கு சித்தியாகும். மேலும் இச்சூதக்கட்டைப் போல் உலகத்தில் வேறு கட்டு முறைகள் கிடையாது. (இதற்கு நிகரான கட்டுமுறை கிடையாது). உலகத்து மாண்பர்கள் மூலிகை வேரின் சத்தால் குளிகையை கட்டினால் தான் முழுமையான சூதக்கட்டு என்று கூறிக்கொண்டுபுலம்புவர். அப்படிப் பட்டவர்களை மடையர்கள் என்று அறிந்து கொள். மேலும் சூதத்தை சுருக்கு போட்டு அதற்குமேல் செய்ய வேண்டியவைகளை அறியாமல் விழிப்பார். சுருக்குபோட்டதால் சூதமானது மயினம் போல் ஆகிக் கட்டிற்று என்று கூறுவார். (ஆனால் உண்மையில் அவர்கள் முழுமையான கட்டு முறையை அறிந்திருக்க மாட்டார்கள்.)

வாறுகே ளாடசிங்கி
வகையினி சொல்லக்கேளு
கூறுகேள் புழுகுஒன்று
கூட்டதில் சவ்வாதொன்று
தேறுநல் விந்து வொன்று
சிறுகோழிப் பீசமொன்று
தாறுகேள் பொன்னின்நாதம்
தனியஞ்சும் சமனாய்க்கூட்டே. *(பா. 351)*

சிங்கி முறையை மேலும் கூறுகிறேன் கேள்! புனுகு, சவ்வாது, விந்து, சிறுகோழிபீசம், நாதம், இவை ஐந்தையும் சம அளவு சேர்த்துக் கொள்.

கூட்டவே மருந்துகேளு
குலாவிய சாரச்சுன்னம்
ஆட்டவே வீரச்சுன்னம்
அப்பனே தூரிசிச்சுன்னம்

முட்டவே மூன்றுதானும்
முக்கழஞ் செடையே தூக்கு
ஆட்டமுன் அஞ்சுகேளு
அயம்ரெண்டு பத்துத்தூக்கே. (பா. 352)

தூக்கிய எடையே தென்னில்
துலக்காக கழஞ்சிபத்து
தாக்கிய மருந்துபோடச்
சரக்குடன் வளமைகேளு
ஆக்கிய காரசாரம்
அரிதாரங் கெந்தி தொட்டிப்
பாக்கிய வீரம்பூரம்
படுநாபி எட்டும் போடே. (பா. 353)

போடுநீ நிரு விஷந்தான்
புகழ்பெறத் துத்தத் தோடே
ஆடுநீ பதினொன்றேதான்
அப்புறம் வைத்துக் கொண்டு
தேடுமுன் அஞ்சும் மூன்றும்
தெளிவுற அறைத்தே அப்பிக்
கோடுநல் ரவியில் வைத்துக்
கொடுங்காந்திக் காட்டு காட்டே. (பா. 354)

பிறகு சாரச்சுன்னம், வீரச்சுன்னம், துரிசுச் சுன்னம், இவைமூன்றையும் வகைக்கு கழஞ்சிஎடை சேர்த்துக்கொள். பிறகு முன்பு கூறிய ஐந்து வகையான சரக்கையும் பத்து கழஞ்சியும், காரம், சாரம், அரிதாரம், கெந்தி, தொட்டி, வீரம், பூரம், நாபி, நிர்விரதம், துத்தம் போன்ற பதினோறு வகையான சரக்கையும் எடுத்துக் கொள்ள வேண்டும் (ஐந்து வகை சரக்கும் ஒன்று சேர்த்தால் ஒரு மருந்தாகவும் அதனுடன் மற்ற பத்து வகையான மருந்தை கூட்டினால் பதினொறு சரக்குகளாகும். இதுவே உண்மை. (பாட்டு 353 ல், ஏழு சரக்கென்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் எட்டு சரக்குகள் பாடலில் கூறப்பட்டுள்ளது. பாடல் 354-ல் மேலும் இரண்டு சரக்குகள் கூறப்பட்டு மொத்தத் தொகை பதினொன்று என்று சொல்லப்பட்டுள்ளதால் 353 ஆம் பாடலில் தவறு உள்ளதென்பது வெளியாகிறது)

முன்பு கூறிய ஐந்து மருந்தையும், மூன்று மருந்தையும் ஒன்றாக சேர்த்து அரைத்து ரவியில் வைத்து சூடு காண்பிக்க வேண்டும்.

காட்டிடத் தயில மாகும்
ஒட்டிய பதினொன் றெதான்
ஒட்டிய பதினொன் றேதான்
ஒன்றேகால் பணமே தூக்க
நீட்டிடத் தயிலத் துள்ளே
நேர்மையாய் உரைத்துக் கொண்டு
கூட்டிட விதன்தன் பெயருங்
கொடுலாட சிங்கி காணே. *(பா. 355)*

தணலைக் காட்டிய மாத்திரத்தில் சரக்குகள் தயிலமாகும். இத்தயிலத்தில் பதினொரு வகையான சரக்கையும் வகைக்கு ஒரு பண அளவு தயிலத்தில் போட்டு கலக்கிக் கொண்டால் கடுமையான தயிலமாகும். இத்தயிலத்திற்கு லாட சிங்கி என்று பெயர்.

காணிந்த சிங்கிப் பட்டால்
கடுஞ்சூதம் விரைத்துப் போகும்
பூணிந்தச் சிங்கி விட்டுப்
புகழுற ரசத்தைத் தேய்த்துத்
தோணிந்தக் கிழிபோற் கட்டிச்
சூடன்தீ தன்னில் வாட்டு
வாணிந்தக் கரண்டிக் குள்ளே
வார்த்தெண்ணெ யுருக்கிப் போட. *(பா. 356)*

இத்தயிலத்தில் சூதம் பட்டால் சூதம் விரைத்துப் போகும். பீங்கானில் வேண்டிய அளவு ரசத்தை விட்டு அப்பீங்கானில் சிங்கித் தயிலத்தை வார்த்து மத்தித்தால் ரசமானது தயிர் போலாகும். இதை ஒரு துணியில் கிழி போல் கட்டி சூடனுடன் தீயில் வாட்டினால் கட்டும்.

போட்டபின் குகையி லிட்டுப்
பொரிகாரம் போட்டே ஊது
ஆட்டபின் ரசந்தான் தீயில்
அப்பனே ஆடும்பொன் போல்
மூட்டபின் சூதத் தோடே
மூட்டிடு பச்சை சூதம்
கூட்டபின் கூட்டக் கூட்டக்
கொடிதான சூதஞ் சாமே. *(பா. 357)*

கட்டிய சூதத்தைக் கரண்டிக்குள் போட்டு எண்ணையை வார்த்து உருக்கி குகையிலிட்டு காரம் சேர்த்து ஊதினால் பொன்போல் பிரகாசித்து கண்விட்டாடும். இச்சூதத்துடன் (கட்டிய சூதத்துடன்) சாதாரண ரசத்தைச்

சேர்த்தால் சாதாரண ரசமும் மடித்து சாகும்.

சாகுமே சூதந் தானுந்
தனியொன்றே யல்லக் கேளு
ஆகுமே சரக்காய் நின்ற
அறுபத்து நாலுஞ் சாகும்
போகுமே சார காரம்
போட்டிலே கட்டிப் போகும்
வாகுமே இனத்தைக் கண்டு
மாட்டுநீ சொர்ன மாமே. (பா. 358)

இதுமட்டுமின்றி இக்கட்டிய சூதத்துடன் அறுபத்து நாலு சரக்கையும் சேர்த்தால் அனைத்தும் மடிந்து சாகும் மேலும் இச்சூதத்துடன் காரம் சாரம் முதலியவற்றைச் சேர்த்தால் உடனே கட்டி திடப்படும். கட்டிய சரக்குடன் சரியானச் சரக்கைச் சேர்த்து உருக்கினால் உடனே தங்கமாகும்..

சொன்னமே யானாலப்பா
துலங்கிய மாற்றுக் கேளு
மன்னவே ஐந்நூற் றெட்டு
மாற்றென அறிந்து பார்த்தேன்
ஏன்னமோ சிங்கி யென்றே
எளிதாகச் சொல்ல வேண்டாம்
தன்னமே சிங்கிக் கொக்கத்
தைலமும் ஒவ்வா தென்னே. (பா. 359)

தங்கம் என்றால் சாதாரண தங்கமல்ல. ஐந்நூற்று எட்டு மாற்றுக் கொண்ட தங்கமாகும். இவ்வாறு உயர்ந்த மாற்றையளிக்கும் சிங்கித் தயிலத்தை செய்வதென்பது மிகவும் கடினம் அதுமட்டுமின்றி இதற்கு நிகரான வஸ்து உலகில் வேறொன்றும் இல்லை.

ஒவ்வாது மலைகள் தோறும்
உத்தம உதகந் தானும்
ஒவ்வாது மலையில் நிற்கும்
உயர்ந்த மூலிகையே பாரு
ஒவ்வாது பரிச வேதி
உயர்ந்திடுங் கிணறு தானும்
ஒவ்வாது சிங்கிக் கொக்க
ஒத்ததைக் கண்டி லேனே. (பா. 360)

மலைகளில் தோன்றும் உதகநீரும், மூலிகைகளும், பரிசவேதி ரசக்கிணறுகளும், பரிசவேதிக் கற்களும் இச்சிங்கித் தயிலத்திற்கு சமமாகாது.

ருத்திர சிங்கி

கண்டொன்று சொல்லக் கேளு
கடிதான ருத்திர சிங்கி
மண்டொன்று மா மையீசன்
வழங்கிய ஒழுங்கு கேளு
தண்டொன்று மனிதனாலும்
தனித்தனி கொழுப்பைவாங்கி
ரெண்டொன்று கோழிப்பீச
மொக்கஞ்சு கழஞ்சோரஞ்சே. *(பா. 361)*

அஞ்சையும் ஒன்றாய்க்கூட்டி
அனுப்பிவை பீங்கானுக்குள்
வஞ்சைய காந்திகாட்ட
வரும்நெய் தான்வழித்துக்கொண்டு
தஞ்சைய புனுகுமஞ்சு
சவாதுமைங் கழஞ்சுபோடு
வொஞ்சைய நாதம்விந்து
ஒவ்வொன்று கழஞ்சுகூட்டே. *(பா. 362)*

நான்கு வகையான உயிரினத்தின் கொழுப்பை எடுத்து அதனுடன் கோழிப்பீசத்தை ஐந்து கழஞ்சு சேர்த்து பீங்கானில் வைத்து ரவியிலிட்டு தணலை காட்டினால் சரக்குகள் நெய்யாய் உருகிவரும். இந்நெய்யில் புனுகு ஐந்து கழஞ்சும் சவ்வாது ஐந்து கழஞ்சும் நாதம் ஒரு கழஞ்சும் விந்து ஒரு கழஞ்சும் சேர்த்து குழப்பிக்கொள்ள வேண்டும்.

கூட்டிய ஒன்பதுக்குள்
கூட்டவே சுன்னங்கேளு
ஆட்டிய துருசுச்சுன்னம்
அப்பனே சாரச்சுன்னம்
காட்டிய காரச்சுன்னங்
கடுகிய நிமிளைச்சுன்னம்
பூட்டிய வீரச்சுன்னம்
புகழுஞ்சும் கழஞ்சிபோடே. *(பா. 363)*

இத்தை மருந்தில் (மருந்து சேர்த்த நெய்யில்) துருசுச் சுன்னம், சாரச்சுன்னம், காரச்சுன்னம், நிமிளைச்சுன்னம், வீரச்சுன்னம் என்ற ஐந்து வகையான சுன்னங்களையும் வகைக்கு கழஞ்சு எடை சேர்த்து

போட்டுநீ யொன்றாய்ச் சேர்த்துப்
புகழுறப் பீங்கானப்பி
யாட்டுநீ காந்தி காட்டு
அப்பனே தைலமாகும்
பூட்டிடத் தைலத்துள்ளே
போக்கெலாஞ் சொல்லக்கேளு
சிட்டிய சூரசாரம்
'மிஸ்தேவி' கந்திகூட்டே.. *(பா. 364)*

கூட்டுநீ வீரம்பூரம்
கொடுநீரு விஷமுநாபி
ஆட்டுநீ கவரிமானின்
அப்பனே சதையும் வாங்கிப்
பூட்டுநீ கஸ்தூரிவீணைப்
புகழ்கோ ரோசனையுமாக்க
வேட்டுநீ தொகையே தென்னில்
இசையுடன் பதினொன்றாச்சு. *(பா. 365)*

சூச்சிந்தப் பதினொன்றேகாண்
அப்பனே இரண்டேமுக்கால்
பாய்ச்சிந்தப் பணத்தின் தூக்கம்
பருகியே உரைத்துக் கொண்டு
தேய்ச்சிந்தத் தைலத்தோடே
சிறப்புடன் வைத்துக்கொண்டால்
கோய்ச்சிந் தருத்ரசிங்கி
கொடுஞ்சிங்கி நாமங்கேளே. *(பா. 366)*

பீங்கான்லடட்டு ரவியில் வைத்து தணலைக் காட்டினால் சரக்குகள் தயிலமாகும். இந்தைலத்தில் காரம், சாரம், அரிதாரம், கெந்தி, வீரம், பூரம், நிர்விஷம், நாபி, கவரிமான் சதை, கஸ்தூரி, கோரோசனை போன்ற பதினொரு வகையான சரக்கையும் வகைக்கு கால்பணமளவு எடுத்து தயிலத்துடன் சேர்த்தால் 'ருத்திரசிங்கி' தைலமாகும்.

கேளிந்த சிங்கி போட்டால்
கெடிசூதக் கெசமுஞ்சாகும்
வாளிந்தக் கிழிபோற்கட்டி
வாட்டிடு சூடன்தீயில்
தாளிந்தக் கரண்டிக்குள்ளே
தனியெணிணைய் குத்தியூது
வேளிந்தச் சூதந்தானும்
விடுபட்டே உருகும்பாரே. *(பா. 367)*

பாருநீ இந்தச்சூதம்
பாய்ச்சியே குகைக்குள்வைத்து
வாருநீ காரம்போட்டு
வளம்பெற ஊதும்போது
சேருநீ ஈசானத்தில்
செறிகறி மதுவும்வைத்துக்
காருநீ பூசைபண்ணக்
கண்விட்டே ஆடும்பாரே. *(பா. 368)*

இந்த ருத்திர சிங்கி தைலம் பட்ட மாத்திரத்தில் சூதமானது விறைந்து சாகும். முதலில் வேண்டிய அளவு ரசத்தை எடுத்து ஒருபீங்கானிலிட்டு ரசத்துடன் தைலத்தை சேர்த்து மத்தித்தால் வெண்ணைப் போலாகும். இவ்வெண்ணையை துணியில் கிழிபோல் கட்டி சூடனுடைய தீயில் வாட்டினால் இறுகி மணியாகும். இம்மணியை கரண்டிக்குள் போட்டு எண்ணை விட்டு உருக்கி குகையில் சாய்த்துக் கொண்டு காரமிட்டு ஊதினால் பொன் போல் கண் விட்டாடும். ஊதும் சமயம் மதுவும் மாங்கிஷமும் வைத்து ஈசானத்தில் ஈசானனுக்கு பூசை செய்தல் வேண்டும்.

ஆடுமச் சூதந் தன்னை
அப்பனே சொரூபி பண்ணு
ஆடுமச் சூதந் தன்னை
அடங்காத கமலி பண்ணு
ஆடுமச் சூதந் தன்னை
அஷ்டமா சித்தி பண்ணு
ஆடுமச் சூதந் தன்னை
அகண்டமாஞ் சொரூபம் பண்ணே. *(பா. 369)*

பண்ணுநீ காம தேனு

பரியுடன் போகம் பண்ணு
பண்ணுநீ சந்தானந் தான்
பருகுமட் சயமே பண்ணு
பண்ணுநீ விண்ணி லாட்டிப்
பலசீவ விதய தீபி
பண்ணுநீ நாத வேதை
பரிசினை பண்ணிப் பாரே. (பா. 370)

பாரிந்தப் பனிரெண் டாலே
பலபல குளிகை யாகும்
பாரிந்தப் பனிரெண் டாலே
பார்த்திடும் போத முன்னைப்
பாரிந்தப் பனிரெண் டாலே
பரவிய வாசி காணும்
பாரிந்தப் பனிரெண் டார்க்குப்
பலித்திடும் வாசி யோர்க்கே. (பா. 371)

கண் விட்டாடும் சூதத்தைக் கொண்டு சாரணை தீர்த்து சுருபி, கமனி, அஷ்டமாசித்தி, சொரூபம், காமதேனு, போகம், சந்தானம், அட்சயம், பரசிவம், தீமிகம், நாகவேதை, பரிசினம் போன்ற பன்னிரண்டு வகையான மணிகளைச் செய்துகொள். இப்பன்னிரண்டு வகையான ரசமணிகளால் அனேக விதமான குளிகைகள் சித்தியாகும் மேலும் ஆனந்த போதமும், வாசி தீபமும் கண்ணில் தோன்றும். இவையாவும் வாசியோகம் புரிபவர்க்கே வாய்க்கும் என்றறிந்து கொள்!

வாசியும் பனிரெண்டே தான்
மணியது பனிரெண்டே தான்
தேசியும் பனிரெண்டே தான்
செயம்பனி பனிரெண்டே தான்
நாசியில் விடுபட் டோடும்
நாட்டியம் வெளியாய்க் காணும்
மாசியின் மாயை யான
வாசனை போகும் பாரே. (பா. 372)

மணியின் வகையும் பன்னிரண்டு வாசியின் அளவும் பனிரண்டாகும். இப்பனிரண்டு வகையான மணிகளால் மாயை என்ற வாசனைகள் அகலும்.

போகுமே ஆங்காரத் தாற்

பொருமிய முனையுந் தீய்ந்து
போகுமே பெண்ணைக் கூடிப்
புணர்ச்சித்த சுகங்க ளெல்லாம்
போகுமே சாவுபொய் யாய்ப்
பொன்மணித் தாயுங் காண்பாள்
போகுமே அண்டந் தாண்டிப்
புகழுற்றுக் கெவனம் பாரே. (பா. 373)

அதுமட்டுமின்றி, அகங்காரமும், பெண்ணுடன் கூடிய பாபங்களும் சாவும், நம்மைவிட்டு விலகும். மேலும், பொன் மணித்தாயானவள் வெளியாகத் தோன்றிப்பிரகாசிப்பாள். ஒளி பெற்று பிரகாசிக்கும் தாயின் அருளால் கெவுன மார்க்கத்தில் அகண்டத்தை தாண்டிச் செல்.

பாருநீ இந்த நூலைப்
பரிவுடன் உணர்ந்தே நீயும்
ஆரினி யென்னைப் போலே
ஆத்தாளைக் கேட்டுச் சொல்வார்
காருநீ இந்த நூலைக்
கட்டியே பதனம் பண்ணு
தாருநீ பாஷாணங்கள்
சகலமுங் கட்டக் கேளே. (பா. 374)

இந்நூலில் கூறியுள்ள மார்க்கங்களை முறையாக அறிந்து கொண்டு நூலை வெகு பத்திரமாக வைத்துக் கொள். என்னைப்போல் யார் இவ்வளவு எளிமையான முறையில் கூறியுள்ளார்கள். இவையாவும் நான் தாயிடம் அறிந்து கொண்டவையாகும். இனி, இந்த ருத்திரசிங்கி சீதலத்தால் பாஷாணங்களை கட்டுதற்கு வகையைக் கூறுகிறேன் கேள்!

கேளிந்த ருத்ர சிங்கி
கெடியான விரலில் தொட்டு
ஆளிந்தப் பாஷாணங்கள்
அறுபதும் புரட்டி வாட்டித்
தாளிந்த நவலோகங்கள்
தனிமணல் செங்கல் கல்லும்
வேளிந்த வெள்ளி மாற்றா
விரைந்தொரா யிரமு மாமே. (பா. 375)

ஆயிர மாற்று மட்டும்

அப்பனே அறிந்து பார்த்தேன்
பாயிரத் தோடே யிந்நூல்
பாடினேன் உரையைக் கேளு
சேயிர சிவகாமித் தாய்
செப்பிய மொழியைப் பார்த்து
வீயிர் ராக மேழு
வானமா யிரமுங் காணே.- (பா. 376)

ருத்திர சிங்கித் தைலத்தை விரலால தொட்டு பாஷாணங்களின் மேல் பூசிப் புரட்டி வாட்டிக்கொண்டு நவலோகங்களுடனும், மணல் மற்றும் கல் செங்கல், போன்றவைகளுடனும் சேர்த்து உருக்கினால் ஆயிரம் மாற்றுக் கொண்ட வெள்ளியாகும். நானும் இதை செய்து பார்த்தேன். அதுமட்டுமின்றி தாயிடமிருந்தும் அறிந்து கொண்டும் இந்நூலில் கூறியுள்ளேன்.

காணிந்த நூலோ டொக்கக்
கயிலையில் ஈசர் நூலும்
பூணிந்த உரைத்துப் பார்க்கப்
பொன்னிதே யதிகம் பாரு
வாணிந்தத் தாயே சொல்ல
வளமாகச் சோதித்தேன் யான்
ஊணிந்த நூலைப் போல
ஒருநூலு முரை சொல்லாதே. (பா. 377)

இந்த நூலுக்கு சமமான நூல் சிவபெருமானால் சொல்லப்பட்ட நூலேயாகும். இதில் கூறியுள்ள அனைத்து விதமான மார்க்கமும் தாயிடமிருந்து அறிந்து சோதித்துப் பார்த்து கூறியுள்ளேன். ஆகையால் இந்நூலைப் போல் வேறு எந்த நூலும் உனக்கு விரிவாக கூறாது.

அஞ்சு சிங்கி

சொல்லாதே ஐந்து சிங்கி
சூட்சத்தை அருளுவேன் யான்
வல்லானை யான சூதம்
மற்றொன்றால் கட்டாதப்பா
கல்லானை யான தெல்லாங்
கடுந்தங்க யானை யாகும்
பொல்லாத தேகம் போக்கிப்
பொன்தேக மாக்கும் பாரே. (பா. 378)

நான் கூறிய ஐந்து வகையான சிங்கியின் பெருமையைப் பற்றி இங்கு

கூறுகிறேன் கேள்! இச்சிங்கித் தைலத்தைத் தவிர வேறு எந்த வகையான தைலமும் பாதரசத்தை முழுமையாக கட்டாது. இச்சிங்கித் தைலத்தால் கட்டப் பட்ட சூதமானது சகலவற்றையும் பொன்னாக்கும். அதோடு நில்லாமல் பாழான இத்தேகத்தையும் பொன் போலாக்கும்.

பாரிந்தச் சிங்கியஞ்சும்
பரமனுக் கஞ்சுபூதம்
பாரிந்தச் சிங்கியஞ்சும்
பரவிய யோனியஞ்சும்
பாரிந்தச் சிங்கியஞ்சும்
பகர்ந்திடுங் கீலமஞ்சு
பாரிந்தச் சிங்கியஞ்சாற்
பரலிற்றி வண்டம்பாரே. *(பா. 379)*

இந்த ஐந்து வகையான சிங்கி, பஞ்சபூதத்திற்கும், ஐந்து வகையான யோனிக்கும், ஐந்துவகையான கீலகத்திற்கும் ஆதியாகும். இந்த ஐந்து வகையான சிங்கியால்தான் பூமி விஸ்தாரமாயிற்று.

பாரொன்று நீரிதொன்று
பரவிய வன்னி ஒன்று
காரொன்று வாயுவொன்று
கடந்தமேல் விண்ணதொன்று
சேரொன்றா யஞ்சுபூதஞ்
சிங்கியு மஞ்சுபூதம்
வாரொன்றுஞ் சிங்கிபோனால்
வாதமும் பொய்யாப்போமே. *(பா. 380)*

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களைப் போல் ஒரு சிங்கி பூமியாகவும், ஒரு சிங்கி நீராகவும், மற்றொரு சிங்கி நெருப்பாகவும், இன்னு மொன்று வாயுவாகவும், கடைசியில் ஆகாயமாக மற்றொன்றும் நின்றன. சிங்கி போனால் வாதமும் பொய்யாகிவிடும்.

பொய்யாமோ வாதமென்றால்
பொருஞ்சூதங் கட்டாய்ப்பாறும்
மெய்யாமே வாதந்தானும்
விரைந்துநற் சூதங்கட்டில்
கையாமோ லவணமெனறால்

கடிகைக்குக் கோடிகாதம்
தையார நிர்த்தங்காணுஞ்
சச்சிதா னந்தம்பாரே. (பா. 381)

இச்சிங்கித் தைலத்தால் முறைப்படி கட்டப்பட்ட சூதமானது அனைத்து வகையான சரக்கையும் பொன்னாக்கும், உப்பால் ஏற்படும் வேதையைக் காட்டிலும் அதிகமான மாற்று உண்டாகும். மேலும் சச்சிதானந்த பொருளானது இருதயத்தில் ஆனந்த தாண்டவம் ஆடும்.

பாரிந்தப் பனிரண்டான
பரியுடன் குளிகை மார்க்கம்
சேரிந்தச் சுர பிக்கப்பா
சேர்க்கலா கிரியையேற்று
யேரிந்தச் சுருபிரெண்டும்
இயல்புடன் பிரித்துச்சொல்வேன்
காரிந்த வேமங்கூட்டிக்
கடுமேம சுருபியாமே. (பா. 382)

பனிரண்டு வகையான குளிகையை சிங்கித் தைலத்தால் கட்டிய சூதத்தைக் கொண்டு செய்து அதில் ஒருவகையான சுரபிக் குளிகைக்கு மற்ற மணிகளிலிருந்து சிறிதளவு எடுத்துச் சேர்த்தால் மிக அதிகமான மாற்றைக் கொடுக்கும்.

சுருபி குளிகை கமலி

ஆமொன்றில் ரசிதங் கூட்டி
அடவாகக் குளிகை பண்ணித்
தாமொன்றில் வங்கத் தூட்டில்
தனிவங்கம் வெள்ளியாகும்
சேமொன்றிற் சுருபியிட்டாற்
சிறக்கமேற் கட்டிகட்டி
வாமொன்றிற் றெரிந்த பின்பு
வாங்கிநீ பாலிற் போடே. (பா. 383)

போட்டிடு சுருபிரெண்டின்
பொருளெல்லாஞ் சொன்னேனப்பா
மாட்டிடு கமலி மார்க்கம்
வகைசொல்லக் கேளாயப்பா
நாட்டிடு வேலைநீரை

நலமாகக் குடிக்கும் பாரு
ஊட்டிடுந் தீயை உண்ணும்
உறுவாயு உண்ணும் பாரே. (பா. 384)

வெள்ளிச் சேர்த்து பாதரசத்தை குளிகையாய் பண்ணிக்கொண்டு இக்குளிகையை வங்கத்தில் சேர்த்தால் வங்கம் வெள்ளியாகும். சுருபிமணிக் குளிகையால் பாதரசத்தைக் கட்டிக் கொண்டு பாலில் போட்டால் மணி யானது பாலைக் குடிக்கும். கமலி என்ற மணி, கடல் நீரையும் குடித்துவிடும் சக்தி உடையது. அது மட்டுமின்றி, தீயையும், காற்றையும் உட்கொள்ளும்.

உண்ணுமக் குளிகை வாயில்
உதட்டிலே வைத்துக் கொண்டு
பண்ணுநல் மணலுஞ் செங்கல்
பருகிய கல்லிலூது
எண்ணிடு லோகம் போலாம்
வெதுப்பியே பொன்னே யாகும்
தண்ணுநல் வேதைதானுஞ்
சாற்றநான் அறிந்திலேனே. (பா. 385)

இக்கமலி என்ற மணியை வாயில் வைத்துக்கொண்டு கல், மணல், செங்கல், நவலோகங்கள், போன்றவற்றின் பேரில் வாயால் ஊதினால் சகலமும் வெதும்பி பொன்னாகும். இதனுடைய மாற்றை என் வாயால் கூறமுடியாது. அப்படிபட்ட மாற்று உண்டாகும்.

அறிந்திலேன் வாயில் வைக்கில்
அப்பனே கெவனமோடும்
பிறிந்திலேன் அண்டந்தாண்டிப்
பேரண்டப் பதமும் போகும்
நறிந்து நன்நாயனார்தான்
நாட்டியே யாட்டிப் பார்த்தார்
பறிந்துநல் யானுஞ் சென்று
பதமெல்லாம் பார்த்திட்டேனே. (பா. 386)

இக்கமலி குளிகையை வாயில் வைத்துக் கொண்ட மாத்திரத்தில் கெவுனம் சித்தியாகும். கெவுன மார்க்கத்தில் அண்டமும் பேரண்டமும் வினாடியில் சுற்றி வரலாம். இதைப்போல் மூலநாயனார் பார்த்திருக்கிறார்? நானும் முழுமையான இக்குளிகையால் சகல லோகமும் சென்று பார்த்தேன்.

பார்த்திட்டேன் பதமுமண்டம்

பலபல சித்தர் கண்டேன்
ஆர்த்திட்ட சித்தர் வென்றார்
அடிமைநான் மூலர்க் கென்றேன்
கோர்த்திட்ட சொரூபமுண்டோ
கொடுமூலர் சிஷ்யரானால்
கார்த்திட்ட சொரூபங் காட்டிக்
கடந்துநான் வந்திட்டேனே. *(பா. 387)*

பலவகையான லோகங்களில் பல வகையான சித்தர்களை கண்டு தரிசித்தேன். அப்பொழுது அச்சித்தர்கள் என்னை யார் என்று கேட்டார்கள். அதற்கு நான் திருமூலரின் அடிமை என்று கூறினேன். என் வார்த்தையைக் கேட்ட சித்தர்கள் நீர் மூலரின் சிஷ்யர் என்றால் சொரூப மணியால் சித்தாடி காட்டுங்கள் (மணியையும் காட்டுங்கள்) என்று கூறவே, நானும் அவர்கள் கேட்டுக் கொண்டபடி சொரூபத்தைக் காட்டி அவ்விடத்தை விட்டகன்று வெளி வந்தேன்.

வந்திட்டேன் அண்டந் தாண்டி
வருகில்பே ரண்டத்துள்ளே
யெந்திட்ட சித்தர் வென்றார்
எவ்விடம் இருப்ப தென்றார்
கைந்திட்ட மூலர்க்கையா
கடைசிநால் தரத்துப் பிள்ளை
சந்திட்ட பாச்சுதப்பா
தனிமது வுண்ணென்றாரே. *(பா. 388)*

அப்படி வருகின்ற சமயத்தில் பேரண்டத்துள்ளே இருக்கின்ற சித்தர்கள் நீர் யார், எங்கிருந்து வருகின்றீர், எவ்விடத்தில் வசிக்கின்றீர் என்று கேட்கையில் நான் திருமூல வர்க்கத்தாரின் நாலாவது பிரம்பரையை சார்ந்தவன் என்று கூறவே மதுவை எனக்களித்து உட்கொள்ளும் என்றார்கள்.

உண்ணத்தான் மதுவை வாங்கி
உகந்ததாய் மணிக்குக் காட்டி
பண்ணத்தான் வாசியோடே
பரிவாக விழுத்துக் கொண்டு
விண்ணைத்தா னோக்க நோக்க
வெளிவிட்டு விளக்கைத் தந்தான்

பண்ணைத்தான் சித்தரோடு
பாஷித்தேன் பாஷித்தேனே. *(பா. 389)*

அவர்கள் கொடுத்த மதுவை வாங்கி தாயான மனோன்மணிக்கு சமர்ப்பித்து வாசியுடன் சேர்த்து உட்கொண்டேன். மதுவை உட்கொண்டு வான்வெளியை நோக்க நோக்க (இருதயத்தில் நோக்க, வான்- சித்தாகாசம்) பரம்பொருளான வஸ்து வெளி தோன்றி வொளிவிட்டு பிரகாசித்தது. அதன் பிறகு அங்குள்ள சித்தர்களுடன் உரையாடினேன்.

பாஷித்த சித்தருக்குப்
பாட்டரே மூலரானால்
நேசித்த ஐந்நூறோடே
நிரைத்த ஆயிரமு மெங்கே
கோஷித்த ரெண்டு நூலுங்
கொட்டினேன் ஐந்நூற்றுள்ளே
வாசித்த சித்தரேநீர்
வகைகேட்பீர் வகை கேட்பீரே. *(பா. 390)*

அப்படி பேசிக் கொண்டிருக்கையில் நீர் உண்மையாக திருமூலரை மூலகுருவாக கொண்டவரெனின் ஐநூறு ஆயிரம் என்ற இருவகை கிரந்தங்களை காண்பியும் என கேட்கவே இரண்டையும் அவர்களுக்குக் காண்பித்து விளக்கமும் கேளுங்கள் என்றேன்.

வகையென்ன பதினே ழங்கம்
வைத்தீரோ ஐந்நூற்றுள்ளே
தகையென்னப் பத்துமேழுந்
தனிரெண்டு மேலே சொன்னேன்
பகையென்ன சித்தரேகாண்
பாஷிக்க வல்லாருண்டோ
மிகையென்ன வேதை போட
விடுபடீர் விடுபடீரே. *(பா. 391)*

இவ்வைந்நூறு என்ற நூலில் பதினேழு வகையான அங்கங்களையும் கூறிவைத்துள்ளீரா என்று கேட்கவே பத்து மற்றும் ஏழு அங்கங்களையும் முறையாகக் கூறினேன். இதைக் கேட்ட சித்தர்கள் பகையைவிட்டு மூலவர்க்கத்தைச் சார்ந்த சித்தரே குளிகையால் வேதையாடி காட்டாமல் இனி இவ்விடத்தை விட்டு உம்மால் செல்ல முடியாது என்று கூறினார்கள்.

விடுபடு மென்ற சித்தர்
வேதைக்கோ ஆண்மை சொன்னீர்

கடுபடுங் குளிகை தூபங்
காட்டுமுன் வேதை தாண்டிக்
கெடுபடுஞ் சத்திதொன்று
கொடுவளி உள்ளே புக்கிப்
படுபடு சொரூபம் போட்டுப்
பறக்குறேன் பிடுத்திடிரே. (பா. 392)

இதைக் கேட்ட நான் அச்சித்தர்களை நோக்கி ஏ! சித்தர்களே வேதையைப் பற்றிக் கேட்டீர்களே பாருங்கள் என்னுடைய தூபக் குளிகையின் மகிமையால் அனைத்தையும் க்ஷணத்தில் பொன்னாக்கி சொரூபமணியைக் கொண்டு பூரணத்தில் புக்கி பறக்கிறேன். உங்களால் முடிந்தால் பிடியுங்கள் என்றேன்.

பிடித்திடப் போமோவப்பா
பெய்பயன் சொரூபமானால்
அடித்திடப் போகாதப்பா
ஆடவுந் தோற்றுப் போறோம்
மடித்திட வேழுமேலே
மாட்டின ரெண்டுஞ் சொல்லு
கடித்திடச் சிங்கியோடு
கடுஞ்சுன்னங் கண்டுகொள்ளே. (பா. 393)

என்று கூறவே அச்சித்தர்கள் உண்மையான சொரூபம் என்றால் உம்மை பிடிக்க முடியுமா என்ன? ஆகையால் நாங்கள் தோற்று போனோம் என்று கூறினார்கள். மேலும் அவர்கள் ஏழையும் இரண்டையும் கூறுங்கள் எனக்கேட்கவே நான் சிங்கியின் மார்க்கத்தையும் கடுஞ்சுன்ன மார்க்கத்தையும் அவர்களுக்குச் சொன்னேன்.

கொள்ளென்ற மூலமூர்த்தி
கொடுஞ்சுன்னஞ் சொல்லாதென்றார்
தாள்ளென்ற முந்நூற்றுள்ளே
தனிச்சிங்கிச் சுன்னஞ் சொன்னார்
விள்ளென்று விரித்தியானும்
விடுவித்தே ஐந்நூறாகத்
தெள்ளென்ற தமிழால் யானுஞ்
சிக்கறச் சொன்னேன் பாரே. (பா. 394)

திருமூலர் தன்னுடைய முன்னூறு என்ற நூலில் சிங்கியின் மார்க்சத்தைப் பற்றி கூறியிருக்கிறாரேயன்றி கடுஞ்சுன்னத்தைப் பற்றி கூறவில்லை ஆகவே நான் கடுஞ் சுன்னத்தைப் பற்றியும், சிங்கியைப்

பற்றியும், ஐநூறு என்ற நூலில மிக அழகான தமிழ்நடையில் கூறியுள்ளேன்.

பாரொன்றி லீசர் நூலும்
பாங்குட னைந்நூற்றொக்க
நேரொன்றிப் பார்த்த காலம்
நிற்குமோ நில்லாதோதான்
சீரொன்றி என்னூலோடே
சிவநூலுந் தோற்றுப் போகும்
காரென்ன பாட்டர் நூல்மேற்
கைகடந் தாடும் பாரே. (பா. 395)

ஆடுமே பாட்டர் நூல்மேல்
அப்பனே அந்த நூலைக்
கூடுமென் றாரும் பார்க்கக்
கொடுக்கிற நூலேயல்ல
நாடுமென் றிருந்தவண்ட
நற்குகைக் குள்ளே வைத்துத்
தேடுமென் நாயைக்காவல்
சிறக்கநான் வைத்தேன் கேளே. (பா. 396)

ஐந்நூறு என்ற என் நூலாகப்பட்டது சிவனால் சொல்லப்பட்ட நூலைக் காட்டிலும் மேன்மைக் கொண்டதாகும். அதுமட்டுமின்றி திருமூலரின் நூலைக் காட்டிலும் மேன்மையானது. ஐந்நூறு என்ற நூல் எல்லோராலும் (சித்தர்களைத் தவிர மற்றவர்களால்) பார்க்கக் கூடாததாகும். ஆகவே, அந்த நூலை குகைக்குள் பதனம் செய்து நாயையும் அதற்கு காவலாக வைத்தேன்.

கேளுநீ அணிமாவோடு
கெடியெட்டுச் சித்தியாட
யாளுநீ அஷ்டமாதி
யாம் அந்தக் குளிகை பாரு
வேளுநீ சுரூபமான
விளங்கிய மணியின் விந்தைத
தாளுநீ வாயில் போடத்
தனிச்சூடன் தீபமாகும். (பா. 397)

தீபம்போல் நிற்குந்தேகம்

சிதையாமல் தத்தியோடும்
கோபம்போம் முளையும்போகுங்
கொடிய வாசனையும் போகுந்
தாபம் போம் மயக்கம் போகுந்
தன்னையும் எடுக்கும் போதம்
ரூபம்போம் சாயைபோகும்
நொடிக்குள்ளே சித்திபாரே. (பா. 398)

அணிமாதி எட்டு சித்திகளை விளையாட அஷ்டமா சித்தி குளிகைகை செய்துக்கொள். சொரூபமணியைப் பற்றி கூறுகிறேன் கேள். இம்மணியை வாயில் வைத்த மாத்திரத்தில் தேகமானது கற்பூர தீபம் போல் பிரகாசித்துக் கொண்டு சிதையாமல் நிற்கும். மேலும் இக்குளிகையால் கோபம், தாபம், வாசனை, மயக்கம், ரூபம், சாயை போன்றவையாவும் விலகி நொடிக்குள் சித்தியாகும்.

சித்தியாம் ஞானசித்தி
சிறந்துவா இத்தன்முன்னே
இத்தியா மறியாமாகில்
எளிதிலே ஞானம்வாரா
யெத்தியாய் நோக்கநோக்க
வெழுக்கவா சனையாற்கெட்டுப்
பத்திய மனமும்விட்டுப்
பட்டம்போல் ஆடுங்காணே. (பா. 399)

காணிந்தக் குளிகைபோட்டால்
கையிலே சிக்கும்போதம்
பூணிந்த மூலனார்க்குப்
பொருந்திய நந்திசொன்னார்
வாழ்நந்தி எனக்குச்சொல்ல
வளமாகப் பார்த்துக் கண்டேன்
தாணிந்தப் போகமூர்த்தி
தன்பத மறிந்திலேனே. (பா. 400)

மேலும் ஞானசித்தியும் யோகசித்தியும் கைகூடும். அதுமட்டுமின்றி பூர்வஜென்ம வாசனை, மனதின் அழுக்கு போன்றவை விலகி ஆனந்த போதம் உண்டாகும். இக்குளிகையை வாயில் வைத்துக் கொண்ட மாத்திரத்தில் மேற்கூறியவை யாவும் நிகழும். இந்தக் குளிகையை நந்தியானவர் திருமூலருக்கு சொன்னார். திருமூலர் வர்க்கமாக வந்த இம்முறையை போக மூர்த்தியின் மூலம் அறிந்துக் கொண்டேன்.

அறிந்திலேன் காமதேனு

மாத்திரை மார்க்கங்கேளு
நிரைந்துள்ளே நினைந்திதெல்லாம்
நீட்டியே முன்னேவைக்கும்
குறைந்தொன்றும் போகாதப்பா
குளிகையை வாயில் வைத்தால்
அறைந்திந்த நூலிற்சொன்னேன்
அப்பனே கண்ட பின்பே. *(பா. 401)*

காமதேனுக் குளிகையைப் பற்றி கூறுகிறேன் கேள்! நீ மனதில் எதை எல்லாம் வேண்டும் என்று நினைக்கிறாயோ அவையாவும் குளிகையை வாயில் வைத்துக் கொண்ட மாத்திரத்தில் நம்முன்னே தோன்றும். இம்முறையை நான் செய்து பார்த்து சித்தியான பின்பே இங்கு கூறிவைத்தேன்.

போகி குளிகை

கண்டபின் போகினிப்பாங்
கடுமணிக் குணத்தைக் கேளு
தண்டிய புஷ்பமாம்பை
தனித்திடு வாச மெல்லாம்
ஒண்டிய கட்டில் மெத்தை
உறவாகும் பெண்கள் சூழக்
கொண்டிடும் போகம் பண்ணக்
கொடுத்திடும் பாரு பாரே. *(பா. 402)*

மலர்கள், வாசம் நிறைந்த திரவியம், கட்டில்மெத்தை, அழகான பெண்கள் இவையாவையும் நினைத்த மாத்திரத்தில் நம்முன்னே தோன்றச் செய்யும் சக்தி கொண்டது போகினி என்ற ரசக் குளிகை.

சந்தானக் குளிகை

பாருநீ சந்தானத்தின்
பருமணி மார்க்கங்கேளு
வாருநீ துண்டுதுண்டாய்
மனிதரை வெட்டிப் போட்டுச்
சேருநீ குளிகை காட்டு
செணத்திலே பொருந்திப் பேசுங்
காருநீ குளிகையாலே
கடும்யோக சித்தியாமே. *(பா. 403)*

சந்தானக் குளிகையைப் பற்றி கூறுகிறேன் கேள்! மனிதர்களைத் துண்டு துண்டாய் வெட்டி தனித்தனியாக்கி பிறகு இக்குளிகையை

துண்டுகளின் மேல் காட்டினால் வினாடியில் ஒன்றாய்ச் சேர்த்து உயிர் உண்டாகும். மேலும் இக்குளிகையால் யோகசித்தியும் கைகூடும்.

அட்சய மணி

ஆமினி அட்சயத்தின்
அம்மணி விபரங்கேளு
தாமினி தனங்கள் கூச்சு
தனித்த தானியங்கள்கூச்சு
சேமினி யன்னங்கூச்சு
சிறந்திடும் பொருள்கள்கூச்சு
யேமினிக் குளிகை வைத்தால்
எடுக்கவுந் தொலையாதாமே. *(பா. 404)*

அட்சய மணியின் பெருமையைக் கூறுகிறேன் கேள்! தனம், தானியம், அன்னம். பொருட்கள் போன்றவைகளை இக்குளிகையை வைத்துக் கொண்டு எடுக்குங்கால் எடுத்த அளவு குறையாது மீண்டும் நிறையும்.

கெவுன மணி

தொலையாத கவனமோடுஞ்
சூழ்மணிக் குணத்தைக் கேளு
அலையாத மனதுதானு
மகண்டத்தை அடுக்கக் காட்டும்
நிலையாத சமாதியெல்லாம்
நிலைக்கவும் நேர்மை காட்டும்
கலையாத உமிழ்நீர்வாங்கிக்
காயமும் சித்தியாமே. *(பா. 405)*

கெவுன ரசக் குளிகையைப் பற்றி கூறுகிறேன் கேள்! மனதால் நினைத்த மாத்திரத்தில் அகண்டம் யாவையும் சுற்றி வரலாம். சமாதி வகைகள் யாவும் உடனே சித்தியாகும் இக்குளிகையை வாயில் வைத்துக் கொண்டு உமிழ் நீரை உள்ளே கொண்டால் காயம் சித்தியாகும்.

பரசிவத்தி மணி

ஆமினிப் பரசிவத்தில்
அறிவெலாந் தீபம்போலாம்
தாமினி வெளியாய்க் காட்டும்
தனிமணிச் சித்திகேளு
வாமினி செனங்கள் செத்து
மறுசென்மம் எடுத்ததெல்லாம்

ஒமினி யுள்ளேயாறி
உண்மையைக் காட்டுங்காணே. *(பா. 406)*

பரசிவத்தி என்ற மணியின் மகிமையால் அறிவுச் சுடரானது ஒளிபெற்றுப் ப்ரகாசிக்கும். மேலும் மனிதர்களுடைய முன்சென்மங்கள் மறுசென்மங்கள் யாவையும் நமக்கு அறியச் செய்யும். (இது உண்மையான சித்தாகும்).

நாத வேதைக் குளிகை

காணுநீ நாதவேதை
காட்டுற முறைமைகேளு
பூணுநீ சூதங்கட்டிப்
புகட்டிச் சாரணைகள் செய்து
தோணுநீ வில்லைபோலே
சுகப்பட வார்த்துத் தட்ட
வாமினிச் சத்தங் கேட்கில்
அம்மட்டும் வேதையாமே. *(பா. 407)*

சூதத்தைக் கட்டி அதற்கு சாரணை தீர்த்து வில்லை போல் வார்த்து தட்டினால் சத்தம் உண்டாகும். இந்தச் சத்தம் எவ்வளவு தூரம் கேட்கிறதோ அத்தூரம் வரை தங்கம் உண்டாகும். (சத்தத்துக்கு உட்பட்ட பொருட்கள் யாவும் தங்கமாகும்).

பரிச மணி

வேதையாம் பரிசந்தன்னில்
விளங்கிய மணியைக் கேளு
ஆதையாம் லோகஞ் செங்கல்
அடைவுடன் சுக்கான்மண்ணும்
பாதையாய்க் காட்டுமுன்னே
பளிச்சென்று தங்கமாகும்
கோதையாய்ப் பனிரண்டான
குணங்களுங் கூறினேனே. *(பா. 408)*

பரிச மணியைப் பற்றிக் கூறுகிறேன் கேள்! லோகங்கள், செங்கல், சுக்கான், மண் போன்ற பொருள்களின் முன்பாக மணியைக் காட மாத்திரத்தில் பொருட்கள் யாவும் தங்கமாகும். இதுவரை பனிரண்டு வகையான மணியின் பெருமையைக் கூறினேன்.

சாரகார பாஷாண ஈயம்

கூறினேன் மணியின் மார்க்கங்
கொடும் உபரசங்கள் நூறு
ஆறினேன் சாரகாரம்
அறுபத்து நாலுதாதும்
தேறினேன் ஈயமாகச்
செகமெச்ச வேதை போடப்
பேறுநே ராகச் சொல்வேன்
பிறக்கிற ஈயம்பாரே. *(பா. 409)*

இதுவரை மணியின் மார்க்கத்தைக் கூறினேன். இனி உபரசங்கள், அறுபத்துநாலு தாது, சாரம் காரம் போன்ற வற்றை ஈயமாக செய்ய முறையைக் கூறுகிறேன் கேள். இவ்வீயத்தால் வேதை புரிந்தால் உலகமே வேதையாகும்.

பாருநீ பூரச்சுன்னம்
பாங்குடன் வராகன் கால்தான்
காருநீ நிமிளைதானுங்
கடுகிய வராகன் கால்தான்
தாருநீ சாரந்தானும்
தனித்திடும் வராகன் கால்தான்
ஆருநீ மூன்றுந்தானு
மரைப்பண்ட மூன்னீர்காணே. *(பா. 410)*

காணவே அரைத்துக் கொண்டு
கலந்ததில் உமிழ்நீர்விட்டு
ஆணவே வராகனாறு
மடைவான சாரங்கட்டிப்
பூணவே பூசிப்பூசிப்
புலர்த்தியே வாட்ட வாட்டத்
தோணவே தாரைதாரை
சுகமான ஈயமாமே. *(பா. 411)*

பூரச்சுன்னம், நிமிளை, சாரம் இவை மூன்றையும் வகைக்கு கால் வராகன் எடை எடுத்து அண்டநீரை விட்டு அரைத்துப் பாண்டத்தில் போட்டு உமிழ்நீரை விட்டுக் கரைத்துக் கொண்டு இதில் ஆறு வராகன் எடை கொண்ட சாரக்கட்டியை துவைத்துத் துவைத்து வாட்டினால் தாரை தாரையாக ஈயமாக வீழும்.

ஈயம்போல் இறுகிக்காணும்
இதுதானும் முக்கட்டப்பா
காயம்போல் இறுகிப்போகும்
கனாவிலும் சாவும் பொய்யாம்
பாயங்கே சூதத்துள்ளே
படுமுன்னே சூதஞ்சாகும்
சாயங்கே சூதந்தங்கம்
தனிரெண்டும் கூட்டித்தின்னே. (பா. 412)

தின்றிடிற் காயந்தானுஞ்
சிலைபோலே இருகும்பாரு
மன்றிடுங் தேகம் பொன்போல்
வழங்கிய தசமாற்றாகும்
பன்றிடுங் குளிகையிட்டால்
பட்டம்போல் பறக்கும்பாரு
தன்றிடுஞ் சாரத்தாலே
தனிவரும் ஈயங்கேளே. (பா. 413)

ஈயம்போல் இறுகி நிற்கும் சாரம் முழுக்கட்டாகும். இதைச் சித்தி செய்துக் கொண்டால் கனாவிலும் கூட சாவு வராது. இச்சாரத்தைக் கண்ட மாத்திரத்தில் சூதமானது சுருண்டு மாளும் இச்சூதத்துடன் தங்கத்தைச் சேர்த்து உட்கொண்டால் தேகம் இறுகிப் பத்து மாற்று பொன் போல் பிரகாசிக்கும். மேலும் இந்த ரசக்குளிகையை வாயில் வைத்துக் கொண்ட மாத்திரத்தில் தேகமானது பட்டம் போல் ஆகாயத்தில் பறக்கும். இனி இச்சாரத்தால் ஈயம் உண்டாக்கும் முறையைக் கூறுகிறேன் கேள்.

கேளுநீ சாரந்தன்னைக்
கெடிபடப் பொடித்து வைக்க
வாளுயர் சாரந்தானும்
வளம்பெறச் செயநீராகும்
கேளுற வங்கச் சுன்னஞ்
சிறந்தரைக் கழஞ்சிபோட்டுக்
கோளுறக் குழப்பிவைக்கக்
கொடியதோர் செயநீராமே. (பா. 414)

முன்கட்டிய சாரத்தை நன்றாய் மாவுபோல் பொடித்து பீங்கானில் இட்டு பனியில் வைத்தால் செயநீராகும். இந்நீரில் வங்கச் சுன்னத்தை அரைக்கழஞ்சி அளவு போட்டு குழப்பி வைத்தால் கொடிய செயநீராகும்.

செயநீரின் பேரைக்கேளு
செகமெல்லாம் ஈயமாகும்
செயநீரிற் பாஷாணங்கள்
சேர்ந்திடு முபரசங்கள்
செயநீரிற் காரசாரஞ்
சிலைமுதல் ஈயமாக்கும்
செயநீரில் தோய்த்துத் தோய்த்துத்
தெளிவுற வாட்டியூதே. (பா. 415)

ஊதிடப் பாஷாணங்கள்
உடந்தையாங் காரசாரம்
மாதிட உபரசங்கள்
மற்றுள்ள வஸ்துவெல்லாம்
பேதிட இனத்தைக் கண்டு
பிழையற்று வேதைபோட
ஆதிட மாற்றுப்பொன்னு
மாடமுத் தொகை காணேனே. (பா. 416)

இச்செயநீரால் அனைத்தும் சித்தியாகும். இந்த சாரச் செயநீருக்கு செயமெல்லாம் ஈயமாக்கி என்று பெயர். இச்செயநீரில் உபரசங்கள், பாஷாணங்கள், காரசாரம் போன்ற சரக்குகள் அனைத்தையும் துவைத்து வாட்டினால் ஈயமாகும். முறையாக அந்தந்த இனங்களுடன் அந்தந்த சரக்கைச் சேர்த்து குகையில் வைத்து ஊதினால் அதிக அளவு மாற்றுள்ள பொன் உண்டாகும்.

தொகையென்ன ஈயமான
துறைதுறை ஈயமெல்லாம்
வகையென்ன ரசத்திலூட்டி
மடிபிடி வழக்காய் நிற்கும்
பகையென்ன இனத்தைத் தள்ளிப்
பரிவான இனத்தைக் கூட்டித்
தகையென்ன வேதை போடச்
சாஸ்திரம் கோடியாமே. (பா. 417)

சகல சரக்கிலிருந்து எடுக்கப்பட்ட ஈயங்களை ரசத்திற்கு ஊட்டினால் ரசமானது இறுதி நிற்கும். இவ்விறுகி நின்ற இரசத்தால் வேதையானது ஆயிரங் கோடிக்கு வோடும். (அதாவது பொன் மாற்று ஆயிரங் கோடிக்கு ஓடும்).

ஆமினி இனங்களான
அடைவுற்ற காரசாரம்
ஆமினி இனங்களான
அறுபத்து நாலுதாதும்
ஆமினி இனங்கள்காணும்
அப்பனே உபரசங்கள்
ஆமினி இனங்களான
அடைவுற்ற சாரஞ்சேரே. (பா. 418)

இனி காரம், சாரம், அறுபத்து நாலு தாது, உபரசங்கள் போன்ற வற்றுக்கு சத்துருமித்துருவை அறிந்து சேர்த்து வேதை புரிந்தால் அனைத்தும் சித்தியாகும்.

கார சாரச் சத்துரு மித்துரு
(வேறு)

சாரமுதல் (வங்)காரம் வீரமொடு கெந்தி
தலையாகும் இனிப்பூரம் தயங்காத சிலையும்
பாரமுடன் அரிதாரம் கபரியுடன் நிமிளை
பார்புகழுங் கௌரியுடன் பண்ணைலிங்க மெல்லாம்
சூரமுடன் வாதமென்ற சொன்மொழிக்குக் குருவாந்
துலக்கமுற விரத்தம்போல் இருக்குமந்தத் துருசு
ஆரமுதே இவையெல்லாம் மித்துருவே யாகும்
அறிந்தனனைப் பெருமையுள்ளே அடக்கியிணங் கிடாயே.
(பா. 419)

சாரம், வீரம், கெந்தி, பூரம், மனோசிலை, அரிதாரம், கபரி, நிமிளை, கௌரி, பண்ணை, லிங்கம், துருசு இவை யாவும் வெங்காரத்தின் மித்துருவாகும்.

வேறு

இணங்கன், சூடன் அப்பிரகம்
இசையாய்ப் படிகி கல்லுப்பு
பிணங்கும் வெள்ளைக்கற்சவுடு
பெரியதொட்டி அஞ்சனமும்
தணங்குஞ் சவுடும் இந்துப்பு
தனியசிங்கி காந்தமுடன்
அணங் கேநாகம் துருசுவங்கம்
அறிவீர்சத்ரு காரமிதே. (பா. 420)

வெடியுப்பு, சூடன், அப்பிரகம், படிகி, கல்லுப்பு, வெள்ளை, கற்சவுடு, தொட்டி, அஞ்சனம், சவுடு, இந்துப்பு, சிங்கி, காந்தம், நாகம், துருசு வங்கம் இவை யாவும் காரத்திற்கு சத்துருவாகும்.

காரமிணங்கன் கெந்தகமுங்
கடிதாஞ்சிலையுந் தாளகமும்
வீரம் லிங்கங் காரீயம்
விளங்கும் கற்பூரசிலாசத்தும்
பாருங்கௌரி நாகமுடன்
பகர்ந்தநிமிளை மனவர்த்தம்
சேருஞ்செம் போடு இவையெல்லாஞ்
சிறந்தசாரப் படிகிமித்துருவே. (பா. 421)

காரம், இணங்கன், கெந்தகம், மனோசிலை, தாளகம், வீரம், லிங்கம், காரீயம், கற்பூரசிலாத்து, கௌரி நாகம், நிமிளை, ராசவர்த்தம், செம்பு இவையாவும், சாரத்திற்கு மித்துருவாகும்.

படிகிலவணம் இந்துப்பு
பகர்ந்தவளையல் கூர்மையுடன்
கொடியஇரும்பு காந்தமுடன்
கொள்ளாவங்கம் அண்டத்தோல்
மடியச்சுக்கான் சிலைச்சுன்னம்
வழங்கும் அப்பிரகங்கடல் நுரையும்
கடியசவுடு கிளிஞ்சில்முதற்
கண்டீர்சாரச் சத்ருவின்றே. (பா. 422)

படிகி, லவணம், இந்துப்பு, வளையலுப்பு, இரும்பு, காந்தம், வங்கம், அண்டத்தோல், சுக்கான், சீலைச்சுன்னம், அப்பிரகம், கடல்நுரை, சவுடு, கிளிஞ்சில் இவையாவும் சாரத்திற்கு சத்துருவாகும்.

இந்துப்புடனே கல்லுப்பு
இசைந்தபடிகி நற்காரம்
முந்துலிங்கம் வீரமுடன்
முகுந்தன்தேவி முனைதுத்தம்
கந்தநாகங் கடலின்நுரை
கடிதாம் நிமினை இவையெல்லாம்
பந்தியறிந்தே சேர்த்தரைக்கப்
பகரிணங்கன் மித்துருசவுடே.. (பா. 423)

இந்துப்பு, கல்லுப்பு, படிகி, காரம், லிங்கம், வீரம், மால்தேவி, துத்தம், நாகம், கடல்நுரை, நிமிளை, இவையாவும் வெடியுப்பின் மித்துருவாகும்.

சவுடுசூடன் காரீயந்
தனித்தவங்கம் துருசியுடன்
இவுடும் இரும்பு வெள்ளிசெம்பு
இசைந்தகாந்த மனவர்த்தம்
கெவுடுங்கெந்தி சிலைதொட்டி
கேளீர்சிங்கி தீமுறுகல்
அவுடுமண்டஞ் சுரைகெந்தி
அசுவனிணங்கன் சத்துருபூரமிரே. (பா. 424)

சவுடு, காரீயம், சூடன், வங்கம், துருசு, இரும்பு, வெள்ளி, செம்பு, காந்தம். ராசவர்த்தம், கெந்தி, சிலை, தொட்டி, சிங்கி தீமுருகல் சுரைகெந்தி, அண்டம் போன்றவை யாவும் வெடியுப்பின் சத்துருவாகும்.

பூரஞ்செம்பு மிரும்பொடே
பொருவுங்காரம் நாகமுடன்
ஆரல்கௌரி தானிமிளை
அசையாக்கெந்தி தாளகமும்
சாரும்வெள்ளை அப்பிரகந்
தவங்காவங்கம் லிங்கமது
பாரும்பாரும் வையகத்தோர்
பகர்ந்தவுப்பின் மித்ருராகுமென்னே. (பா. 425)

பூரம், செம்பு, இரும்பு, வெங்காரம், நாகம், கௌரி, நிமிளை, கெந்தி தாளகம், வெள்ளை, அப்பிரகம், வங்கம், லிங்கம் இவையாவும் உப்பிஎ மித்துருவாகும். (கல்லுப்பின் மித்துரு).

ராஜவர்த்தஞ் சவுட்டுவில்லை
நலங்கொள்சூடன் படிகியுடன்
வாசகாந்த மிந்துப்பு
வளமாம்பூரம் சிலையுடனே
காசசிங்கி வீரமுடன்
கவரும்பவளத் தொடுமுத்து
பாசயறுக் கனல்லமையாம்
வழங்குமுப்பின் சத்துருபுளியே. (பா. 426)

ராஜவர்த்தம், சவுட்டுவில்லை, சூடன், படிகி, காந்தம், இந்துப்பு, பூரம், மனோசிலை, சிங்கி, வீரம், பவளம், முத்து, இவையாவும் கல்லுப்பின் சத்துருவாகும்.

புளியும் அண்டத் தோல்கூடன்
பெலஞ்சேர் பூரஞ்சிலாசத்து
அளியுஞ் சுன்னம் இதுவெல்லாம்
மணியகாரச் சத்துருவாம்
கிளியே லோகம் உபரசங்கள்
கேள்விக்குகந்த பாஷாணம்
மொளியேகாரம் சீனம்ரெண்டின்
முயன்றமித்து முன் கூராறே. (பா. 427)

அண்டத்தோல் புளி, பூரம், சலாசத்து, சுன்ன வகையாவும் காரத்திற்கு சத்துருவாகும். மேற்கூறியவை நீங்கலாக, லோகங்கள் உபரசங்கள், பாஷாண வர்க்கங்கள் யாவையும் வெங்காரத்திற்கு மித்துருவாகும். காரத்திற்கு கூறிய சத்துரு மித்துருவே சீனத்திற்குமாகும்.

ஆறுசரக்கு வகைமுறையே
அதட்டிச்சத்துரு வாற்கொன்று
வேறுரசமு மித்துருவும்
வெருவிக்கொடுக்க வேதையுரும்
கூறுஞ்சிவனார்க் காதாரங்
கொடியசரக்காம் இவையாறும்
தேறுமறிந்து சித்தர்களே
தெரியார்மயங்கி அழிவாரே. (பா. 428)

இவ்வாறு வகையான சரக்குகளையும் சத்துருவால் அதட்டிக் கொன்று மித்துருவால் எழுப்ப வேண்டும். இந்த ஆறுவகையான சரக்கும் சிவபெருமானுக்கு ஆதாரமாகும். இதை அறியாமல் சித்தர்கள் மயங்குவார்கள்.

அழியாச்சத்துரு சேர்த்துடனே
அதட்டியூது சுன்னமதாம்
கழியாச்சாரம் காரங்கள்
கலந்தேசுன்ன மானபின்பு
பழியாயேழு லோகத்திற்
பாய்ச்சாயிதனைச் சுன்னமுமாம்
தொழியாலோகச் சுன்னமொன்று
சேர்க்கிவினிச் சாம்வங்கிமென்னே. (பா. 429)

சரக்குகளை அதனுடைய சத்துரு சரக்கால் சேர்த்தரைத்து குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும். கார சாரங்களை சுன்னம் செய்து அச்சுன்னத்தை ஏழு லோகத்துடன் சேர்த்தால் ஏழு லோகமும் சுன்னமாகும்.

வங்கம்நாகம் நிமிளைகண்டா
மருவுங்கௌரி வெடியுப்பு
தங்குவெள்ளை சவுட்டுப்பு
தயங்காச்சிங்கி தாளகமும்
பொங்குஞ்சத்து சிலையண்டம்
புகழுங்கிளிஞ்சி லப்பிரகம்
எங்குஞ்சூதம் இனிக்கெந்தி
இசையறிச்சத்ரு குதிரையேன்னே. (பா. 430)

லோகச்சத்துரு மித்துரு

குதிரைப்பல்லும் கோமுகமும்
கொடியகாந்தம் பொன்னம்பர்
கதிரைப் பொருந்துஞ் சவ்வீரம்
காரிபறிக்குச் சத்துருவாம்
மதுரச்சொல்லாய் மற்றிதெல்லாம்
மகிழ்ந்தேபறிக்கு மித்துருவாம்
சதுரச் சத்ரு மித்ருவொடுந்
தாக்கக்குருவாம் பரிகாரியென்னே. (பா. 431)

வங்கம், நாகம், நிமிளை, கௌரி, வெடியுப்பு, வெள்ளை, சவுட்டுப்பு சிங்கி, தாளகம், மனோசிலை, அண்டம், கிளிஞ்சல், அப்பிரகம், சூதம், கெந்தி குதிரைப்பல் பாஷாணம், கோமுகப்பாஷாணம்,. காந்தம், பொன்னம்பர், சவ்வீரம், இவையாவும் தங்கத்திற்கு சத்துருவாகும். மேற்கூறியவைகளைத் தவிர மற்ற சரக்கெல்லாம் தங்கத்திற்கு மித்துரு வாகும்.

காரிவங்கம் அப்பிரகங்
கனத்தகிளிஞ்சில் அண்டத்தோல்
நேரிநிமிளை வெண்கலமும்
நிறைந்ததராவுங் கெந்தியுடன்
சேரிசாரஞ் சிலையுடனே
தெவிட்டாச்சிங்கி சவ்வீரம்
பாரிற்புனுகும் இரும்புக்குப்
பகைசத்துருவாம் வெள்ளியென்னே. (பா. 432)

வங்கம், அப்பிரகம், கிளிஞ்சி, அண்டத்தோல், நிமிளை, வெங்கலம், தரா, கெந்தி, சாரம், மனோசிலை, சிங்கி, சவ்வீரம் புனுகு போன்றவை

யாவும், இரும்புக்கு சத்துருவாகும்.

வெள்ளிநாகங் கௌரியுடன்
விளங்குங்காந்தஞ் செம்போடே
தள்ளுமயூரம் பூநாகம்
தனித்தராசாவர்த்தமுடன்
நள்ளிபறியீங் கெந்திரவி
நலமாயிரும்பின் மித்துருவாந்
தெள்ளுங்கரத்த மிம்முறையே
சேர்ந்தவினமென் றறியிரும்பே. (பா. 433)

வெள்ளி, நாகம், கௌரி, காந்தம், செம்பு, மயூரம், பூநாகம், ராசவர்த்தம், தங்கம், கெந்திச் செம்பு, வெள்ளி போன்றவை யாவும் இரும்புக்கு மித்துருவாகும்.

இரும்புக்காந்தம் அப்பிரகம்
இசைந்த நிமிளைச் செம்புடனே
அரும்பு கவுரி சிலாசத்தும்
அடங்காச்சூதங் கெந்திரவி
கரும்பின்மொழியே பூநாகம்
கலந்தமயூரம் கருநாகம்
திரும்புந்திசைக்குள் சாரமுதல்
சேர்மித்துருநாகங் கிளிஞ்சிலென்னே. (பா. 434)

இரும்பு, காந்தம், அப்பிரகம், நிமிளை, செம்பு, கெவுரி, சிலாசதது, சூதம், கெந்தி, வெள்ளி, பூநாகம், மயூரம், கருநாகம், சாரம் போன்றவை யாவும் நாகத்திற்கு மித்துருவாகும்.

கிளிஞ்சிலண்டச் சிலகூர்மை
கெடிதாமிணங்கன் கெடுசீனம்
பிளிஞ்சபறியும் பெருமதியும்
பிணைந்தவங்கம் பெரியதரா
வளிந்தநண்டும் வெண்கலமும்
மகாவீரம் மிருதாரும்
நெளிந்தவேல்போல் விழியாளே
நேர்நாகச்சத்ரு காந்தமென்னே. (பா. 435)

கிளிஞ்சல், அண்டம், வெடியுப்பு, சீனம், தங்கம், வெள்ளி, வங்கம், தரா, நண்டு, வெங்கலம், வீரம், மிருதார் சிங்கி போன்றவையாவும்

நாகத்திற்கு சத்துருவாகும்.

காந்தநிமிளை கடுமிரும்பு
கலந்தராசா வர்த்தமுடன்
வார்த்தகிளிஞ்சி நண்டுதசை
மகிழ்ந்த அண்டம் அப்பிரகம்
சேர்ந்தகௌரி கெந்தியுப்பு
சிறந்தசுன்னங்கல் நாரும்
ஏந்தியெழுந்த கொங்கைநல்லாய்
யிதுவேசத்ரு நாகமென்னே. *(பா. 436)*

காந்தம், நீமிளை, இரும்பு, ராசவர்த்தம், கிளிஞ்சி, நண்டு, அண்டம், அப்பிரகம், கௌரி, கெந்தியுப்பு, நல்ல வகையில் தயாரிக்கப்பட்ட சுன்னம், கல்நார் இவை யாவும் கார்நாகத்தின் சத்துருவாகும்.

(வேறு)

நாகமொடு பூநாகம் மயூரச் செம்பு
நலந்திகழும் வெள்ளி வங்கம் நல்லசூதம்
பாகமுடன் கடுவெல்லாம் பஞ்சு போலாம்
பகைத்தவர்னக் கல்மிசத்தைப் பகர்ந்து சாடும்
வேகமுடன் களங்கையள்ளி விரைந்து வாங்கும்
வெள்ளனையங் கள்ளனையும் வெளியாய்க் காட்டும்
ஆகமுட னிதுவெல்லா மித்துருவே யாகும்
அறிந்துசொல் லீர்கரிநாகத் தாண்மை சூதமென்னே. *(பா. 437)*

நாகம் பூநாகம், மயூரச் செம்பு, வெள்ளி, வங்கம், சூதம் போன்றவை யாவும் கருநாகத்திற்கு மித்துருவாகும். (பொருள் விளங்கவில்லை)

சூதமுடன் கரிநாகம் கெவுரி மூன்றும்
சுகமான வங்கத்துக் குறவே யாகும்
பேதமுடன் உபரசங்கள் கார சாரம்
பெருமையுள்ள நவலோகம் பெரிய தங்கம்
கேதமுடன் படக்கெடுக்குங் கேளாய் மானே
கெடுப்பதற்கு மித்திரங்காண் கெடியா மண்டம்
வாதமுறை அறிந்திதனைக் கொண்டு சேர்க்க
வழங்கு பதினாறு மாற்றாகும் ரவியே. *(பா. 438)*

சூதம், கார்நாகம், கெவுரி இவை மூன்றும் வங்கத்திற்கு சத்துருவாகும். இவற்றை தவிர மற்ற அனைத்து வகையான லோகங்களும் உபரசங்களும்

பாஷாண வர்கங்களும் மித்துருவாகும். வங்கத்தை குருவாக செய்து செம்பில் ஈந்தால் பதினாறு மாற்று தங்கமாகும்.

ரவியுருகிற் கருநாகம் நிமிளை வங்கம்
நலங்குசிங்கி வெள்ளையுடன் கெவுரி தானும்
புவிபுகழும் கெந்தகமும் பஞ்ச பட்சி
பூமாது தொட்டியுடன் பூஞ்சே ரஞ்சண்
செவிநிறைந்த குழையணங்கே செப்பக்கேளாய்
சிறந்தவிந்தக் களங்குகளைச் செம்பிலீய
வவிபொருமும் மேல்கறுக்கு மடித்தா லங்கு
மாகாது மற்றிதெல்லா மாகுமென் மதியே. (பா. 439)

கருநாகம், நிமிளை, வங்கம், சிங்கி, வெள்ளை பாஷாணம், கெவுரி, கெந்தகம், பஞ்சபட்சி பாஷாணம், தொட்டி பாஷாணம் போன்ற சரக்குகளையோ அல்லது சரக்குகளின் களங்குகளையோ உருகி நின்றாடும் செம்புடன் சேர்த்தால் செம்பு கறுத்து கெட்டுப் போகும். ஆகையால் இதைத் தவிர மற்ற சரக்குகள் செம்பிற்கு நன்மை பயக்கும்.

மதியிறுகில் வெள்ளீயம் நாகங் கெந்தி
வளமான நிமிளையுடன் வன்சேர் காந்தம்
கதிபொருந்துந் தீமுறுகல் கவுரிபட்சி
கலங்காத கம்பியுப்பு கனத்த சாரம்
பதியுடனே குதிரைப்பல் பவளப்புத்து
பாங்கான களங்கு பாழ்மதிக் குமாகா
விதியுரைத்தார் மற்றிதெல்லாம் நல்லிதென்று
விரைந்திந்த நால்முறையை ளேதையும் பாரே. (பா. 440)

வெள்ளீயம், நாகம், கெந்தி, நிமிளை, காந்தம், தீமுறுவல், கவுரி, பஞ்சபட்சி, கம்பியுப்பு, சாரம், குதிரைப் பல், பவளப்புத்து, இச்சரக்குகளின் களங்கு யாவும் வெள்ளிக்காகாது. மேற்கூறிய சரக்குகளை சேர்த்து செய்யப் பட்ட களங்குகளை உருகி நிற்கும் வெள்ளியுடன் சேர்த்தால் பாழாகும். இதைத் தவிர மற்ற சரக்குகள் யாவும் வெள்ளிக்கு மித்துருவாகும்.

அயமுருகிற் கெந்தியொடு தாளமும் சிலையும்
அடங்காத வெள்ளையொடு வீரமயூரம் சிங்கி
வயமுருகும் நிமிளையொடு வைக்கிராந்தம் சார
மானிலத்திற் கெவுரியொடு வனக்கோழித் தலையும்
இயமுடைய வஞ்சனமும் இணங்கினொடு வங்கம்
எடுத்துரைத்த களங்கமெல்லாம் இரும்புக் கெய்தா

தயவுடனே மற்றிதெல்லாந் தாக்கிவகு நன்று
தப்பாதே இந்நூலும் சத்தியமாங் கருநாக்கே. (பா. 441)

கெந்தி, தாளகம், மனோசிலை, வெள்ளை, வீரம், மயூரம், சிங்கி, நிமிளை, வைக்கிராந்தம், சாரம், கெவுரி, வான்கோழித்தலை, அஞ்சனப் பாஷாணம், வெடியுப்பு, வங்கம் போன்ற சரக்குகளின் களங்கை உருகி நின்றாடும் இரும்புடன் சேர்த்தால் இரும்பு பாழாகும். இதைத் தவிர மற்றச் சரக்குகள் யாவும் இரும்புக்கு ஆகும். (இரும்பை உயிர் கொடுத்து எழுப்பும்.)

கருநாக முருகிலந்த நிமிளையொடு கெந்தி
கலங்காத சிலையுடனே களங்கமுற்ற கவுரி
குருவான அப்பிரகங் கெவுரியொடு வெள்ளை
கொடியதொரு கோமுகமும் அஞ்சனமு மாகா
திருவான மதிமுகத்தாய் சேரிலிந்தக் களங்கம்
சிதைத்தடித்துக் கெடுத்தழிக்கும் சிறந்தனவாம் எல்லாம்
மருவாகுங் கருநாகம் வங்கமுதற் காகா
மற்றிதெல்லாம் மித்ருவென்றே வழுத்துங்கால் வெங்கே.

(பா. 442)

நிமிளை, கெந்தி, மனோசிலை, கவுரி, அப்பிரகம், வெள்ளை, கோமுகம், அஞ்சனப் பாஷாணம் போன்ற சரக்குகளின் களங்கை நாகம், கருநாகம், வங்கம் போன்ற லோகங்கள் உருகி கண்விட்டாடுகையில் சேர்த்தால் அனைத்தும் கருகி நாசமாகும். இதைத் தவிர மற்ற சரக்குகள் யாவும் மித்துருவாகும்.

வெங்கலமும் பித்தளையும் திராவிம் மூன்றும்
வீதமுடனே முன்முறையாய் விளம்பித் தாக்கப்
பங்கலமா நீரிறக்கும் பரிவு மாகும்
பகரிந்த முறைதப்பிற் பற்ப மாகும்
யங்கை கொண்டு மித்துருவும் சத்துருவுந் தாக்கத்
தகந்தொடர்ந்த பொற்குணமாய்த் தவள முறாங்
கங்கைபணி திருச்சடையோன் சொன்னான் மாதே
காசினியோர் கண்டுகண்டு கழிந்தபடி மொழியே. (பா. 443)

வெங்கலம், பித்தளை, திரா இவை மூன்றும் உருகி கண்விட்டாடும் பொழுது நாகத்திற்கு கூறிய அதே சரக்குகளை சேர்த்தால் லோகங்கள் கெட்டுப் போகும். மேற்கூறியபடி மித்துருவையும் சத்துருவையும் சேர்த்து

ாக்கினால் லோகங்கள் தவளமாகும் இம்முறைகள் யாவும் கங்கையை லையில் அணிந்துகொண்ட சிவபெருமான் பார்வதிக்கு உபதேசித்ததாகும்.

மொழிதவறி நவலோகம் மூட்டில் வேதை
முன்னுரைக்கும் இழுக்கோடு முனையி லூறும்
வழிதவறிற் கடிதோடும் புத்துப் போலாம்
வரிசையுடன் களிம்பெடுக்கும் வர்னமீட்கும்
அழியுமவே லோகமெல்லாம் அடித்து நிற்கும்
அதட்டிமெள்ள ஊதிடவே அகன்று போகும்
பழியுறவே வாதிகளைப் பங்கம் கொள்ளும்
பகர்ந்தறிந்தோர் சித்தரென்று பணிந்திடாரே. (பா. 444)

கைபாகமும் செய்பாகமும் தப்பி வேதை செய்யுங்கால் ஐந்து லோகங்களும் மடிந்து மாசுக்களுடன் சேர்ந்து வர்ணக் குறைவு உண்டாகும். ஆகவே லோகங்களை அதனுடைய சத்துரு அறிந்து கூட்டி மடியச் செய்து மடிந்த லோகங்களை மித்துருவுடன் சேர்த்து அதட்டி குகையில் வைத்து ஊதினால் மடிந்த லோகம் உயிர்பெற்று எழுந்து சுன்னமாகும். இதில் சிறிது தவறு ஏற்படினும் வாதி என்ற பெயர் நம்மை விட்டு விலகும். ஆகவே முறையாக அறிந்து செய்பவரை அடுத்து நின்று சித்தர் என அவரைப் பணிதல் வேண்டும்.

பணிந்து நித்தங் குருவுடைய பதத்தைப் போற்றிப்
பகலிரவும் ஒன்றாகப் பக்கஞ் சென்றே
யணிந்தெறிந்த தம்பலமுங் கையிலேந்தி
அடியார்க்கும் அடியார்க்கு அடியா னாகித்
தணிந்தமுகம் பார்த்தந்தக் குருவி னோடு
சங்கற்ப விகற்பமென்ற சட்டை போக்கிக்
கணிந்துநின்ற வாசியுட கருவைக் கேட்டுக்
களங்கற்றே உட்புகுந்து கருதிப்பாரே. (பா. 445)

அனுதினமும் குருவுடைய பதத்தைப் போற்றி இரவு. பகல் என்று பாராமல் அவருடைய பாதத்தில் வீழ்ந்து தாம்பூலமும் பழமும் கையிலேந்தி தட்சிணையாக அளித்து அடியாரின் அடியார்க்கு என்னை அடியேனாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி பணிந்து அவருடைய அருளால் சங்கற்பம் விகற்பம் என்ற சட்டைகளை நீக்கி வாசியின் கருவை அறிந்து மூலத்தில் உட்புகுந்து பார்க்க வேண்டும்.

பாருநீ மூலத்தில் நந்தி காண்பார்
பளிச்சென்று சிவயோகம் பார்த்தே யோடும்

தாருநீ நினைந்ததெல்லாந் தானே தோன்றும்
தனிப்பிறகு குருவடியைச் சரணம் பண்ணு
வாருநீ ரையவெனச் சொல்வா னாசான்
வகைவகையாய் இம்முறையை வணங்கிக் கொள்ளு
காருநீ தேகத்தைக் கற்ப முண்டே
கண்ணிமைக்குட் போரவுயிர் கண்டுகட்டே. *(பா. 446)*

மூலத்தில் மனதை வைத்து நோக்கினால் நந்தியானவர் வெளித் தோன்றி பிரகாசிப்பார் நந்தியைப் பார்த்த உடன் சிவயோகம் கைகூடும். அதுமட்டுமின்றி நீ நினைத்த தெல்லாம் தானே தோன்றும். இந்நிலையிலும் குருவினுட அடியை மேலும் பற்றி நின்றால் ஆசானானவர் உனக்கு முடிவான உபதேசம் கூறி கற்பமளிப்பார். அவர் அறிந்த கற்பத்தை உட்கொண்டு ஒரு வினாடியில் பிரியும் உயிரை போகவிடாமல் நிறுத்தி விடு.

(வேறு)

கட்டுஞ்சார காரத்தாற்
கலரும்வர்ன மினியாலே
யெட்டியோடுந் தூரத்தே
இனசந்தஉப ரசத்தாலே மாதே
கெட்டிப்புடமாம் பரியாலே
கேளாய்கெந்தி செந்தூரம்
மட்டுப்பிறையைத் தரித்தசிவன்
மகிழ்ந்தே அடத்தி லெழுத்தஞ்சே. *(பா. 447)*

கார சாரத்தால் சரக்குகளுக்கு வர்ணம் உண்டாகும். உபரசத்தால் வேதையானது வெகுதூரம் ஒடும். தங்க மானது புடத்துக்கு உறுதி தரும். கெந்தியானது செந்தூரத்துக்கு உறுதி தரும். இதைப் பிறை சூடிய சிவபெருமான் பார்வதிக்கு சொன்னார்.

அஞ்செனு மெழுத்தோடொத்த
அரனுடன் ஆத்தாள்கூடித்
தஞ்சமு முனதேஎன்று
சார்ந்திடும் பத்தர்வீதிக்
கஞ்சனுங் காணமாட்டாக்
கரையில்லா வேகநாதன்
தஞ்சமென் றுள்ளேயோடுந்
தளிரதப் பெருமை கேளே. *(பா. 448)*

அஞ்செழுத்துடன் சிவபெருமானும் பார்வதியும் கூடி நின்றுபக்தருட உள்ளம் என்ற வீதியில் வாதம் என்ற தேரில் உலாவருகிறார்கள். அத்தேரின் பெருமையைக் கூறுகிறேன் கேள்!

கேளுநீ சாரந்தேர்தான்
கெடிகொளைந் நூறுவாணி
வாளுநீ துருசேயச்சு
வளம்பெறும் முப்பேயாச்சு
வேளுறு காரம்வண்டில்
விளங்கிய வளையஞ்சீனம்
தாளுற்று சவுக்காரந்தான்
தனித்திடுங் குத்துக்காலே. (பா. 449)

சாரமே தேர். துருசே தேரின் அச்சு, காரம் தேரின் வண்டில்.. சீனம் தேரின் வளையம், சவுக்காரம் தேரின் குத்துக்கால் (உப்புக்கு சரியான விளக்கமில்லை.)

காலது வடமாய்ச்சென்று
கலந்தது இணங்கந்தானும்
மேலது சட்டமாக
விரிந்தது சத்திச்சாரம்
கோலது யெவச்சாரந்தான்
கொடுமலங் காரமாச்சி
வேலது பண்ணைச் சண்ணை
விளங்கிய தடியுமாச்சே. (பா. 450)

ஆச்சிது குணிலத்தார்கள்
அடங்கிற்றுப் பூரமப்பா
வாச்சுது வடத்துக்காளாய்
வழங்கிற்றே உபரசங்கள்
கோச்சுது பாஷாணங்கள்
கொடுங்கையுஞ் சிகரம்வீரம்
தாச்சுது கௌரிதானும்
தனித்தொரு பாகனாமே. (பா. 451)

வெடியுப்பே தேரின் வடம், சத்திச்சாரமே தேரின் மேல் சட்டம், எவச்சாரம் தேரின் அலங்காரமாகும். சூடனானது தேர்த்தடி, தேர்க் குணிலமே பூரம், வடத்தின் கால்களே உபரசங்கள், பாஷாணங்களே தேரின் கொடுங்கை, வீரமே தேரின் சிகரம், கௌரியே தேர்ப்பாகன்;

ஆமந்த உருளையோடில்
அப்பனே எண்ணெய்வார்க்கக்
காமந்தக் கொழுப்பாமெல்லாம்
கடியதோர் எண்ணெயாச்சு
சேமந்தச் சூதராஜா
சேர்ந்த கெந்தகமுமாச்சு
கோமந்தத் தங்கந்தானுங்
கூடிற்று வூஞ்சல்பாரே. *(பா. 452)*

பாருநீ ஊஞ்சல்தேவி
பக்கநா னீளந்தானும்
தாருநீ வங்கம்நாகந்
தனித்திடும் இரும்போடுஈயம்
கோருநீ திரையாய்நின்றாள்
கொடியமால் தேவிதானும்
மாருநீ மெத்தையாச்சு
மகத்தான நிமிளை தானே. *(பா. 453)*

தேரின் உருளை ஓடுவதற்கு விடப்படும் எண்ணையே கொழுப்பு, இவ்வகைத் தேரில் சூத ராஜனும், கெந்தகம் என்ற ராணியும் தங்கம் என்ற ஊஞ்சலில் நான்கு புறமும் வங்கம், நாகம், இரும்பு, ஈயம் என்ற பணிப் பெண்கள் சூழ்ந்திருக்க தாளகம் என்ற திரையை போர்த்திக் கொண்டு நிமிளை என்ற தேரின் மெத்தையில் அமர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தானது சிலையே தென்று
தற்காணி ரூபமாச்சு
வானது அண்டவோட்டு
மகராஜன் சூதராஜன்
கோனது ராஜயோகக்
கொடுவீதி தேரைவிட்டான்
பானது வாயிலிட்டுப்
பார்த்திடாய் பார்த்திடாயே. *(பா. 454)*

மனோசிலையே தற்காணீரூபம், அண்ட ஓடே வானமாகும். மகாராஜன் என்று கூறப்படும் சூதராஜன் ராஜயோகம் என்ற வீதியில் தேரை செலுத்துகிறார். (இதை) இக்காட்சியை குளிகையை வாயிலிட்டுக் கொண்டு பார்.

பார்த்திட ஆறாதாரம்
பளிச்சென்று வெளியாய்க்காணும்
கோர்த்திடுஞ் சிழியினோடு
கொண்டிடு மேலேயோடும்
ஏர்த்திடும் மணித்தாய்க்காண்பாள்
எதிரில்லை பொருளுமில்லை
தோற்றிடுஞ் சுருதி அந்தம்
சொல்லற்ற விடமதாமே. *(பா. 455)*

குளிகையை வாயிலிட்டுக் கொண்டு நோக்கினால் ஆராதாரமும் பளிச்சென்று வெளிப்படையாக தோன்றும். இவ்வாதாரங்களை கண்டு மனதை சுழியில் நிறுத்தினால் தாயானவள் கண்முன் தோன்றுவாள். மேலும் வேதத்தின் முடிவான பொருள் இன்னதென்று விளங்கும்.

தாமென்ற சூதங்கட்டிற்
சகலமு மாடலாகும்
காமென்ற சூதந்தானுங்
கட்டவும் அரிதேயப்பா
வாமென்ற வாதிசித்தர்
வாசியோர் கட்டுவார்கள்
ஓமென்ற சூதங்கட்ட
உறவுநா னுரைக்கின்றேனே. *(பா. 456)*

சூதத்தை கட்டினால் சகலவிதமான சித்தும் விளையாடலாம். ஆனால் சூதத்தை கட்டுவதென்பது மிகவும் கடினமான செயல் இச்சூதத்தை வாதிகளான சித்தர்களும் வாசியோகம் புரிபவர்களும் கட்டுவார்கள். அம்முறையை நான் உனக்கு கூறுகிறேன் கேள்.

சூதக்கட்டு

உரைக்கின்ற வங்கம் ரெண்டு
உருகிய சூதமொன்று
,, ரைக்கொண்டு ரெண்டுங்கூட்டி
நேர்பட உருக்கி வாங்கித்
தரைக்கொண்ட மணிக்குமேலே
சாற்றிட மருந்துகேளு
கரைக்கொண்ட மாலின்தேவி
கடும்பூரச் சுன்னம் பூசே. *(பா. 457)*

பூசிய வெடையைக் கேளு
புகழ்ரெண்டு சுன்னந்தானு
மாசிய மணிக்குப்பாதி
அப்பனே ரெண்டுசுன்னம்
நேசியே பூசிவாட்டி
நிலைபட ஊதிப்போடக்
காசிய வாதிமெச்சக்
கைகண்ட சுன்னந்தானே. *(பா. 458)*

இரண்டு பலம் வங்கத்துடன் ஒரு பங்கு சூதத்தை சேர்த்து உருக்கி மணிபோல் வாங்கி மால்தேவிச் சுன்னத்தையும் பூரச்சுன்னத்தையும் மணியின் எடைக்கு சரிபாதி எடுத்து மணியின் மேல் பூசி வாட்டி குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும். (வங்கம் சுன்னமாகும்).

தானிந்தச் சுன்னந்தன்னைத்
தனிநூறு சூதத்துள்ளே
கானிந்தங் கொடுத்துக்கிண்டக்
கற்றாழஞ் சோறுபோலாம்
ஆனிந்த ரசத்தைவாங்கி
அப்பனே உருக்கிப்பாரு
கோனிந்தக் கொல்லுங் கொல்லுங்
கொடுவங்கச் சுன்னம்பாரே. *(பா. 459)*

இச்சுன்னத்தை ஒரு பங்கு எடுத்து நூறு பங்கு சூதத்தில் சேர்த்தால் சூதமானது சுழன்று சோற்று கற்றாழையின் சோறு போலாகும். இதை குகையில் வைத்து உருக்கினால் கண்விட்டாடும். அனைத்து வித சரக்கையும் தன்னுள் வாங்கும்.

பாரிந்த வங்கச்சுன்னம்
பாய்ச்சினால் நிமிளைக் கொன்று
வாரிந்தப் பூசிபூசி
வாட்டியே ஊதிப்போடக்
காரிந்த நிமிளைதானுங்
கடுஞ்சுன்ன மாகும்பாரு
சேரிந்தச் சுன்னம்பட்டால்
செணத்திலே சூதஞ்சாமே. *(பா. 460)*

வங்கச் சுன்னத்தை (மேற்கூறிய வங்கச் சுன்னத்தை) நிமிளையின் மேல் நூற்றுக்கொரு பங்கு பூசி வாட்டி குகையில் வைத்து ஊதினால் நிமிளையானது கொடிய சுன்ன மாகும். இந்நிமிளைச் சுன்னத்தால்

சூதமானது ஒருவினாடியில் சுழன்று சாகும்.

சாகுமே சூதந்தானுந்
தனித்தழை வேராற் பூவால்
வாகுமென் சுன்னம் விட்டால்
மற்றென்றாற் கட்டாதப்பா
வேகுமோ தீயில்லாமல்
வெறும்வீடு பாருபாரு
ஆகுமே வாதம்பார்க்க
அறிந்தவர் சுன்னம்பாரே. *(பா. 461)*

இம்முறையைவிட்டு (அதாவது சுன்னத்தால் சூதத்தைக் கொன்று கட்டாமல்) இலைத்தழைகளைக் கொண்டு கட்டுவார்கள், இலைத் தழைகளை கொண்டு சூதத்தை கட்டினால் வேதையானது பலியாமல் போகும். நெருப்பில்லாமல் பொருட்கள் எப்படி எரியும் அதேபோல் சுன்னம் இல்லாமல் சூதம் எவ்வாறு கட்டும். ஆகவே சுன்ன முறையை அறிந்து வாதம் செய்து பார்.

பாருநீ மெழுக்கு மார்க்கம்
பலபல விதங்கள் சொல்வேன்
ஆருநீ சவுக்காரத்தின்
அப்பனே சுன்னங்கேளு
கோருநீ கல்லுச்சுன்னங்
குறிதட்டி உள்ளே வைத்துத்
தாருநீ சலத்தை வார்க்கத்
தனிச்சுன்ன மாகும்பாரே. *(பா. 462)*

ஆகுமே சுன்னத்துள்ளே
அப்படி வைத்துவைத்துத்
தாகுமே நீற்றநீற்றச்
சவுக்காரச் சுன்னமாகும்
பாகுமே சுன்னக்கல்லிற்
பத்தஞ்சு தரமேவாரு
வாகுறுந் தந்தம்போல
மகத்தான சுன்னமாமே. *(பா. 463)*

பலவிதமான மெழுகு மார்க்கங்களை கூறுகிறேன் கேள்! முதலில் சவுக்காரச் சுன்னத்தை கூறுகிறேன் கேள்! கல்லுச் சுன்னத்தை ஒரு பானையிலுள்ளே வைத்து ஜலத்தை விட்டு வைத்தால் சுத்தமான

சுன்னமாகும். இதே போல் நீரை விட்டு நீற்றிக் கொண்டேயிருந்தால் சவுக்காரச் சுன்ன முண்டாகும். இச்சுன்னத்தை மேலும் ஐம்பது முறை நீரை விட்டு நீற்றினால் சுன்னமானது கட்டித் தந்தம் போல் இறுகும்.

ஆமிந்தச் சுன்னத்தோடும்
அப்பனே சீனச்சுன்னம்
வாமிந்த ரெண்டுசுன்னம்
வகைக்கொரு பலமே கூட்டிக்
காமிந்த வெடைரெண்டுக்குங்
கற்பூரஞ் சமனாய்க்கூட்டி
யேமிந்த அண்டமுன்னீர்
இயல்பட வரைத்திடாயே. *(பா. 464)*

சவுக்காரச் சுன்னத்தையும் சீனர் சுன்னத்தையும் வகைக்கு ஒரு பலம் எடுத்துக் கொண்டு, இதனுடன் கற்பூரத்தை இரண்டு பலம் கூட்டி அண்ட செயநீரை விட்டு நன்றாய் அரைக்க வேண்டும்.

அரைத்துநீ வில்லைதட்டி
அப்பனே வெய்யிலிட்டுத்
தரைத்துநீ கிளிஞ்சிற்சாம்பல்
தன்னுக்குள் இதனைவைத்துப்
பரத்தியே தீயைமூட்டிப்
பதறாமற் சாமந்தாக்கு
கரத்திய பூரந்தானுங்
கடுஞ்சுன்ன மாகும்பாரே. *(பா. 465)*

அரைத்த மருந்தை வில்லைகளாகத் தட்டி வெய்யிலில் காய வைத்து கிளிஞ்சிலின் சாம்பலுக்குள்ளே உலர்ந்த வில்லைகளைப் போட்டு மூடித்தீயிலிட்டு எரித்தால் பூரமானது கடுஞ்சுன்னமாகும்.

ஆகுமே வீரச்சுன்னம்
அதற்கெடை சாரங்கூட்டி
வாகுமே ரெண்டுக்கொக்க
மளமான கெந்திபோட்டுத்
தாகுமே அரைத்து மெள்ளத்
தனியொரு கரண்டிவைத்துப்
போகுமே தீயிலிட்டுப்
புணர்ச்சியாய் ஊதிடாயே. *(பா. 466)*

ஊதிடத் தைலம்போலே
உருகிடும் பாருமப்பா
வாதிடத் துருசுச்சுன்னம்
மாட்டொரு கழஞ்சுதன்னிற்
கோதிட வாங்கிவைக்கிற்
கொடுங்கெந்தி மெழுகதாகும்
பாதிடச் சரக்கதெல்லாம்
படுமுன்னே சாகும்பாரே. *(பா. 467)*

வீரச் சுன்னத்தையும் பூரச்சுன்னத்தையும் சம அளவு கூட்டி (இதனுடனும்) இவ்விரண்டு சுன்னத்திற்கும் சம அளவு கெந்தி சேர்த்து நன்றாய் இழைத்து கரண்டிக்குள்ளிட்டு தீயைமூட்டி எரித்தால் கெந்தியானது தைலம் போல் உருகும். இத்தைலத்தில் துருசுச் சுன்னத்தை ஒரு கழஞ்சு போட்டு ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொள். இம்மெழுகால் சகல விதமான சரக்கும் மடிந்து சாகும்.

சாகுமே சூதமென்று
சாற்றின் நூல்களெல்லாம்
வேகுமே மெழுக்கைக் கண்டால்
விடுபட்ட வானைசாகும்
தாகுமே நவலோகங்கள்
தடவிடத் தண்ணீர்போலாம்
போகுமே வேதைமார்க்கம்
போக்கை நானறிந்திலேனே. *(பா. 468)*

இம்மெழுகில் சூதத்தை சேர்த்தால் உடனே சுருண்டு போகும். அதே போல் இம்மெழுகை நவலோகங்களின் மீதும் தடவினால் தண்ணீர்போல் உருகிக் கண் விட்டாடும். இதில் ஏற்படும் வேதையைப் பற்றி கூறுதற்கு என்னால் இயலாது.

அறிந்தமட் டறிந்துசொல்வேன்
அறிவுள்ளோர் கேளுமப்பா
பிறிந்ததில் நாகஞ்சூதம்
பேர்சம னாகச்சேர்த்து
மறிந்திந்த மெழுக்கைபூசி
வாட்டியே புடத்தைப்போடப்
பறிந்தநற் சூதம்நாகம்
பதையாமற் சாகும்பாரே. *(பா. 469)*

அறிவுள்ளோர்களே என்னால் இயன்ற மட்டும் கூறுகிறேன் கேளுங்கள்! நாகத்தையும் சம அளவு கூட்டி மேற்கூறிய மெழுகைப் பூசி வாட்டிப் புடத்தைப் போட்டால் சூதநாகமானது பதையாமல் சாகும்.

பாரிந்த வினத்தைப் போலே
பாய்ச்சிடே ஈயத்துள்ளே
பாரிந்த வினத்தைப் போலே
பாப்ச்சிடு தங்கத்துள்ளே
பாரிந்த வினத்தைப் போலே
பருகிய வங்கத்துள்ளே
பாரிந்தவினத்தைப் போலே
படுசெம்பிற் கூட்டிக்காணே. *(பா. 470)*

இதே போல ஈயம், தங்கம், வங்கம், செம்பு, போன்ற லோகங் களுடனும் மெழுகை கூட்டி புடம் போட்டால் லோகங்கள் உடனே களங்கமாகும்.

காணிந்த அஞ்சுலோகம்
கைகண்ட களங்கமாகும்
பூணிந்த நாகவங்கம்
புகல்ஈயம் உருக்கிக்கூட்டித்
தாணிந்த ரெண்டுலோகந்
தனிப்பட அரைத்துப் போடு
ஆணிந்த மெழுக்கைபூசி
அதட்டிநீ வாட்டிடாயே. *(பா. 471)*

வாட்டியே புடத்தைப்போட
வகையஞ்சு களங்கேயாகும்
நீட்டியே நவலோகத்தில்
நேர்படத் தங்கமாகும்
ஆட்டிய தங்கம் நூறு
அயநாகம் ஐம்பதோடும்
கூட்டியே ஈயந்தானும்
கொள்முப்ப தொன்றுசொல்லே. *(பா. 472)*

சொல்லியே செம்புதானும்
சொற்பங்காண் இருபதோடு

மல்லிய வங்கந்தன்னை
மாட்டுநீ பத்தஞ்சேதான்
வல்லியே பொன்னுமாகும்
மாற்றெனில் பத்துங்காணும்
சில்லிய களங்கமேலே
சேர்க்கலாங் கோடிதானே. (பா. 473)

நாகம், வங்கம், ஈயம் இவை மூன்றையும் உருக்கி மற்ற இரு லோகங்களை ஒன்றாய் சேர்த்தரைத்து அனைத்தையும் ஒன்றாய்க் கூட்டி மெழுகைப் பூசி வாட்டிப் புடம் போட்டால் ஐந்து லோகமும் களங்காகும். இக்களங்கை நவலோகத்துடன் சேர்த்தால் நவலோகமும் தங்கமாகும். (தங்கத்தில் நூற்றுக்கொன்றும், இதேபோல் தங்கத்தில் நூற்றுக்கு ஒரு பங்கும், அயநாகத்தில் ஐம்பதுக்கு ஒரு பங்கும், ஈயத்தில் முப்பதுக்கு ஒருபங்கும், செம்பில் இருபதுக்கு ஒரு பங்கும், வங்கத்தில் பதினைந்துக்கு ஒரு பங்கும் இக்களங்கை சேர்த்தால் பத்து மாற்றுள்ள தங்கமாகும்.

தானென்ற மெழுக்கைத் தொட்டுச்
சமர்த்தனாம் வீரன் மேலே
கானென்று பூசிப்பூசிக்
கரையொரு சீலைசுற்றித்
தேனென்ற தீபந்தன்னிற்
சிறக்கவே வாட்டிப்பாரு
கோனென்ற வீரந்தானுங்
குடுகுடு வென்னுங்காணே. (பா. 474)

காணிந்த வீரம்வாங்கிற்
கடும்வெள்ளி மணிபோல் நிற்கும்
பூணிந்த வீரமோடும்
போக்குநான் சொல்லக் கேளாய்
ஆணிந்த வீரத்தொக்க
அப்பனே தங்கங்கூட்டித்
தேணிந்த வுருக்கிவைக்கச்
செகமெல்லாம் வேதையாமே. (பா. 475)

இக்கெந்தி மெழுகை வீரத்தின் மேல் பூசி சீலை செய்து தீபத்தில் வாட்டினால் வீரமானது மெழுகை தன்னுள்ளே கிரகித்துக் கொண்டு வெள்ளி போல் பிரகாசிக்கும். இக்கட்டிய வீரத்துக்கு சம அளவு தங்கம் சேர்த்து உருக்கி வைத்துக் கொண்டால் உலகமெல்லாம் தங்கமாகும்.

வேதைதான் ஒடுந்தூரம்
விளம்புறேன் வல்லோர் கேளீர்
ஆதைதான் வெள்ளிக்குள்ளே
ஐந்நூற்றுக் கொன்றேபோடு
பேதைதான் குடவனாகிற்
பிறித்திடு முந்நூற்றொன்று
தாதைய மற்றலோகந்
தாக்கிடாய் நூற்றுக் கொன்றே. (பா. 476)

இவ்வீர தங்கத்தை வெள்ளியில் ஐந்நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்து உருக்கினால் பொன்னாகும். இதேபோல் பித்தளையில் முந்நூற்றுக்கு ஒரு பங்கும், மற்ற லோகங்களில் நூற்றுக்கு ஒரு பங்கும் சேர்த்தால் அனைத்தும் உருகி பொன்னாகும்.

ஒன்றென்ற வீரம்போல
உருகுமிமான் பதுமேபாரு
தன்றென்ற தாதுவெல்லாம்
தடவியே வாட்டுவாட்டு
வின்றென்ற சாரகாரம்
விரவிடச் சாகும்பாரு
கன்றென்ற கெந்தி தானுங்
கடுஞ்சிங்கி காணும்பாரே. (பா. 477)

வீரமானது எவ்வாறு உருகிற்றோ அதேபோல் நவலோகமும் உருகிப் பொன்னாகும். கெந்தி மெழுகை வீரத்தில் பூசி வாட்டினாற்போல் அறுபத்து நாலு தாதுவின் மேலும் கெந்தி மெழுகைப் பூசி வாட்டினால் வீரம் போல் பிரகாசிக்கும். அதுமட்டுமின்றி காரசாரத்தின் மேலும் மெழுகைப் பூசி வாட்ட உடனே சாகும்.

காணிந்தக் கெந்திபோல
கடியமால் தேவிதன்னைப்
பூணிந்த முறையே செய்யப்
புகழுற்ற மெழுகுமாகும்
வாணிந்தி யாடுமாப் போல்
மால்தேவி யாடுவாள்பார்
தோணிந்தத் தொழிலைக் காட்டிச்
சுருக்கிது பாரும் பாரே. (பா. 478)

கெந்தியை மெழுகாகச் செய்ததுபோல் அரிதாரத்தை மெழுகாகச்

செய்தால் கெந்தியில் ஏற்பட்ட வேதையைப் போன்று இதிலும் வேதை ஏற்படும். இதுவே சுலபமான தொழில் முறையாகும்.

பாரிந்த முறையைப் போலே
பருகிய சிலையைச் செய்யச்
சேரிந்தக் கெந்திக் கொக்கச்
செகமெலா மாடும்பாரு
வாரிந்தப் பாஷாணத்தின்
வழிகண்டு லோகங்கண்டு
கோரிந்தக் கொடுப்பாயாகிற்
கோடிக்கு மோடுங்காணே. *(பா. 479)*

கெந்தியை மெழுகாக செய்தது போல் மனோசிலையையும் மெழுகாக செய்தால் கெந்தியில் எற்பட்ட வேதையைப் போன்று இதிலும் வேதை உண்டாகும். அதாவது எல்லாவிதமான மெழுகிற்கும் பாஷாணங்களையும் லோகங்களையும் முறை படி அறிந்து சேர்த்தால் வேதையானது கோடிக்கு ஓடும்.

துரிசி மெழுக்கு

காணிந்த மூன்றுமார்க்கம்
கடியதோர் மெழுக்குஞ்சொன்னேன்
வாணிந்தந் துருசியான
வழங்கிய மெழுக்கைக்கேளு
பூணிந்த வராகன்மூன்று
பொலிவுறச் சாரநீரில்
கோணிந்தத் தோய்த்துத்தோய்த்துக்
கொடும்வெய்யில் போடுபோடே. *(பா. 480)*

மூன்று விதமான சரக்கை மெழுகாகச் செய்யும் முறையைக் கூறினேன். இனி துருசை மெழுகாகச் செய்யும் முறையைக் கேள்! மூன்று வராகன் எடை துருசை எடுத்து சாரநீரில் தோய்த்து தோய்த்து வெய்யிலில் போட வேண்டும்.

போட்டபின் பத்தாநாளிற்
புகழுறுஞ் சூதம்வீரம்
ஆட்டிப்பின் னுரமும்பூரம்
அந்தந்த வெடையைக் கேளு
காட்டவே ஒவ்வொன்றேதான்

கடும்பணம் ரெண்டுதூக்கு
மூட்டிய செயநீராலே
முயற்சியாய் அரைத்திடாயே. (பா. 481)

இவ்வாறு பத்து நாட்கள் செய்த பின்பு பத்தாம் நாளில் சூதம், வீரம், உரம், பூரம் இவை நான்கையும் வகைக்கு இரண்டு பணமளவு எடுத்து சாரசெயநீரால் அரைக்க வேண்டும்.

அரைக்கையிற் குருவண்டேதான்
ஐம்பதை இதற்குள்போட்டு
நிரைக்கையில் அரைத்தேயந்த
நிலையொத்த துருசுமேலே
தரைக்கையிற் பூசிப்பூசித்
தனித்தவிப் படியேபோடக்
கரைக்கையி லுள்ளேசென்று
களங்கற்ற மெழுகுமாமே. (பா. 482)

அரைக்கும் சமயத்தில் குருவண்டு ஐம்பதும் கூட்டி நன்றாய் அரைத்து துருசின் மேல் பூசிப்பூசி வெய்யிலில் வைத்தால் துருசானது மெழுகாகும்.

ஆமிந்த மெழுகைத்தூக்கி
அப்பனே எடைக்குக்கேளு
வாமிந்தச் சாரச்சுன்னம்
வழங்கிய வீரச்சுன்னம்
தாமிந்த ரெண்டுமொக்கச்
சமனாகத் தூக்கிப்போட்டுச்
சேமிந்த மத்திப்பீரேற்
சிறந்திடு மயனமாமே. (பா. 483)

இம்மெழுகை ஒரு நிறையாய் எடுத்துக் கொண்டு இதில் சாரச்சுன்னத்தையும் வீரச்சுன்னத்தையும் சம அளவு சேர்த்து மத்தித்தால் மயனம் போலாகும்.

மயனத்தின் வித்தைகேளு
மாட்டியே வீரன்மேலே
பயனித்த சீலைசுற்றிப்
பருந்தீப நுனியிற்போட்டு

வொயினித்தே யுள்ளேயேநின்
றுருகியே யாடுமப்பா
கயினித்த வீரந்தானுங்
கபளித்ததே சாவும்கேளே. (பா. 484)

இம்மயனத்தால் ஏற்படும் வித்தையைக் கூறுகிறேன் கேள்! வீரத்தின் மேல் துருசு மயனத்தைப் பூசி தீபத்தில் வாட்டினால் வீரமானது மயனத்தை தன்னுள்ளே வாங்கிக் கொண்டு கண் விட்டாடும்.

கேளிந்த வீரத்தொக்கக்
கெடியான தங்கங்கூட்டி
யாளிந்த உருகிமெள்ள
அப்பனே மணியாய்வாங்கு
போளிந்த நாகம்பத்திற்
போட்டிடு ஒன்றுதானே
வேளிந்த நாகங்கட்டி
விடுபட்டே உருகும்பாரே. (பா. 485)

இக்கட்டிய வீரத்துக்கு சம அளவு தங்கம் சேர்த்து உருக்கி மணியாய் வாங்கி இதை நாகத்தில் பத்துக்கு ஒரு பங்கு சேர்த்தால் நாகமானது கட்டி கண்விட்டாடும்.

பாரிந்த நாகமொன்று
பரிசுத்த ரசமும்பாதி
காரிந்தத் தங்கங்கால்தான்
கபளித்துச் சூதத்தோடே
கோரிந்த வெடைக்கேயொக்கக்
குணசலுங் கோர்த்துக்கூட்டித்
தாரிந்தக் குப்பிக்குள்ளே
தாக்கிநீ வைத்திடாயே. (பா. 486)

இக்கட்டி நாகத்தின் எடைக்கு பாதி அளவு ரசமும் கால் பங்கு தங்கமும் சேர்க்க வேண்டும். சேர்த்த இம்மூன்றின் எடைக்கு சம அளவு குணசல் (தாளகம்) சேர்த்து குப்பிக்குள்ளிட்டு

வைத்தபின் அடுப்பிலேற்றி
வாலுகைக் குள்ளேவைத்துக்
கைத்தபின் சூலத்தானைக்
கடுகியே பூசைபண்ணு

ஒத்தபின் அடுப்பிலேற்று
உருகிச்செந் தூரமாகும்
நைத்தபின் செந்தூரத்தை
நவலோக நூற்றிற்போட. (பா. 487)

வாலுகையிலேற்றி அடுப்பில் வைத்து தீமூட்டி எரித்து சிவ பெருமானை பூசை செய்தால் சரக்குகள் உருகி செந்தூரமாகும். இச்செந்தூரத்தை நவலோகங்களுடன் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்தால் வேதையாகும்.

போடுநீ இந்தமார்க்கம்
பழுத்த காரியத்தைப்போடு
போடுநீ இந்தமார்க்கம்
பொலிவான கவரிசத்தைப்
போடுநீ இந்தமார்க்கம்
பொன்னாக்கும் இரும்புதன்னைப்
போடுநீ இந்தமார்க்கம்
புகழ்வங்கம் பொன்னுமாமே. (பா. 488)

நவலோகங்களைப் போல் காரீயத்திலும், கவரிசத்திலும், இரும்பிலும் வங்கத்திலும் செந்தூரத்தை சேர்த்தால் லோகங்கள் பொன்னாகும்.

ஆமினிச் செந்தூரங்கள்
அப்பனே துருசுவெள்ளை
போமினி சரக்கிற்பூட்டிப்
புகழுற ஆட்டுவீரேற்
றாமினி யெல்லாஞ்செத்துத்
தனித்தனி வேதையாகும்
காமினிச் சூதங்கட்டும்
கடுவெண்ணெய் கண்டுகொள்ளே. (பா. 489)

இச்செந்தூரத்தை சகல விதமான பாஷாணங்களுடனும் உபரசங் களுடனும் சேர்த்துப் பூசி வாட்டினால் அனைத்தும் மடிந்து தனித்தனியாக வேதையுண்டாகும். மேலும் சூதம் கட்டி வெண்ணைப் போலாகும். (துருசு - உபரசத்தை சேர்ந்தது. வெள்ளை - பாஷாண வர்க்கத்தை சேர்ந்தது.)

கொள்ளவே உப்பைக்கட்டிக்
கொடியதோர் மயனம்பண்ணத்
தெள்ளவே சொல்லக்கேளு
செகமெல்லா மிதனுக்கீடோ

தள்ளவோ பிரமன்பட்டந்
தரிக்கவோ பண்ணுமுப்பு
அள்ளவோ நிராகாரத்தை
ஆண்மையும் பண்ணும்பாரே. (பா. 490)

உப்பைக் கட்டி மயனமாக்குதற்கு வழிமுறையைக் கூறுகிறேன் கேள். இவ்வுப்பு மயனத்திற்கு உலகத்தையே கொடுத்தாலும் ஈடாகாது. இவ்வுப்பானது பிரமனுட பதவியையும் அளிக்கவல்லது. அப்படிப்பட்ட நிராகார பொருள்களை காண்பிக்கவல்ல உப்புக்கட்டை கூறுகிறேன்.

கல்லுப்புக் கட்டு

பண்ணுமே உப்புக்கட்டப்
பருவத்தைச் சொல்லக்கேளாய்
மண்ணுமேற் கூறாய்நின்ற
மலமிரு தேங்காய்மட்டும்
தெண்ணுமே யமுரிதானும்
சேர்த்தொரு படியாய்வார்த்தே'
ஓண்ணுமே கலக்கக்கூட்டி
உருகவே ரவியில்வையே. (பா. 491)

மண்ணின் கூறாய் நிற்கும் மலத்தை இரு தேங்காய் அளவு எடுத்து பாண்டத்தில் போட்டு அதில் ஒரு படி அமுரியை வார்த்து நன்றாய்க் கலக்கி ரவியில் வைக்க வேண்டும்.

வைத்ததோர் குழம்புக்குள்ளே
மாட்டவே மருந்துகேளு
கைத்ததோ ருப்புிரண்டு
கடியதோர் காரம்ரெண்டு
பைத்ததோர் சாரம்பண்ணப்
பரியுடன் ஆறுங்கேளு
மைத்ததோர் வகையொன்றொன்று
மரைப்பலம் பொடித்துப் போடே. (பா. 492)

இக்குழம்பில் இரண்டு வகை உப்பும் இரண்டு வகை காரமும் மற்றும் சாரம், சூடன் இவ் ஆறுவகை சரக்கையும் வகைக்கு அரைப்பலம் எடுத்துப் பொடி செய்து சேர்க்க வேண்டும்.

போட்டதை ஒன்றாய்க்கிண்டிப்
புகழுற ரவியில்வைத்து
மாட்டதில் அமுரிதானும்
வளமாகப் படியேஒன்று
நீட்டதில் உலர்ந்தபின்பு
நிரையைந்து கரமேவாரு
கூட்டதை மெழுக்குப்போலே
கொடுஞ்சில்லு ரெண்டாய்ச் செய்யே. (பா. 493)

மருந்துகளை சேர்த்தவுடன் குழம்பை நன்றாய்க் கிண்டி சூரிய வெப்பத்தில் வைத்து ஒரு படி அமுரியை வார்க்க வேண்டும். குழம்பானது காய்ந்து உலர்ந்த பின்பு மீண்டும் ஐந்து கையளவு அமுரியை வார்த்து மெழுகு போல் ஆக்கி இரண்டு அடைகள் தட்ட வேண்டும்.

செய்திடு சில்லுவொன்றைச்
சிறக்கஓர் ஓட்டில்வைத்துக்
கைதிடுங் கெட்டியான
கல்லுப்பைப் பதிப்பாயப்பா
மைதிடு மேலேநீயும்
மறுசில்லைப் போட்டுமூடிச்
சைதிடுஞ் சீலைசுற்றித்
தனிப்புடம் போட்டிடாயே. (பா. 494)

ஒரு அடையை ஓட்டில்வைத்து அதன்மேல் கல்லுப்பைக் கொட்டி மற்றொரு அடையால் மூடி சீலைசெய்து புடம் போட வேண்டும்.

போட்டபின் உப்பைவாங்கிப்
புகழ்பெற உருக்கிப்பாரு
ஆட்டபின் தெறித்திதென்றால்
அப்பனே கேளு கேளு
நீட்டபின் வில்லைரெண்டு
நேரரை அமுரியாலே
நாட்டபின் வில்லைபண்ணித்
தனியுப்பை வைத்துப்போடே. (பா. 495)

புடம் போட்டபின் உப்பை எடுத்து உருக்கிப் பார். உப்பானது உருகாமல் தெரித்துப் போனால் ஒட்டிலிருக்கும் ரெண்டு வில்லைகளை அமுரியால் அரைத்துக் கொண்டு வில்லைகளாகச் செய்து உப்பை வைத்து

மூடிப் புடம் போட வேண்டும்.

போடுநீ உப்புக்கட்டும்
போகாது நிக்குமப்பா
நீடுநீ உருகுமப்பா
நீட்டின தெல்லாங் கொள்ளும்
ஆடுநீ வாதவித்தை
அறுபத்து நாலுங்கட்டும்
தேடிநீ அலையவேண்டாம்
சேர்ந்து நெட்டேறுயேறே. *(பா. 496)*

இவ்வாறு செய்யுங்கால் உப்பானது நீரில் கரையாமல் நிற்கும். அதுமட்டுமின்றி சகல சரக்கையும் தன்னுள் வாங்கும். அறுபத்து நாலு சரக்கையும் கட்டச் செய்யும். இம்முறையை விட்டு இலை தழைகளைத் தேடி அலைய வேண்டாம். மேலும் இவ்வுப்பால் ஏற்படும் வேதையைக் கண்டு மயங்காமல் யோகத்தில் சென்று ஆதாரங்களை கடந்து ஏறு.

ஏறலா முப்பைத்தொட்டே
எளிதாக ஏறுவோர்க்குக்
கூறலா மென்றாள்தாயுங்
கூறாதே யென்றார்ஈசன்
மாறலாம் பொன்னேயாகும்
மாசித்தி காயமாகும்
தேறலாம் போதங்கண்டு
செயரச மாகுங்காணே. *(பா. 497)*

உப்பைக் கொண்டு யோகம்புரிவோர்க்கு இம்முறையை சொல்லலாம் என்று நினைக்கிறேன் என பார்வதி கூற அதற்கு ஈசன் ஒரு காலும் சொல்லக்கூடாது எனக் கூறினார் உப்பினுட மகிமையைக் கண்டு மனம் மாறி தவறான வழிச் செல்லும் வாய்ப்பு உண்டு. மேலும் இவ்வுப்பால் வேதையும் காயசித்தியும் கைக்குள்ளாகும். ராசயோகமும் சித்தியாகி ஆனந்த போதம் வாய்க்கும்.

காணிந்த உப்புதானும்
கடியதோர் பலமதொன்று
பூணிந்தச் சாரங்கால்தான்
புகழுற்ற காரங்கால் தான்
தோணிந்த ரெண்டுக்கொக்கச்
சுகப்படக் கெந்திகூட்டு
ஆணிந்த மூன்றுதானும்

அமுரியால் அரைத்துவையே. *(பா. 498)*

வைத்திட்டே உப்பைமூசை
வைத்துநீ உருக்கும்போது
கைத்திட்டே அரைத்துமூன்று
காட்டுநீ வாங்கும் வாங்கும்
தைத்திட்ட சாரம்போடு
தமைதீரு மட்டும் நீர்தான்
எய்த்திட்ட உப்புதானும்
எடுத்திட மயனமாமே. *(பா. 499)*

சாரம் கால்பலம், காரம் கால் பலம், கெந்தி அரைப் பலம் இவை மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்து அமுரிவிட்டு அரைத்துக் கொண்டு கட்டிய உப்பை ஒரு பலம் எடுத்து குகையில் வைத்துருக்கி அரைத்த மருந்தைச் சேர்த்தால் உப்பானது மருந்தை தன்னுள்ளே வாங்கும். மேலும் தனி சாரத்தை அவ்வுருகிய உப்புடன் சேர்த்தால் உப்பானது சாரத்தையும் தன்னுள்ளாக வாங்கிக் கொண்டு மயனம் போலாகும்.

மயனமாம் உப்புதன்னை
வளைத்திடு மால்தேவிக்கு
மயனமாம் உப்புதன்னை
வளைத்திடு வீரத்துக்கு
மயனமாம் உப்புதன்னை
வளைத்திடு கெவுரிமேலே
மயனமாம் உப்புதன்னை
வளைத்துநீ சிலைக்குக் கட்டே. *(பா. 500)*

கட்டிய நாலுந்தானுங்
கனலிலே வாட்டுவாட்டு
அட்டியே உருகியுள்ளே
அப்பனே மணியாய்நிற்கும்
வெட்டியே முறையே பார்க்க
விரைந்தறு பதுமேசாகும்
மட்டிய கெவுரிவாட்ட
வருமிதிற் சத்துக்காணே. *(பா. 501)*

மயனமான இவ்வுப்பை அரிதாரத்தின் மேலும், வீரத்தின் மேலும், கெவுரியின் மேலும், மனோசிலையின் மேலும் பூசி கணலில் வைத்து வாட்டினால் பாஷாணங்கள் உப்பைத் தன்னுள்ளே வாங்கிக் கொண்டு உருகி மணியாய் நிற்கும். இதே போல் அறுபத்து நாலு சரக்கின் மேல் பூசினாலும் அனைத்தும் மடிந்து சாகும். கெவுரியின்மேல் பூசிவாட்டினால்

சத்து உண்டாகும்.

காணிந்த உப்பு வெண்ணெய்
கபளிக்க அண்டமீயம்
காணிந்த உப்புவெண்ணெய்
கண்டதுஞ் சூதங்கட்டும்
காணிந்த உப்புவெண்ணெய்
காணுமுன் சரக்கெலாஞ்சாம்
காணிந்த உப்புவெண்ணெய்
கடுந்தங்கம் கட்டும்பாரே. *(பா. 502)*

உப்பு மயனத்தை (உப்பு வெண்ணையை) அண்டத்தின் மேல பூசி வாட்டினால் ஈயம் போல் உருகும். சூதத்துடன் மயனத்தை சேர்த்தால் சூதம் கட்டும். மேலும் இவ்வுப்பு மயனத்தை கண்ட மாத்திரத்தில் சகலசரக்கும் கட்டும். தங்கமும் இவ்வுப்பு மயனத்தால் கட்டித் திடப்படும்.

கட்டுமே தங்கமானாற்
கடுகியே குணத்தைக்கேளு
ஒட்டுமே உருகுமப்பா
உடைத்திட நொறுங்கும்பாரு
வெட்டுமே சேனையெல்லாம்
விடுபட்ட சூதஞ்சாகும்
தட்டுமே ஊதிப்போடு
தங்கமுஞ் சுன்னமாமே. *(பா. 503)*

தங்கம் கட்டினால் அதற்குண்டாகும் குணங்களை கூறுகிறேன் கேள். குகையில் வைத்துருக்கினால் உருகும். உடைத்தால் உடனே நொறுங்கும். இதனால் சூதம் மடிந்து சாகும். இத்தங்கத்தை குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும்.

சுன்னமே தங்கமானால்
சுகப்பட வீசமுண்ணு
அன்னமே கொள்ளும் போதில்
அப்பனே புளியை நீக்கு
தன்னமே பெண்ணுமுப்பு
தனித்திடக் கவளம் போக்கும்
மன்னமே காயந்தானும்
மாசித்தி மதியிலாமே. *(பா. 504)*

தங்கச் சுன்னத்தை அனுதினமும் வீசம் அளவு உட்கொண்டால் சுகப்படலாம் சுன்னம் உட்கொள்ளுகையில் புளி, உப்பு பெண் இம் முன்றையும் நீக்க வேண்டும். இவ்வாறு உட்கொண்டால் காயம் திடப்பட்டு சித்தியாகும்.

மதியுண்டாய் இருந்ததானால்
வாதிகாள் தின்றுபாரும்
விதியுண்டோ லோகத்துள்ளே
வேறொரு சடமுமுண்டோ
பதியுண்டோ போதமல்லாற்
பரவியே பார்ப்பதல்லாற்
கெதியுண்டோ வாதம்விட்டாற்
கிடையாது போதந்தானே. (பா. 505)

உனக்கு காயசித்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் தங்கச் சுன்னத்தை உட்கொண்டு பார். உனக்கு இனி பிறவியே இல்லாமல் போகும். எங்கும் பரவி நிற்கும் பிரம்மத்தை அறிந்துக் கொள்வாய். இவை யாவும் வாதத்தை விட்டால் பலியாமல் போகும். (ஆகவே வாதத்தின் ஆதியான உப்பை முதலில் கட்டி காயத்தை திடப் படுத்து)

போதத்தோடு ஒத்துநிற்கும்
பொறியான உப்புமப்பா
வாதத்தோடு ஒத்தவார்த்தை
வாய்க்குள்ளே அடங்காதையா
நீதத்தோடு உப்புபட்டு
நிலைத்திட்ட சரக்கிதெல்லாம்
காதத்தே லோகங்காணக்
கடுமாற்று நூறுமாமே. (பா. 506)

உப்பானது ஆனந்த போதமான பிரம்மத்துடன் ஒன்றி நிற்கும். இவ்வுப்பினால் ஏற்படும் வேதையை வாயால் கூறுவதென்பது மிகவும் கடினம். மேலும் இவ்வுப்பால் தொடப்பட்ட எந்த சரக்குகளும் லோகங்களும் நூறு மாற்று கொண்ட தங்கமாகும்.

ஆமிந்த உப்புபோட்டே
ஆட்டிய வேதையெல்லாம்
சேமிந்தச் சுருக்குவந்த
திறமெல்லாம் செப்பக்கேளு

வோமிந்த வேலை ஆமி
ஒழுக்கிய நாதமப்பா
காமிந்த உப்பைவிட்டால்
கடந்தது வாதம்பாரே. (பா. 507)

இவ்வுப்பைச் சேர்த்து வேதை செய்து பார்த்தால் மிகவும் சுலபமாக கைகூடும், இந்த உப்பிற்கு எப்படி இவ்வளவு வீர்யம் உண்டாயிற்று என கேட்பாயாயின் இவையாவும் ஆயி நாதத்தால் என்று அறிந்து கொள். ஆகவே இவ்வுப்பை விட்டு வாதம் பார்த்தால் வாதமானது நம்மை விட்டு விலகிப்போகும்.

வாதத்துக் கடியாய்நின்று
வழங்கியது உப்பேயப்பா
கோதத்து மேலேதென்னிற்
கொடியதோர் பூரமாச்சு
பாதத்து நழுவேநின்ற
பராபர சூதராசன்
சாதத்துக் கறியாய்க்கூட்டிச்
சாற்றினார் உப்பைப் பாரே. (பா. 508)

வாதம் என்ற தொழிலுக்கு அடியில் நிற்பது உப்பேயாகும், மேலே நிற்பது பூரமாகும். நடுவே நிற்பது சூதமாகும். ஆகவேதான் உப்பை உணவில் கூட்டி உட்கொள்கின்றனர்.

உப்பை விட்டானாகில்
உருசியுஞ் சுகமுமில்லை
உப்பையே விட்டானாகில்
ஓடவுங் கவனமில்லை
உப்பையே விட்டானாகில்
ஒன்றையுங் கொல்லாதப்பா
உப்பையே விட்டார்கெட்டார்
ஓிமன்ற எழுத்துமுப்பே. (பா. 509)

உப்பை விட்டவனுக்கு ருசி, சுகம், கவுனம், போன்றவை இல்லாமல் போகும் மேலும் உப்பை நீக்கிச் சரக்கை மடிக்க முயன்றால் சரக்கானது மடியாமல் வீணாகும், எனவே உப்பை விட்டவர் கெட்டவராவார். வாழ்க்கையில் முன்னேறாமல் கெட்டுப் போவார் என்று கூறு.

உப்பையே கட்டவென்றால்
ஒன்றாலுங் கட்டாதப்பா
உப்பையே புளியுமுப்பும்
உடன்சூதங் கூடிக்கொல்லும்
உப்பையே கொன்றகாலம்
ஓடலாம் ஆடலாகும்
உப்பையே மூலமூர்த்தி
உரைத்தாரைந் நூறுபாரே. (பா. 510)

உப்பை கட்டுவதென்பது மிகவும் கடினமான செயலாகும் உப்பை புளியுடனும் சூதத்துடனும் சேர்த்தால் உடனே மாண்டு போகும். உப்பை மாளச் செய்தால் பல வகையான சித்துகள் புரியலாம். அதுமட்டுமின்றி கவுனத்திலும் ஓடலாம், இவ்வுப்புக்கட்டு முறையை திருமூலர் தமது ஐந்நூறு என்ற நூலில் கூறியுள்ளார்.

பாருநீ உப்புக்கட்டப்
பகருறேன் பண்புள்ளோரே
நேரிய இணங்கன்சுன்னம்
நேரிராக்க வெள்ளை கூட்டித்
தாரியக் கருவைவார்த்துத்
தாக்கியே அரைத்துக்கட்டிக்
கோரியே ஊதிப்போடக்
கொடும்வெள்ளைச் சுன்னமாமே. (பா. 511)

உப்புக்கட்டு முறையை கூறுகிறேன் கேள்! வெடியுப்புச் சுன்னத்துடன் சரி அளவு வெள்ளை பாஷாணத்தை சேர்த்து முட்டையின் கருவால் அரைத்து வில்லைதட்டி குகையில் வைத்து ஊதினால் வெள்ளைப் பாஷாணம் சுன்னமாகும்.

சுன்னத்தின் பாதிதன்னைச்
சூட்டிடு சூதந்தன்னில்
மன்னுற்றே அரைத்துக்கொண்டு
வகையான உப்புக்குள்ளே
பன்னுற்றுப் புரட்டிக்காய்ச்சிப்
பாச்சியே குகையில் வைத்து
கண்ணுற்றே ஊதுமப்பா
கண்விட்டே ஆடும்பாரே. (பா. 512)

ஆடிய உப்புக்கொக்க
அப்பனே வீரம் போடத்
தேடிய அருணனைப்போல்
சிவந்தது செந்தூரமாகும்
நாடிய நவலோகத்தில்
நாட்டிடு நூற்றுக்கொன்று
வாடியே மயங்க வேண்டாம்
மாற்றது பத்துமாமே. *(பா. 513)*

வெள்ளைச் சுன்னத்தை சூதத்துடன் பாதியளவு சேர்த்து நன்றாய் அரைத்து உப்பின் மேல் பூசி புரட்டி வாட்டி குகையில் வைத்து ஊதினால் உப்பானது கண் விட்டாடும் இதனுடன் சம அளவு வீரம் சேர்த்தால் அருணன்போல் சிவந்து செந்தூரமாகும். . இச்செந்தூரத்தை நவலோகங் களுடன் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்தால் பத்து மாற்றுக் கொண்ட தங்கம் உண்டாகும்.

ஆமிந்த உப்புநின்றே
ஆடிப்பின் உருகும்போது
தாமிந்த லிங்கம்போடு
தனித்தனி கெளரிபோடு
வாமிந்தச் சிலையைப்போடு
மாலின்தன் தேவியோடு
காமிந்த வெள்ளைபோடு
காட்டஞ்சும் வேறேவையே. *(பா. 514)*

கட்டிய உப்பை குகையில் வைத்துருக்கி அதனுடன் சம அளவு லிங்கத்தை சேர்த்து உருக்கிக் கொள்ள வேண்டும் இதே போல் உப்புடன் கௌரியையும், சிலையையும் மனோசிலையையும், அரிதாரத்தையும், வெள்ளையையும், தனித்தனியாக சேர்த்து உருக்கி தனித்தனியாக எடுத்து பத்திரப்படுத்த வேண்டும்.

உப்புக்கட்டு வேதை

வைத்திட்ட ஐந்துக்குள்ளே
வகையெல்லாம் சொல்லக்கேளு
பைத்திட்ட லிங்கந்தானும்
பாய்ச்சுநீ ஐம்பத்தொன்று

மைத்திட்ட மாலின்தேவி
மணிசிலை முப்பத்தொன்று
தைத்திட்ட கெவுரிதானும்
தாக்கிடாய் பத்துக்கொன்றே. (பா. 515)

மேற்கூறிய ஐந்து வகையில் ஒன்றான லிங்கம் சேர்ந்த உப்பை ஐம்பதுக்கு ஒரு பங்கும் தாளகத்துடன் சேர்த்த உப்பை முப்பதுக்கு ஒரு பங்கும், மனோசிலை சேர்த்த உப்பை முப்பதுக்கு ஒரு பங்கும், கெளரி சேர்த்த உப்பை பத்துக்கு ஒரு பங்கும் லோகங்களுடன் சேர்த்தால் வேதையுண்டாகும்.

ஒன்றென வெள்ளைதன்னை
ஊட்டிடு வங்கத்தூடே
பன்றென நூற்றுக்கோடும்
பளிச்சென்று வெள்ளியாகும்
தன்றென வினத்துக்கெல்லாம்
தாய்கூட்டு வேதையாகும்
மன்றெனது அண்ணல்சொல்ல
ஆத்தாளு மறிந்தவாறே. (பா. 516)

மேலும் வெள்ளைப் பாஷாணத்துடன் சேர்ந்த உப்பை வங்கத்துடன் சேர்த்து உருக்கினால் நூறுமாற்றுக் கொண்ட வெள்ளியுண்டாகும். வேதை புரியும் பொழுது அனைத்திற்கும் தாய்ச் சரக்கை சேர்க்க வேண்டும். இம்முறைகளை சிவபெருமானிடமிருந்து அறிந்து கொண்டு ஆத்தாளனவர் எனக்கு சொன்னார்.

அறிந்திடு முப்புக்குள்ளே
அப்பனே கெவுரிபோடப்
பிறிந்திடுங் கல்மஷங்கள்
பேரான சத்தாய் நிற்கும்
செறிந்ததை வாங்கிக் கொண்டு
சேர்சமன் தங்கஞ்சேர்த்தே
உறிந்திடுஞ் சூதராசன்
ஒன்றுக்குப் பாதிபோடே. (பா. 517)

போட்டபின் மணியைவாங்கிப்
பொடிப்பொடி யாகப்பண்ணி
ஆட்டிய கெந்திதானும்
அதற்கிரட்டிப்புச் சேர்த்து

நீட்டிய குப்பிக்குள்ளே
நேராக அடுப்பிலேற்றிப்
பூட்டிய வீசானத்திற்
பூவுடன் மதுவும்வைவயே. (பா. 518)

வைத்துநீ எரிக்கிற்குப்பி
வாய்தனைத் திறந்துபோடு
பைத்திய சலாக்குப்போட்டுப்
பருவமாய் நன்றாய்ப்பாரு
கைத்திய சிவப்பேயானால்
கடுந்தீயை ஆவித்துப்போடு
மொத்திய செந்தூரத்தை
மூட்டிடு முறையைக் கேளே. (பா. 519)

உப்புடன் கெவுரியைச்சேர்த்து உருக்கினால் தோஷங்கள் அகன்று சத்தாய் நிற்கும். இச்சத்திற்கு சம அளவு தங்கமும் பாதி அளவு சூதமும் சேர்த்து மணியாய் உருக்கி வாங்கிய பின்பு இம்மணியை உடைத்து தூளாக்கி இதனுடன் இரண்டு பங்கு கெந்தியை சேர்த்து குப்பிக் குள்ளடைத்து அடுப்பேற்றி. ஈசானனுக்கு மதுவை வைத்து பூசை செய்து தீமூட்டி எரித்து குப்பியின் வாயை திறந்து பார்க்க வேண்டும். எப்பொழுது சரக்கானது சிவந்த நிறங்கொண்ட செந்தூர மாகிறதோ அப்பொழுது தீயை அணைத்து செந்தூரத்தை பத்திரமாக எடுத்துக் கொள்.

கேளுநீ நவலோகத்திற்
கெடிசகத் திரமேயோடும்
வாளுநீ உபரசத்தில்
மாட்டிடு ஐந்நூற்றொன்று
தேளுநீ கல்லுஞ்செங்கல்
துடைத்திடப் பொன்னேயாகும்
வேளுநீ இனியான்சொல்ல
வேதையுங் கண்டிட்டேனே. (பா. 520)

இச்செந்தூரத்தை நவலோகத்துடன் நூற்றுக்கு ஒரு பங்கும், உபரசத்தில் ஐம்பதுக்கு ஒரு பங்கும் சேர்த்து உருக்கினால் பொன்னுண் டாகும். மேலும் இச்செந்தூரத்தைக் கொண்டு கல்லையும், செங்கல்லையும் துடைத்தால் கற்கள் பொன்னாகும். இம்முறையை சிவபெருமானிடம் கேட்டு அறிந்துக் கொண்டு வேல்விழியாளான தேவி எனக்கு சொன்னாள். இதை நானும் செய்து பார்த்தேன்.

கண்டிட்ட வென்றநூலைக்
கசடர்கள் பழித்தாராகில்
மண்டிட்ட ரவிகோடிக்கு
வாதமுங் கிட்டாதப்பா
பண்டிட்டா ரீசன்சாபம்
பார்ப்பதி சபித்தாளப்பா
கொண்டிட்ட சாபத்தாலே
குளறினார் வாதிபாரே. *(பா. 521)*

தேவியால் அருளப்பட்ட முறைகளை நான் என்னுடைய இந்த நூலில் கூறியுள்ளேன். இதை யாரேனும் பழித்தால் கோடி யுகம் முயற்சி செய்தாலும் வாதம் பலியாது. இது சிவனாலும் பார்வதியாலும் விடப்பட்ட சாபமாகும். இச்சாபத்தால் வாதிகள் குளறிப்போனார்கள்.

பாரிந்த நூலைப்பார்த்துப்
பழித்தவர் நரகில்வீழ்வார்
காரிந்தப் பெரியோரிட்ட
கடுகிய சாபமப்பா
யாரிந்தச் சாபந்தீர்ப்பா
ரானாலுங் கூடாதையா
வாரிந்த முலையாள்சாபம்
மயங்குவார் மாளுவாரே. *(பா. 522)*

இந்த நூலைப் பார்த்து பழித்தவர்கள் நரகில் வீழ்ந்து மாள்வார்கள். இச்சாபம் பெரியோரால் இடப்பட்டதாகும் இச்சாபங்களை தீர்க்க யாராலும் முடியாது. பழித்தவர்கள் மயங்கி மாள்வார்கள்.

மாளுவார் கசடர்தானும்
மகத்தான வல்லோர்கேளாய்
தாளுவார் நூலிலாரத்
தளர்வுகாண் வாதிமென்பார்
ஆளுவார் ரசத்தைக்கட்ட
அறிந்திடில் வாதசித்தி
கேளுவார் கெட்டுக்கெட்டுக்
கெடுகிறார் சுடுகிறாரே. *(பா. 523)*

கெட்ட புத்தி கொண்ட மக்கள் மட்டுமே வாதம் வராமல் மாள்வார்கள். ஆனால் மகாவல்லமை வாய்ந்த பெரியோர்கள் இந்த நூலைப் பார்த்த மாத்திரத்தில் ரசக்கட்டு முறையும் வாத சித்தியும் பலிதமாகும். மற்றவர்கள் இதை அறியாமல் மருந்துகளை சுட்டு கறியாக்குவார்கள்.

சுடுகிறார் கோடிமட்டும்
சுகமான நூலைத்தேடார்
சுடுகிறார் பாவிபாரு
தொடர்ந்திட்டார் குருவின்பின்னே
சுடுகிறார் புலையரையா
தூஷிப்பார் வாதமென்றால்
சுடுகிறார் ரசத்தைக் கட்டச்
சூட்சமுங் கண்டிடாரே. (பா. 524)

சுலபமான முறைகளை கூறும் இந்நூலை தேடாமல் கோடி முறை சுட்டு கரியாக்குவார்கள். மேலும் சற்குருவை தேடி அவரை பின் தெடர்ந்து தொண்டு புரியமாட்டார்கள். வாதத்தை தூஷிப்பவர் புலையராவார். இப்புலையர்கள் ரசக்கட்டு முறையை அறிந்திருக்க மாட்டார்.

வாதவழக்கக் குறிப்பு

கண்டிடுங் குருவேசொல்லக்
கைகண்ட சித்தியாகும்
ஒண்டிடுங் குருவில்லாட்டால்
உத்தம நூலைப்பாரு
தண்டிடும் நூலில்லாமல்
தலைகீழாய்ச் சுட்டுமாய்வர்
மண்டிடுஞ் சுட்டதுவும்
மயக்கத்தில் மாளுவாரே. (பா. 525)

குருவின் மூலம் வாதத்தை அறிந்து கொண்டால் வாதம் உடனே சித்தியாகும். சரியான சற்குரு கிடைக்கா விட்டால் என்னுடைய நூலைப் பார். இவ்விரண்டும் கிடைக்காதவர்கள் வாத முறையை தலைகீழாக செய்து சரக்குகளை சுட்டு கரியாக்குவார்கள். அதுமட்டுமின்றி மாயை என்னும் மயக்கத்தில் வீழ்ந்து மாள்வார்கள்!

மயக்கமுந் தெளிந்துபோகு
மாயியைப் பூசைபண்ணு
மயக்கமுந் தெளிந்துபோகும்
வாசியைப் பூட்டிவாங்கு
மயக்கமுந் தெளிந்து போகும்
வன்காய சித்திபண்ணு
மயக்கமுந் தெளியுமையா
மாகத்துக்கள் பதத்தைப் போற்றே. (பா. 526)

போற்றியே நின்றார்க்கப்பா
பொருளுண்டு வாதமுண்டு
ஆற்றிய மனதுக்குள்ளே
இருமன தானானாகில்
தோற்றிய படியேவாதஞ்
சொட்டொன்று பொட்டுப்போகும்
மாற்றியே மனதின்பேயை
வாதத்தை யுரைத்துப்பாரே. *(பா. 527)*

மயக்கத்தை அறுத்து ஆயியான தேவியை பூசை செய்ய வேண்டும். மேலும் வாசியை மூலத்தில் பூட்டி யோகம் பயின்று காயத்தை சித்தி பண்ணி முனிவர்களின் பாதத்தை வணங்கினால் பரிபாஷைப் பொருள்களும், வாதமும் மனதில் தானே தோன்றும். தானே தோன்றிய வாதமுறைகளை செய்து மனம் என்ற பேயை அடக்க வேண்டும்.

பாருநீ சூதராசன்
பார்க்கிற மார்க்கமெல்லாம்
பாருநீ சூதராசன்
பரிசத்தி லேமமாகப்
பாருநீ சூதராசன்
பகலிர வொன்றாய்க் காட்டப்
பாருநீ சூதராசன்
பசிக்குண்ண மருந்து கேளே. *(பா. 528)*

சூதராசன் எனப்படும் ரசத்தை கட்டி வாதம் பார்க்கும் முறைகளை கூறுகிறேன் கேள்! சூதத்தை முறையாக கட்டி லோகத்துடன் பரிசித்தித்தா லேமமாக்கவும் பகலிரவை ஒன்றாக்கவும், பசிக்கு மருந்தும் கூறுகிறேன் கேள்.

கேளுநீ சூதராசன்
கெடிபடக் குகையில் நின்று
வாளுநீ யுருகும்போது
மாட்டிய முறையைக்கேளு
கோளுநீ பூநாகத்தின்
கொடியதோ ரசத்தையூட்டி
யாளுநீ புடத்தைப்போட்டே
அப்பனே விடுவித்தேறே. *(பா. 529)*

ஏறிடிற் சூதராசர்க்
கெழுந்த தீபத்தைக் கேளாய்
ஆறிடிற் சூரன்போலே
அகப்பட்ட தெல்லாமெல்லும்
தேறிடிற் கெந்திசத்தைச்
சிறக்கவே இட்டுத்தாண்டு
மாறிடிற் பிறக்கத்தில்
வழங்கிய சத்தையூட்டே. (பா. 530)

சூதத்தை குகையில் வைத்துருக்கி உருக்கும் பொழுது சூதமானது குகையில் உருகி நின்று கண்விட்டாடும். அச்சமயம் பூநாகத்தின் சத்தை ரசத்துடன் சேர்த்து மணி போலாக்கி புடம் போட்டால் சூதமணியானது தன்னிடம் அகப்பட்ட சகலபொருளையும் விழுங்கும். பின்பு இம்மணியை முன்போல் குகையில் வைத்துருக்கி கெந்தி சத்தை சேர்த்து புடம் போட வேண்டும்.

ஊட்டிய பிறகுகேளு
உபரச மெல்லாங்கூட்டு
நீட்டிய மூலிகைக்குள்
நின்றதோ ரசத்தையூட்டு
காட்டிய நவலோகத்தைக்
கடந்தேறப் புடத்தையிட்டு
நாட்டிய ரத்னமான
நவரத்னங் கொடுத்துத்தாண்டே. (பா. 531)

கெந்தி சத்தை சேர்த்தப் பின்பு உபரசத்தின் சத்துக்களையும், மூலிகைகளின் சத்துக்களையும், நவலோகங்களையும், வரிசையாக ஊட்டிப் புடம் போட்டுப் பின்பு நவரத்ன சத்தை ஊட்ட வேண்டும்.

தாண்டியே கடந்தபின்பு
தனித்தங்கச் செம்பைப்போடு
காண்டிய குளிகைபார்த்தாற்
கண்கொள்ளா வருணன்போலாம்
ஏண்டியே கடந்திட்டேற
இயல்பான புடத்தைக்கேளு
ஆண்டியே வீசன்சொல்ல
ஆத்தாளுங் கேட்டவாறே. (பா. 532)

சத்துக்களை ஊட்டிய பின்பு தங்கத்தையும் செம்பையும் மணியுடன் சேர்த்துருக்கினால் மணியானது சூரியனைப் போன்று பிரகாசிக்கும். இனி சூதத்திற்கு சத்தை யூட்டும் பொழுது செய்ய வேண்டிய குகையைப் பற்றி கூறுகிறேன் கேள். இம்முறையை ஈசனிடமிருந்து பார்வதி அறிந்து எனக்கு சொன்னாள். நான் கேட்டபடி உனக்கு சொல்கிறேன் கேள்.

வாறுகேள் குகையினுள்ளே
மாட்டியே மருந்துபூசத்
தேறுகேள் சிலையாங்கெந்தி
சேர்த்திட நிமிளைகாந்தம்
பேறுகேள் பூநாகந்தான்
பேரஞ்சுஞ் சமனாய்க்கூட்டித்
தாறுகேள் கஞ்சாவித்து
தனிரோமத் தைலம்வாரே. *(பா. 533)*

வார்த்தஞ்சும் அரைத்துநன்றாய்
வாகுடன் குகையிற்பூசிச்
சேர்த்தஞ்சுக் கட்டிச்சூதஞ்
சுகமாக உள்ளேவைத்துப்
போர்த்தஞ்சு பூநாகத்தைப்
புனுகுறச் சமனாய்ச் சத்தைக்
கார்த்தஞ்சு முருகும்போது
கடும்புடந் தாக்கிக்காணே. *(பா. 534)*

பஞ்சசுன்னத்தால் குகைசெய்து அக்குகையினுள் மனோசிலை கெந்தி, நிமிளை, காந்தம், பூநாகம் இவை ஐந்தையும் சம அளவு எடுத்து ஒன்றாய்ச் சேர்த்து இவற்றுடன் கஞ்சாவிரையையும் ரோமத் தைலத்தையும் வார்த்தரைத்து (குகையினுள்) பூச வேண்டும். இம்மருந்து பூசிய குகைக்குள் கட்டிய சூதத்தை வைத்துருக்கி சம அளவு பூநாக சத்தை யூட்டிப் புடம் போட வேண்டும்.

காணினிப் புடத்தின்மார்க்கங்
கரையில்லாஞ் சொல்வேன்யானும்
வாணினி வாழைமத்தை
வழங்கிய சித்திரமூலம்
கோணினி ஆடாதோடை
குலாவு முள்ளங்கிதாழை
தோணுநா யுருவியோடே
துலங்கிய அமுரி கூட்டே. *(பா. 535)*

கூட்டுநீ தேவதாரி
குலாவிய புரசோடென்னா
மாட்டுநீ புனன்முருங்கை
மகத்தான சதுரக்கள்ளி
தீட்டுநீ புறாவினெச்சம்
சிறந்திடுங் கொடியாம்கள்ளி
ஆட்டியே பதினைந்துந்தா
னப்பவெவ் வேறுவையே. (பா. 536)

புடம் போடும் பொழுது அதனுடைய மார்க்கங்களையும் கூறுகிறேன் கேள்! வாழை, ஊமத்தை, சித்திரமூலம், ஆடாதோடை, எள்ளு, முள்ளங்கி, கற்றாழை, நாயுருவி, அமுரி, தேவதாரி, புரசம், புனன்முருங்கை, சதுரக்கள்ளி, புறாஎச்சம், கொடிக்கள்ளி, போன்ற பதினைந்து சரக்கையும் தனித்தனியாய் சுட்டு சாம்பலாக்கி

வைத்திதை வெவ்வேறாக
வளம்பெறச் சுடுநீசாம்பல்
கைத்திதை வகையொன்றொன்று
கலந்தொரு படியேபோடு
பைத்திதைப் பாண்டத்துள்ளே
பாங்காகக் கொட்டிநீயும்
மைத்திதி வமுரிதானும்
வாழ்படி பதினைந்துள்ளே. (பா. 537)

ஊற்றுநீ கோசலத்தை
யுணரவே பதினைந்துள்ளே
யாற்றுநீ கழுதையானை
ஆடொடு மூன்றுங்கேளு
போற்றுநீ வகைக்கைந்தைந்து
புகழுறப் படியேவாரு
தோற்றுநீ படியெல்லாந்தான்
தொகைநாற்பத் தைந்துமாச்சே. (பா. 538)

வகைக்கு ஒருபடி விகிதம் பதினைந்து வகையான சாம்பலையும் பானையில் போட்டு, பதினைந்துபடி அமுரியை விட்டுக் கரைத்து மேலும் அப்பானையில் கோசலம் என்ற பசுமூத்திரத்தை (பசுவின் கோமயம்) பதினந்துபடியும் அதனுடன் கழுதை, யானை, ஆடு போன்ற இம்மூன்று வகையான மிருகங்களின் நீரையும் வகைக்கு ஐந்துபடி சேர்க்கவேண்டும். ஆக இச்சரக்குகளின் மொத்த தொகை நாற்பத்தைந்து படியாகும்.

ஆச்சிந்த அமுரியோடே
அப்பனே சாம்பலிலாக்கத்
தேச்சிவை ஒன்றாய்க்கூட்டித்
திறமுடன் தெளிவைவாங்கிக்
கோச்சியே குமுறக்காய்ச்சு
குழம்புபோற் பதத்தைப்பாரு
மாச்சிய குழம்புக்குள்ளே
மாட்டிய மருந்துகேளே. *(பா. 539)*

அனைத்து சரக்குகளையும் ஒன்றாய்ச் சேர்த்து கலக்கி தெளிய வைத்து தெளிவை வாங்கி பானையில் விட்டு குழம்பு போல் காய்ச்ச வேண்டும். காய்ச்சிய இக்குழம்பினுள் சேர்க்க வேண்டிய மருந்துகளைக் கூறுகிறேன் கேள்:

கேளுநீ இணங்கனோடு
கெடியான படிகிகாரம்
காளுநீ கல்லுப்போடு
கலந்திடு மிந்துப்பொக்க
நாளுநீ சத்திச்சாரம்
நவச்சார மெவமாஞ்சாரம்
பாளுநீ லவணமான
பஞ்சமா லவணங்கூட்டே. *(பா. 540)*

கூட்டிதில் அன்னபேதி
கொடுங்கடல் நுரையுமொக்க
வாட்டிய வகைகளொன்றுக்
கப்பனே பலமுமைந்து
தீட்டியே பொடியாய்ப்
பண்ணிச் சேரந்தக் குழம்புக்குள்ளே
நீட்டிய பாஷாணத்தின்
நிலையினிச் சொல்லக்கேளே. *(பா. 541)*

வெடியுப்பு, படிகாரம். கல்லுப்பு, இந்துப்பு, சத்தி சாரம், நவச்சாரம், எவச்சாரம் பஞ்சமாலவணம், அன்னபேதி, கடல்நுரை, போன்ற சரக்குகளை வகைக்கு ஐந்து பலம் எடுத்து பொடி செய்து மேற்கூறிய குழம்புடன் சேர்க்க வேண்டும்.

கேளுநீ கெந்தி வீரங்
கெடியான சங்குச் சுன்னம்

வாளுநீ மூன்றுங்கேளு
வகையொன்று பலமதொன்று
தேளுநீ எருக்கம்பால்தான்
சிறக்கவோர் படியேவாரு
வாளுநீ யொன்றாய்க்கூட்டி
வழங்கிய குழம்பில்வாரே. *(பா. 542)*

இனி இக்குழம்பில் சேர்க்க வேண்டிய குழம்பை பற்றி கூறுகிறேன் கேள்! கெந்தி, வீரம், சங்குச் சுன்னம், இவை மூன்றையும் வகைக்கு ஒரு பலம் எடுத்து ஒரு படி எருக்கம் பாலில் போட்டு கரைத்து மேற்கூறிய குழம்புடன் சேர்க்க வேண்டும்.

வார்த்துநீ சுண்டக்காய்ச்சி
வளமான மெழுகுபோலே
யேத்திநீ பீங்கானுக்குள்
எடுத்திதைப் பதனம்பண்ணித்
தோத்திய நெல்லைப்போடிற்
சுகமான குழியில்வைநீ
ஆத்திய பதினைந்தாநாட்
கப்புறம் வாங்கிக்கொள்ளே. *(பா. 543)*

மருந்துகளை சேர்த்த பின்பு குழம்பை, சுண்டக் காய்ச்சி மெழுகுபோலாக்கி, பீங்கானில் வைத்து பதனம் செய்ய வேண்டும். பீங்கானை நெல்லுமிக்குள் பதினைந்து நாட்கள் வைத்தெடுக்க வேண்டும்.

கொள்ளென்ற பீடத்தின்பேர்
கோரமாம் ருத்ரனாமம்
கொள்ளென்ற பீடத்தின்பேர்
கொடுஞ்சூரா சூரனாகும்
கொள்ளென்ற பீடத்தின்பேர்
கொடிதான பிரசானந்தன்
கொள்ளென்ற பீடத்தின்பேர்
கொடுங்கால விஷமாச்சொல்லே. *(பா. 544)*

அகோரருத்திரன், சூராசூரன், கொடி பிரசானந்தம், காலவிஷம், போன்றவை மேற்கூறிய மருந்தின் பெயர்களாகும்.

மூலர் ஆயிரங் குறிப்பு

சொல்லிய பீடந்தானே
துலங்கிய யெட்சத்துள்ளே

மல்லிய வீயன்றானு
மறந்தாறோ கொஞ்சம் சொன்னார்
அல்லிய மூலமூர்த்தி
யாயிரத் துள்ளேசொன்னார்
தல்லிய வியல்புகண்டு
சாற்றினேன் சாற்றினேனே. *(பா. 545)*

இம்முறையை சிவபெருமான் தன்னுட நூலில் சிறிய அளவே கூறினார். ஆனால் திருமூலர் தன்னுட வாத காவியம் ஆயிரம் என்ற நூலில் முழுமையாக கூறியுள்ளார். அதை முழுமையாக அறிந்து இங்கே சொன்னேன்.

சாற்று பீடத்தையானுந்
தாக்கு சாரணையைக் கேளாய்
போற்றிய சூதம்பத்து
புகழுற்ற சத்துபத்து
தோற்றியே உருகும் போது
சூடொன்று புடத்தைநீயு
மாற்றிய சத்தின்ராகம்
அப்பனே யுண்மைபாரே. *(பா. 546)*

மேற்கூறிய பீடமருந்தான அகோர ருத்திரன் ஈன்ற மெழுகை சாரணையுடன் சேர்க்கும் முறையைக் கேள்! பத்து பலம் கட்டிய சூதத்தையும் பத்து பலம் சத்தையும் சேர்த்து உருக்கி புட்ட போடுகையில் மணியானது சத்தை வாங்காமல் கக்கும்.

பாருநீ சத்து தானும்
பலவர்ண லோகந்தானும்
தாருநீ வாங்கிக்கக்கில்
தனித்தனி வர்ணங்காணும்
கோருநீ நிறுத்துப்பார்க்கக்
கொடுஞ்சூத வெடையேநிற்கும்
ஆரினிப் பண்ணப்போறார்
அறிந்தவர் சித்தர்காணே. *(பா. 547)*

ஆகவே சத்துடன் மருந்தையும் கூட்டி மணியுடன் சேர்த்துருக்கி புடம் போட்டால் மணியானது சத்தை தன்னுள்ளே வாங்கிக் கொள்ளும். (இதை சோதிக்க வேண்டுமென்றால்) மணியை எடைப் போட்டுப் பார்க்குங்கால்

மணியானது சூதத்தின் எடையே நிற்கும். இச்சாரணை முறையை யார் செய்வார்கள்? செய்தவர்கள், சித்தராவார்.

காணிந்தப் பிடத்தோடொக்கக்
கயிலையோன் பிடமுந்தோற்கும்
வாழ்நந்தி சொல்லயானும்
வகையாகப் பார்த்துக்கண்டேன்
பூணிந்தச் சத்துகூட்டிப்
போக்கிடக் கேளுமப்பா
ஆணிந்த வொருக்காலாச்சு
அறிந்திடாய் அறிந்திடாயே. (பா. 548)

அறிந்தொரு வசையேநீயு
மாட்டிச் சாரணையேசெய்யில்
மறிந்தொரு நூற்றுக்கோடும்
மறுதரம் விடுவித்தாக்கால்
பிறிந்தொரு வேதைதானும்
பேர்சகத் திரத்திலோடும்
தறிந்தொரு மூன்றேயானாற்
சகத்திர முப்பதாமே. (பா. 549)

என்னால் கூறப்பட்ட பீட மருந்தானது சிவபெருமானுட பீட மருந்தைக் காட்டினும் மேன்மையானது. இம்மருந்தைக் கூட்டி ஒரு முறை சாரணை செய்தால் வேதையானது ஒரு நூற்றுக்கு ஓடும். இருமுறை சாரணை செய்தால் வேதையானது ஆயிரத்துக்கு ஓடும். மூன்று முறை சாரணை தீர்த்தால் வேதையானது முப்பதாயிரம் வரை வோடும்.

ஆமினி நான்கதனால்
அப்பனே லட்சமோடும்
போமினி ஐந்தேயானால்
பொருநத்ய கோடிக்கோடும்
தாமினி ஆறேயானால்
தனித்திடும் பரிசவேதை
ஓமினித் தாண்டத்தாண்ட
வுயரமுங் கண்டிலேனே. (பா. 550)

நான்கு முறை தீர்த்தால் லட்சம் வரையினும், ஐந்து முறை தீர்த்தால் கோடி வரையிலும், ஆறுமுறை தீர்த்தால் பரிச வேதையும் அதற்கு மேல் சாரணை தீர்த்தால் ஏற்படும் வேதை முறையை நான் அறிந்திருக்கவில்லை.

கண்டிலேன் பரிசவேதை
காண்கிலேன் சத்தவேதை
மண்டிலேன் ரூபவேதை
வாய்க்கொண்டே யூதவேதை
பண்டிலேன் லோகம் பார்த்துப்
பழுவென்றாற் பழுக்கும்வேதை
யொண்டிலேன் குளிகைவைத்தே
உறப்பாச்சிற் பொன்னுமாமே. *(பா. 551)*

பலமுறை சாரணை தீர்த்தால் (பத்திற்கும் மேலான சாரணைத் தீர்த்தால்) தரிசவேதையும், சப்தவேதையும், ரூபவேதை, வாயால் காற்று ஊதி மாத்திரத்தில் வேதையும், தங்கமாவாய் என்று கூறிய மாத்திரத்தில் வேதையும் பலிதமாகும்.

பொன்னென்றே யூன்றிநெஞ்சிற்
பொன்னாகும் மலைகள்பாரு
பன்னென்று மேலேநோக்கப்
பகலிர வொன்றாய்ப் போகும்
கன்னென்ற மணித்தாய் காண்பான்
கடுவெளி மூடியுங்காணும்
தன்னென்ற சாங்கமாகச்
சகலமும் போகும்பாரே. *(பா. 552)*

இதற்கும் மேலாக சாரணை தீர்த்து மணியை கையில் வைத்துக் கொண்டு மலைகளை நோக்கி பொன்னாக வேண்டும் என்று நினைத்தால் மலைகள் பொன்னாகும். இதேபோல் அண்ட உச்சியை நோக்கினால் பகலும் இரவும் ஒன்றாகப் போகும். மேலும் மணித்தாயானவள் வெளித் தோன்றி பிரகாசிப்பாள். மாயையானது ஒழிந்து ஞானம் தோன்றி பிரகாசிக்கும்.

பாருநீ யிவைகளெல்லாம்
பகிர்ந்தொரு பத்துக்குள்ளே
தாருநீ யுபரசங்கள்
தனித்திடும் பாஷாணங்கள்
கோருநீ நவலோகங்கள்
கொடுமூலி ரத்னமெல்லாம்
ஆருநீ விடுவித்தேறி
லாணுக்கோ ரணுமாமே. *(பா. 553)*

மேற்கூறியவை யாவும் மணிக்கு பத்து முறை சாரணை தீர்த்த மாத்திரத்தில் பலிதமாகும். முறையாக உபரசங்களின் சத்தையும், பாஷாணம், மற்றும் நவலோகங்களின் சத்தையும், மூலிகை சத்தை மணிச் சாரணையாக செய்து ஊட்டில், ஆண் வர்க்கத்தில் மேன்மையுள்ள ஆணாவாய்.

ஆமினி யிந்தமார்க்க
மடைவாகத் தீரானாகில்
போமினி வாதம் பொய்யாய்ப்
போனமட்டுங் காண்பார்கள்
தாமினிச் சூதத்துக்குத்
தனிப்பல மில்லையில்லை
காமினி உபரசங்கள்
கடுலோக மறுபதென்னே. *(பா. 554)*

என்றதோ ரினங்களெல்லா
மியல்புடன் பெண்ணேயாச்சு
கன்றதோர் சூதராசன்
கபளித்தா னையாகேளு
கொன்றதோ ராகமுண்டோ
கொழுப்பல்லோ சிவன்தான்கேளு
அன்றவே வேதைமார்க்க
மாத்தாளு மறியாள்கேளே. *(பா. 555)*

முறையாக சூதத்துக்கு சாரணை ஏற்றவில்லை என்றால் வாதம் என்ற வார்த்தையே பொய்யாய்ப் போகும். ஏன் என்றால் வெறும் சூதத்திற்கு வேதை உண்டாக்கக் கூடிய பலம் இல்லை. சூதத்துடன் உபரசமும் பாஷாணமும் நவலோகங்களும் சேர்ந்தால் தான் பொன்னுண்டாகும். சூதராசன் என்ற ரசமானது கபளித்தத்தால் ஏற்படும் வேதையைப் பற்றி ஆத்தாளும் அறிந்திருக்கவில்லை.

கேளுநீ பனிரெண்டாகுங்
கெடியான குளிகைதன்னில்
வாளுநீ கருபிபோக
மற்றதை விடுவித்தேறு
நாளுநீ சுரபிரெண்டில்
நவலோகம் போதுமாகக்
காளுநீ விடுவிக்காட்டாற்
கவனமு மெடுக்காதென்னே. *(பா. 556)*

எடுக்காத கவனந்தானு
மேறாது பரிசவேதை
கொடுக்காது முத்திசூதங்
கோபத்தின் வேரறாது
அடுக்காது போதத்தோடு
மாத்தாளைக் காணொட்டாது
தடுக்காது சமாதிக்குள்ளே
சந்தேகங் காணுங்காணே. *(பா. 557)*

பனிரண்டு வகையான குகையில் சுரபி, போகம் என்ற குளிகைகளை முதலில் செய்து அதன் மூலம் மற்ற குளிகைகளை கட்டி சாரணை தீர்க்க வேண்டும். இல்லையேல் கவுனப்பிரவேசம் பலியாது. அது மட்டுமின்றி பரிச வேதையும் பலிதமாகாது. மேலும் ஆனந்த போதத்தில் ஆத்தாளான தேவியை பார்க்க முடியாது. முழுமையான சமாதியும் கைகூடாது.

காணவே குளிகைவாயிற்
கபளித்து மேலேநோக்கப்
பூணவே பனிரெண்டான
பொருளெல்லாம் வெளியாய்க்காணும்
ஆணவே கீழேநோக்கி
லதிற்பனி ரண்டேகாணும்
தோணவே மூலாதாரச்
சொரூபமுங் காணுங்காணே. *(பா. 558)*

ஆக முறையாக குளிகையை செய்து வாயிலிட்டு அண்டவுச்சியை நோக்கினால் பனிரண்டாய் பிரிந்து நிற்கும். பொருள் வெளியாய் தோன்றும். அதே போல் கீழே நோக்க முன்போல் அதே பனிரண்டு பொருள் வெளியாய்த் தோன்றும். மேலும் மூலாதாரத்தில் மனதை வைத்தால் ஆத்ம சொரூபம் தோன்றும்.

காணுமே யுள்ளேசோதி
கசிடெல்லா மற்றுப்போகும்
பூணுமே மனமுமொன்றிப்
பூரணந் தானேயாகுந்
தோணுமே லோகமெல்லாஞ்
சுருதியின் முடிவுகாணு
மாணுமே தேகம்போகா
வடாலாஞ் சித்துபாரே. *(பா. 559)*

மேலும், சோதியின் மாசுகள் அகன்று மனமானது சோதியுடன் ஒன்றி தானே பூரணப் பொருளாய் நிற்கும். இந்நிலையில் சுருதியின் (வேதத்தின்) முடிவான பொருள் இன்னதென்று விளங்கும். அதுமட்டுமின்றி தேக சித்தியும் உண்டாகும். இதனால் பலவகைசித்துகள் விளையாடலாம்.

பாரிந்தக் குளிகைவிட்டாற்
பலியாது யோகந்தானும்
பாரிந்தக் குளிகைவிட்டாற்
பலியாது ஞானமார்க்கம்
பாரிந்தக் குளிகையிட்டாற்
பரிசத்தி லேமமில்லை
பாரிந்தக் குளிகைமார்க்கம்
பராபரை சொன்னவாறே. *(பா. 560)*

குளிகை இல்லையென்றால் யோகம், ஞானம், ஏமம் (வேதை) போன்றவை கைகூடாது. இதை பராபரையான தேவி எனக்கு சொன்னாள் அதை இங்கு நான் சொல்லி யுள்ளேன்.

வாறுகே ளுலகத்தோர்கள்
மனதாலே யோகம்பார்ப்பார்
வாறுகே ளுலகத்தோர்கள்
வந்தது ஞானமென்பார்
வாறுகே ளுலகத்தோர்கள்
வாசியைக் கண்டோமென்பார்
வீறுகே ளுலகத்தோர்கள்
வார்த்தை யான்மருளர் தாமே. *(பா. 561)*

குளிகை இல்லாமல் உலகத்தோர்கள் வெறும் மனதைக் கொண்டு ஞானம் பார்த்து சித்தியாயிற்று என்று கூறுவார்கள். மேலும் வாசியையும் நாங்கள் கண்டு கொண்டோம் என்று கூறித்திரிவார்கள். இவையாவும் உலகத்தோரின் மருள் கொண்ட செய்கையாகும் (வார்த்தையாகும்).

மருளெல்லாம் போகமென்றே
வைத்தன ரீசன்சூத
மருளல்லா துண்டோவப்பா
வருளது சூதமாச்சு
பொருளெல்லா மொன்றேயல்லாப்
பொருள்வேறு முண்டோசொல்லா
யிருளெல்லாம் போனமொத்தி
லிருந்தது மாயைபாரே. *(பா. 562)*

மருள் கொண்டவர்களின் மருளைப் போக்க சூதம் என்ற ஒரு பொருளை ஈசன் உண்டாக்கினார். இதனால் மருளானது விலகும். உலகத்தில் பொருள் ஒன்றேயாகும். இரண்டு பொருள்கள் கிடையாது. இருள் என்ற மாயை புத்தியுடன் கூடி நின்றால் (இரண்டு பொருள் போல் தோன்றும்)

மாயைதா னென்றுசொல்வார்
வாதத்தைக் கசடர்தாமும்
சாயைதான் ஞானம்பார்க்கத்
தனித்திடு மேனியப்பா
தாயையிற் சிக்குவாள்பார்
சகலமு மாடலாகும்
வாயைதான் வாசியென்னும்
மறுத்துமா லேறலாமே. *(பா. 563)*

வாதத்தை கசடர்கள் மாயை என்று கூறுவார்கள். வாதத்தை கொண்டு ஞானம் பார்த்தால் தேகம் சித்தியாகி தேவியானவள் வெளித் தோன்றுவாள். இதனால் சகல சித்தும் விளையாடலாம். வாசி ஒடுங்கி ஆறு தளமும் தோன்றும். இத்தளத்தை கடந்து பூரணத்தில் கலந்து நிற்கும்.

வெடியுப்பு கம்பி கட்டு

ஏறவே இணங்கன்தன்னை
இயல்புடன் உருவாய்க்கட்டப்
பேறவே ஈயஞ்சூதம்
பிறப்புடன் சமனாய்ச்சேர்த்துத்
தாறவே இரண்டுக்கொக்கச்
சமன்போடு உப்புச்சுன்னம்
தேறவே அரைத்திட்டூது
சிறப்பான சுன்னமாமே. *(பா. 564)*

சுன்னத்தை அண்டநீராற்
சுகமாகக் குழைத்துக்கொண்டு
பன்னற்ற இனங்கன்மேலே
பாய்ச்சிடு நாலுக்கொன்று
கன்னற்ற ரவியிற்போடு
கடுவோட்டில் வறுத்துக்கொண்டு
மன்னற்ற பின்புநீயும்
வாட்டிடாய் வாட்டிடாயே. *(பா. 565)*

வெடியுப்பை கம்பி போல் கட்டுவதற்கு ஒரு வழி சொல்கிறேன் கேள்! ஈயத்தையும் ரசத்தையும் சம அளவு சேர்த்து அதனுடன் உப்புச் சுன்னத்தை ஈயரசத்தின் எடைக்கு சம அளவு கூட்டி நன்றாய் அரைத்து குகையில் வைத்தூதினால் சுன்னமாகும். இச்சுன்னத்தை அண்ட நீரால் (செயநீரால்) குழைத்து வெடியுப்பின் மேல் நாலுக்கொரு பங்கு பூசி ரவியில் காயவைத்து கரியோட்டிலிட்டு வறுத்து பின் தீயில் வைத்து வாட்ட வேண்டும்.

வாட்டிட இணங்கன்சேர்ந்து
வச்சிரக் கம்பியாகும்
காட்டிடக் கம்பிதானுங்
கடுகுஞ்செந் தூரங்கேளு
மூட்டிடு தங்கச்சுன்னம்
முயன்றிடு வீரம்போட்டு
ஆட்டிடு சிவப்பேயாகும்
அதையிதிற் பூசிப்போடே. *(பா. 566)*

போட்டிட ரவியினுள்ளே
புகுந்துசெந் தூரமாகும்
மாட்டிட நவலோகத்தில்
வர்ணமும் பதினைந்தாகும்
நீட்டிடு நூற்றுக்கொன்று
நிரைநிரை பொன்னுமாகும்
ஆட்டிடு தூஷித்தோர்வாய்
அறைந்துநீ மண்ணைப்போடே. *(பா. 567)*

போட்டுநீ தூஷித்தோர்வாய்
பொடியான புழுதியள்ளி
நீட்டிநீ யூதிப்பாரு
நிலையொன்று தப்பினாலுங்
கூட்டிநீ நூலைப்பாரு
குறைந்தது வெளியாய்ப் போகும்
மாட்டிநீ வாதம்பார்த்தே
மற்றதால் முடிவைப்பாரே. *(பா. 568)*

முறையாக வாட்டினால் வெடியுப்பானது கம்பி போல் கட்டி கிடப்படும் இவ்வெடியுப்பை செந்தூரமாக செய்வதற்கு வகை கூறுகிறேன் கேள்! தங்கச் சுன்னத்துடன் வீரத்தை சேர்த்தால் தங்கச் சுன்னம் சிவந்தநிறங் கொள்ளும். இச்சிவந்த மருந்தை கட்டிய வெடியுப்பின் மேல்

பூசி ரவியில் வைத்தால் செந்தூரமாகும். இச்செந்தூரத்தை நவலோகத்தில் நூற்றுக்கொரு பங்கு சேர்த்தால் பதினைந்து மாற்றுள்ள தங்கமாகும், இம்முறையை யாரேனும் தூஷித்தால் அவருடைய கன்னத்தில் அறைந்து வாயில் மண்ணையள்ளி இடு. இவ்வெடியுப்பு முறையில் ஏதேனும் ஒன்றை மறந்தாலும் வாதம் பலியாது. ஆகவே இந்நூலை நன்றாய்படித்து பின் ஆராய்ந்து செய்வாயாயின் வாதம் முதல் யோகம் வரை எல்லாம் பலிதாகும்.

பாருநீ நாகமென்று
பரிவான சூதமொன்று
தாருநீ சமனாய்ச்சேர்த்துச்
சரிபோட இணங்கன்சுன்னங்
கோருநீ அரைத்தேயூது
கொடுஞ்சுன்ன மாகும்பாரு
ஆருநீ துருசுமேலே
அப்பியே வாட்டிடாயே. *(பா. 569)*

துருசுக் கட்டு

வாட்டிடத் துருசுதானும்
வச்சிரம் போலேகட்டும்
ஒட்டிடத் தங்கச்சுன்னம்
உடன்வீரம் ஒன்றாய்த்தேய்க்கக்
காட்டிடச் சிவப்பேயாகுங்
கபளிப்பாய் துருசுமேலே
மூட்டிநீ ரவியிற்போட
முடுகிச் செந்தூரமாமே. *(பா. 570)*

நாகம், சூதம் இவை இரண்டையும் வகைக்கு ஒரு பலம் எடுத்து ஒன்றாய்ச்சேர்த்து பின் இந்நாக சூதத்தின் எடைக்கு சம அளவு வெடியுப்புச் சுன்னத்தை சேர்த்தரைத்து குகையில் வைத்தூதினால் சுன்னமாகும். இச்சுன்னத்தை துருசின் மேல் பூசி தீயில் வைத்து வாட்டினால் வைரம் போல் கட்டி திடப்படும். இதை செந்தூரம் செய்ய வேண்டுமானால் கேள்! தங்கச் சுன்னத்துடன் சம அளவு வீரத்தை சேர்த்தால் சிவந்த நிறங்கொள்ளும். சிவந்த நிறங்கொண்ட தங்கச் சுன்னத்தை துருசின்மேல் பூசி ரவியில் வைத்தால் துருசானது செந்தூரமாகும்.

செந்தூரம் நவலோகத்தில்
தேய்க்கவே பொன்னுமாகும்
எத்தூர மோடுமென்றால்
இதுகாணும் பரிசவேதை
கந்தூருந் துருசுவேதை

கரையில்லை கணக்குமில்லை
நந்தூருந் துருசுவர்ணம்
நாயகி வர்ணந்தானே. (பா. 571)

இத்துருசுச் செந்தூரத்தை நவலோகத்தில் சேர்க்க பொன்னாகும். மேலும் இச்செந்தூரத்தால் பரிசவேதையும் பலிதமாகும். ஆனால் துருசால் ஏற்படும் பொன் மாற்றின் அளவுக்கு கரையில்லை, கணக்கும் இல்லை, வேதையுண்டாக்கும் துருசினுட வர்ணமாகபட்டது தாயின் வர்ணமாகும். (அதாவது பச்சை நிறங்கொண்ட பார்வதியின் நிறம்).

வர்ணமாம் வங்கமொன்று
வளமான சூதமொன்று
தர்ணமாஞ் சரியாய்ச்சேர்த்துத்
தன்னெடை சாரச்சுன்னம்
கர்ணமாய்ப் போட்டரைத்துக்
கடுகவே யூதச்சுன்னம்
மர்ணமாய்ச் சாரமுப்பு
வகைவகை பூசிவாட்டே. (பா. 572)

வாட்டிடிற் கட்டும்ரெண்டும்
வகைகேளு செந்தூரிக்கத்
தாட்டிடத் தங்கச்சுன்னம்
சமனாக வீரம்போட்டு
மூட்டிடச் சிவப்பேயாகும்
முறைமுறை ரெண்டிற்பூசி
யோட்டிட ரவியிற்போடா
யுருகிச் செந்தூரமாமே. (பா. 573)

வங்கம், சூதம் இரண்டையும் வகைக்கு ஒரு பலம் எடுத்து ஒன்றாய்ச் சேர்த்து பின் இவ்வங்க சூதத்தின் எடைக்கு சம அளவு சாரச்சுன்னம் சேர்த்தரைத்து குகையில் வைத்தூதினால் சுன்னமாகும் இச்சுன்னத்தை சாரத்தின் மேலும் உப்பின் மேலும் பூசி, தனித்தனியாய் தணலிலிட்டு வாட்டினால் இரண்டு வகையான சரக்கும் கட்டி திடப்படும். கட்டிய இச்சாரத்தையும் உப்பையும் செந்தூரம் செய்ய வகை கூறுகிறேன் கேள்! தங்கச் சுன்னத்துடன் வீரத்தை சேர்த்தால் சுன்னம் சிவந்த நிறங்கொள்ளும், சிவந்த இச்சுன்னத்தை கட்டிய சாரத்தின் மேலும் உப்பின் மேலும் தனித்தனியாக பூசி ரவியில் வைத்தால் இரண்டு வகையான சரக்கும் செந்தூரமாகும்.

ஆமிந்தச் செந்தூரங்கள்
அப்பனே ரெண்டின்வேதை
வாமிந்த நவலோகத்தில்
மாட்டிடு நூற்றுக்கொன்று
ஓமிந்தச் சாரங்கேளு
உபரச முருகிப்பொன்னாம்
காமிந்த உப்புவேதை
கரையில்லை கண்டுகொள்ளே. *(பா. 574)*

இவ்விரண்டு வகையான செந்தூரத்தை தனித்தனியாக நவலோகத்தில் சேர்த்தால் நவலோகங்களும் உருகி பொன்னாகும் (அதாவது நூற்றுக்கு ஒருபங்கு மருந்தை சேர்க்க வேண்டும்). சாரச்செந்தூரத்தை உபரசங்களுடன் சேர்த்து உருக்கினால் அனைத்தும் பொன்னாகும். இதே போல் உப்பு செந்தூரத்தாலும் வேதையுண்டாகும் அதை முறைப்படி அறிந்து செய்!

கண்டிடுங் கபரிசத்துங்
கலந்திடுஞ் சமனாய்ச்சூதம்
ஒண்டிடு மிரண்டுக்கொக்க
உரப்பொடு துருசிச்சுன்னந்
தண்டியே அரைத்திட்டூதத்
தவளம்போற் சுன்னமாகும்
பண்டியே சுன்னந்தொட்டுப்
பரவிவெண் காரம்பூசே. *(பா. 575)*

பூசியே வாட்டுவாட்டு
புகழாகக் காரங்கட்டும்
தேசியே கட்டும் பின்பு
செந்தூர வழியைக்கேளு
ஆசியே தங்கச்சுன்னம்
அதற்கெடை வீரம்போட்டுக்
காசியே ஒன்றாய்த்தேய்த்துக்
கபளித்து ரவியிற்போடே. *(பா. 576)*

கபரிசத்தையும், சூதத்தையும் சம அளவு எடுத்து ஒன்றாய்ச்சேர்த்து பின் இவ்விரண்டின் எடைக்கு சம அளவு துருசுச்சுன்னத்தை சேர்த்தரைத்து குகையில் வைத்தூதினால் சுன்னமாகும் இச்சுன்னத்தை வெங்காரத்தின் மேல் பூசி வாட்டினால் காரமானது கட்டி திடப்படும். இதை செந்தூரம் செய்யவகைக் கேள்! தங்கச் சுன்னத்தின் எடைக்கு சம அளவு வீரம் சேர்த்து கலந்தால் தங்கச்சுன்னம் சிவந்த நிறங்கொள்ளும் இச்சிவந்த சுன்னத்தை

காரத்தின் மேல் பூசி ரவியில் வைத்தால்.

போடவே காரந்தானும்
புகழச் செந்தூரமாகும்
ஆடவே வேதைதானும்
அப்பனே லக்கமில்லை
நீடவே போட்டாற்பாண்டம்
நிமிஷத்திற் பொன்னுமாகும்
கோடவே கோடாகோடி
கோடிக்கு வேதையாமே. *(பா. 577)*

காரம் செந்தூரமாகும் இச்செந்தூரத்தால் ஏற்படும் வேதைக்கு அளவேயில்லை இச்செந்தூரத்தை எந்த பொருளின் மேல் போட்டாலும் நிமிஷத்தில் பொன்னாகும். இப்பொன்னின் மாற்று கோடானுகோடிக்கு மேலாகும்.

வேதையில் ஐந்துமார்க்கம்
விளம்பினேன் விந்தைபாரு
பாதையில் மெத்தமெத்த
பகரவும் மாட்டேனப்பா
கோதைமின் தாய்தான்சொல்லக்
குடித்திட்டேன் கொப்ப ளித்தேன்
ஆதையி லிருந்துநாலும்
அறைந்திட்டேன் கண்டுகொள்ளே. *(பா. 578)*

ஐந்து முறையான வேதை மார்க்கத்தை இதுவரை கூறினேன். இன்னும் அனேக முறைகள் உள்ளன அதை நான் கூறமாட்டேன் கோதை மின்னாளான தாயிடமிருந்து அறிந்துக்கொண்டு இந்நூலில் வெளிப் படையாக கூறி விட்டேன்.

கண்டிட லிங்கந்தானுங்
கடுகியே குருவுமாக
மண்டிடு சாரச்சுன்னம்
வகையொரு வராகன்கூட்டித்
தண்டிடு துருசுச்சுன்னந்
தனியொத்த காரச்சுன்னம்
ஒண்டிடு வகைக்குக்கால் தான்
உறத்தூக்கி ஒன்றாய்ப்போடே. *(பா. 579)*

போட்டிதைக் கருவைவார்த்துப்

புணர்ச்சியாய் அரைத்துக்கொண்டே
பூட்டிதி லிங்கந்தானும்
ஒருரெண்டு வராகன்மேலே
பூட்டிதைப் பூசிப்பூசிப்
புணர்ச்சியாய் வாட்டவாட்ட
மூட்டிது லிங்கந்தானும்
முழுக்கட்டாம் பாருபாரே. *(பா. 580)*

லிங்கத்தை குருவாக செய்வதற்கு வகை கூறுகிறேன் கேள்! காரச் சுன்னத்தை ஒரு வராகன் எடைஎடுத்துக் கொண்டு இதனுடன் துருசுச்சுன்னத்தையும், காரச் சுன்னத்தையும் வகைக்கு கால்வராகன் சேர்த்துக்கொண்டு முட்டையின் கருவை வார்த்து நன்றாய் அரைத்து இரண்டு வராகன் எடை கொண்ட லிங்கத்தின் மேல் பூசி தணலில் இட்டு வாட்டினால் லிங்கமானது கட்டி திடப்படும்.

பாரிந்த லிங்கந்தானும்
பருகிய கழிஞ்சிவாங்கித்
தாரிந்த வுருகும்போது
தனிவர்ணம் போகாதப்பா
வாரிந்த வங்கஞ்சுன்ன
மஞ்சாடி போடுநீயும்
காரிந்த லிங்கம்வாங்கிக்
கனகத்தில் நாலிலொன்றேற்றே. *(பா. 581)*

கட்டிய இந்த லிங்கத்திலிருந்து கழஞ்சி எடை எடுத்து குகையிலிட்டு உருக்கினால் வர்னத்தில் குறைவில்லாமல் உருகி நிற்கும் இதனுடன் வங்கச் சுன்னத்தை ஒரு மஞ்சாடி அளவு சேர்த்துக் கட்டியாய் வாங்கி தங்கத்தில் நாலுக்கொரு பங்கு சேர்க்க வேண்டும்.

காரசாரக் கூறு

ஏற்றிய கனகம்பார்க்கில்
இயல்பாகச் சிவந்துகாணும்
பேற்றிய கனகலிங்கம்
பேராச்சு குருவுமாகத்
தோற்றிய உபரசங்கள்
சுகமான காரசாரம்
மாற்றிய பாஷாணங்கள்
மாட்டிநீ உருக்கிடாயே. *(பா. 582)*

உருக்கிய சரக்காமெல்லாம்

உத்தம சீடாகேளு
யருக்கிய சிவந்துகாணும்
மாட்டிடத் தூரவோடும்
பருக்கிய குருவைத்தின்னப்
பாழாச்சு சாவுதானும்
செருக்கிய விதனில் வேதை
செப்பவும் முடியாதென்னே. *(பா. 583)*

மருந்து சேர்த்த தங்கத்தை குகையிலிட்டு உருக்கி பார்க்க சிவந்த நிறமாயிருக்கும். இதற்கே கனக லிங்கம் அல்லது குரு லிங்கம் என்று பெயர் இக்குருவுடன் காரசாரம் பாஷாணங்கள் உபரசங்கள் போன்றவற்றை சேர்த்துருக்கினால் சரக்கு உருகி சிவந்த நிறங்சொண்ட பொன்னாகும். இதில் ஏற்படும் மாற்றின் அளவுக்கு கணக்கேயில்லை. மேலும் இக்குருவை உட்கொண்டால் சாவு பொய்யாகும்.

துருசு குரு

முடியாது குருவினாலே
மூதண்ட வேதைகேளு
பிடியாத உபரசங்கள்
பிரட்டிடு லட்சத்தொன்று
கெடியான காரசாரம்
கேளொடும் ஆயிரத்தில்
அடியான பாஷாணங்கள்
அறுபதா யிரமுஞ்சொல்லே. *(பா. 584)*

குருவினால் வேதை செய்ய அளவு முறையைக் கேள்! உபரசங் களுடன் லட்சத்துக்கொரு பங்கும், கார சாரத்தில் ஆயிரத்துக்கொரு பங்கும், பாஷாணங்களுடன் அறுபதாயிரத்துக்கொரு பங்கும் குருவை சேர்த்துருக் கினால் வேதை யுண்டாகும்.

சொல்லிய வேதைதானுஞ்
சூட்டுவ தெந்தலோகம்
மல்லிய நவலோகத்தில்
மாட்டலாம் அப்பாகேளு
பல்லிய உபரசங்கள்
பகிர்ந்தந்த இனத்தைக்கண்டு
அல்லியே கொடுக்கவேதை
அளவில்லை காணுகாணே. *(பா 585)*

மேலும் நவலோகத்தில் குருவகைச் சேர்த்துருக்க வேதையாகும்.

வேதையுண்டான லோகத்தை சரியான உபரச இனத்துடன் சேர்த்து உருக்கி குருவை ஈந்தால் அளவிட முடியாத அளவிற்கு வேதையுண்டாகும்.

காணினித் துருசுதானுங்
கைவிட்ட குருவுமாகத்
தாணினி வீரம்பூரந்
தனியுரஞ் சூதம்நாபி
வாணினி குருவண்டோடே
வளுகியின் கொழுப்புங்கூட்டு
வேணினி காரச்சுன்னம்
விரைந்துநற் புனுகுங்கூட்டே. (பா. 586)

கூட்டிய வொன்பதுக்குங்
குலாவிய வெடையைக்கேளு
ஆட்டிய வகையியான்றொன்றும்
அப்பனே வராகன்கால்தான்
நீட்டிய வுமிழ்நீராலே
நெக்ழுவே அரைத்துக்கொண்டு
பூட்டிய துருசுமஞ்சு
பொன்காரம் அஞ்சிற்பூசே. (பா. 587)

பூசியே ரவியிற்போடு
பொருமாது காரம்பாரு
ஆசியே துருசுதானும்
அங்கிங்கும் உருகிப்போகும்
வாசியே சிக்கினாற்போல்
மற்றது ரெண்டுஞ்சிக்கும்
தேசியே சாரத்தின்மேல்
தேய்த்திடச் சாரஞ்சாமே. (பா. 588)

துருசை குருவாக்க முறையான வழியை கூறுகிறேன் கேள்! வீரம், பூரம், [illegible]ரம், சூதம், நாபி, குருவண்டு, அளுங்கின் கொழுப்பு, காரச்சுன்னம், புனுகு போன்ற இவ்வொன்பது வகையான சரக்கையும் வகைக்கு கால் [illegible]கனெடை எடுத்து ஒன்றாக்கி உமிழ் நீரால் நெகிழ அரைத்து துருசின் மேலும் பொன் [illegible]ரத்தின் மேலும் தனித்தனியாய் பூசி ரவியில் வைத்தால் [illegible]ரண்டு வகையான சரக்கும் அடங்கி நிற்கும். அடங்கிய இச்சரக்குகளை [illegible]த்தின் மேல் தேய்த்தால் சாரம் மடிந்து சாகும்.

[illegible]துமே சாந்தாலோ

சகலமும் பூசச்சாகும்
வாகுமே சாரமொன்று
மத்தித்து ரெண்டுமொக்கப்
போகுமே சமனாய்க்கூட்டிப்
புணர்ச்சியாய் அரைத்துக்கொண்டு
வேகுமே ரசத்தில் போடு
விடுபட்ட யானைசாமே. (பா. 589)

யானையைக் கொன்றராஜா
அறுபதுங் கொல்லுவான்பார்
காலையிற் சாரகாரங்
கதலிபோற் கைக்குளாச்சு
மானையே உபரசங்கள்
மகத்தான பாண்டமாச்சு
தேனையே அள்ளியுண்ட
தேவிதான் சொன்னவாறே. (பா. 590)

சாரத்தைப் போல் மற்ற எல்லாவகையான சரக்கும் மடியும், சாரத்தை ஒரு பங்கு எடுத்து இதற்கு சம அளவு மடிந்த துருசையும் காரத்தை சேர்த்து நன்றாய் அரைத்து சூதத்தில் சேர்த்தால் சூதமானது மடிந்து சாகும். சூதம் மடிந்தது போல் மற்ற சரக்குகளான பாஷாணங்களும் உபரசங்களும் மடிந்து சாகும். இம்முறையை மதுவை உட்கொண்ட தேவி எனக்கு சொன்னாள்.

சொன்னாளே துருசுசாரம்
துலங்கிய காரமூன்று
பன்னாளே ஆத்தாளுக்குப்
பாங்கியாம் பீடமாச்சு
கன்னாளே காரசாரம்
லவணங்காண் கண்டுகொள்ளு
மன்னாளே மூன்றினாலே
வளர்ந்தது வேதைபாரே. (பா. 591)

துருசு, காரம், சாரம் இவை மூன்றும் ஆத்தாளான தேவிக்கு பீடமாகும். இம்மூன்று வகையான சரக்கால் வேதையானது தோன்றிற்று. இதற்கே கார சார லவணம் என்று பெயர்.

பாருநீ யுப்புத்தின்னப்
பரிந்துள்ளே விந்துவேறும்

பா..நீ சாரத்தாலே
பகிர்ந்ததோ ரிரத்தமாகும்
பா நீ காரத்தாலே
பளிச்செனப் பசியேகாணும்
பாருநீ இம்மூன்றாலே
பரந்தது சீவனென்னே. (பா. 592)

லவணமான உப்பை உட்கொண்டால் விந்தானது மேல் நோக்கி ஏறும், சாரத்தை உட்கொண்டால் இரத்தம் உண்டாகும். காரத்தால் பசியுண்டாகும். இம்மூன்று வகையான சரக்கால் தான் சீவன் உண்டாயிற்று. (ஜீவன் - உயிர் வகைகள்).

...னாய் நின்றதற்குச்
சிவனெங்கே சத்தியெங்கே
தாவனாய் நின்றதுள்ளே
தனிச்சிவ முப்போயாச்ச
ஆவனா ரத்தம்சாரம்
ஆத்தாள்தன் மயமேயாச்சு
பாவன காரந்தீத்தான்
பரிவாக அறிந்துகொள்ளே. (பா. 593)

சீவனாய் நிற்கும் இவ்வுடலில் சிவனும் சக்தியும் எங்கே இருக் கிறார்கள் என்று கேட்பாயாகில் (அதற்கு விடை கூறுகிறேன் கேள்) சிவனே உப்பின் வடிவமாகவும், சாரமான ரத்தத்தின் வடிவே சக்தியாகும். இதற்கு இடைபட்ட காரமானது தீயாக நிற்கிறது.

அறிந்திடு முப்பேசூதம்
அப்பனே அடியுமாச்சு
பிறிந்திடுஞ் சாரங்கெந்தி
பேரிது மேலுமாச்சு
கறிந்திடுங் காரபூரங்
கடியதோர் நடுவேநிற்கும்
அறிந்திது மூன்றுங்கண்டோர்
வாதிகள் சிரசுமாச்சே. (பா. 594)

மேலும் கேள்! உப்பின் வடிவே, "சூதம்", சாரமே "கெந்தி", காரமே, "பூரம்", இவை மூன்றும் முறையே அடியாகவும், முடியாகவும், நடுவாகவும் நிற்கும். இம்மூன்றையும் அறிந்துக் கொண்டவர்கள் வாதிகளின் தலைசிறந்தவராவார். (சாரமே - சாரத்தின் வடிவே, காரமே - சாரத்தின் வடிவே).

ஆச்சிவை மூன்றுக்குள்ளே
அடைவெல்லாஞ் சொல்லக்கேளு
பாச்சிந்தச் சூதச்சுன்னம்
பருகியே கெந்திமேலே
தாச்சிந்த கெந்திச்சுன்னந்
தாக்கிடு பூரமேலே
வேதச்சிந்த மூன்றுமூன்றே
ஒவ்வொன்றுக் குறைகொள்ளாதே. (பா. 595)

இம்மூன்று வகையான சரக்கால் ஏற்படும் வேதையைக் கேள்! சூதச்சுன்னத்தை, கெந்தியின் மேலும், கெந்தி சுன்னத்தை பூரத்தின் மேலும் பூசி ஊதினால் சுன்னமாகும். இம்மூன்று வகையான சுன்னமும் ஒரே அளவு வேதைப் புரிய கூடியதாகும்.

உரையில்லா மூன்றுங்கூடில்
ஒரண்டப் பொட்டிற்பொன்னாம்
கரையில்லா தகண்டவேதை
காணவும் போகாதப்பா
துரையில்லா வூரென்னாதே
துறையிது மூன்றுஞ்சுன்னம்
அரையில்லா ராசாச்சூதம்
ஆத்தாளுங் கெந்திதானே. (பா. 596)

இம்மூன்று வகையான சுன்னத்தை ஒன்றாய்க் கூட்டி அண்டத்தின் மேல் ஒரு பொட்டிட்ட மாத்திரத்தில் பொன்னாகும். பொன்னான அண்டத்தின் மாற்றை வாயால் கூறமுடியாது. இதில் சிவனே ராசன் என்ற சூதம், ஆத்தாளே கெந்தி

தானென்ற மூன்றும்பட்டுத்
தனியண்ட மெழுகேயாகும்
வானென்ற பூமியென்ன
வகைவகை லோகமென்ன
கானென்ற சிலைகளென்ன
கடும்பூரங் கொம்புமென்ன
தேனென்ற படியேநஞ்சு
செணத்திலே பொன்னுமாமே. (பா. 597)

மூன்று சுன்னமும் ஒன்றாய் சேர்ந்து அண்டத்தின் மேல் பட்டால்

அண்டமானது மெழுகாகும். இம்மெழுகால் வானம், பூமி, லோகம், சிலைகள், கொம்பு முதலிய சரக்குகள் யாவும் ஒரு வினாடியில் பொன்னாகும்.

595 ஆம் பாடலின் குறிப்பு: சூதச் சுன்னத்தை கெந்தகத்தின் மேல் பூசி குகையில் வைத்து ஊதினால் கெந்தி சுன்னமாகும். இதே போல் கெந்திச் சுன்னத்தை பூரத்தின் மேல் பூசி குகையில் வைத்து ஊதினால் பூரம் சுன்னமாகும்).

பொன் செய்ய வேண்டும் என்று நீ இச்சைக் கொண்டால் முதலில் மூன்று சுன்னத்தையும் (கெந்தி, சூதம், பூரம்) சமஅளவு சேர்த்துக்கொண்டு தங்கத்தின் மேல் நாலுக்கொரு பங்கு பூசி ரவியிலிட்டால் தங்கமானது விரிந்து சுன்னமாகும்.

பொன்னாக வேண்டினாக்கால்
பொன்னிலே குருவைப்பூசி
மன்னாக நாலிலொன்று
மாட்டியே ரவியிற்போடு
தன்னாக மூன்றுமொக்கச்
சமனாகச் சேர்த்துப்பூசு
கன்னான தங்கந்தானுங்
கருதியே விரிந்து போமே. *(பா. 598)*

போமிந்த நீறாலப்பா
போட்டிடாய் அண்டம்மேலே
யாமிந்த வேதையெல்லாம்
ஆடலாம் பாருபாரு
தாமிந்தத் தங்கநீறில்
சாற்றுசவ் வீரமொக்க
காமிந்த வேதைமார்க்கங்
கரைகாணேன் கரைகாணேனே. *(பா. 599)*

காணாத அண்டந்தானுங்
கடுகியே மெழுகுபோலே
பூணாது மயிலுமாகும்
பொருந்திய கருடனாகு
மாணாத வளுங்குமாகு
மாண்மையா முடும்புமாகும்

தோணாத செம்போத்தாகுந்
துலங்கிய காக்கையாமே. *(பா. 600)*

ஆமினி முதலைதானும்
அடைக்கலக் குருவியோடு
போமினி தசாண்டத்துள்ளே
போட்டொன்று முட்டையொன்று
தாமினி வெவ்வேறாகத்
தனித்தனி மெழுகுமாகும்
காமினி வேதையோடுங்
கணக்கையான் கண்டிலேனே. *(பா. 601)*

இந்த சுன்னத்துடன் (தங்கச் சுன்னத்துடன்) சவ்வீரம் சம அளவு சேர்த்து அண்டத்தின் மேல் பொட்டிட்டால் அண்டமானது கருகி மெழுகு போலாகும். இம்மெழுகால் ஏற்படும் வேதைக்கு அளவேயில்லை. அதாவது மயில், கருடன், அளுங்கு ஆமை, உடும்பு, செம்போத்து, காக்கை, முதலை, கோழி, அடைக்கலக்குருவி போன்ற உயிரினங்களின் முட்டைகளின்மேல் தனித்தனியாக (தங்கச் சுன்னத்துடன் சவ்வீரம் சேர்த்து) மருந்தை பொட்டளவு பூசி வைத்தால் அண்டங்கள் மெழுகாகும். இவ்வண்டங்களினால் ஏற்படும் வேதையை நானே கண்டதில்லை!

கண்டிய குக்குடண்டங்
களிப்பாகச் சதமேநீயும்
ஒண்டிய மயிலோகேளா
யொருலட்சத் தோடும்வேதை
மண்டிய கருடனாகில்
மாட்டொரு கோடிக்குள்ளே
தண்டிய வளுங்குதானுஞ்
சதகோடிக் கோடுங்காணே. *(பா. 602)*

காணினி யுடும்புமானம்
கபளிக்க வேதைகேளு
ஆணினி யூசிகுத்தி
யப்பனே துலாத்தில்குத்து
பூணினி காகாய்போத்து
போகுமே நூற்றுக்குள்ளே
தோணினி முதலையோடு
துலங்குமூர்க் குருவிகேளே. *(பா. 603)*

கேளிது நரறேயோடுங்
கெடியண்டம் பார்த்துமாச்சு
வாளிது வளர்க்கவல்லோர்
வழிமெத்த வாய்க்கால் மெத்த
தோளிது வண்டவித்தை
சுருதியின் முடிவுக்கொக்கும்
வேளிது வெரித்தோன் சொல்ல
வேதாந்தி கேட்டவாறே. (பா. 604)

கோழிமுட்டையின் மெழுகை நூற்றுக்கு ஒரு பங்கும், மயில் முடடையின் மெழுகை லட்சத்துக்கு ஒருபங்கும், கருடனின் அண்ட மெழுகை கோடிக்கு ஒருபங்கும், அளுங்கின் அண்ட மெழுகை நூறு கோடிக்கு ஒரு பங்கும், உடும்பு மற்றும் ஆமையின் அண்ட மெழுகை ஒரு குண்டுசியால் குத்தி துலாஎடையிலும், காக்காய் மற்றும் செம்போத்து அண்டமெழுகை நூற்றுக்கு ஒருபங்கும் முதலை மற்றும் ஊர்க்குருவியின் அண்டமெழுகை நூற்றுக்கு ஒருபங்கும் லோகத்துடன் சேர்த்தால் வேதையானது உண்டாகும், அறிவாளிகளுக்கு இன்னும் அனேக வழிகள் உள்ளன. இவ்வண்ட வித்தையானது வேதத்தின் முடிவான பொருளுக்கு சமமாகும் இதை பார்வதிதேவி சிவபெருமானிடம் கேட்டறிந்து எனக்கு சொன்னாள்.

வாறிந்த வண்டத்துக்கு
மகத்துவம் வந்ததென்ன
தேறிந்த வீசன்சத்தி
செறிந்தொன்றா யிருந்ததப்பா
கூறிந்தப் பெருமையாலே
கொடிதான அண்டவேதை
மாறிந்த வண்டவித்தை
மகத்தோர்க்கே யாகுங்காணே. (பா. 605)

இவ்வண்டத்திற்கு (சாதாரண முட்டைக்கு) எப்படி இவ்வளவு சக்தி வந்தது என்று கேட்பாயாகில் சிவனும், சக்தியும் ஒன்றாக சேர்ந்திருந்த காரணத்தால் என்றறிதல் வேண்டும் இவ்வண்ட வேதை வித்தையானது மகான்களுக்கே பலிதமாகும்.

காணிந்த வண்டவித்தை
கடியதோர் மாற்றைக்கேளு
நாணிந்தத் தங்கநாலு
நல்லாறோ ரெட்டுநூறு

பூணிந்த வாறுநாலும்
புகழ்பத்து மொன்றாய்க்கூட்டு
தாணிந்த வெடைக்குக்கூட்டித்
தனிப்பட வைத்துக்கொள்ளே. *(பா. 606)*

அண்ட வித்தையால் ஏற்படும் மாற்றைக் கூறுகிறேன் கேள். அதாவது, எண்ணூறு மாற்றுக்கொண்ட தங்கமானது இவ்வண்ட வேதையால் உண்டாகும். மேலும் கூறுகிறேன் கேள்! பத்துவகையான அண்ட மெழுகை வகைக்கு ஒரு பலம் எடுத்து ஒன்றாய்ச் சேர்த்து வைத்துக்கொள்! (மெழுகின் மொத்த எடை பத்து பலமாகும்).

மனோன்மணி மயனம்

கொள்ளவே அண்டந்தூக்கு
கூறிய வெடைக்குக்கேளு
வள்ளவே நாலுக்கொன்று
மாட்டிடு சூதச்சுன்னம்
தெள்ளவே நாலுக்கொன்று
சேர்த்திடு கெந்திச்சுன்னம்
பள்ளவே நாலுக்கொன்று
பரிச்சுன்னம் போட்டிடாயே. *(பா. 607)*

போட்டிட வெட்டுக்கொன்று
பூரமாஞ் சுன்னந்தன்னை
மாட்டிடு நாலுக்கொன்று
வன்கார சாரச்சுன்னம்
நீட்டிய மூன்றின்ரெட்டி
நிலையான வீரம்போடு
கூட்டியே ஒன்றாய்நீயுங்
குறைவற மத்திப்பாயே. *(பா. 608)*

ஒன்றாக சேர்த்த மெழுகின் எடைக்கு நாலிலொரு பங்கு சூதச்சுன்னம், நாலிலொரு பங்கு கெந்திச் சுன்னமும் நாலிலொரு பங்கு தங்கச் சுன்னமும், எட்டிலொரு பங்கு பூரச் சுன்னமாகும் நாலுக்கொரு பங்கு காரசாரச் சுன்னமும் மூன்று வகை (சரக்குகளான காரச்சுன்னம், சாரச்சுன்னம், பூரச்சுன்னம் போன்ற) சரக்குகளின் எடைக்கு இரு மடங்கு வீரத்தையும் மெழுகுடன் சேர்த்து மத்தித்தால் மயனமாகும்.

மத்தித்த மயனப்பேரு
மனோன்மணி மயனமென்பார்
பத்தித்த மயனவேதை
பராபரை மயக்கிமென்றாள்
குத்தித்தா னூசிக்குள்ளே
கொட்டுமண் ணூறுகூடை
யெத்தித்துப் புடத்தைப்போட
வேயம்பொன் மணலுமாமே. *(பா. 609)*

இதற்கு மனோன்மணி மயனம் என்று பெயர் இதில் ஏற்படும் வேதையைக் கண்டு பராபரையே மயக்கமடைந்தாள்! இம்மயனத்தை ஒரு ஊசியால் குத்தி எடுத்து அவ்வூசியின் மேல் நூறு கூடை மணலை கொட்டி புடம் போட்டால் நூறு கூடை மணலும் பொன்னாகும்.

மணலான பொன்தான்கேளு
வணங்கியே யுருகாதப்பா
தணலான வெள்ளிநூறில்
தாக்கொன்றா இந்தப்பொன்னைப்
பணலான பத்துமாற்றும்
பராபரைக் கீசன்சொன்னார்
கணலான தேவியென்மேற்
கருணையாற் சொன்னவாறே. *(பா. 610)*

இப்பொன்னை குகையிலிட்டு உருக்கினால் உருகாது. இத்தங்க மணலை வெள்ளியில் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்தால் பத்து மாற்று கொண்ட பொன்னுண்டாகும் இதை சிவபெருமான் பார்வதிக்கு சொன்னார் தேவியானவள் என்மேலுள்ள கருணையால் எனக்கு இம்முறையை கூறினாள்.

வாறிந்த மணலைப்போலே
வகைவகை லோகம்பாரு
வாறிந்த மணலைப்போலே
மற்றதோர் மாற்றைப்பாரு
வாறிந்த மணலைப்போலே
மகத்தான குமட்டைப்பாரு
வாறிந்த மணலைப் போலே
வழங்கிய வஸ்திபாரே. *(பா. 611)*

பாரிந்த வேதைதன்னைப்
பராபரை யறிவாளல்லா
லாரிந்த மெழுகைச் செய்வா
ரந்தந்த வினத்தைச்சேர்ப்பார்
காரிந்த மதனைச்சுட்ட
கயிலையோன் கண்டமார்க்கம்
தாரிந்தத் தாயாம்பாலை
சாற்றிடக் கைகண்டேனே. (பா. 612)

மணலைப் பொன்னாக்கியதைப் போல் அனைத்து வகையான லோகத்தையும் செய்து பார்! அதில் ஏற்படும் மாற்றை கண்டு பிடி. மேலும் லோகத்தைப் போல் சகலவஸ்துவிலும் செய்து பார். இம்மயன வேதை முறையை பராபரியான தாயைத் தவிர வேறு யாரும் முழுமையாக அறிந்திருக்கவில்லை. இதை யார் தான் செய்வார்கள்! மன்மதனை எரித்த சிவபெருமான் இதை முழுமையாகச் செய்து பார்த்தார் தான் செய்து பார்த்ததை பாலையான தேவிக்கு சொல்ல தேவி அதைக் கேட்டறிந்து எனக்கு சொன்னாள்.

கண்டதோர் மார்க்கம்போலே
கலந்திட்ட அண்டம்பத்து
பண்டதோர் வெவ்வேறாகப்
பருவமுன் சரக்கைக்கூட்டு
தண்டதோரண்டம்பத்து
தனித்தனி வேதையாகும்
ஒண்டதோ ரூசிகுத்தி
ஒருதுலாந் தன்னிற்போடே. (பா. 613)

போடவே நூறுமாற்றாம்
புனுகின்ற புலையாகேளு
ஆடவே யாத்தாள் சொன்னாள்
அப்பனு மாடிக்கண்டார்
நாடவே பதத்தைப் பாரு
நாட்டிடு மெழுகைநீயும்
தேடவே நூறுமாற்றாஞ்
சித்தியா முத்திதானே. (பா. 614)

பத்து வகையான அண்ட மெழுகை தனித்தனியாய் எடுத்து முன்போல் மருந்து கூட்டி மயனம் செய்தால் ஒவ்வொர் அண்ட மயனமும் அபிரிவிதமான வேதையை உண்டாக்கும் மயனத்தை ஊசியால் குத்தி ஒரு துலா எடையுள்ள சரக்கில் போட்டால் அனைத்தும் நூறு மாற்று கொண்ட

பொன்னாகும் பராபரை சிவபெருமானுக்கு சொல்ல அதை அறிந்து சிவனும் செய்து பார்த்தார் நீயும் அவரைப் போல் செய்து சித்தியும் முத்தியும் அடைவாய்.

தானின்ற கயிலையல்லோ
சகத்திரத் தெட்டுமாற்று
வானின்ற வெள்ளைநாவற்
பழத்தினால் வந்தமாற்று
கானின்ற பழந்தான்கேளு
கரியானையெட்டு கொள்ளு
வானின்றே யுடைந்திட்டோடும்
வாருதி பாருபாரே. (பா. 615)

பாருநீ இந்தவாறு
பருவேலைக் குள்ளேபுக்கு
தாருநீ வேலைக்குள்ளே
தனிமணல் பத்துமாற்று
காருநீ பழமேதானுங்
கலந்தவா யிரமுமானால்
வாருநீ யீசன்சூத
மாற்றுக்கோ ரிலக்கேதென்னே. (பா. 616(

இலக்கிலை யென்றசூத
மிற்றெனப் பத்துமாற்றாய்
வலக்கிலை மிலேச்சரந்த
வகைகண்டு மாட்டாரப்பா
துலக்கிலை வாதந்தானுஞ்
சூட்சமாய்ப் பாருபாரு
நிலக்கிலை சூதமானால்
நிர்மூலம் வாதமாச்சே. (பா. 617)

கயிலாயமே இந்த அண்டமெழுகால் ஆயிரத்தெட்டு மாற்றாயிற்று. இதே மெழுகை சூதத்துடன் சேர்த்தால் சூதமானது கட்டி வாயுஸ்தம்பன குளிகையாகும். இச்சூதமணியால் மணலும் பத்து மாற்றுள்ள தங்கமாகும். வெறும் அண்ட மெழுகை ஆயிரத்துக்கொரு பங்கு சூதத்துடன் சேர்ந்து கட்டினால் இக்கட்டிய சூதத்தால் ஏற்படும் மாற்றுக்கு இலக்கே சொல்ல முடியாது. இக்கட்டிய சூதத்தை சகல சரக்குடன் சேர்க்குங்கால் பத்து மாற்றுக் கொண்ட தங்கம் உண்டாகும். இம்முறைகளை கீழ்மையான புத்தி கொண்ட மிலேச்சர்கள் அறியமாட்டார்கள். ஆகவே நீ மிகவும் சூட்சமாய்

வாதத்தை அறிந்து செய். வாதத்தின் சூட்சத்தை அறியவில்லை என்றால் வாதம் நிர்மூலமாக்கும், (பலியாமல் போகும்).

(அண்டத்திற்கு - வெள்ளைநாவல் பழம் என்று பெயர்)

வாதந்தான் வந்ததென்பார்
வாய்வாதம் பேசுமாண்பர்
போதந்தான் வந்ததென்பார்
போக்குவர யிரண்டுங்காணார்
காதந்தானி மிஷமென்பார்
கையிலே குளிகைகாணார்
மாதந்தா னுண்டதென்பார்
வழங்கிய சித்திலாரே. *(பா. 618)*

சில மனிதர்கள் தனக்கு இரசவாதம் சித்தியாகி விட்டது என்று வாய்வாதம் செய்வார்கள். இவர்கள் வாதத்தின் செய்முறைகளையும் அதனுட லட்சணங்களையும் அறிந்திருக்க மாட்டார்கள். மேலும் எனக்கு காத தூரமெல்லாம் ஒரு நிமிஷத்திற்கு சமமாகும் என்று கூறிக் கொள்வார்கள். இப்படிபட்டவர்கள் குளிகை என்ற வஸ்துவையே அறிந்திருக்க மாட்டார்கள்.

சித்துண்டோ சீவனுண்டோ
சிவனுண்டோ செகமுமுண்டோ
பத்துண்டோ வாசையுண்டோ
பரிமன்ன வேறேயுண்டோ
மத்துண்டோ பூசையுண்டோ
மாயைதா னெனக்குமுண்டோ
வெத்துண்டோ வென்பார் மாண்பர்
இருள்தோண்டிப் பொருள்காணாரே. *(பா. 619)*

இப்படிபட்ட மனிதர்கள் தனக்கு எல்லாம் சித்தியாகி விட்டது என்று கூறிக் கொள்வார்கள். ஆனால் உண்மையில் சித்தை பற்றி அறிந்திருக்க மாட்டார். மேலும் அவர்கள், சித்து சீவன், செகம், பந்தம், பாசம், ஆசை தேவ பூசை, மாயை போன்றவற்றுக்கு அப்பாற்பட்டு நிற்பவன் என்னைத் தவிர வேறான வஸ்து இவ்வுலகில் இல்லை என்று கூறுவார். உண்மையில் இவர்கள் இருள் என்னும் மாயக் குழியில் விழுவார்.

காணார் கள்சாங்கமொன்று
கற்பித்துக் கொண்டே யொன்றை

வீணார வாரமாக
வேதாந்த மெங்குமென்பார்
தோணாத பொருளேதென்பார்
சொருபந்தா னெங்குமென்பார்
பூணார்கள் போதந்துள்ளே
புலையரிற் புலையர்தானே. (பா. 620)

மேலும் தானே ஒரு சாங்ய முறையை கற்பித்துக் கொண்டு எங்கும் வேதாந்த பொருளே பரவி நிற்கிறது, அந்த பரம்பொருளே நான்! காணக்கூடிய வஸ்துவான என்னைத் தவிர வேறொரு பொருள் இல்லை என்பர். ஆனால் உண்மையில் ஆனந்த போதத்தை அறிந்திராத இவர்கள் புலையர்களிலும் கீழ்பட்ட புலையராவார்.

புலையர்தான் என்றுவேறே
பிறந்தவர் வேறேயில்லை
கலையெல்லாந் தாண்டிநின்று
காரணங் காணாதோரு
மலையெல்லாம் பொன்னேயான
வாதத்தைப் பொய்யென்றோருங்
கொலையெல்லாஞ் செய்துமார்க்கக்
கூட்டத்திற் கூடார் தானே. (பா. 621)

புலையர் என்று தனிப்பட்ட சாதி கிடையாது. மேல் கூறிய குணங்களை கொண்டவர்க்கேபுலையர் என்றுபெயர். இவர்கள் கலைகளெல்லாம் தாண்டி நிற்பதும் மலைகளெல்லாம் பொன்னாக்கும் சக்கி வாய்ந்த வாதத்தை பொய் என்று கூறுபவர்களும் கீழ்மையான மார்க்கத்தை அடைந்து கொலைத் தொழில் புரிவார். ஒரு காலும் சன்மார்க்கத்தை அடையமாட்டார்.

தானென்ற வாங்காரத்தாற்
சமயமும் பொய்யேயென்பார்
கானென்ற வாங்காரத்தாற்
கள்ளுண்பார் பெண்ணைச்சேர்வார்
வானென்ற வாங்காரத்தால்
வாதமும் பொய்யேயென்பார்
மானென்ற வாங்காரத்தால்
மாளுவார் மருளர்தானே. (பா. 622)

மேலும் தான் என்ற அகங்காரத்தால் சகல சமயங்களும் பொய் என்று கூறி, மதுவை உண்டு பெண்ணை சேர்ந்து வாதத்தையும் பொய் என்று

பழிப்பவர்கள் தன்னிடம் உண்டான ஆங்காரத்தாலே மாண்டு போவார்.

தானென்றும் பரமதென்றுந்
தன்னுள்ளே வேறுமில்லை
வானென்று மாசியேறு
மயக்கமு மொன்றுமில்லை
கோனென்றும் சீடனென்றும்
குளிந்தபின் னொன்றுமில்லை
பானென்று மதுவையுண்டு
பரந்திட்ட வாசிபாரே. (பா. 623)

பரம்பொருள் உன்னுள்ளேயே நிற்கிறது. இதை அறிந்து வாசியை ஏற்றினால் குருவென்றும் சீடன் என்றும் பேதம் காட்டும் மயக்கம் விலகும். ஆகவே முதலில் மதுவை உட்கொண்டு பரமான வாசியைப் பார்.

வாசிதா னென்றபேச்சு
வாய்க்குமோ எளிதோவப்பா
தேசிதான் ஞானதேசி
சேர்ந்திதை ஏறுவோர்க்கு
மாசிதான் ஒன்றுமண்டா
வாதமும் வயதுஞ்சித்தி
காசிதா னேமுன்மூன்றுங்
கண்டிடும் புருவமென்னே. (பா. 624)

புருவத்தில் நின்றேயாடும்
பொருளான பெண்ணைப்பாரு
வுருவத்தி லண்டரண்ட
மூடேறித் தாண்டிப்போகுங்
கருவற்றுச் சென்மம்போகுங்
கைகண்ட புதுமையாகும்
குருவொத்துச் சொன்னமார்க்கம்
கூடிடாய் கூடிடாயே. (பா. 625)

வாசி என்ற பேரைக் கூறுவதற்கும் பூர்வ புண்யம் வேண்டும். ஞான தேசியான வாசியை அறிந்து மேல் நோக்கி ஏற்றுவோர்க்கு மாசுகள் அகன்று வாதமும் காயமும் சித்தியாகும். மேலும் காசி என்று கூறப்படும் புருவமையஸ்தானம் திறக்கும். இப்புருவமையத்தில் நின்று நர்த்தனமாடும் பரம்பொருளான பெண்ணைக் கண்டால் அண்டரடண்டமும் தாண்டிச்

செல் பக் கூடிய கவுனப் பிரவேசம் சித்தியாகும். அது மட்டுமின்றி பிறப்பும் இறப்பும் அகன்று ஞானம் சித்தியாகும். இதை என் குருவின் மூலம் அறிந்துக் கொண்டு இங்கே சொன்னேன் ஆகவே முறைப்படி வாசியை அறிந்து கூட்டு.

கூடிடு ஞானவீதி
குறிப்பெங் கென்னாதேயப்பா
வாடிடுங் கதிரினாற்றா
னப்புற மொன்றுமில்லை
தேடிடும் பிரமனிந்திரன்
தேடியுங் கிட்டாநாலு
நாடிடும் பெரியோர்க்கையா
நாதமும் பொருளுமாமே. (பா. 626)

பொருளென்று சொல்வதல்லாற்
பொருளுக்கு வடிவுமில்லை
யருளென்று சொல்வதல்லால்
அருளுக்கு ரூபமில்லை
இருளன்றி ஒளியுமன்றி
யேகமாய் நின்றசோதி
தெருளென்ற பொருளுக்கொக்குஞ்
செயமான சூதந்தானே. (பா. 627)

வாசியை ஞான வீதியின் வழியாக. (சுஷூம்னா நாடியின் வழியாக) ஏற்றினால் பிரம்மனும் இந்திரனும் தேடிக் கொண்டிருக்கும் நாதாந்தப் பொருள வெளியாகத் தோன்றும். நாதாந்தப் பொருள் என்று எதை கூறுகிறார்களோ அப்பொருளுக்கும் வடிவமுமில்லை அப்பொருளால் ஏற்படும் அருளுக்கும் வடிவமில்லை, அப்படிபட்ட பொருளானது இருளும் ஒளியும் அற்று யேகமாய் எங்கும் பரவி நிற்கிறது. எங்கும் பரவி நிற்கும் ஜோதிப் பொருளானது மனதை வென்ற பெரியோர்களால் பார்க்கப்படுவதாகும். இம்மூலப் பொருளுக்கு இணையான பொருள் செயசூதத்தைத் தவிர வேறொன்றுமில்லை.

சூதக்கட்டு

சூதத்தைக் கட்டமார்க்கஞ்
சொல்லுறேன் கேளுமப்பா
வாதத்திற் பொருளாய்நின்று
வழங்கிற்று சூதந்தானும்

பேதத்திற் சாரம்ரெண்டு
பேரான உப்பிரண்டு
மாதத்திற் காரமொன்று
மாட்டிடாய் மாட்டிடாயே. (பா. 628)

மாட்டிடு துருசியொன்று
வளமான சூடனொன்று
நீட்டிடு நுரையதொன்று
நேரவே யெட்டுங்கூட்டி
ஆட்டியே அரைத்துக்கொண்டே
அடைவாக வறுத்தபின்பு
கூட்டியே அண்டச்சுன்னங்
குறையாதே எட்டிலொன்றே. (பா. 629)

சூதத்தை கட்டுதற்கு ஒரு மார்க்கம் சொல்கிறேன் கேள்! வாதத்திற்கு ஆதிப் பொருளாய் நிற்பது சூதமே. சாரம் ரெண்டு பலம், உப்பு ரெண்டு பலம், காரம் ஒரு பலம், துருசு ஒரு பலம், சூடன் ஒரு பலம், கடல் நுரை ஒரு பலம், ஆக எட்டு பலம் கொண்ட இச்சரக்கை ஒன்றாய்க் கூட்டி அரைத்து கரியோட்டிலிட்டு வறுக்க வேண்டும். வறுத்த இச்சரக்குடன் யெட்டிலொரு பங்கு அண்டச் சுன்னம் கூட்டி.

எட்டோடே ஒன்றுகூட்டி
இசையரை அண்டநீரால்
மட்டோடே வில்லைபண்ணு
வளம்பெற ஊது ஊது
கட்டோடே சுன்னமாகுங்
கடுஞ்சுன்னம் பாருமப்பா
பொட்டோடே சூதங்கட்டப்
போக்கியான் சொல்லுவேனே. (பா. 630)

அண்ட செயநீரை விட்டரைத்து வில்லை செய்து குகையில் வைத்து ஊதினால் கடுஞ்சுன்னமாகும். இச்சுன்னத்தைக் கொண்டு சூதங்கட்ட லகுவான முறையொன்று கூறுகிறேன் கேள்.

சொல்லிய போக்கைநீயுஞ்
சூட்சமாய்க் கேளுகேளு
மல்லிய நாகமொன்று
வங்கமு மீயம்ரெண்டு

ஒல்லிய மூன்றுமூன்றும்
உடன்சேரு ரெண்டுசூதம்
பல்லியே தொந்தித்தொன்றாய்ப்
பாய்ச்செடை சுன்னந்தானே. (பா. 631)

தானொன்றில் ஒன்றாய்க்கூட்டித்
தனிவெள்ளைக் கருவால் ஆட்டி
வானொன்றி வில்லைபண்ணி
வளம்பெற ஊதுஊது
கானொன்றி லோகச்சுன்னங்
கடுஞ்சுன்னம் பாராயப்பா
மானொன்று சுன்னத்தோடே
மாட்டநீ மருந்துகேளே. (பா. 632)

நாகம் ஒரு பலம். வங்கம் ஒரு பலம், ஈயம் ஒரு பலம், ஆக இம்மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்து இதனுடன் சூதம் இரண்டு பலங்கூட்டி உருக்கி வாங்கிக் கொண்டு இச்சரக்குடன் முன் செய்த சுன்னத்தை ஓர் எடை சேர்த்து முட்டையின் வெள்ளைக் கருவால் அரைத்து வில்லைத் தட்டி குகையில் வைத்தூதினால் லோகக் கலவையானது கடுஞ் சுன்னமாகும். இச்சுன்னத்தில் கூட்ட வேண்டிய மருந்தைப் பற்றி கூறுகிறேன் கேள்!

கேளுநீ சுன்னத்தோடே
கெடியான வீரம் போட்டுத்
தாளுநீ சமனாய்த்தேய்க்கத்
தனிநிறஞ் சிவப்பேயாகும்
வாளுநீ துருசுநாலில்
மாட்டிது ஒன்றைநீயும்
காளுநீ ரவியில்வைக்கக்
கடுஞ்சுன்னந் துருசியாமே. (பா. 633)

துருசியைப் தணலிலிட்டுச்
சூட்சமாய் ஊதுஊது
அருசிய கட்டியாக
அப்பனே சுன்னமாகும்
பருசிய வேதையாகும்
பறக்கிற சூதஞ்சாகும்
கருசிய சரக்கதெல்லாம்
காட்டுமுன் கொல்லும்பாரே. (பா. 634)

இச்சுன்னத்துடன் வீரத்தை சேர்த்து நன்றாய்த் தேய்த்தால் சுன்னமானது சிவந்த நிறங்கொள்ளும். சிவந்த இச்சுன்னத்தை ஒரு பலம் எடுத்து நாலு பலம் துருசின் மேல் பூசி ரவியில் வைத்தால் துருசானது கடுஞ்சுன்னமாகும், இத்துருசுச் சுன்னத்தை மேலும் குகையில் வைத்து சூட்சமாய் ஊதினால் முழுமையான சுன்னமாகும். இத்துருசுச் சுன்னத்தால் ரசங்கட்டும். வேதையுண்டாகும், மேலும் சரக்கெல்லாம் இச்சுன்னம் பட்ட மாத்திரத்தில் மடியும்.

துருசுச் சுன்னம்

பாரிந்தச் சுன்னம்பண்ணப்
பணவேதி அண்டவேதி
வாரிந்த லோகவேதி
வாசனை சத்தவேதி
காரிந்தக் குளிகைவேதி
கடுகிய தீபவேதி
தாரிந்தத் தூமவேதி
சதகோடி வேதையாமே. *(பா. 635)*

ஆமிந்தத் துருசுதன்னை
அப்பனே பரியாம்ரெண்டில்
வாமிந்த ஒன்றுதானும்
வார்த்தரை அண்டநீரில்
ஏமிந்த லேபித்தேநீ
எரிகிற ரவியிற்போடு
காமிந்த வெந்துநீறாய்க்
கடுகுபோற் பொடியுமாமே. *(பா. 636)*

முறையாகச் செய்யப்பட்ட துருசுச் சுன்னத்தால் பண வேதை யண்டவேதை, லோகவேதை, வாசனை வேதை, சப்தவேதை, குளிகை வேதை, தீபவேதை, தூம வேதை போன்ற வேதை முறைகள் (பலிதமாகும்) கைக்குள்ளாகும். துருசுச் சுன்னத்தை ஒரு பலம் எடுத்து அண்டநீர் விட்டரைத்து இரண்டு பலந்தங்கத்தின் மேல் பூசி ரவியில் வைத்தால் தங்கமானது வெந்து நீறி கடுகுபோல் பொடிப் பொடியாகும் (சுன்னமாகும்.)

ஆமது புனுகுதானும்
அப்பனே கழஞ்சி ஒன்று
தாமது சவ்வாதொன்று
தனிப்பரிச் சுன்னமொன்று

பூமது லோகச் சுன்னம்
போடதிற் கால்தான்நீயும்
வாமது துருசுச்சுன்னம்
மாட்டிடாய் கால் தான்நீயே. *(பா. 637)*

நீகேளு தவளைநெய்யை
நிறுத்தொரு கழஞ்சுவாரு
தாய்கேளு சொன்னபீங்கான்
தன்னிலே குழப்பியப்பு
வாய்கேளு காந்தி காட்டு
வருமது தைலம்பாரு
பாய்கேளா யிதற்குள்தேய்க்கப்
பர்விய மருந்தைக்கேளே. *(பா. 638)*

இத்துங்கச் சுன்னம் ஒரு பலம், புனுகு ஒரு பலம், சவ்வாது ஒரு பலம், (632ஆம் பாடலில் கூறியுள்ள) லோகச் சுன்னம் கால் பலம், துருசுச் சுன்னம் கால் பலம் இவை அனைத்தையும், ஒரு கழஞ்சு தவளை நெய்யில் போட்டு நன்றாய்க் குழப்பி பீங்கானிலிட்டு சூடேற்றினால் சரக்குகள் தைலமாகும். இத்தைலத்தில் சேர்க்க வேண்டிய மருந்தைக் கூறுகிறேன் கேள்!

கால சிங்கி

கேளுநீ சாரங்காரங்
கெடியான கெந்தி தாரம்
வாளுநீ தொட்டிநாபி
வாழ்நறு விஷத்தோடேழு
தாளுநீ வகையரெழுந்
தனியரைப் பலமேதேய்த்துக்
கோளுநீ தைலத்தோடு
கூட்டியே குழப்பிடாயே. *(பா. 639)*

குழப்பிய தைலப்பெருங்
கோடின காலாசிங்கி
யழப்பிய போட்டுப்போட
அப்பனே சூதஞ்சாகும்
இழப்பியே சூதங்கட்டி
யிறுகிற்றே யென்பார்காண்பார்
துழப்பியே உண்ணுமட்டும்
சுன்னத்தை ஊதுஊதே. *(பா. 640)*

ஊதிய தீபம்போலே
யுறவான தைலஞ்சூதம்
நீதியாய் வாட்டிப்பின்னே
நேர்படக் கரண்டிக்குள்ளே
மாதிய வெண்ணெய்குத்தி
வளமாக உருக்கிக்கொண்டு
போதிய குகையிலிட்டுப்
பொன்காரமிட்டே ஊதே. *(பா. 641)*

சாரம், காரம், கெந்தி, அரிதாரம், தொட்டிபாஷாணம் நாபி, நிர்விஷம் போன்ற ஏழு சரக்கையும் வகைக்கு அரைப்பலம் எடுத்து மேற்கூறிய தைலத்தில் போட்டு குழப்பிக் கொள். மருந்து சேர்த்த இத்தைலத்திற்கு காலசிங்கி என்று பெயர். இத்தைலம் பட்டமாத்திரத்தில் சூதமானது சுருண்டு சாகும். இதை மக்கள் முழுகட்டு என்று கூறுவார்கள் ஆனால் உண்மையில் தைலத்துடன் சூதத்தை சேர்த்து ஒன்றாய்க் கலந்து தீயிலிட்டு வாட்டி கரண்டிக்குள் போட்டு வெண்ணைக் குத்தி உருக்கி குகையிலிட்டு பொன்காரம் சேர்த்து ஊத வேண்டும்.

இட்டுநீ உருக்கச்சூதம்
இடைசரி யாகும்பாரு
பட்டது சூதந்தானும்
பார்த்தேறத் தொந்தமேறும்
கட்டது சரக்கதெல்லாங்
காட்டிடுங் காலசிங்கி
வட்டது வென்றுசொல்ல
வாயில்லை கண்டிடாயே. *(பா. 642)*

இவ்வாறு செய்வதால் சூதமானது தன்னெடையில் எந்த ஒரு மாறுதலும் அடையாமல் தங்கம் போல் பிரகாசிக்கும். இதை தொந்தித்து சாரணை ஏற்றினால் குளிகையாகும். மேலும் சூதத்தைப் போன்று இக்காலசிங்கி பட்டமாத்திரத்தில் சரக்குகளெல்லாம் கட்டி திடப்படும். இதை வாயால் கூறமுடியாது.

கண்டிடு முன்னேசொன்ன
காணெட்டு வேதையாடப்
பண்டிடு குளிகையாகும்
பலபல சரக்குமாகும்

மண்டிடு வேதைகோடி
வழிமெத்த வென்னசொல்வேன்
தண்டிந்த தைலந்தன்னிற்
சகலமுஞ் சத்ததாமே. *(பா. 643)*

இக்காலசிங்கியால் செய்யப்பட்ட இரசக்குளிகையானது (635ஆம் பாடலில் கூறப்பட்ட) எட்டு வகையான வேதைகளையும் உணடாக்க வல்லது. மேலும் இக்காலசிங்கியால் சகல சரக்குகளும் சத்தாகும்.

ஆமினிச் சிங்கிபோனால்
ஆருக்குஞ் சூதங்கட்டா
போமினி வேதைபொய்யாய்ப்
புகழ்சூதங்கட்டாதாகிற்
றாமனி குறுக்காளாலே
தனிச்சூதங் கட்டுங்கட்டும்
ஓமினி உபரசத்தில்
ஒரு கோடி சூதஞ்சாமே. *(பா. 644)*

இக்கால சிங்கியை விட்டவற்கு சூதமானது எளிதில் கட்டாது. வேதையும் பொய்யாய்ப் போகும். இச்சிங்கியை தவிர குருச்சுன்னத்தாலும், உபரசத்தாலும் சூதமானது கட்டி திடப்படும்.

தாமிந்த மூன்றிலைந்து
தனிச்சூதன் ராசன்கேளு
பாமிந்தப் பாதைவிட்டாற்
பதைப்பொன்றா லடங்காதப்பா
வாமிந்த மூன்றும்பார்த்து
வகைகண்டோர் வாசியாமே
யோமிந்தப் பிரணவமான
உத்தமி சொன்னவாறே. *(பா. 645)*

இம்மூன்று வகையிலும் சூதத்தைக் கட்டி வேதை செய்து பார்ப்பவர் சித்தரே! இம்மூன்று வகையைத் தவிர வேறு எந்த விதத்திலும் சூதமானது முழுமையாக கட்டாது இதை உத்தமித்தாயானவர் எனக்கு கூறினாள். எனவே மூன்று வகையிலும் சூதத்தை கட்டுவதற்கு முயற்சி செய்!

வாறுதா னிந்தமூன்றால்
மகத்தான சூதங்கட்டுந்
தாறுதான் மூன்றுக்குள்ளே
தலைகாணுஞ் சிங்கிராசன்

பேறுதான் இதனைவிட்டாற்
பேறில்லை கீர்த்தியில்லை
கூறுதான் சூதவேதை
கோடிக்குங் கோடிகாணே. (பா. 646)

சூதத்தைக் கட்டுவதற்கு மூன்று முறைகள் உள்ளதென்றாலும் இதில் முதன்மை வகிப்பது சிங்கி முறையே இச்சிங்கி முறையை விட்டால் பேரும் புகழும் அடைய முடியாது. சிங்கியால் கட்டப்பட்ட சூதத்தை லோகங்களில் கோடியிற் கோடி பங்கு சேர்த்தால் வேதையுண்டாகும்.

பூரண சிங்கி

காணொரு சிங்கிசொல்வேன்
கரையில்லை கண்ணோக்கில்லை
வாணொரு நூலுக்குள்ளே
மார்க்கமுஞ் சொல்வதில்லை
பூணொரு பெண்ணுமாணும்
போக்கிதை கண்டோரில்லை
தோணொரு கயிலைமூர்த்தி
சொல்லுக்கு ளில்லைபாரே. (பா. 647)

இன்னுமொரு சிங்கி மார்க்கத்தை கூறுகிறேன் கேள்! இம்முறை வேறு எந்த நூலிலும் இல்லை. பெண் மாயை வென்று சிங்கியை செய்தவர்கள் யாரும் கிடையாது. சிவபெருமான் ஒருவர் மட்டுமே இதை செய்து பார்த்துள்ளார்.

பாருநீ உடும்போடாமை
பரவிய வளுங்குபன்றி
தேருநீ நுணலையோடு
சிறந்திடு மீசல்நாயும்
தாருநீ மயிலுங்கோழி
தனித்தனி நெய்யைவாங்கி
காருநீ வகையொன்றொன்று
கழஞ்சுதான் தூக்கிக்கொள்ளே. (பா. 648)

கொள்ளவே புனுகினோடுங்
கூட்டிய சவாது ரெண்டும்
தள்ளவே வகைக்குநாலு
தனித்தனி கழஞ்சுதூக்கி

விள்ளவே பதினொன்றாச்சு
வெருவியே ஒன்றாய்க்கூட்டி
அள்ளவே இதற்குள்போட
அப்பனே கன்னங்கேளே. *(பா. 649)*

உடும்பு, ஆமை, அளுங்கு, பன்றி, நுணலை, ஈசல், நாய் மயில், கோழி போன்ற ஒன்பது வகையான உயிரினங்களின் கொழுப்பை வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து நெய்யாய் உருக்கி ஒன்றாக்கிக் கொண்டு பின் இந்நெய்யில் புனுகும் சவ்வாதும் வகைக்கு நாலு கழஞ்சு சேர்த்து நன்றாய்க் குழப்பிக் கொள். இனி இந்த நெய்யில் போட வேண்டிய மருந்தைப் பற்றி கூறுகிறேன் கேள்!

கேளுநீ நிமிளைசூதங்
கெடிகெந்தி வீரம்பூரம்
வாளுநீ சிலைமால்தேவி
மருவிய துருசுதுத்தம்
தாளுநீ சாரங்காரந்
தனித்திடு லவணத்தோடே
கோளுநீ வங்கம்நாகம்
குலாவிய வீயங்காணே. *(பா. 650)*

காணுநீ தங்கத்தொட்டி
கார்முகில் கெவுரிவெள்ளை
யாணுநீ சமனாயெல்லாம்
அஞ்சனத் தோடேகேளு
பூணுநீ யிருபதொன்று
புகழ்பெற்ற சுன்னமெல்லாம்
வாணுநீ வகையொன்றுக்கு
மாட்டரைக் கழஞ்சுதானே. *(பா. 651)*

[illegible]னிதை முந்துநெய்யஞ்
சவாதுடன் கலந்துபீங்கான்
[illegible]னிதை ரவியில்வைத்து
வளமாகக் காந்திகாட்டு
கோனிது தைலமாகுங்
கூட்டவே மருந்துகேளு
ஆனிது சாரதாரம்
அரிதாரங் கெந்திகாணே. *(பா. 652)*

நிமிளை, சூதம், கெந்தி, வீரம், பூரம், மனோசிலை, மால்தேவி, துருசு, துத்தம், சாரம், காரம், லவணம், வங்கம்., நாகம் ஈயம், தங்கம், தொட்டி, கார்முகில், கெவுரி, வெள்ளை, அஞ்சனக்கல் போன்ற இருபத்தொரு வகையான சுன்னத்தையும் வகைக்கு அரைக்கழஞ்சு எடுத்து (புனுகும் சவ்வாதும் சேர்த்து) முன் நெய்யில் இவ்விருபத்தொரு சுன்னத்தையும் போட்டு குழப்பி பீங்கானில் வைத்து சூடேற்றினால் தைலமாகும். இத்தைலத்தில் சேர்க்க வேண்டிய மருந்தை கூறுகிறேன் கேள்!

காணிது வீரம்பூரங்
கடுநிறு விஷமுநாபி
தோணிது கவரிமான்தோல்
சுக்கிலம் நாதம்தொட்டி
கோணிது மனித்ன்காதில்
குறும்பி கஸ்தூரியோடு
வாணிது ரோசனையும்
வகைபதி னைந்துங்கேளே. (பா. 653)

கேளுநீ வகையொன்றொன்று
கெடியொரு பணமேதரக்கத்
தோளுநீ தையிலத்துள்ளே
சுகமாக அரைத்துக்கூட்டு
ஆளுநீ ஒன்றாய்ச்சேர்த்தே
ஆத்தாளைப் பூசைப்பண்ணு
போளுநீ இதனின்பேரும்
பூரண சிங்கிதானே. (பா. 654)

சாரம், காரம், அரிதாரம், கெந்தி, வீரம், பூரம், நிற்விஷம், நாபி கவரிமான்தோல் சக்கிலம் (விந்து), நாதம், தொட்டி, மனிதனின் காதுக்குறும்பி. கஸ்தூரி, கோரோசனை போன்ற பதினைந்து மருந்துகளையும் வகைக்கு ஒரு பண அளவு எடுத்து மேற்கூறிய தைலத்தில் போட்டு கலக்கி தாயை பூசை செய். இத்தைலத்திற்கே பூரண சிங்கி என்று பெயர்.

சிங்கியோ இதனின்பேரு
செயலொத்த போதமப்பா
வங்கிபோல் அண்டரண்டம்
அளாவிய அருள்தானப்பா

பொங்கியே சீவனெல்லாம்
பூரண மானதப்பா
தங்கிய அருளால்தேவி
சாற்றிடப் பார்த்திட்டேனே. *(பா. 655)*

மேலும் இதை போதச்சிங்கி என்றும் அழைப்பார்கள். அண்டரண்டம் முழுவதும் வியாபித்து நிற்பதும் அனைத்து சீவனுள்ளும் மறைந்து நிற்பதும் ஆனந்தவடி கொண்டதுமான பூரணப்பொருளை தேவியின் அருளால் கண்டுக் கொண்டேன்.

பார்த்திட்டே ஆத்தாள்பாதம்
பரவியே மனத்தைவைத்துக்
கோர்த்திட்டேன் ஆண்டுநூறு
கொண்டனன் சமாதிக்குள்ளே
தோர்த்திட்டேன் மாயையெல்லாந்
துறத்தினேன் செயித்தேனப்பா
மார்த்திட்ட மாச்சுசிங்கி
வழிசொல்வேன் கண்டுகொள்ளே. *(பா. 656)*

கண்டுகொண்ட அப்பூரணப் பொருளின்மீது மனதை வைத்து நூறு ஆண்டுகள் சமாதியிலிருந்து மாயையை வென்றேன். இனி பூரண சிங்கியின் உபயோகத்தைப் பற்றி கூறுகிறேன் கேள்!

கண்டுகொள் சூதஞ்சேர்ற்
கடுஞ்சிங்கி துள்ளிக்குத்தும்
தண்டுகொள் பலமதெட்டும்
தனிச்சூதம் வெண்ணெயாகும்
பண்டுகொள் கிழிபோற்கட்டிப்
பருஞ்சூடன் தீயில் வாட்டி
அண்டுகொள் கரண்டிக்கிட்டே
அப்பனே எண்ணைகுத்தே. *(பா. 657)*

குத்தியே உருக்கிக் கொண்டு
குகைக்குள்ளே போடுசூதம்
பத்தியே காரங்குத்திப்
பதறுதே வுருக்கிப்பாரு
தத்தியே கண்விட்டாடுஞ்
சகலமு மொவ்வா தொப்பு
வத்திய பூரணத்தில்
கைகண்டத்தைக் காட்டுங்காணே. *(பா. 658)*

எட்டு பலம் சூதத்தை எடுத்து ஒரு துளி பூரண சிங்கியை சேர்த்தால் சூதமானது வெண்ணையாகும். இவ்வெண்ணையை கிழிபோல் கட்டி கற்பூர தீயில் வாட்டினால் கரண்டிக்குள்ளிட்டு எண்ணை சேர்த்து உருக்கி குகையிலிட்டு காரம் சேர்த்து உருக்கினால் சூதமானது கண்விட்டாடி பிரகாசிக்கும் இதுவே முழுக்கட்டாகும்.

காணிந்தச் சூதந்தன்னைக்
கடுகிச் சாரணையேசெய்ய
வாணிந்தச் சூதத்தோடே
மகாமேரு நிகராகாது
பூணிந்தக் கவனமாகிற்
பொய்யெனு மண்டத்தோட்டில்
தோணிந்தக் குளிகைகாட்டச்
சொர்னமு மாகும்பாரே. *(பா. 659)*

பாருநீ இதற்குள்மாற்று
பராபரை சொல்லக்கண்டேன்
ஏரிரு நூற்றுப்பத்தாய்
எழுந்தது மாற்றுக்கேளு
தாருரெண் டாயிரந்தான்
தனியாவ தேதுமாற்று
கோருநீ சூதராசன்
கொடுத்திடு மாற்றுதானே. *(பா. 660)*

இச்சூதமணிக்கு சரரணை செய்து குளிகையாக்கினால் கவுனம் முதல் வாதம் வரை சித்தியாகும். இக்குளிகையை அண்டவோட்டின் முன்பாக காண்பித்தால் அண்டவோடானது பொன்னாகும் இப்பொன்னானது இருநூற்று பதினேழு முதல் இரண்டாயிரம் வரை மாற்றுக் கொண்டதாயிருக்கும் என்று பராபரைத் தாய் எனக்கு கூறினாள். இவை யாவும் சூதத்துடன் சேர்ந்த சிங்கியால் ஏற்பட்ட மாற்றாகும்.

சிங்கியாட்டம் வாத வழக்கம்

தானென்ற மாற்றுதானுந்
தமியேனும் பயந்துசொன்னேன்
வானென்ற சித்தர்யோகர்
மற்றைய ரிஷிகளெல்லாம்

பாினென்று பார்த்தோருண்டோ
பாராதா ருண்டோகாணேன்
தேனென்ற மொழிசொல்வாலை
செப்பினாள் சித்திதானே. *(பா. 661)*

இப்பூரண சிங்கியால் கட்டிய சூதத்தின் குளிகையானது அளவிட முடியாத மாற்றை உண்டாக்கும். இக்குளிகையால் ஏற்படும் பொன்மாற்றின் அளவை சித்தர்கள், முனிவர்கள், யோகிகள் போன்ற எவரும் இதுவரை கண்ட தில்லை. அதேபோல் நானும் மாற்றின் அளவை பயத்துடன் தான் கூறியுள்ளேன். நான் பொன்மாற்றின் அளவை வாலையான தேவியிடமிருந்து கேட்டறிந்தேன்.

சித்திக்குள் பிறந்ததையா
சித்தான சொச்சொரூபம்
பத்திக்குள் பிறந்ததையா
பகலிர வொன்றும்ஞானம்
முத்திக்குள் பிறந்ததையா
முனைமூக்கில் முதிர்ந்தபோதம்
அத்திக்கெண் டிதனையேற
அகப்பட்ட சூதந்தானே. *(பா. 662)*

சித்தியால் சித்தசொரூபமும் பக்தியால் பகலிரவின் ஞானமும், முக்தியால் புருவமைய ஞானமும் பிறந்தது. இவை அனைத்தும் சூதத்தால் சிரமமின்றி சித்தியாகும்.

தானென்ற சூதந்தானுஞ்
சங்கரன் ரூபமாச்சு
வானென்ற ரூபந்தானும்
மகத்தான சூதமாச்சு
கானென்ற நீறுமென்ற
கடந்ததோர் வாயுவென்ற
கோனென்ற சூதந்தன்னைக்
கூறவுங் கூடாதென்னே. *(பா. 663)*

இச்சூதமானது சிவனுட சொரூபமாகும். ஆகாச ரூபமும் இச்சூதமேயாகும். மேலும் வாயு மற்றும் நீறின் ரூபமும் இச்சூதமே! இதை வெளிப்படையாக்கூறக்கூடாது.

கூடாத சூதந்தன்னைக்
குறுகிற்று கட்டிற்றென்பார்
போடாத தங்கமென்ன
போடுவ தென்னமென்பார்
வாடாத வாதந்தானும்
மகத்தான வெளிதேமென்பார்
தாடான சிவனுக்குள்ளே
தனிக்குட்டிச் சிவன்கள்தாமே. *(பா. 664)*

சிவனாக விருந்தானாகிற்
செய்தொழில் மறைவேயாகும்
கவனாகிக் கழுதைசெத்துக்
கட்டின முளைகாண்மாண்பர்
எவனாகி யிருந்தாலென்ன
வேற்கையாச் சூதங்கட்டான்
தவனாக யோகிபோகி
தனிச்சூதங் கட்டுவானே. *(பா. 665)*

இப்படிப்பட்ட மகிமை வாய்ந்த சூதத்தை எளிதாக கட்டிவிட்டேன் என்று கூறுவார். அதுமற்றுமின்றி இக்கட்டி சூதத்துடன் தங்கத்தை எதற்காக சேர்க்க வேண்டும். தங்கம் சேர்க்காமலேயே வாதமானது மிக எளிதாக கைக் கூடும். மேலும் தன்னை சிவனுக்கு நிகரானவன் என்று கூறிக்கொள்வார் அப்படி அவன் சிவனாக இருந்தால் அடக்கமாக இருந்து வாதம் பார்ப்பான். அவ்வாரில்லாமல் கழுதை மாண்பர்களும், மூளையில்லா மாண்பர்களும் சூதத்தைக் கட்டமாட்டார் தவசீலரும், யோகியும், ஞானியுமே சூதத்தைக் கட்டி வாதம் பார்ப்பார்.

கட்டினாற் பொன்னுமுண்டு
கட்டாட்டாற் பொன்னுமில்லை
கொட்டினால் தேளேயாச்சு
கொட்டாட்டாற் பிள்ளைப்பூச்சி
எட்டினால் ரசத்தைப்பாரு
எட்டாட்டால் தொழிலைப்பாருங்
கெட்டுநான் கிழிந்தேனென்று
கெடவேண்டாம் மூடாகேளே. *(பா. 666)*

சூதத்தைக் கட்டினால் பொன்னுண்டாகும். கட்ட வில்லை என்றால் வேதைபலியாது. கொடுக்கைக் கொண்டு கொட்டினால் தான் தேள்!

கொடுக்கை வைத்துக் கொண்டு கொட்டவில்லை என்றால் அது பிள்ளை பூச்சியாகும்! ஆகவே ரசத்தைக்கண்டு அதனுட தொழிலைறி. ஐயோ! நான் கெட்டுவிட்டேன் என்ற புலம்பாமல் இனியாவது மனதை ஒடுக்கி முன்னேற முயற்சி செய் மூடனே முயற்சி செய்!

கேளுநீ சூதக்கட்டு
கிடையாதே போச்சுதென்று
பாளுநீ பாஷாணத்தைப்
பார்த்துமே மயங்காதப்பா
வேளுநீ யுரித்தவீசன்
விளக்கினார் தேவிக்கென்று
கோளுநீ வாதப்பேருங்
கொடுரச வாதந்தானே. *(பா. 667)*

சூதக்கட்டை நான் அறியவில்லை என்று புலம்பாமலும் பாஷாணத்தைக் கண்டு மயங்காமலும் திடமாக இருந்து சிவபெருமானால் தேவிக்கு உபதேசிக்கப்பட்ட இம்முறையை (பூரண சிங்கி முறையை) அறிந்து செய்து பார். உனக்கு இரசவாதம் சித்தியாகும்.

தானென்ற சூதந்தானுஞ்
சச்சிதா னந்தமாச்சு
தானென்ற சூதந்தானே
தயங்காத போதமாச்சு
தானென்ற சூதந்தானே
சமரசப் பிரமமாச்சு
தானென்ற சூதஞ்சித்து
தனக்குள்ளே யுழன்றுபாரே. *(பா. 668)*

சச்சிதானந்த ரூபமாகவும், ஆனந்த போதமாகவும், பரப்பிரம்மமாகவும், சித்து வடிவமாகவும் நிற்பது இந்த சூதமே.

பாரென்ற சூதக்கட்டுப்
பகுத்திட்டேன் முன்னேயானும்
வாரென்று வேழுசிங்கி
வகையெல்லாஞ் சொன்னேன்சொன்னேன்
தாரென்ற சிறுபெண்சொல்லச்
சதாசித்துக் கையுங்கண்டேன்
நேரென்ற வாதசித்தி
நிலைத்திட விந்நூல்பாரே. *(பா. 669)*

ஆகவேதான் சூதத்தினை கட்டுதற்கு ஏழு வகையான சிங்கி முறையை முன்னமே கூறிவிட்டேன். இச்சிங்கி முறையாவும் வாலை பெண்ணான தேவிச் சொல்லக் கேட்டு செய்து பார்த்தேன். நான் செய்து பார்த்த முறைகளை இந்நூலில் கூறியுள்ளேன். இதை நீ படித்தறிந்தால் வாதமானது மிக எளிதாக சித்தியாகும்.

பாருநீ சூதஞ்செத்தாற்
பராபரை முன்னேநிற்பாள்
பாருநீ சூதஞ்செத்தாற்
பளிச்சென்று பொன்னுமாகும்
பாருநீ யுடம்புசெத்தாற்
பரவிய வுடம்புபொன்னாகும்
பாருநீ சூதஞ்செத்தாற்
பறக்கலாங் கெவனங்கேளே. *(பா. 670)*

சூதமானது மடிந்தால் பராபரைத் தாயானவள் முன்னே நிற்பாள். மேலும் ரசவாதமும், கெவுனமும் சித்தியாகும். இரசத்தைப் போன்றே இக்காயமானது மடிந்தால் காயசித்தியுண்டாம். உடல் பொன்மயமாகும்.

கேளுநீ சூதஞ்சாகக்
கெடியாக விணங்கன்சொல்வேன்
வாளுநீ சாரங்கார
யகத்தான சுன்னங்கொல்லும்
காளுநீ லோகமான
கடிதான சுன்னங்கொல்லும்
தேளுநீ பாஷாணத்தின்
செயசுன்னங் கொல்லுந்தானே. *(பா. 671)*

தானென்ற உபரசங்கள்
தனியான சுன்னங்கொல்லும்
வானென்ற உதகங்கொல்லும்
வழங்கிய வஸ்துகொல்லும்
கானென்ற மலைகள்தோறும்
கடியதோர் மூலிகொல்லும்
தேனென்ற மொழியாளெங்கள்
சிவகாமி சொன்னவாறே. *(பா. 672)*

மேலும் சூதத்தை மடியச்செய்யும் சரக்குகளை பற்றி கூறுகிறேன் கேள்! காரசார சுன்னங்களும், லோகச்சுன்னங்களும், பாஷாண சுன்னங்களும், உபரசத்தின் சுன்னங்களும் வுதகமும், வஸ்துவும் மலைகள் தோறும் முளைத்திருக்கும் கற்ப மூலிகைகளும் இரசத்தை கொல்லும் (மடியச் செய்யும்). இதை சிவகாமித் தாய் எனக்கு சொன்னாள்.

வாறுகேள் சூதங்கட்ட
வகையெல்லாஞ் சொன்னேனப்பா
பேறுகேள் பூரணத்தின்
புகழான சிங்கிதொட்டுக்
கூறுகேள் சரக்கிதெல்லாம்
குலாவியே புரட்டிவாட்டத்
தாறுகேள் வெவ்வேறாகத்
தனித்தனி வேதையாமே. *(பா. 673)*

ஆமினி உபரசங்கள்
அடங்கலுந் தொட்டுவாட்டிக்
காமினி உருக்கிப்போடு
கடுஞ்சத்து மெதுச்சத்தாகும்
போமினி தூரவேதை
பூட்டவே அறிந்தாயானால்
தாமினி சூதத்தாட்டித்
தனித்தனி விடுவித்தேறே. *(பா. 674)*

இதுவரை சூதக்கட்டு முறைகளைச் சொன்னேன். மேலுங்கேள் பூரண சிங்கித் தைலத்தில் சரக்குகளை பிரட்டி தணலில் இட்டு வாட்டினால் சரக்குகள் தங்கமாகும். இதே போல் தைலத்தில் உபரசங்களை பிரட்டி தணலிலிட்டு வ்ாட்டி உருக்கினால் சத்து உண்டாகும். இச்சத்தை முறைப்படி அறிந்து உபயோகித்தால் தங்கமுண்டாகும். மேலும் சத்தை மணிக்கு ஈந்து சாரணைத் தீர்த்தால் சித்திகள் உண்டாகும்.

ஏறவே வல்லாயானால்
எட்டோடு மாடலாகும்
ஏறவே வல்லாயானால்
எடுத்திடுங் கவனவீதி
ஏறவே வல்லாயானால்
எடுத்திடும் போதத்துள்ளோ
ஏறவே வல்லோன்சித்தன்
இறப்போடு பிறப்புபோமே. *(பா. 675)*

முறையாக சாரணைத்த மணியால், அறுபத்து நாலு சித்தும், கவன பிரவேசமும், சமாதி யோகமும் கைக்கூடும் மேலும் பிறப்பும் இறப்பும் அகன்று முக்தி ஏற்படும்.

போமென்றே ஈசன்சொல்லப்
புகழாகத் தேவிகேட்டே
யாமென்று சந்தோஷித்திவ
வடிமைக்குச் சொன்னாளப்பா
காமென்று சித்தரெல்லாம்
கன்னிக்கே அடிமையாச்சு
வாமென்று வாமத்துள்ளே
வளமாகப் பூசைபண்ணே. (பா. 676)

ஈசனான சிவபெருமான் மூலம் பார்வதியானவள் அறிந்துக்கொண்டு அடிமையான என்மீது அன்புக்கூர்ந்து உபதேசித்தாள். நான் மட்டுமின்றி அனைத்து சித்தர்களும் தாயான பார்வதிக்கே அடிமை. ஆகவே பார்வதியான சிவனுட இடதுபாகத்தை அனுதினமும் பூசை செய்ய வேண்டும்.

ஞானப் பழக்கம்

பூசையை மறந்துபோனால்
போகாது கவனந்தானும்
பூசையை மறந்து போனால்
போட்டதோர் சூதம்போகும்
பூசையை மறந்துபோனால்
புகழ்காய சித்தியாமோ
பூசையை மறந்துபோனால்
புருமையங் காணாதென்னே. (பா. 677)

காணாதே யென்றுதானும்
கண்கெட்டாற் போலேநிற்பார்
தோணாது சுருதியந்தஞ்
சொரூபமு மொழிந்துபோகும்
பூணாது மனந்தானொன்றிற்
போதத்திற் புகுதவொட்டா
ஊணாது ஊணஊண
ஒருதொழில் கூடாதென்னே. (பா. 678)

தேவியை பூசை செய்யவில்லை என்றால் கவுனமார்க்கமும், சூதக்கட்டும், காய சித்தியும், ஞானமும், கைக்கூடாமல் சிதைந்து போகும். மேலும். வேதத்ின் முடிவான பொருளும், சொரூப சித்தியும், ஆனந்த போதமும் மன ஒடுக்கமும் வாய்க்காது. அஞ்ஞானம் வந்து கூடும். எந்த ஒரு தொழிலும் சித்தியாகாது.

வங்கச் சுன்னம்

கூடாத சூதங்கட்டக்
குறுக்கதி லொன்று சொல்வேன்
தேடாத வாதத்துக்குச்
செயமான பலவனாக
நாடாளுஞ் சூதன்ராசன்
நலங்கிய நிமிளைராணி
ஓடாத தளத்தில்ராசா
ஓங்கிய வங்கமென்னே. *(பா. 679)*

சூதத்தைக் கட்டுவதற்கு சுருக்கான வழி ஒன்றை கூறுகிறேன் கேள்! வாதத்துக்கு ஆதிகாரண கர்த்தாவான சூதமே ராசா, நிமிளை மற்றும் வங்கத்தை கண்டவுடன் ஓடாமல் நிற்கும்.

வங்கத்தைக் கண்டாற்சூதம்
வாய்சோர்ந்து கையுஞ்சோர்ந்து
பங்கத்தில் மானம்போக்கிப்
பதையாமல் சாகும்சாகும்
சிங்கத்தின் கையில்சிக்கும்
சிறுகஜ மாச்சுதப்பா
பங்கத்தில் பங்கபின்னம்
பண்ணியே கொல்லுந்தானே. *(பா. 680)*

வங்கத்தை கண்ட மாத்திரத்தில் சூதமானது வாய் கைப்பொத்தி சோர்ந்து போகும். அதாவது சிங்கத்திடம் அகப்பட்ட யானையைப் போன்று சூதமானது வங்கத் திடம் சிக்கி தவிக்கும்.

தானென்ற வங்கச்சுன்னஞ்
சாற்றுறேன் கடிதாய்ப்பாரு
வானென்ற வங்கமொன்று
வைத்துநீ கரண்டிக்குள்ளே

கானென்ற பச்சைசூதங்
காட்டதில் நாலுக்கொன்று
கோனென்ற விணங்கன்சுன்னங்
குறிப்பாகச் சமனாய்த்தூக்கே (பா. 681)

தூக்கியே வைத்துக்கொண்டு
சுகமாக வுருகும்போது
தாக்கியே போட்டுப்போட்டுத்
தயங்காமற் கிண்டுகிண்டு
ஆக்கிய சோறுபோல
அடங்கலும் பொடியேயாகும்
வாக்கியே நிறுத்துக்கொண்டு
வாழ்பூர முக்கால் சேரே. (பா. 682)

சுலபமான முறையில் வங்கச் சுன்னம் செய்ய வகைக் கூறுகிறேன் கேள்! ஒரு பலம் வங்கத்தை எடுத்துக் கரண்டிக்குள் போட்டு அக்கரண்டியில் நாலுக்கொரு பலம் சூதத்தையும், சம அளவு வெடியுப்புச் சுன்னத்தையும் சேர்த்து அடுப்பில் வைத்து தீமுட்டி எரித்து கிண்டினால் சரக்கானது மடிந்து பொடியாகும். இப்பொடியின் எடைக்கு முக்கால் பங்கு பூரம் சேர்த்து.

சேர்த்துநீ கருவைவார்த்துத்
திறமாக அரைத்துவில்லை
போர்த்துநீ உலரவைத்துப்
புகழ்பெற ஊதிப்போடு
ஆர்த்துநீ சுன்னமாகும்
அதிற்பாதி வீரம்போட்டுக்
கோர்த்துநீ அரைத்துநன்றாய்க்
குறுக்கிடை வில்லைகட்டே.. (பா. 683)

கட்டிய வில்லைதன்னைக்
கடுகவே தணலில்வைத்தே
ஒட்டியே ஊதிப்போடு
உறுதிதான் வங்கச்சுன்னம்
மட்டியா மாண்பர்கேளு
மாட்டிடுஞ் சூதத்துள்ளே
கொட்டிய கயிரதாகுங்
குமரவு முருகுங்காணே. (பா. 684)

முட்டையின் கருவால் அரைத்து வில்லைத்தட்டி உலர வைத்து குகையிலிட்டு ஊதினால் சுன்னமாகும். இச்சுன்னத்தின் எடைக்கு சரி சரி பாதி வீரம் சேர்த்து நன்றாய் அரைத்து வில்லைத் தட்டி குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும் இவ்வங்கச் சுன்னத்தை சூதத்துடன் சேர்த்தால் சூதமானது இறுகும். இறுகிய இச்சூதத்தை குகையில் வைத்துருக்கினால் கண்கட்டாடும் (தங்கம் போல் ஜ்வலிக்கும்).

காணிந்த வங்கச் சுன்னங்
கழஞ்சியில் கருவைவார்த்துத்
தோணிந்தத் துருசியெட்டில்
சுகமாகப் பூசுபூசு
பூணிந்த ஊறல்போகும்
பொருந்தியே உருவாய்க்கட்டும்
வாணிந்தத் தணலில்ஊது
மகத்தான சுன்னமாமே. *(பா. 685)*

இவ்வங்கச்சுன்னம் ஒரு கழஞ்சி அளவு எடுத்து முட்டையின் கருவை வார்த்தரைத்து எட்டு பங்கு துருசின் மேல் பூசி வெயிலிலிட்டால் ஊரல் நீங்கி திடப்படும். இத்திடப்பட்ட துருசை குகையில் வைத்து ஊதினால் துருசு சுன்னமாகும்.

ஆமிந்தச் சுன்னத்தாலே
ஆடலாஞ் சகலவேதை
ஆமிந்தச் சுன்னத்தாலே
அடங்கலுஞ் செயிக்கலாகும்
ஆமிந்தச் சுன்னத்தாலே
அறுநூறு குளிகையாகும்
ஆமிந்தச் சுன்னந்தானும்
அடங்காத மணித்தாயாமே. *(பா. 686)*

இத்துருசுச் சுன்னத்தால் சகலவிதமான வேதையும் சித்தயாகும். மேலும் சகல சரக்கையும் கொல்லலாம். பலவிதமான குளிகையும் சித்தியாகும். இப்படிப்பட்ட மகிமை வாய்ந்த வங்கச் சுன்னம் மனோன்மணித் தாய்க்கு நிகராகும்.

ஆமிந்த வங்கச்சுன்னம்
ஆடுற வித்தைகேளு
காமிந்த நிமிளைமேலே
காட்டிடாய் எடைக்குப்பாதி

போமிந்த ரவியிற்போட்டுப்
புகழ்பெற ஊதுஊது
வோமிந்த நிமிளைதானும்
உருவாகச் சுன்னமாமே. (பா. 687)

இவ்வங்கச் சுன்னத்தால் இன்னுமொரு வித்தைக் கூறுகிறேன் கேள். நிமிளையை ஒரு நிறையாய் எடுத்து இதற்கு பாதி அளவு வங்கச் சுன்னத்தை சேர்த்தரைத்து ரவியிலிட்டு உலர்த்தி குகையில் வைத்து ஊதினால் முழுமையான சுன்னமாகும்.

சுன்னத்தின் மார்க்கஞ்சொல்லத்
தொலையாதென் னாலேயப்பா
பன்னத்தி நிமிளைச்சுன்னம்
பாய்ச்சிடு சூதத்துள்ளே
கன்னத்தில் பெண்ணுமாணுங்
கபளித்து முத்தமிட்டே
பொன்னத்தி னொன்றாய்ச்
சேர்த்தே உருவாகக்கட்டும்பாரே. (பா. 688)

இச்சுன்னத்தைக் கொண்டு பலவகையான தொழில்கள் செய்யலாம். ஆனால் அம்முறைகளை என்னால் கூற இயலாது. மேலுங்கேள் இந்நிமிளைச் சுன்னத்தை சூதத்துடன் சேர்த்தால் இரண்டும் ஒன்றோடு ஒன்று முத்தமிட்டுக் கொண்டு ஒன்றாய் சேர்ந்து கட்டும். (சூதம் - ஆண்: நிமிளை - பெண்).

பாருநீ நிமிளைச்சுன்னம்
படுமுன்னே யெல்லாஞ்சாகும்
கோருநீ சவாதினோடே
குழப்பியே காதில்வைத்துத்
தாருநீ சரக்கைத்
தொட்டுத் தனித்தனி லோகத்தூட்டு
ஆருநீ உரைசெய்யாதே
அடங்காத பொன்னுமாமே. (பா. 689)

இந்நிமிளைச் சுன்னம் பட்ட மாத்திரத்தில் அனைத்து விதமான சரக்கும் மடிந்து சாகும். நிமிளைச் சுன்னத்துடன் சவ்வாது சேர்த்து குழப்பிக் கொண்டு நவலோகத்துடன் கூட்டி குகையில் வைத்து உருக்கினால் பொன்னாகும். இதை எவரிடமும் சொல்ல வேண்டாம்!

பொன்னுமாம் சத்துதானும்
புகழாக விருபத்தைந்து
பன்னுமாம் நிமிளை தானும்
பராபரை நாதமப்பா
தின்னுமாஞ் சூதந்தன்னைச்
செயிக்குமாந் திசைகளெட்டுந்
துன்னுமாந் தூரவோடுஞ்
சுகமாகுஞ் சுகமுமாமே. *(பா. 690)*

சாதாரண பொன் என்று நினையாதே இருபத்தைந்து மாற்றுகொண்ட தாயிருக்கும். பராபரையுட நாதமான நிமிளையால் சூதம் குளிகையாய் கட்டி திடப்பட்டு கவுன சித்தியை உண்டுபண்ணும். அதுமட்டுமின்றி இரசவாதமும் பலிதமாகும்.

சுகமான வீயமூன்றில்
சூட்டிடு சூதிமொன்று
மகமான கரண்டிக்குள்ளே
மருவியே யுருகும்போது
தகமான விணங்கன்சுன்னந்
தாக்கியே சமனாய்ப் போட்டுத்
துகமான மாகக்கிண்டித்
தூக்கிநீ யெடுத்துவையே. *(பா. 691)*

மூன்று பலம் ஈயத்தை எடுத்து ஒரு கரண்டியிலிட்டு உருக்கிக் கொண்டு இதனுடன் சூதம் ஒரு பங்கு சேர்த்து பின் இவ்விரண்டின் எடைக்கு சம அளவு வெடியுப்புச் சுன்னத்தை சேர்த்து கிண்டினால் பொடிப் போலாகும்.

வைத்திட்ட வெடைக்குமுக்கால்
வாட்டியே பூரந்தன்னைப்
பைத்திட்ட கருவாலாட்டிப்
பதறாமல் வில்லைபண்ணிக்
கைத்திட்ட மாகவூது
கடுஞ்சுன்ன மாகுமப்பா
தைத்திட்ட சுன்னம்பாதி
தாக்கிநீ வீரஞ்சேரே. *(பா. 692)*

சேர்த்திட்டு வில்லைபண்ணிச்
சிறக்கவே யுலர்த்தியூது
போர்த்திட்ட சுன்னமாகும்
போக்கிதல் மெத்தமெத்த

காத்திட்ட புலிதானாட்டைக்
கவ்வின வாறுபோலச்
சோத்திட்ட வுப்புபோலத்
துடியாமற் சூதஞ்சாமே. *(பா. 693)*

இப்பொடிக்கு முக்கால் பங்கு பூரம் சேர்த்து முட்டையின் கருவால் அரைத்து வில்லைத்தட்டி உலர்த்தி குகையில் வைத்து ஊதினால் கடுஞ்சுன்னமாகும். இச்சுன்னத்திற்கு சம அளவு வீரம் சேர்த்து நன்றாக அரைத்து வில்லைதட்டி உலர்த்தி குகையில் வைத்து ஊதினால் ஈயமானது முழுச்சுன்னமாகும். இச்சுன்னத்தை சூதத்துடன் சேர்த்தால் புலியிடம் அகப்பட்ட ஆட்டைபோல் கதறிச்சாகும்.

சாமிந்தச் சூதம்போலே
தனித்தனி சரக்கிதெல்லாம்
தாமிந்த வகையைக்கண்டு
தாயெனக் கருளிச்செய்தாள்
ஓமிந்த மூலத்துள்ள
யுதிக்கின்ற நந்திசொல்ல
வாமிந்த மூலமூர்த்தி
வகையெல்லாம் வழங்கினாரே. *(பா. 694)*

சூதத்தைப் போல் மற்ற எல்லா வகையான சரக்கும் மடிந்து சாகும். இம்முறையை சிவகாமித்தாய் எனக்கு சொன்னாள். இதே முறையை திருமூலர் மூலாதாரத்திலுள்ள நந்தியிடமிருந்து அறிந்து கொண்டு எனக்கு கூறினார்.

வழங்கிய வீயம்போல
வரிசையாய் நாகம்வைத்துத்
தழங்கியே முடித்தாயானால்
தனிப்புவி நாகச்சுன்னம்
முழங்கிய சூதத்தூட்டு
முயற்சித்துச் சூதஞ்சாகும்
அழங்கிய பாஷாணங்க
ளறுபதுங் கட்டுந்தானே. *(பா. 695)*

ஈயத்தை சுன்னம் செய்தது போல் நாகத்தையும் சுன்னமாக செய்து சூதத்துடன் சேர்த்தால் சூதமானது மடிந்து சாகும். சூதத்தைப் போலவே நாகச்சுன்னம் பட்ட மாத்திரத்தில் அறுபத்து நால்லு பாஷாணங்களும் கட்டும்.

(அதாவது மூன்று பலம் நாகத்தை கரண்டியிலிட்டு நன்றாய் உருக்கிக் கொண்டு இதனுடன் ஒரு பங்கு சூதம் சேர்த்து பின் இவ்விரண்டின் எடைக்கு சம அளவு வெடியுப்புச் சுன்னத்தை கூட்டி அடுப்பேற்றி கிண்டினால் சரக்குகள் பொடியாய் நொறுங்கி நிற்கும்.

இப்பொடிக்கு முக்கால் பங்கு பூரம் சேர்த்து முட்டையின் கருவால் அரைத்து வில்லைத்தட்டி உலர்த்தி குகையில் வைத்தூதினால் சுன்னமாகும். இச்சுன்னத்தின் எடைக்கு சரி பாதி வீரம் சேர்த்து நன்றாக அரைத்து வில்லைத்தட்டி உலர்த்தி குகையில் வைத்து ஊதினால் நாகம் முழுமையாக சுன்னமாகும். இதுவே நாகச்சுன்னம் செய்முறையாகும்).

தானின்ற நாகச்சுன்னஞ்
சாற்றிடத் தங்கமேலே
வேனின்ற தங்கம்மூன்று
விளம்பிய சுன்னமொன்று
கானின்ற கருவாற்பூசிக்
கனக்கவே வாட்டியூது
மானின்ற தங்கந்தானும்
வந்தது சுன்னமாமே. *(பா. 696)*

தங்கத்தை மூன்று பலம் எடுத்து கொண்டு இத்தங்கத்தின் மேல் ஒரு பலம் நாகச்சுன்னத்தை முட்டையின் கருவால் அரைத்து பூசி தணலில் வாட்டி குகையில் வைத்து ஊதினால் தங்கம் சுன்னமாகும்.

சுன்னத்தைத் தானுங்காட்டிற்
சூதத்துக் கிடுப்புபோகும்
என்னத்தைத் தொட்டாலுந்தா
னேகிப்போய் வேதையோடும்
பன்னத்த சரக்கதெல்லாம்
படுமுன்னே சாகுஞ்சாரும்
கன்னத்தே வேதைக்கேற்ற
கடுஞ்சுன்னத் தங்கம்பாரே. *(பா. 697)*

இத்தங்கச் சுன்னத்தை சூதத்துடன் சேர்த்தால் சூதமானது தலைச்சுற்றி மாளும். மேலும் இத்தங்கச் சுன்னத்தை பூசி எச்சரக்கை உருக்கினாலும் தங்கமாகும். இச்சுன்னத்தால் ஏற்படும் வேதையைப் பற்றி வாயால் கூறி மாளாது.

பாரு நீ வங்கமொன்று

பரிவான நாகமொன்று
தாருநீ யீயமொன்று
தனியொக்க யுருகும்போது
வாருநீ சமனாய்ச்சூதம்
வளமான கரண்டிக்குள்ளே
கோருநீ யிணங்கன்சுன்னங்
குமட்டியே மூன்றுபோடே. *(பா. 698)*

வங்கம், நாகம், ஈயம் இம்மூன்றையும் வகைக்கு ஒரு பலம் எடுத்து கரண்டியிலிட்டு உருக்கி இவ்வெடைக்கு சம அளவு சூதமும், மூன்றுபலம் வெடியுப்புச்சுன்னமும் சேர்த்து

போட்டுநீ கிண்டக்கிண்டப்
பொடியாகும் பாருபாரு
காட்டுநீ யெடைக்குமுக்கால்
கற்பூரச் சுன்னம்போட்டு
மாட்டுநீ சாரச்சுன்னம்
வளம்பெற வராகன்மூன்று
கூட்டுநீ கருவாலாட்டிக்
குறையாதே வில்லைபண்ணே. *(பா. 699)*

பண்ணிய வில்லைதன்னைப்
பக்குவ மாகவூது
புண்ணிய வாளனானாற்
பொருமாது சுன்னமாகும்
கண்ணிய சுன்னந்தன்னிற்
கண்டெடை பாதிவீர
மொண்ணியே யரைத்துக்கட்டி
யுறவாக வூதுவூதே. *(பா. 700)*

அடுப்பேற்றி கிண்டினால் சரக்குகள் பொடிப் போலாகும், இப்பொடிக்கு முக்கால் பங்கு கற்பூரச் சுன்னத்தையும், மூன்று வராகன் சாரச்சுன்னத்தையும் சேர்த்து முட்டையின் கருவால் அரைத்து வில்லைத்தட்டி உலர்த்தி குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும். இச்சுன்னத்திற்கு சரிபாதி வீரம் சேர்த்து நன்றாக அரைத்து வில்லைத்தட்டி உலர்த்தி குகையில் வைத்து ஊதினால்,

ஊதிட மூன்றுங்கேளு

வுயர்ந்திடுஞ் சுன்னமாகும்
காதிடு சூதத்துள்ளே
காட்டுமுன் கொன்றுபோடும்
ஓதிட வண்டத்தூட்ட
வுருகியே மெழுகதாகும்
ஆதிடச் சுன்னம்பட்டா
லறுபத்து நாலுஞ்சாமே. *(பா. 701)*

மூன்று லோகமும் உயர்தரமான சுன்னமாகும். இச்சுன்னத்தை சூதத்துடன் சேர்த்தால் உடனே சுழன்று கட்டும். இச்சுன்னத்தை அண்டத்துடன் சேர்த்தால் அண்டமானது உருகி மெழுகாகும். மேலும் இதனால் (இச்சுன்னத்தால்) அறுபத்துநான்கு பாஷாணமும் மடியும்.

சாகிற முறைமையெல்லாஞ்
சாற்றுறே னப்பாகேளு
வேகிற வீட்டுக்குள்ளே
விழுந்தவன் பிழைப்பானோசொல்
ஆகிற சரக்கிதொன்றி
யப்பனே கட்டக்கேளு
பாகிற சுன்னத்தோடே
பச்சைதான் வீரம்போடே. *(பா. 702)*

போட்டுநீ சுன்னத்தோடே
புகழாக வரைத்துக்கொண்டு
நீட்டுநீ பாஷாணத்தில்
நிலைக்கவே பூசிப்பூசி
ஆட்டுநீ யினங்கள்தோறு
மதற்கது பச்சைகூட்டி
யூட்டுநீ வாட்டிவாட்டி
யூதிடச் சுன்னமாமே. *(பா. 703)*

சரக்குகளை மடிக்கும் முறைகளை கூறுகிறேன் கேள்! எரிந்துக் கொண்டிருக்கும் வீட்டிற்குள் குதித்தவன் எவ்வாறு எரிந்து போவானோ. அதே போல் இச்சுன்னம் பட்ட எச்சரக்கும் மடிந்து கட்டும். இச்சுன்னத்துடன், துருசும் வீரம் சேர்ந்து நன்றாக அரைத்துக் கொண்டு பாஷாணங்களின் மேல் பூசி தணலில் வைத்து வாட்டி குகையிலிட்டு ஊதினால் சுன்னமாகும். எக்காரணத்தைக் கொண்டும் துருசை சேர்க்க மறந்து விடாதே. துருசு சேர்க்காமல் செய்தால் சரக்குகள் சுன்னமாகாது.

ஊதிடச் சுன்னமாகு
மூதாட்டா லுருகிநிற்கும்
வாதிட வேண்டுமென்றால்
வாதாடி வேதைபோடு
சூதிட வாதிவந்தாற்
சொட்டொன்று போட்டேயாடு
கோதிட வங்கம்நாகம்
கூடிய வாண்மைதானே. *(பா. 704)*

சுன்னம் சேர்த்த சரக்குகளை குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும். இல்லை உருகி விடும். வாதம் வேண்டுமென்றால் முறையாக செய்து பார். யாரேனும் உன்னிடம் வாதம் செய்ய வந்தால், இதிலிருந்து ஒரு துளி மருந்தை எடுத்து உருக்கிக் காட்டு, வங்கமும் நாகமும் கூடியதால் வாதமானது எளிதில் கைகூடும்.

தானென்ற மூன்றினாலே
தனித்தனிச் சூதங்கட்டும்
தானென்ற மூன்றினாலே
சகலமும் வேதையாகும்
தானென்று மூன்றினாலே
தனிக்கட்டாஞ் சுன்னமாகும்
தானென்ற மூன்றும்விட்டுத்
தயங்கினார் வாதிபாரே. *(பா. 705)*

இம்மூன்று வகையான சுன்னத்தால் (மேற்கூறிய வங்கம் ஈயம் நாகம் போன்ற சுன்னத்தால்) சூதமானது கட்டி திடப்படும் மேலும் வேதை மற்றும் சுன்ன முறைகள் யாவும் மிக எளிதாக சித்தியாகும் இம்மூன்று வகையான சுன்னத்தை விட்டவர்க்கு வாதம் கைகூடாது.

வாதிக்கு மூக்குக்குச்சி
வங்கமும் நாகமப்பா
வாதிக்கு மூக்கைப்போக்கும்
மகத்தான ரசந்தான்பாரு
வாதிக்கு முனையைப்போக்கு
மருவிய துருசுராசன்
வாதிக்கு வானாட்போக்கும்
வழங்கிய சாரந்தானே. *(பா. 706)*

வாதிகளுக்கு வங்கமும் நாகமும் மூக்குக் குச்சிகளாகும். வாதிகளுக்கு ரசமே மூக்கு துருசே மூக்கின் நுனி, சாரமே நாக்காகும் உறுப்பாய் நிற்கும், இச்சரக்குகளை விட்டால் வாதியானவன் மூளிபோல் நிற்பான். ஒன்றும் பலியாமல் போகும்.

திரிவங்கக் கட்டுச்சுன்னம்

தானென்ற சுன்னத்தாலே
சகலமுங் கட்டக்கேளு
வானென்ற சுன்னத்தாலே
வைக்கிற முறையைக்கேளு
கோனென்ற காரசாரங்
கொடுஞ்சுன்ன மாகுதற்குப்
பானென்று கூட்டிக்கூட்டிப்
பதறாம லூதவூதே. *(பா. 707)*

மேற்கூறிய திரிவங்கச் சுன்னத்தால் சரக்குகளை கட்டுதற்கு வகை முறையைக் கூறுகிறேன் கேள்! கார சார வர்க்கங்களை கொடிய சுன்னமாக்க வேண்டுமென்றால் சாரத்துடன் திரிவங்கச் சுன்னத்தைக் கூட்டி ஊதவேண்டும் (திரிவங்கம் - காரீஈயம், வெள்ளீயம் (வங்கம்), நாகம்)

ஊதிட மாட்டாயானா
லுருவாகக் கனமுங்காணு
மூதிட வல்லாயானா
லுயர்ந்ததோர் தூளுமாகும்
ஊதிடக் காரமேறு
மொளிதருஞ் சுன்னமாகும்
ஊதிட வினத்தைக்கண்டே
யுறுசுன்ன மாகவூதே. *(பா. 708)*

ஊதவில்லை என்றால் உருகி பாழாகும். ஆக முறையாக ஊதினால் சரக்குகள் காரமேறி உயர்தரமான சுன்னமாகும் முறையாக ஊதுவது எவ்வளவு முக்கியமோ அதே போல் சரக்குகளின் இனத்தை அறிந்து செய்வதும் முக்கியமாகும்.

சுன்னந்தான் சுருக்காயூது
துறையெல்லாங் கட்டுக்கேளு
துன்னந்தான் சுன்னமொன்று
கோதிலாச் சாரமொன்று

பன்னந்தான் கூட்டித்தேய்க்கப்
பளிச்சென்று தண்ணீராகுங்
கன்னந்தா னிடுவதற்குக்
கன்னக்கோல் சாரநீரே. (பா. 709)

சகல சரக்குகளையும் கட்டி சுன்னமாக்க எளிதான வழியைக் கூறுகிறேன் கேள்! ஒரு பலம் திரிவங்கச் சுன்னத்துடன் ஒரு பலம் சாரச் சுன்னத்தை சேர்த்து அரக்கி தேய்த்தால் தண்ணீராகும். இந்நீரே வாதிகளுக்கு கன்னக் கோலாகும்.

சாரந்தா னீராச்சென்பார்
தனியண்டச் சுன்னம் போட்டுச்
சாரந்தா னீராச்சென்பார்
தனிச்சிப்பிச் சுன்னம்போட்டுச்
சாரந்தா னீராச்சென்பார்
தனிச்சுக்கான் சுன்னம்போட்டுச்
சாரந்தா னிதுவோநீர்தான்
சார்ந்திடச் சுன்னம்போடே. (பா. 710)

அதேபோல் சாரத்துடன் அண்டச் சன்னத்தையும், சாரத்துடன் சிப்பிச் சுன்னத்தையும், சாரத்துடன் சுக்கான் சுன்னத்தையும் தனித்தனியாக சேர்த்தால் அனைத்தும் செயநீராகும். (இதற்கு அண்ட செயநீர், சிப்பிசெயநீர், சுக்கான் செயநீர் என்று தனித்தனி பெயர்களாகும்)

போடுமோர் சுன்னமென்ன
போடாத சுன்னமென்ன
கூடுமோ ரினங்களென்ன
கூடாத வினங்களென்ன
வாடுமோர் வேதையென்ன
வாடாத வேதையென்ன
நீடுமோர் வரிசையெல்லாம்
நிலைசொல்வே னினைவாய்க்கேளே. (பா. 711)

சுன்னம், கட்டுமுறை, வேதை இவற்றின் வரிசை முறைகளைக் கூறுகிறேன் கேள்.

கேளுநீ சாரத்தோடு
கெடிலோகச் சுன்னங்கூட்டு
தாளுநீ தேய்க்கச் சூதந்
தம்பினை போலேயாகும்

ஆளுநீ செயநீரோடு
மப்பனே சூதமொக்க
வாளுநீ கரண்டிக்குள்ளே
வார்த்தெண்ணெய் கொதிப்பித்தாட்டே. (பா. 712)

ஆட்டிய சூதந்தன்னை
யப்பனே லகுவாய்நீயும்
நீட்டியே புடத்தைப்போடு
நிலைத்திடுஞ் சூதம்பாரு
காட்டியே யுருக்கிடப்பா
கண்விட்டே யாடுமாடும்
தீட்டிய வேல்போறக்கண்ணாள்
சிறுபிள்ளை சொன்னவாறே. (பா. 713)

சாரத்துடன் லோகச் சுன்னங்களை சேர்த்து தேய்த்தால் நீராகும். இந்நீரை கரண்டியில் வார்த்து ஒரு பங்கு சூதத்தையும் சேர்த்து கொதிக்க வைத்தால் சூதமானது வெண்ணை போலாகும். இதை லகுவாக ஒரு புடம் போட்டு எடுத்துப் பார்த்தால் திடமாகக் கட்டி நிற்கும். இக்கட்டிய சூதத்தை குகையிலிட்டு உருக்கினால் கண் விட்டாடும். இம்முறைகளை வேல் போன்ற விழிகளை கொண்ட சிறு பெண்ணான தாய் எனக்கு சொன்னாள். அவள் கூறிய முறைப்படி நான் செய்து பார்த்து இந்நூலில் கூறியுள்ளேன்.

வாறுபோற் பாஷாணங்கள்
வகையெல்லாஞ் சாரநீரிற்
கூறுபோற் புரட்டிவாட்டக்
குறையாமற் கட்டும் கட்டும்
தாறுபோல் வேதையோடுஞ்
சகலமுஞ் சுன்னமாகும்
நீறுபோ னிறத்தான் சொல்ல
நிச்சயங் கண்டாள் தாயே. (பா. 714)

பாஷாண வர்க்கங்கள் அனைத்தையும் சார செயநீரில் புரட்டி நெருப்பில் இட்டு வாட்டினால் கட்டும். கட்டிய இப்பாஷாணங்களால் வேதையானது மிக எளிதில் கைகூடும். மேலும் கட்டிய பாஷாணத்தை குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும். இதை சாம்பல் நிறமான மேனியைக் கொண்ட சிவபெருமான் பார்வதிக்கு சொன்னார்.

தாய்சொல்ல யானுங்கண்டேன்
சகலமுஞ் சுன்னமாகத்
தாய்சொல்ல யானுங்கண்டேன்
சகலமுங் கட்டியாடத்
தாய்சொல்ல யானுங்கண்டேன்
சகலமு மீயமாகத்
தாய்சொல்ல யானுங்கண்டேன்
சதகோடி மெழுகுதானே. *(பா. 715)*

பார்வதியானவள் அம்முறைகள் எனக்கு கற்றுத் தந்தாள். அவள் கூறிய முறைப்படி சுன்னம், கட்டுமுறை, சத்தெடுக்கும் முறை (ஈய முறை) மெழுகு போன்றவற்றை செய்து பார்த்து சித்தியடைந்தேன்.

அம்மை வடிவு

தாினென்ற வுதயகாலந்
தனிச்சிறு பெண்ணேயானாள்
காினென்ற வுச்சிநேரங்
கூடியதோர் பிரவிடையானாள்
வாினென்ற சாயங்கால
மகத்தான கிழவியானாள்
வேினென்றே யொன்றிப்பார்க்க
வேதாந்தி யானாள்பாரே. *(பா. 716)*

பாருநீ சிவகாமித்தாய்
பதத்தையே யிகழாதோர்க்குக்
கோருநீ சமாதிஞானங்
கொள்ளையாய்க் காமமீவாள்
தாருநீ வாசியோடு
சகலமுஞ் சித்தியாகும்
வேருநீ யிவளேயல்லால்
வேறொன்றுங் கண்டிலேனே. *(பா. 717)*

தாயானவள் காலையில் சிறுபெண்ணைப் போலவும், மதிய வேளையில் (உச்சி வேளையில்) யுவதியை போலவும், (நடுத்தர வயது மங்கை) சாயங்காலத்தில் கிழவியைப்போலவும் ரூபங்கொண்டிருப்பாள். இவளை முறையாக மனதை நிறுத்திப் போற்றினால் சமாதி, ஞானம், இஷ்டகார்யப்பூர்த்தி, வாசியோகம் மற்றும் அனேக விதமான சித்திகளும் கைகூடும். இவளைத் தவிர உலகத்தில் வேறொரு பொருளை நான் பார்த்ததில்லை.

கண்டிலே னவளைவிட்டாற்
கடுஞ்சித்தி புத்திமுத்தி
தண்டிலேன் வாசிதானுந்
தனிமணி யொக்கக்காணேன்
எண்டிலேன் மனதுதானு
முறவிலேன் பூரணத்தி
லண்டிலேன் சிவனைக்காண
வறிகிலே னறிகிலேனே. *(பா. 718)*

இவளை வணங்காமல் விட்டவர்க்கு, யோகசித்தி, புத்திசித்தி, முக்தி வாசியோகம் போன்றவை எதுவும் பலியாது. மேலும் மனது பூரணத்தில் நிலைக்காமல் போகும். இவளில்லாமல் சிவனையும் பார்க்க இயலாது.

அறிகிலேன் சிவகாமித்தா
யாத்தாளாற் சிவனைக்கண்டே
னறிகிலேன் போகமூர்த்தி
யருளாலே யெல்லாங்கண்டே
னறிலேன் குளிகையாலே
யகண்டத்திற் புக்கிக்கண்டே
னறிகிலேன் முன்னேயானு
மாத்தாளாற் கைகண்டேனே. *(பா. 719)*

நானும் இவளை வணங்கியே சிவபெருமானுடைய தரிசனத்தை பெற்றேன். போக மூர்த்தியின் அருளால் உலகத்திலுள்ள அனைத்து வீதமான ஞானத்தையும் அறிந்துக் கொண்டேன். அதுமட்டுமின்றி குளிகையும் சித்தி செய்து கொண்டு அண்டரண்டம் அனைத்தையும் சுற்றி வந்தேன். இவையாவும் சிவகாமித் தாயான ஆத்தாளின் அருளால் சித்தியாயிற்று.

சுன்ன விவரம்

கைகண்ட மார்க்கமெல்லாங்
களங்கறச் சொல்வேன்கேளு
கைகண்ட சிங்கியாலே
கட்டிய சூதங்கேளு
கைகண்ட கறுப்பேயாகுங்
கடுந்தூர மோடும்பாரு
கைகண்டேன் சரக்குச்சுன்னங்
கனகுரு நாமந்தானே. *(பா. 720)*

தானென்ற சுன்னந்தன்னைத்
தவளம்போ லூதவூது
வாசென்ற லேசாச்சென்று
மயங்காதே மைந்தாகேளு
கோசென்ற தங்கச்சுன்னங்
கொடுமூச்சுக் காற்றுக்கோடும்
பானென்ற மதியதென்றும்
பகுந்தொக்குஞ் சுன்னம்பாரே. (பா. 721)

கைக்கண்ட சுன்ன முறைகளை கூறுகிறேன் கேள்! சிங்கியால் கட்டிய சூதத்தை குகையில் வைத்து ஊதினால் கடுஞ்சுன்னமாகும். இச்சுன்னத்திற்கு குரு என்று பெயர். இச்சுன்னத்தை தவளம் போல் ஊதிக்கொணடு தங்கத்தின் மேல் பூசி ஊதினால் தங்கமானது நீறி, சுன்னமாகும்.

பாருநீ பாஷாணங்கள்
பலவித சுன்னஞ் செய்யத்
தாருநீ யமைக்கவேண்டாந்
தனிமேலே சுன்னம்பூசிக்
கோருநீ வாட்டிவாட்டிக்
குமுறாமல் மெள்ளவூது
ஆருநீ பாஷாணங்க
ளடபடிச் சுன்னமாமே. (பா. 722)

ஆமப்பா சாரகார
மடங்கலு மறைத்தேயூது
போமப்பா லோகமெல்லாம்
பொடியாக வறுத்தேயூது
தாமப்பா பாஷாணங்கள்
தனித்தனி யினமாயூது
வேமப்பா வுபரசங்கள்
வேர்விட்டு வூதவூதே. (பா. 723)

இத்தங்கச் சுன்னத்தை பாஷாணங்களின் மேல்பூசி தணலிலிட்டு வாட்டி குகையில் வைத்து மெதுவாக ஊதினால் சுன்னமாகும். இதேபோல் காரசாரத்துடன் தங்கச் சுன்னத்தை சேர்த்து நன்றாக அரைத்து குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும். இத்தங்கச் சுன்னத்தை லோகத்துடன் சேர்த்து பொடி செய்து வறுத்து ஊதினால் சுன்னமாகும். இதே போல் உபரசங்களையும் இனமறிந்து சுன்னம் சேர்த்து ஊதினால்

கடுஞ்சுன்னமாகும்.

உருக்கு தப்பில்

ஊதுதல் தப்பிப்போனா
லொடுங்கிடும் பிடியாதப்பா
வூதுதல் குறைந்துபோனா
லுருவாகக் கனத்துநிற்கும்
ஊதிடுங் குணத்தைப்பார்த்தே
யூதுநீ சுன்னமாகும்
ஊதிடு முறைமைதப்பி
லுபாயத்தைக் கேளுகேளே. *(பா. 724)*

ஊதும் பொழுது முறைதப்பி ஊதினால் சரக்குகள் சுன்னமாகாமல் கனத்துவிடும். ஆகவே லோகங்களின் குணத்தையும் ஊது முறைகளையும் அறிந்து செய்தால் செயமாகும்.

கேளுநீ சாரசாரங்
கெடியாகத்தவறிற் றென்றால்
வாளுநீ சரக்கைப்போட்டு
வளம்பெற வரைத்தேயூது
தோளுநீ பாஷாணங்கள்
துறைமுறை தவறிற்றொன்றா
லாளுநீ யினத்தின்மேலே
யப்பியே வூதிடாயே. (பா. 725)

காரசாரங்களை சுன்னமாக்கும் பொழுது முறைதப்பினால் அக்காரசாரங்களுடன் குரு சுன்னத்தை சேர்த்து நன்றாக அரைத்து ஊதினால் சுன்னமாகும். பாஷாணங்கள் முறைதப்பி கனத்து நின்றால் குரு சுன்னத்தை பாஷாணங்களின் மேல் பூசி ஊதுங்கால் சுன்னமாகும்.

ஊதிடு லோகச்சுன்ன
மொடுங்கிய முறைதப்பானால்
வாதிடு லோகங்கூட்டி
மாட்யே யூதிப்போடு
யேதிட வினமேதென்றே
யேங்கிய யிளையாதப்பா
வாதிட வினத்தைக்கண்டே
யந்தந்த வினத்தைக்கூட்டே. *(பா. 726)*

லோகங்களை சுன்னமாக்கும் பொழுது பிறழ்ந்தால் அதை குரு சுன்னத்துடன் சேர்த்து நன்றாய் அரைத்து ஊதவே சுன்னமாகும் இதைவிட்டால் வேறு எந்த முறையிலும் சரக்குகள் மடியாது. ஆகவே அந்தந்த இனத்தை கண்டு அதற்கு நேர் குரு மருந்தை கூட்டி ஊத வேண்டும்.

கூட்டியே யுபரசத்திற்
கூடிய வினத்தைக்கண்டு
மாட்டிநீ யூதவூத
மகத்தான சுன்னமாகும்
ஆட்டிய முறைகிளல்லாம்
மப்பனே யடைவாய்ச்சொன்னே
னீட்டிய விரலைப்போக்கு
நேரான சுன்னந்தானே. (பா. 727)

உபரசங்களை சுன்னமாக்க வேண்டுமானால் அதனுட இனத்தை முதலில் அறிந்துக்கொண்டு பின் அதற்கு நேர் குருமருந்தைச் சேர்த்து ஊதினால் சுன்னமாகும். நீ முறையாக சுன்னம் செய்தால் அதனுட வீர்யத்தை கூறுகிறேன் கேள்! சரக்குகள் கடுஞ்சுன்னமானால் இச்சுன்னம் பட்ட மாத்திரத்தில் கையானது வெந்து நீறும்.

சுன்னந்தா னொன்றுகண்டாற்
றொடர்ந்தவை யெல்லாஞ்சுன்னங்
கன்னந்தா னீட்டவாசற்
கரிப்பானை யாச்சுவூது
இன்னுந்தா னென்னசொல்வே
னிளையாதே பிலத்தேயூது
பன்னிந்த நூலைக்கண்டு
பதனமாய்த் பார்த்திட்டூதே (பா. 728)

ஒரு சுன்னத்தை முதலில் செய்து கொண்டால் அச்சுன்னத்தைத் தொடர்ந்து மற்றச் சுன்னங்களை எளிதாக செய்து கொள்ளலாம். இதற்குமேல் இன்னும் என்ன கூற வேண்டும்! சரக்குகளை பலமாக ஊதினால் தான் சுன்ன மாகும். ஊதுமுறைகளை இந்நூலைப் பார்த்து தெரிந்துக் கொண்டு பத்திரமாக வைத்துக் கொள்.

ஊதிடு முறைகிளல்லா
மொவ்வொன் றாய் விரித்துச் சொன்னே
னூதிடு முறைகட்குள்ளே
யுயர்த்தியுங் குறைத்துஞ்சொன்னே

றூதிடு முறையைக்கண்டே
யூதிநீ தொழிலைப்பாரா
யூதிட மாட்டாயானா
லூமைபோ லிருந்திடாயே. (பா. 729)

ஊதும் முறைகள் இந்நூலில் ஒவ்வொன்றாக விரித்து சொல்லி யுள்ளேன் சில இடங்களில் குறுக்கியும் சொல்லியுள்ளேன். ஆகவே அம்முறைகளை நீ அறிந்து கொண்டு சுன்னத் தொழிலைப் பார். இல்லை என்றால் ஊமை போல் பேசாமல் இரு (படித்ததை வெளியே சொல்லாமல் இரு).

இருந்துநீ சுன்ன ம்வீர
மிளைத்திடு சிவப்புக்குள்ளே
யருந்துநீ யொன்றுதானு
மப்பனே யொளித்துவந்தேன்
பருந்துநீ லிங்கம்போடு
பவளம்போற் சிவப்பேயாகும்
சொரிந்துநீ தொலையாமாரி
சொர்னமாய்ப் பொழியும்பாரே. (பா. 730)

சுன்னத்துடன் வீரம் சேர்த்தாலும் சிவந்த நிறங் கொள்ளும் என்று நான் பல இடங்களில் கூறியுள்ளேன். ஆனால் அச்சிவப்பு முறையில் ஒரு சரக்கை கூறாமல் மறைந்து வைத்தேன், அதை இங்கு கூறுகிறேன் கேள்! எச்சுன்னத்துடன் வீரம் சேர்த்தாலும் அதனுடன் கட்டிய லிங்கத்தை சேர்த்தால் உடனே சிவந்த நிறங்கொள்ளும் (இல்லையேல் நிறங்கொள்ளாது) இவ்வாறு லிங்கம் சேர்த்து சிவந்து நிறங்கொண்ட சரக்கால் வேதையானது மழைபோல் பொழியும்.

பாருநீ லிங்கந்தன்னைப்
பரிவாகப் பழத்தின்சாற்றில்
வாருநீ சுருக்குதானு
மகத்தான ஊறல்போகும்
ஆருநீ யறியாதப்பா
வாத்தாளு மப்பனசேர்ந்து
காருநீ யொன்றாய்க்கூடிக்
கபளித்த லிங்கந்தானே. (பா. 731)

லிங்கத்தை எலுமிச்சம்பழச் சாற்றில் சுறுக்கிட்டால் அதனுடவூரல் நீங்கி பிரகாசிக்கும். அம்மையும் அப்பனும் சேர்ந்து லிங்கமாய் நிற்கிறார்கள். இதனுட பெருமையை கூறி மாளாது.

தானென்ற லிங்கக்கட்டு
தனிச்சூதக் கட்டுக்கொக்கும்
தானென்ற வீரக்கட்டு
தனிச்சூதக் கட்டுக்கொக்கும்
தானென்ற வங்கக்கட்டு
தனிச்சூதக் கட்டுக்கொக்கும்
தானென்ற நாகக்கட்டு
தனிச்சூதக் கட்டொப்பாமே. (பா. 732)

லிங்கமானது ஊறல் நீங்கி கட்டிற்றானால் சூதக்கட்டுக்கு சமமாக நிற்கும். அதேபோல் ஊறல் நீங்கிய வீரத்தின் கட்டும், வங்கத்தின் கட்டும், நாகத்தின் கட்டும் சூதத்தின் கட்டுக்கு சமமாகும்.

ஆமிந்த மனதின்மாயைக்
களவில்லை கரையுமில்லை
தாமிந்தச் சுன்னம்போக்குந்
தனியொக்குங் கரையுமில்லை
வாமிந்த மனதுக்கேது
மகத்தான பொறிதானைந்து
காமிந்த சுன்னத்துக்கேது
கடுங்கார சாரங்காணே. (பா. 733)

மனதின் மாயைக்கு ஆரம்பம் முடிவும் இல்லாதது போல் சுன்ன முறைக்கும் ஆரம்பமும் முடிவும் இல்லை. மனதுக்கு ஐந்து பொறிகள் துணை செய்வதுபோல், சுன்னத்திற்கு காரசாரங்கள் துணையாய் நிற்கிறது.

காணிந்த சாரகாரங்
கடியதோ ருப்புக்குள்ளே
பூணிந்த வுப்பைவிட்டாற்
போகாது வேதைகேளு
தோணிந்த வுப்போடொக்குஞ்
சுகமான சூதங்கேளு
வாணிந்தி சொன்னாண்மாயா
மயக்கத்தின் மார்க்கந்தானே. (பா. 734)

காரசாரங்கள் உப்புக்குள் அடக்கம். ஆகவே உப்பை விட்டால் வேதை பலியாது. கட்டிய உப்புக்கு சூதமே சமமாகும். இம்முறையை சிவபெருமான் பார்வதிக்கு சொன்னார்.

தானென்ற பொருள்தானொன்று
தன்னையு நினைப்பதில்லை
வானென்ற மனதாலெண்ணி
வந்தது மாயைதானுங்
கானென்ற பொருண்மேலாசை
கடந்திட்டே னென்பதென்னே
வூனென்ற மனதைக்கட்ட
வொழிந்துபோ மாசைதானே. *(பா. 735)*

தான் தானாய் நிற்கும் பொழுது தன்னுட நினைவும் இழந்து எதையும் நினைப்பதில்லை. இந்நிலையை விட்டு கீழ் இறங்கும் பொழுது ஆணவம் மனதில் கூடுவதால் மாயையானது சூழ்ந்து கொள்கிறது. இந்நிலையில் நான் பொருளாசையை கடந்து விட்டேன் என்று கூறுவாயாகில் அது பொய்யாகும். உண்மையில் மனதை ஒரு நிலையாக நிறுத்தினால் தான் ஆசை ஒழியும் இல்லையேல் ஒழியாது.

ஆசையை யடிக்கவேறோ
ராண்பிள்ளை யுண்டோவப்பா
நேசையா மறிவாய்நின்ற
நெருப்பினா லகன்றுபோகும்
பாசையை விட்டேயாசைப்
பருவத்தை விட்டேனென்பார்
பூசையை யறியாமாந்தர்
பொருள்கண்டே னென்றவாறே. *(பா. 736)*

ஆசையை அழிக்க எந்த ஆண்மகனாலும் முடியாது. ஆசையானது அறிவுமயமாய் நிற்கும் புத்தி என்ற நெருப்பால் அகன்று போகும் ஆசை மற்றும் பாசம் இவை இரண்டையும் இன்னதென்று அறிந்துக் கொள்ளாமல் அனைத்தும் விட்டேன் என்று சிலர் கூறுவார். இது எப்படி இருக்கிறது என்றால் பூசை செய்யாமலேயே மூலப் பொருளை அறிந்துகொண்டேன் என்று கூறுவது போலுள்ளது.

வாறுகேள் விவேகத்தோர்க்கு
வளமான கல்லுப்பா
தாறுகேள் போதத்தோர்க்குந்
தனியான சூதத்தொக்கும்
பேறுகே ளுப்பாற்சூதம்
பிலமாகக் கட்டும்கட்டும்
கூறுகே ளுப்பபேயாதி
கூடிநீ பாருபாரே. *(பா. 737)*

விவேகத்திற்கு கல்லுப்பு உவமையாகும். ஆனந்த போதத்திற்கு சூதம் உவமையாகும். கல்லுப்பால் சூதம் கட்டுவதைப் போல் விவேகத்தால் ஆனந்த போதம் கைக்கூடும். உப்பே அனைத்திற்கும் ஆதி என்றறிந்து கொள்.

பாருநீ யுப்பேதென்னிற்
பரவிய வேலைக்குள்ளே
கோருநீ யாழங்காணாக்
கொடுமலை போலேநிற்கும்
தாருநீ யிதுதானுப்பு
தயங்காதே மைந்தாகேளு
வாருநீ யிறைத்தவுப்பு
வாழ்சோற்றுக் காகுங்காணே. (பா. 738)

ஆதியாக நிற்கும் உப்பானது கடலுக்குள் மலைபோல் பாறைகளாக உறைந்து நிற்கும். இதுதான் உண்மையான உப்பு. மற்றதெல்லாம் சோற்றுப்புப் போன்றதே யாகும்.

உப்பின் மகிமை விபரம்

காணுநீ சோற்றினுப்பைக்
கட்டினே னென்பார்மாந்தர்
தோணுநீ யுருக்கும்போது
சுகமாகக் கரியேயுண்ணும்
பூணுநீ யந்தவுப்பு
பொன்போலே யாடிநிற்கும்
ஊணுநீ யந்தவுப்பை
யுருப்படக் கட்டுகட்டே. (பா. 739)

சில மனிதர்கள் தான் சோற்றுப்பை கட்டியதாகக் கூறிக் கொள்வார். ஆனால் அவ்வுப்பை குகையிலிட்டு உருக்கினால் கரியாய்ப் போகும். நான் கூறிய உப்பானது குகையிலிட்டு உருக்கினால் பொன்போல் ஆடி நிற்கும். ஆக முதலில் நான் கூறிய உப்பை முதலில் கட்டு.

கட்டிற்று கல்லுப்பானாற்
கபளிக்கு மெல்லாந்தாமுங்
கொட்டிற்று தேள்போற்சூதங்
குமுறவே வெண்ணெயாகும்

எட்டிற்ற வாதவீதி
யேறியே யோடலாகும்
தட்டிற்று வுப்புபோனாற்
சகலமுந் தளர்ந்து போமே. (பா. 740)

கல்லுப்பு முழுமையாக கட்டினால் சகல பொருள்களையும் தன்னுள் வாங்கிக் கொள்ளும். மேலும் சூதத்தை வெண்ணை போலாக்கி கட்டும். வாதப் போக்கானது வெளிப்படையாகத் தோன்றி சித்தியாகும். ஆகவே கல்லுப்பை விட்டால் அனைத்தும் பாழாகும்.

போமினி வெடியுப்பான
புகிழலாஞ் சொல்லக்கேளு
தாமினி பூமிதேவித்
தாயுட நாதமப்பா
காமினி கரைத்துக்காய்ச்சக்
கடியதோ ரிணங்கனாச்சு
ஆமினி யைந்தாங்காய்ச்ச
லளவுற்ற கம்பிநன்றே. (பா. 741)

வெடி உப்பின் குணத்தைக் கூறுகிறேன் கேள். பூமித் தாயின் நாதத்தை சுத்த நீரில் கரைத்துக் காய்ச்சினால் இணங்கன் என்ற வெடியுப்பானது கம்பி கம்பியாய் உண்டாகும். இதே போல பலமுறை நீரில் கரைத்து காய்ச்சினால் சுத்தமான கம்பியுப்பு உண்டாகும்.

(கம்பி'யுப்பென்பது - வெடியுப்பின் வேறு பெயராகும்)

கம்பியின் குணத்தைக்கேளு
கருவுபோ லதிலிரண்டும்
நம்பிய யட்டைப்போல
நலம்பெற வொளியேயோடுந்
தும்பியில் சுருக்காய்த் தீய்க்குஞ்
சுழன்றெரி யெரிந்துபோகும்
அம்பிநீ யிந்தவுப்பை
யறிந்துமே கட்டிப்பாரே. (பா. 742)

இதைப் பற்றி மேலும் கூறுகிறேன் கேள்! உப்பு இரண்டு வகையுண்டு. ஒன்று தீயிலிட்டவுடன் அட்டைப் போல் உருகும். மற்றொன்று தீயிலிட்டவுடன் எரியும். இதில் இரண்டாவதாக கூறிய உப்பே உயர்தரமானது. தரமான உப்பை அறிந்து கட்டிப்பார்.

வெடியுப்பு காரசார இனம் சரக்கு விபரம்

பாருநீ காரந்தன்னைப்
பலபல கரட்டைத்தள்ளு
கோருநீ பளிங்குபோலக்
குறிப்பான காரம்பாரு
தாருநீ யெண்ணெய்போக்கு
சத்துருக் கொண்டேகட்டு
ஏருநீ யிதனின்வேதை
எலையிலை காணுகாணே. *(பா. 743)*

காரத்தை எடுத்து அதிலுள்ள கல், மணல் மற்றும் மாசு போன்றவற்றை நீக்கினால் பளிங்கு போலிருக்கும் இதுவே உயர்தரமானது மேலும் இக்காரத்திலுள்ள எண்ணெயை அகற்றி சத்துரு சரக்கை கொண்டு கட்டினால் எல்லை இல்லாத வேதைகள் உண்டாகும்.

காணுநீ சீனந்தன்னிற்
கடியதோ ருப்பைத்தள்ளு
வேணுநீ பசுமைதள்ளு
விரவிய கரடுதள்ளு
தோணுநீ பளிங்குபோலச்
சுத்தமாஞ் சீனம்வாங்கு
ஆணுநீ கட்டுகட்டு
அறுபதுங் கட்டுங்காணே. *(பா. 744)*

சீனம் என்ற உப்பை எடுத்து அதிலுள்ள கல், மணல், தூசி போன்ற தோஷங்களை நீக்கினால் பளிங்கு போல் பிரகாசிக்கும். இதுவே உயர்தரமானது. இச்சீன உப்பை முதலில் கட்டினால் பலவகையான பாஷாணங்களும் (இச்சீனக் கட்டால்) மாளும்.

கட்டுங்காண் பகையைச்சாற்றக்
கடிதான சீனக்காரம்
ஒட்டுங்காண் தண்ணீரெல்லா
முறப்போகில் வெளுத்துப்போகும்
பட்டுங்கா ணடாதுமுன்னே
பதையாம லெல்லாஞ் சாகுந்
தொட்டுங்காண் சீனந்தானுஞ்
சீர்பார்த்துக் கொல்லுகொல்லே. *(பா. 745)*

சீனத்தைப் பகைச் சரக்குடன் சேர்த்தால் அதிலுள்ள தண்ணீ ரெல்லாம் அகன்று வெண்மை நிறமாகக் கட்டி நிற்கும். இக்கட்டி சீனத்தால் சகல சரக்கும் தலைபிரண்டு சாகும். ஆகவே முதலில் சீனத்தை அறிந்து கட்டு.

கொல்லவே சாரந்தானுங்
குறிப்பெல்லாஞ் சொல்லக்கேளு
அல்லவே கட்டுகட்டா
யமுங்கியே சாரவேண்டாம்
செல்லவே யிருசின்மேலே
தேரைப்போ னிற்குமப்பா
மல்லவே கறுப்புவேண்டாம்
மகத்தான வெண்மைவாங்கே. (பா. 746)

சாரத்தைப் பற்றிய குறிப்பைக் கூறுகிறேன் கேள்! பலகை பலகையாக ஒன்றன் மேல் ஒன்றாகயிருக்கும் வெண்மை நிறங்கொண்ட சாரமே உயர்தரமானது. கருப்பு நிறமுள்ள சாரத்தை எடுக்காதே அது உபயோகமற்றதாகும்.

வாங்கிய சாரமெல்லா
மதத்தானைப் பூசிக்கொல்லு
ஓங்கிய பாஷாணங்க
ளொருபோட்டா லுருகியாடுந்
தேங்கியே சூதஞ்சாகுந்
திசையெல்லாம் பொன்னேயாகும்
சாங்கிய வீசன்சொல்லத்
தாய்கேட்டுச் சொன்னவாறே. (பா. 747)

வெண்மை நிறங்கொண்ட சாரத்தை சத்துரு சரக்குடன் சேர்த்து மடியச் செய். மடிந்த இச்சாரத்தால் பாஷாண வர்க்கங்களும் உருகி நிற்கும். மேலும் கட்டிய சாரத்தை சூதத்துடன் சேர்த்தால் திசைகளையே பொன்னாக்கக்கூடிய இரசக் குளிகையுண்டாகும். இம்முறைகள் யாவும் சிவபெருமானால் பார்வதிக்கு உபதேசிக்கப் பட்டதாகும்.

சொன்னதோ ரைந்துதானுஞ்
சூதத்தின் பொறியாச்சப்பா
கன்னதோர் ரசமேசூதங்
கட்டாம னிற்குமட்டும்

பன்னதோர் பிராணனான
பரிமேலே மனதுயேறித்
தன்னதா யலைந்தாற்போலத்
தனிச்சூத மலையும்பாரே. *(பா. 748)*

அலையாமல் மனதுநின்றா
லண்டிற்றே யகண்டத்தோடே
நிலையாகச் சூதங்கட்ட
நிஷ்கள வெளியைக்காட்டும்
மலையாதே மனதின்மாயை
மாயையைப் போக்கக்கேளு
கலையாகும் குளிகைபோடு
கைகண்ட ஞானந்தானே. *(பா. 749)*

(சில பாடல்கள் விடுபட்டிருக்க வேண்டும்)

தானென்ற மண்ணின்பாண்டந்
தனக்குள்ளே யிட்டுப்பின்பு
கானென்று போட்டுப்பின்பு
கடிகியே யெரிக்கும் போது
தேனென்றே யுருகும்போது
சேர்ந்ததில் விஷங்கள் கூடி
யானென்ற காளான்போலே
யப்பனே யெழும்பும்பாரே. *(பா. 750)*

பாரிந்த மண்ணுக்குள்ளே
பருவிய விஷந்தானப்பா
காரிந்த வுவர்மண்ணிற்றான்
கலந்துட னிருக்கும்போது
கோரிந்த வளையற்குள்ளே
கொடியதோர் விஷமென்பார்கள்
தாரிது வாயிற்போடத்
தனியெட்டிக் காய்போலாமே. *(பா. 751)*

வளையல் கொழுப்பு விவரம்

காய்போலக் கசக்கும்வாயைக்
கடிகியே சுத்திபண்ணு
நாய்போல விழுங்கிவிட்டா
மையனுக்கு நீயாளாவாய்

பேய்போலக் காரசாரப்
பிள்ளையை யறைந்துகொல்லும்
தாய்போலத் துருசுக்குள்ளே
தருகுருமுன் வெளுத்துப்போமே. *(பா. 752)*

பூநீற்றை ஒரு மண்பாண்டத்தில் போட்டு அடுப்பேற்றி எரித்தால் பூநீறானது உருகி பானை மண்ணிலிலுள்ள விஷத்துடன் கூடி காளான் போன்று அழுக்கை தள்ளும். இதை வளையல் விஷம் என்று கூறுவார்கள். இதை வாயிற் போட்டால் எட்டிக்காய்ப் போல் கசக்கும். கசந்த அந்நஞ்சை வெளியே துப்புதல் வேண்டும் இல்லையேல் விஷமானது தலைக்கேறி மாண்டு போவாய். இந்த வளையல் நஞ்சால் காரசாரம், துருசு போன்ற சரக்குகள் வெளுத்து சுன்னமாகும்.

குறிப்பு : தேவையான அளவு பூநீறைக் கொண்டு வந்து அதிலுள்ள மண், கல் போன்ற மாசுக்களை நீக்கி இரண்டு சாமம் இடிந்து மெழுகுபோல் வாங்கி அடிகனத்த பானையில் போட்டு அப்பானையைக் கழுத்து வரை பூமியில் புதைத்து வாயை மூடி சீலை செய்து காடாக்கினியாக எரித்தால் சிலமணி நேரத்தில் பூநீரானது உருகி நுரைப்போல் அழுக்கை தள்ளும். இந்த அழுக்கை ஒரு கரண்டியால் எடுத்து வேறொரு பாண்டத்தில் விட்டு பூமியில் புதைத்து வைக்க வேண்டும். இந்த அழுக்கிற்கே வளையல் நஞ்சு என்று பெயர். இந்நஞ்சு கசப்பு சுவை கொண்டதாகவும் கொடிய விஷமாகவும் இருக்கும். (அழுக்கை பிரித்த பிறகு பாண்டத்தில் எஞ்சி நிற்கும் உப்பிற்கே வளையல் உப்பு என்று பெயர்.)

வெள்ளைதா னிதனைப்போலே
வேறொன்றும் பண்ணாதப்பா
தள்ளைதான் சாரகாரஞ்
சகலமும் வெளுத்துப்போகும்
கொள்ளைதான் தருசுக்குள்ளே
கொடிதான சூதஞ்சாகும்
பிள்ளைதான் பிறந்ததென்றாற்
பிரமம்போற் சூதம்பாரே. *(பா. 753)*

காரம், சாரம், துருசு போன்ற சரக்குகளை இவ்வளையல் நச்சானது கொடிய சுன்னமாக்கும். .இதைவிட கொடிய சுன்னம் செய்யும் சரக்கு வேறொன்றும் கிடையாது வளையல் நஞ்சு சேர்த்து செய்யப்பட்ட துருசுச் சுன்னத்தால் சூதமானது சுருண்டு சாகும்.

சூதமுங் கட்டிப்போகுந்
துடியான நஞ்சுபட்டால்
பேதமும் விட்டுப்போகும்
பேரண்டந் தானேயாகும்
காதமு மோடிப்போகக்
கவனமாங் காயசித்தி
வாதமுங் கிட்டும்கிட்டும்
வளையலும் நீறும்பாரே. *(பா. 754)*

நஞ்சு சேர்த்து சுன்னமாக்கிய துருசால் சூதம் சுருண்டு மடிவது மட்டுமின்றி, கவுன சித்தியும், வாத சித்தியும், காய சித்தியும் கைக்குள்ளாகும்.

நீறுமோ சும்மாவென்றால்
நீற்றுமோர் விதத்தைக்கேளு
காறுமோ காரம்வீரம்
கடியதோர் நஞ்சுமூன்றும்
தாறுமோ சமனாய்த்தூக்கு
தனக்குள்ளே வானீர்வாரு
தேறுமோ காசிக்குப்பி
சேர்த்ததை யப்பிப்போடே. *(பா. 755)*

அப்பியே யுலர்ந்தபின்ன
ரப்பனே யோட்டிலிட்டுத்
தப்பியே புடத்தைப்போடு
தனிக்குப்பிச் சுன்னமாகு
மொப்பிய குப்பிச்சுன்ன
மொன்பது லோகச்சுன்னங்
கப்பிய பாஷாணங்கள்
காட்டுமுன் விறைக்கும்பாரே. *(பா. 756)*

மற்றொரு சுன்ன வித்தையைக் கூறுகிறேன் கேள்! காரம், வீரம், வளையல் நஞ்சு இம்மூன்றையும் சம அளவு எடுத்து வாய்நீர் விட்டரைத்து காசிக்குப்பியின் மேல் பூசி உலரவைத்து ஓட்டிலிட்டு புடம் போட்டால் காசிக்குப்பியானது வெளுத்து சுன்னமாகும். இக்குப்பிச் சுன்னத்தால் லோக முதல் பாஷாணம் வரை அனைத்தும் சுன்னமாகும்.

பாருநீ வளையற்சுன்னம்
பட்டிட வெல்லாஞ்சாகும்
தாருநீ மூத்தானப்பிற்
றனிவிஷம் போட்டாயானால்

கோருநீ யண்டரண்டங்
குழுறிடு மெல்லாம்பாரு
காருநீ சீலைகட்டக்
கடுஞ்சீலை மென்றுபோமே. (பா. 757)

மென்றிடுஞ் சீலைதன்னை
வெளியிலே போடவேண்டாம்
பன்றிட வேறேசீலை
பரிவாக மேலேகட்டு
தின்றிட்டுப் போகப்போகச்
சிறந்துநீ சீலைகட்டு
ஒன்றிட்டு குருவின்வேதை
யுரைத்திட்டேன் முன்னேகாணே. (பா. 758)

வளையல் சுன்னத்தால் சகலசரக்கும் மடிந்து சாகும். மேலும் சிறுநீர் உப்புடன் இவ்வளையல் நஞ்சை சேர்த்தால் அண்டரண்டம் எல்லாம் வேகும். உப்புடன் சேர்த்த நஞ்சால் சரக்கின் மேல் சீலை செய்தால் சீலையானது சரக்கினுள் புகும். மீண்டும் முன்போல் சீலை செய்து புடம் போட்டால் வேதையுண்டாகும். சிறுநீர் உப்பினால் வேதை செய்யும் முறையை இந்நூலில் நான் முன்னமே கூறியுள்ளேன்.

கெந்தகச் செம்பு

காணினிக் கெந்திதானுங்
கடியதோர் செம்பேயாகப்
பூணினிச் சொன்னேன்கேளு
புகழ்பெற்ற தேவிசொன்னாள்
வாணினிக் கட்டுங்காரம்
வளமாகக் கட்டுமுப்பு
ஆணினிக் கட்டுஞ்சார
மப்பனே பலமுமூன்றே. (பா. 759)

மூன்றொடு கெந்திதானு
மூட்டுநீ பத்துத்தூக்கித்
தான்றொடு பலமேயப்பா
தனிப்பதின் மூன்றுமாச்சு
ஆன்றொடு பழத்தின்சாற்றி
லழுத்தித்தா சாணப்பூவை
கான்றொடு பிழிந்துகொண்டு
கடுகவே மாட்டுஆட்டே (பா. 760)

கெந்தகத்தை செம்பாக செய்வதற்கு முறைக் கூறுகிறேன் கேள். கட்டிய காரம், கட்டிய சாரம், கட்டிய உப்பு இம்மூன்றையும் வகைக்கு ஒரு பலம் எடுத்துக் கொண்டு பின் கெந்தகத்தை பத்து பலம் கூட்டி ஒன்றாக சேர்த்து கல்வத்திலிட்டுக் கொண்டு, சாணப் பூவை பழச்சாற்றுடன் சேர்த்து நன்றாக பிழிந்துக் கொண்டு, சரக்கை இப்பிழிந்த சாற்றை விட்டு அரைக்க வேண்டும்.

ஆட்டியே யரைப்பாயப்பா
அடைவாகத் தினந்தான் மூன்று
நீட்டிப்பூசம் பூச்சாற்றில்
நிலைத்தரை மூன்று நாள்தான்
கூட்டியே குமரிச்சாற்றிற்
கொளவரை மூன்றுநாள்தான்
காட்டியே யரைக்கக்கண்டங்
கத்திரிப் பழச்சாறுமூன்றே. *(பா. 761)*

மூன்றுநாள் கடந்தபின்பு
மோகனக் குறட்டையான்
கான்றுயப் பழத்தின்சாறு
கலந்தரை மூன்றுநாள்தான்
பூன்றுநற் பூநாகந்தான்
போடதிற் பலமேயைந்தா
மீன்றநல் வெண்காரந்தா
னிதற்குள்முப் பலமும்போடே. *(பா. 762)*

சாணப்பூச் சாறும் பழச்சாறும் சேர்த்து மூன்று நாள் அரைத்த பின்பு பூசம் பூச்சாற்றில் மூன்று நாட்களும், கற்றாழைச் சாற்றில் மூன்று நாட்களும் கண்டங்கத்தரிக்காய் சாற்றில் மூன்று நாட்களும், மோகனக் குறட்டையன் சாற்றில் மூன்று நாட்களும். பிறகு மேற்கூறிய மூலிகைகளின் பழச்சார் விட்டு மூன்று நாட்களும், வரிசையாக விடாமல் அரைத்து பின் அரைத்த இச்சரக்குடன் பூநாகமும், வெண்காரமும் வகைக்கு ஒரு பலம் சேர்க்க வேண்டும்.

போடவோ ரிதழாய்நின்று
பொருந்து தாமரையைவாங்கி
நீடவோர் குடங்கைக்குள்ளே
நீயிடத் துருசுச்சுன்னம்

ஆடவோர் பலந்தான்கேளா
யரைப்பல மிடித்துப்போடு
கூடவே பிசைந்துவைத்துக்
குமுறவே பிழிந்துகொள்ளே. *(பா. 763)*

பின்னர் ஓர்இதழ் தாமரையைக் கொண்டு வந்து அதனுடன் அரைப்பலம் துருசுச் சுன்னத்தைப் போட்டு இடித்துச் சாறெடுக்க வேண்டும்.

பிசைந்ததோர் சாற்றைவார்த்துப்
பேராக வரைநீயப்பா
வசைந்ததோர் கெந்திகட்டு
மடைவாக வில்லைபண்ணு
குசைந்ததோ ரவியிற்போட்டுக்
குமுறவே யுலர்ந்தபின்பு
திசைந்ததோர் வங்கநாளஞ்
சேர்த்திட்டே யூதுவூதே. *(பா. 764)*

இச்சாற்றை விட்டு முன்சரக்கை நன்றாய் அரைத்தால் கெந்தகமானது நன்றாய் கட்டும். கட்டிய இக்கெந்தகத்தை வில்லைத்தட்டி ரவியில் வைத்து உலர்த்தி வங்கநாளத்தில் இட்டு ஊதினால்,

ஊதவே கெந்திதானு
முருகியே சத்துவீழும்
ஆதிடச் சத்தையெல்லா
மடைவாக வாங்குவாங்கு
மாதிடச் சத்தின்வர்ண
மருவிவண் கலம்போற்காணும்
காதிட விதற்குள்வேதை
கரையில்லை கண்காணாதே. *(பா. 765)*

காணாக சத்த:க்குள்ள
காரணம் சொல்லக்கேளு
கோணாக செம்பேயீசன்
சுகசத்தி யீயமாச்சு
பூணாக ரெண்டுங்கூடிப்
புறப்பட்டுச் சத்தேயாச்சு
ஆணாத ரெண்டுஞ்சேர்ந்த
வாண்மையைச் சொல்லக்கேளே. *(பா. 766)*

கெந்தியானது சத்தாகவீழும் இச்சத்தை எடுத்துப் பார்த்தால் வெங்கலம் போல் பிரகாசிக்கும். இச்சத்துக்கு வேதை புரியும் சக்தி எப்படி வந்ததென்றால் ஈசனான செம்பும் யீயமான சக்தியும் கூடியதால் என்று அறிந்துகொள். இவ்விரண்டு சேர்ந்ததால் உண்டாகும் வலிமையை கூறுகிறேன் கேள்!

கேளிந்தச் சத்தையூட்டக்
கெடியான நாகங்கட்டும்
கேளிந்தச் சத்தையூட்டக்
கெடியான தங்கங்கட்டும்
கேளிந்தச் சத்தையூட்டக்
கெடியான வங்கங்கட்டும்
கேளிந்தச் சத்தையூட்டக்
கெடிலோகங் கட்டும்பாரே. (பா. 767)

பாருநீ கட்டிநின்ற
பருகிய லோகமைந்தில்
கோருநீ ரசத்தைக்கூட்டிக்
குமுறவே யரைக்கக்கட்டும்
தேருநீ புடத்தைப்போடு
செயப்பட்டே யுருகும்பாரு
காருநீ செந்தூரங்கள்
களங்குமே பண்ணியாடே. (பா. 768)

இக்கெந்தக சத்தால் நாகம், தங்கம், வங்கம், மற்றும் அனைத்து லோகங்களும் திரண்டு கட்டும். கெந்திச் சத்து சேர்த்து கட்டிய ஐந்து லோகத்துடன் ரசத்தைக் கூட்டி அரைத்து புடம் போட்டால் ஐந்து லோகங்களும் செயப்பட்டு உருகி நிற்கும் செயமான இந்த ஐந்து லோகங்களை செந்தூரமாகவும் களங்காகவும் செய்துகொள்.

ஆட்வே லோகத்துள்ளே
யணைக்கச்சத் தெடையைக்கேளு
நீடவே மூன்றுக்கொன்று
நீட்டிடக் கட்டும் கட்டும்
தாடவே கட்டும் லோகத்
தனிரெண்டில் ரசந்தானொன்று
வூடவே கட்டுஞ்சூத
மோடிடும் வேதைபாரே. (பா. 769)

எல்லா வகையான லோகத்துடன் கெந்தி சத்தை மூன்றுக்கொரு பங்கு சேர்த்தால் லோகங்கள் திடமாகக் கட்டும். கட்டிய லோகத்துடன் இரண்டுக்கொரு பங்கு சூதம் சேர்த்தால் சூதமானது கட்டும் கட்டிய இச்சூதத்தால் மாபெரும் வேதையுண்டாகும்.

பாரந்தத் தங்கத்தூடே
பாய்ச்சிடச் சத்துஞ்சூதம்
வாரந்தச் செந்தூரத்தை
வளமாகக் குன்றித்தின்னு
காரந்தப் பத்தியந்தான்
கனகம்போல் தேகமாகும்
தாரந்த மண்டலத்தில்
தனிச்சட்டை யொன்றுபோமே. *(பா. 770)*

போமொரு சட்டையானாற்
பொன்போலே தேகமாகும்
ஆமொரு மயிர்கடாமு
மப்பனே கருவண்டொக்கும்
தாமொரு தேகத்துள்ளே
சஞ்சல வியாதிபோகும்
சாமொரு வார்த்தைபொய்யாஞ்
சதகோடி வாழ்வன்தானே. *(பா. 771)*

கெந்தி சத்து சேர்த்து கட்டிய லோகத்துடன் சூதமும் தங்கமும் சேர்த்து புடம் போட்டால் செந்தூரமாகும் இச்சத்து செந்தூரத்தை ஒரு குன்றி அளவு உட்கொண்டு பத்தியத்தை கடைபிடித்தால் தேகமானது தங்கம் போல் பிரகாசிக்கும் ஒரு மண்டலம் முறையாக உட்கொண்டால் தேகத்தில் ஒரு சட்டையானது உரிந்து சூரியனைப் போன்று பிரகாசிக்கும். மேலும் தேகத்திலுள்ள மயிரானது வண்டைப் போல் கருப்பாக இருக்கும். சாவு என்ற வார்த்தையும் பொய்யாகும். கோடியுகம் வாழலாம்.

தானொரு கெந்திசத்தைச்
சமமாகத் தங்கத்தாட்டி
வானொரு சூதம்பாதி
வார்த்திதை நொறுக்கிச்சேர்த்துக்
கானொரு வுப்புச்சுன்னங்
கலந்தெடை சமனாய்ப்போட்டுத்
தேனொரு வில்லைபண்ணிச்
சிறக்கவே யூதிப்போடே. *(பா. 772)*

கெந்தி சத்தையும் தங்கத்தையும் சமஅளவு கூட்டி இதற்கு பாதியளவு சூதம் சேர்த்து பொடித்துகொண்டு பிறகு இம்மருந்தின் எடைக்கு சம அளவு உப்புச் சுன்னம் சேர்த்து வில்லை தட்டி குகையில் வைத்து ஊத வேண்டும்.

ஊதவே சுன்னமாகு
முற்றிதை நிறுத்துக்கொண்டு
பாதவே பூரமுக்கால்
பாயச்சிநீ யரைத்துக்கொண்டு
நேதவே காரச்சுன்னம்
நேர்ந்ததோ ரெடைக்குக்கால்தான்
ஆதவே யொன்றாய்க்கூட்டி
யண்டவெண் கருவாலாட்டே. (பா. 773)

ஆட்டியே யரைத்துநீயு
மப்பனே வில்லைகட்டிப்
பூட்டியே வூதுவூது
புகழ்பெற்ற சுன்னமாகும்
காட்டியே யெடைக்கு
முக்காற் கலந்திதில் வீரந்தானும்
ஊட்டியே வில்லைதட்டி
யூதிடச் சுன்னமாமே. (பா. 774)

குகையில் வைத்தூதுவதால் லோகமானது சுன்னமாய் நிற்கும். இச்சுன்னத்தின் எடைக்கு கால் பங்கு பூரம் சேர்த்து அரைத்துக் கொண்டு இம்மருந்தின் எடைக்கு காரச்சுன்னம் கால் பங்கு கூட்டி முட்டையின் வெண்கருவால் அரைத்து வில்லைதட்டி குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும். இச்சுன்னத்தின் எடைக்கு முக்கால் பங்கு வீரம் சேர்த்து வில்லைத்தட்டி குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும்.

ஆமிந்தச் சுன்னம் போட்டா
லண்டமும் மெழுகேயாகும்
போமிந்தச் சுன்னந்தொட்டுப்
போட்டது வேதையாகும்
தாமிந்தச் சுன்னம்பட்டால்
தனிச்சூதங் கட்டிப்போகும்
காமிந்தச் சுன்னத்தாண்மை
கரையில்லை காட்டுறேனே. (பா. 775)

இச்சுன்னத்தை அண்டத்துடன் சேர்த்தால் அண்டம் மெழுகாகும். மேலும் இக்கொடிய சுன்னத்தால் சூதம் கட்டி திடப்படும். வேதையானது வெகு கோடிக்கோடும். இதனுடைய பெருமையை கூறுவதற்கு கரையே இல்லை.

காட்டுறே னிந்தச் சுன்னங்
கடியதோர் துருசுமேலே
நாட்டுறே னாலுக்கொன்று
நலம்பெறப் பூசிப்போடே
நீட்டுறேன் ரவிக்குள்ளேதான்
நேர்பட வெளுக்குமூது
ஆட்டுறேன் துருசுச்சுன்னத்
தண்டமும் மசைக்கிறேனே. (பா. 776)

இக்கொடிய சுன்னத்தை துருசின் மேல் நாலுக்கொரு பங்கு பூசி ரவியிலிட்டால் வெளுக்கும் வெளுத்த இத்துருசை குகையில் வைத்து ஊதினால் சுன்னமாகும். இத்துருசுச் சுன்னத்தால் அண்டமும் அசையும்.

அசைக்கிறே னண்டமென்னி
ரசைக்கச்சிற் றண்டமல்ல
திசைக்கிறே னின்றமேரு
சிறந்தபே ரண்டமப்பா
பசைக்கிற சுழியினின்று
பறந்திடுஞ் செத்தைபோல
திசைக்கிற வகைக்கவண்ட
நேர்படுங் குளிகைகேளே. (பா. 777)

அசைக்கும் என்று சொன்னது சாதாரண முட்டையை அல்ல மகாமேரு பர்வதத்தை தாங்கி நிற்கும் பேரண்டமான இப்பூமியாகும். (பூமியையே அசைக்கக் கூடியது இத்துருசுச் சுன்னம்.) இதனால் குளிகை செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள்!

கேளுநீ துருசுச்சுன்னங்
கெடிமுத்து வங்கச்சுன்னம்
ஆளுநீ வீரச்சுன்னம்
வகைக்கொரு கழஞ்சிதூக்கித்
தாளுநீ சவாதுமூன்று
தனிப்புனு கதுதான்மூன்று
வேளுநீ யிதற்குள்மூன்று
வெறுஞ்சுட் கிலத்தைவாரே. (பா. 778)

வாருநீ யைங்கோலத்தின்
வளமான தைலமூன்று
கோருநீ தொகையாயெல்லாங்
கொளப்பதி னைந்துமாச்சு
தேருநீ யொன்றாய்க்கூட்டிச்
சேர்க்கவே ரவியில்வைத்துத்
தாருநீ காந்திகாட்டு
தைலமாந் தைலமாமே. *(பா. 779)*

துருசுச் சுன்னம், வங்கச் சுன்னம், வீரச் சுன்னம், இவை மூன்றையும் வகைக்கு ஒரு கழஞ்சியளவு எடுத்து இதனுடன் சவ்வாது புனுகு, சுக்கிலம், ஐங்கோலத்தைலம் போன்ற நான்கு வகையான சரக்கையும் வகைக்கு மூன்று கழஞ்சி சேர்த்து அனைத்தையும் ஒன்றாய் கலக்கி ரவியில் வைத்து சூடேற்றினால் தைலமாகும்.

தைலத்திற் றேய்க்கவின்னுஞ்
சாற்றிய மருந்துகேளா
யைலித்த காரசார
மரிதாரங் கெந்திதொட்டி
மைலித்த நாபிதுத்தம்
வகைக்கரைப் பணமேதேய்த்துப்
பைவித்தே யொன்றாய்க்கூட்டிப்
பாய்ச்சிடி னாமங்கேளே. *(பா. 780)*

கேளித னாமந்தானுங்
கெடியான சூதசிங்கி
தானிதன் சூதத்துள்ளே
தனியொரு துள்ளிவிட்டு
வேளிதி னொன்றாய்க்கூட்டி
வெருவியே கிழிபோற்கட்டித்
தாளிதன் றரபத்துள்ளே
சாங்கமாய் வாட்டுவாட்டே. *(பா. 781)*

இத்தைலத்தில் காரம், சாரம், அரிதாரம், கெந்தி, தொட்டி, நாபி, துத்தம், போன்ற சரக்குகளை வகைக்கு அரைப்பணம் அளவு சேர்த்து குழப்பிக் கொண்டால் சூத சிங்கி என்ற தைலமாகும். இத்தைலத்தை சூதத்துடன் ஒரு துளி சேர்த்தால் சூதம் வெண்ணையாகும் இவ் வெண்ணையை கிழிபோல் கட்டி கற்பூர தீபத்தில் வாட்ட வேண்டும்.

வாட்டியே கரண்டிக்குள்ளே
வைத்ததி லெண்ணெய்வார்த்து
நீட்டியே யுருக்கிடப்பா
நிலைத்ததோர் வில்லையாகும்
கூட்டியே குகையிற்காட்டிக்
குமட்டியே யுருகியாடும்
தீட்டியே யுபரசங்கள்
சேரநீ விடுவித்தேறே. *(பா. 782)*

ஏறுநீ யுபரசங்க
ளிசைந்தநூற் றிருபத்தொன்று
ஏறுநீ லோகமான
வேற்றிய பதினொன்றப்பா
ஏறுநீ பாஷாணத்தி
னெடுத்ததோர் சத்தையெல்லாம்
ஏறுநீ ரத்னமெல்லா
மீதொரு விபரமாச்சே. *(பா. 783)*

வாட்டிய சூதத்தை கரண்டிக்குள் போட்டு எண்ணெய் விட்டு உருக்கினால் வில்லைப் போலாகும். இவ்வில்லையை குகையிலிட்டு காரம் சேர்த்து உருக்கினால் கண்விட்டாடும். உபரசங்கள், பாஷாணங்கள், லோகங்கள், போன்ற சரக்குகளின் சத்தை மணிக்கு சாரணையாக ஊட்டி தீர்த்து பின்னர் நவரத்தினத்தின் சத்தையும் கூட்டி சாரணை தீர்க்க வேண்டும்.

ஆச்சிந்தப் படியேநீயு
மைந்திரம் விடுவித்தேறு
யேச்சிந்தச் சித்தர்வந்தே
யெங்களைப் பார்ப்போமென்பார்
காய்ச்சிந்தச் சித்தர்மாயை
கண்டுகொள் கொடுக்காதப்பா
வோச்சிந்த மூலமூர்த்தி
யோடினார் வாங்கினாரே. *(பா. 784)*

இதே போல் ஐந்து முறை மீண்டும் மீண்டும் எல்லா வகையான சத்தையும் ஊட்டினால் மகாரசக் குளிகையாகும் இதைக் கொண்டு சகலத்தையும் சித்தி செய்துக்கொள். உன்னிடம் உள்ள குளிகையை வாங்குவதற்கு மாயை ரூபத்துடன் சித்தர்கள் தோன்றுவார். அதை அறிந்து மணியை பத்திரப்படுத்திக் கொள். மூலமூர்த்தியானவர் இக்குளிகையை செய்து கவுனப்பிரவேசம் செய்து வந்தார்.

வாங்கினார் வாரமட்டு
மற்றவர் கையாலாகா
தேங்கியே கொடுத்துநீயு
மேனவா யாகாதப்பா
தாங்கியே சித்தர்க்குள்ளே
தருதும்பர் மெத்தவுண்டு
பாங்கியே தாயைநீயும்
பஜனித்துச் செபங்கள்செய்யே. (பா. 785)

இவரைத் தவிர சித்தர்களில் மற்ற எவரும் குளிகையை சித்தி செய்யவில்லை. ஆகவே நீ குளிகையை செய்து சித்தாடினால் அதை கண்டு பொறாமை அடைந்து அபகரிக்க பல சித்தர்கள் வருவார்கள் இவர்கள் அனைவரும் சித்தர்களில் கடைப்பட்டவர்கள். ஆகவே நீ வெகு ஜாக்கிரதையாக இருந்துக் கொண்டு தாயை போற்றி பஜனைச் செய்!

செய்கைமி லாத்தாள்வந்து
சித்தாநீ போடாலிவன்பாள்
கையினிற் குளிகைவாங்கக்
கணக்குண்டோ மகனேயென்பார்
சைகையிற் சொல்லிப்போவாள்
சாய்த்துக்கொண் டவனும்போவான்
ஐயைமி லில்லையப்பா
வாத்தாளைப் பூசைபண்ணே. (பா. 786)

அவ்வாறு நீ பஜனை செய்தால் உன்னிடம் தந்திரம் செய்து அபகரிக்க வந்த சித்தர்களை மிரட்டுவாள். மேலும் அவர்களிடம் வாதாடி சைகையால் விரட்டி அடிப்பாள். ஆகவே ஆத்தாளை என்றும் மறவாமல் பூஜை செய்!

பண்ணிய பூசைநீயும்
பானித்து மதுவையுண்டே
யொண்ணியே வாசியோடு
மொக்கவே கலந்துகொண்டு
தண்ணியே குளிகை தன்னைச்
சாத்தியே வாயிற்குள்ளே
தெண்ணியே யண்டவோட்டிற்
சிக்கென வேறிநில்லே. (பா. 787)

நிற்கையில் நிர்வாணித்து
நின்மல னங்கேநிற்பார்
தற்கையில் சூலத்தோடு
சாய்ந்துநீ யசைந்தாயாகில்
கற்கையில் கலத்தைச்சுற்றுங்
காரணம் போலேயண்டம்
பற்கையி லசைந்தேயாடும்
பரயரை மெச்சுவாளே. (பா. 788)

மெச்சவே யண்டந்தானும்
விளங்கிய வசைவுமுண்டோ
அச்சவோர் வண்ணந்தன்னா
லாத்தாளைப் பூசைபண்ணி
யெச்சவே லகிரிக்குள்ளே
யெடுத்தானே மேருவப்போ
தொச்சவே யண்டந்தானு
முழன்றது பாருபாரே. (பா. 789)

முறையாக மதுவை வைத்து பூசித்து வாசியை மூலத்தில் நிறுத்தி குளிகையை வாயிலிட்டால் வாசியானது மேல் நோக்கி ஏறி பிரம்ம ரந்திரத்தில் நிற்கும். அப்பொழுது நிர்வாணித்தாயானவள் சூலத்தை கையில் தாங்கிக் கொண்டு அருள்பாலிப்பாள். மேலும் நீ வாசி கொண்டு அண்ட உச்சியான கபாலத்தை தாக்கினால் அண்டமானது மிக வேகமாக அசையும், இந்நிலையில் மதுவையுண்டு ஆத்தாளை பூசை செய்தால் அண்டமானது சுழன்று ஆடும்.

பாரொரு வரக்கனண்டம்
பதுமைபோ லசைந்தானாகில்
தாரொரு குளிகைதானுந்
தனியண்ட மசைக்காதோசொல்
காரொரு குழல்தாய்மெச்சக்
கயிலையோன் சித்தர்வென்றார்
தேரொரு வென்னூலிற்றான்
செப்பினே னாண்மைதானே. (பா. 790)

அண்டமும் பதுமை போல் ஆடும் பொழுது வேறு எந்த பொருள்தான் ஆடாமல் நிற்கும். இக்குளிகையின் மகிமையால் இவை அனைத்தும் உண்டாயிற்று. இம்முறையை தேவிக்கு சிவன் சொன்னார். நான் உனக்காக இந்நூலில் அதை கூறிவைத்தேன்.

ஆண்மையா மிந்தச்சத்தை
யப்பனே செம்புபண்ண
வாண்மையாய்ச் சோதித்தேற
வகைசொல்வேன் கேளுகேளு
கேண்மையாங் காரமைந்து
கிளர்கரு வளையனாலு
தேண்மையாய்ச் செயித்துநின்ற
சிறந்தகல் லுப்புமூன்றே. (பா. 791)

மூன்றொடு வீரம்ரெண்டு
முழங்கிய காரியொன்று
சேன்றொடு மொன்றாய்க்கூட்டிச்
சிறக்கவே பொடியாய்ப்பண்ணி
ஆன்றொடு பொன்னும்சத்து
மப்பனே சரியாய்க்கூட்டித்
தான்றொடு பொடியைப்போட்டுச்
சாதித்தே யுருக்கிப்போட்டே. (பா. 792)

போட்டுவா பொடியைநீயும்
புகழ்பெற வுருகும்போது
சூட்டுவாய் சத்துப்போனால்
துலங்கியே ரவியுங்காணும்
காட்டுவாய் ரவிதான்கண்டாற்
கடும் பொடி தூவவேண்டாம்
ஆட்டுவாய் சூதமப்பா
வாட்டிடுங் கெந்திசெம்பே. (பா. 793)

கெந்திசத்தை செம்பாக செய்வதற்குவகை கூறுகிறேன் கேள். காரம் ஐந்து பலம், வளையல் நஞ்சு நாலு பலம், கல்லுப்பு மூன்று பலம்., வீரம் இரண்டு பலம், காரி ஒரு பலம் இவை அனைத்தையும் ஒன்றாய்க் கூட்டிப் பொடி செய்து வைத்துக் கொண்டு பின்னர் தங்கத்தையும், கெந்தி சத்தையும் சம அளவு சேர்த்து முன் பொடியை தூவி உருக்கினால் சத்தானது செம்பு போலாகும். சத்து செம்பானபின் பொடியைத் தூவ வேண்டாம். இக்கெந்தி செம்பானது சூதத்தை கட்டும்.

கெந்தி செம்பு வேதை

கெந்தி தான் செம்பேயானாற்
கேளப்பா வேதைமார்க்கம்
அந்தியே நூற்றுக்கொன்றா
மப்பனே பரியிற்போடு
பந்திய பரிசெம்பாகும்
பாய்நூறு பரியின்மேலே
தொந்தியாய் நூறுமட்டுந்
தொட்டதெல்லாஞ் செம்புதானே. *(பா. 794)*

இச்செம்பைக் கொண்டு வேதை புரியும் வகையைக் கூறுகிறேன் கேள்! கெந்திசத்து செம்பை ஒரு பங்கு எடுத்து நூறு பங்கு தங்கத்துடன் சேர்த்தால் தங்கமானது செம்பாய்ப் போகும். இத்தங்கச் செம்பை நூறுமுறை தொந்தித்தால் தொட்ட பொருளெல்லாம் செம்பாகும்.

தானென்ற தங்கமெல்லாந்
தனிச்செம்பாய்ப் போச்சுபோச்சு
வானொன்றிக் கணக்குச்சொல்ல
வாதியா ருண்டோவப்பா
தேனென்ற மொழியாள்காணாள்
சிவன்முதன் மயங்கிப்போனார்
கானென்ற செம்பின்வேதை
கரையில்லை கணக்கைப்பாரே. *(பா. 795)*

எத்தனை முறை தொந்தித்தாலும் தங்கமெல்லாம் செம்பாய்ப் போகும். இந்த தொந்தத்தால் ஏற்படும் மாற்றை கூறுவதற்கு எந்த ஒரு வாதியும் கிடையாது. இதை ஆத்தாளாலும் அறிய முடியவில்லை. சிவனும் மயங்கிப் போனார் செம்பின் வேதைக்கு எல்லையே கிடையாது.

பாருநீ யீசன்தொட்டுப்
பகருறேன் கணக்குமார்க்கம்
வாருநீ கோடிதொட்டு
வழங்குமற் புதமேயாச்சு
தாருநீ கணக்குமோசந்
தாம்மறந்து ரைத்தாரப்பா
காருநீ மூலமூர்த்தி
காட்டின முறைமை கேளே. *(பா. 796)*

ஈசனுட பாதத்தை வணங்கி கணக்கு முறையை கூறுகிறேன் கேள்! கோடிக்கு ஒரு பங்கு சேர்த்தால் லோகங்கள் தங்கமாகும் இதைத் தேவியானவள் மறதியால் என்னிடம் கூறி விட்டாள். இந்த செம்பு முறையால் மூல மூர்த்தி செய்ததை கூறுகிறேன் கேள்.

கேளுநீ தூலமோர்நூற்று
கெடிதங்க முருகும்போது
வேளுநா றிந்தச்செம்பை
விளங்கவே காணிபோட்டார்
தோளுறு நடராசம்போற்
சூட்டினார் செம்பேயாச்சு
கோளுநீ சோழன்வந்து
கோபித்தான் கோபித்தானே. *(பா. 797)*

நூறு தூலம் எடைக் கொண்ட தங்கம் உருகி நிற்கும் பொழுது கெந்தக செம்பை ஒரு காணி அளவு போட்டார் உடனே தங்கமானது செம்பாக மாறியது. இச்செம்பைக் கொண்டு நடராச விக்ரகத்தை வார்த்தார்கள். இதை அறிந்து சோழனானவன் மிகவும் கோபமடைந்தான்.

(கதை : முன்னொரு காலத்தில் சோழ நாட்டு மன்னர்களில் ஒருவன் நடராச விக்ரகம் செய்ய ஆவல் கொண்டு பொற்கொல்லரிடம் நூறு தூலம் எடையுள்ள தங்கக் கட்டியை கொடுத்தான். இதை பெற்றுக் கொண்ட பொற்க்கொல்லர்கள் சிலையாக வார்த்தார்கள் ஆனால் சிலையானது ஒழுங்காக வராமல் சிதைந்து போயிற்று. இதை அறிந்த திருமூலர் மாறு வேடத்தில் வந்து கெந்தி செம்பை தங்கத்தில் போட்டவுடன் தங்கம் அனைத்தும் செம்பாக மாறிற்று. இச்செம்பைக் கொண்டு சிலை செய்ய சிலையானது முழுவடிவம் பெற்றது. இதுவே கதையின் சுருக்கம்.)

மூலமூர்த்தி சோழனுக்கு வாதங்காட்டியது

கோபித்த சோழன்முன்னே
கொள்ளென மூலமூர்த்தி
யாபித்த தங்கமல்லா
லடியென்ன வசைவுமென்ன
தாபித்த தங்கம் வேண்டிற்
றனிவெள்ளி கொணர்வாய்நீயும்
நேமித்த வெள்ளிவைத்து
நிமிரநீ யுருக்கென்றாரே. *(பா. 798)*

சோழ மன்னன் மூலமூர்த்தியிடம் கோபம் கொண்டு பின் வருமாறு கூறினான். தங்கமனைத்தையும் எடுத்துக் கொண்டு செம்பால் சிலை வார்த்துள்ளீர். எனவே என்னுடைய தங்கத்தை திருப்பி கொண்டுவாறும் என்று கேட்கவே மூலமூர்த்தி அரசனிடம் உனக்கு தங்கம் வேண்டுமானால் ஒரு நிறையாக வெள்ளியைக் கொண்டுவா என்று கூறினார்.

உருக்கிய வெள்ளிக்குள்ளே
யுத்தம மூலநாயன்
சொருக்கினார் வீசந்தானுஞ்
துலங்கிற்று தசமாற்றாகப்
பருக்கிய வேதையோடும்
பாவித்துப் பார்த்துக்கொள்ளு
தருக்கிய விந்தச்செம்பு
தாழ்த்திறேன் பாருபாரே. (பா. 799)

அரசனும் வெள்ளி கொடுக்கவே அதை செம்புடன் சேர்த்துருக்கி பத்து மாற்றுள்ள தங்கமாக்கினார். மேலும் இந்தச் செம்பை எதனுடன் சேர்த்துருக்கினாலும் வேதையுண்டாகும். இதை நீ அறிந்துக் கொள்.

பாருநீ மூன்றாங்கட்டோ
பரியுட னைந்தாங்கட்டோ
தாருநீ யெட்டாங்கட்டோ
தனிப்பத்துப் பத்தாங்கட்டோ
கோருநீ நவலோகத்தைக்
குமுறவே செம்பாங்கட்டோ
காருநீ சோழாவுன்றன்
கனகத்தை யெடுபோவென்றார். (பா. 800)

இச்செம்பை எத்தனை முறை வேண்டுமானாலும் நவலோகத்துடன் ஈந்தாலும் அனைத்துவிதமான கட்டு லோகத்துடன் ஈந்தாலும் உன்னுடைய தங்கமானது மீண்டும் குறைவில்லாமல் அதே மாற்றாய் இருக்கும்.

என்றவன் முகத்தைப்பார்த்தே
யென்னுட மூலநாயன்
பன்றதோ ராசையான
பருமலைக்குள்ளே வாழ்ந்தாய்
வின்றவோ ராசைபோனால்
வெளியெல்லாங் காணுங்காணும்
ஒன்றல்லோ பொருள்தானப்பா
வூன்றிநீ யுரைத்துப்பாரே. (பா. 801)

மேலும் மூலரானவர் சோழனை நோக்கி ஏ! மன்னா நீ ஆசை என்னும் மலையினுள் வாழ்வதால் உனக்கு ஒன்றும் புரியாது. ஆகையால் நீ உன்னுடைய ஆசைகளை வென்று நின்றால் அனைத்து விதமான பொருள்களும் வெளியாய்த் தோன்றும். மேலும் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் மூலப்பொருள் ஒன்றே அதை நாடி நில்! என்று உபதேசம் செய்தார்.

பாரென்று சொன்னீரீசர்
பார்ப்பது மும்மைத்தானோ
பாரென்று சொன்னீர்தாம்
பார்ப்பதற் குள்ளேநீர்தாம்
பாரென்ற வார்த்தைவேறோ
பார்க்கின்றோ மென்பார்வேறோ
பாரென்ற வார்த்தைக்குள்ளே
பளிச்சென்று தோன்றினீரே. *(பா. 802)*

மூலப்பொருளை பார் என்று சொன்ன ஞான சொருபியே! பார்ப்பதும், பார்க்கப்படுவதும், பார்க்கக் கூடிய பொருளாக நிற்பதும் நீரே! இதில் எந்த ஒரு பேதமும் இல்லை. மன்னா பார் என்று கூறியதிலிருந்து நீர் யார் என்று நான் அறிந்து கொண்டேன்.

தோன்றிய வெளியுநீர் தான்
சுருதியானந்தம் நீர்தான்
கான்றிய போதம்நீர்தான்
கரையில்லா வருளும் நீர்தான்
ஊன்றிய மனமும்நீர்தா
னுண்மை வேறெங்குங் காணேன்
வேன்றிய பொருளுநீராய்
விரவினீர் வெளியானீரே. *(பா. 803)*

வெளியாகவும் (பரவெளி) வேதத்தின் முடிவான பொருளாகவும் ஆனந்த வடிவமாகவும், அருள் வடிவமாகவும்,. பொருள் வடிவாகவும் நிற்பது நீரே!

வெளியாச்சே யொருசொல்லாலே
வேதாந்த முடியுமட்டு
மொளியாச்சே யண்டரண்ட
முடேறி யுருவிப்போச்சு

தெளியாச்சே யதிகமாச்சு
சீர்பாதங் கண்டபோதே
களியாச்சே நிற்குணத்தின்
கரைகாணேன் கரைகாணேனே. *(பா. 804)*

உம்முடைய ஒரு சொல்லால் அண்டரண்டமெல்லாம் வியாபித்து நிற்கும் வேதத்தின் முடிவான பொருளைப் பற்றி ஞானம் உண்டாயிற்று. உம்முடைய பாதத்துளிகளை தரிசித்தபோதே நிற்குணப் பொருளைப் பற்றி அறிந்து கொண்டேன்!

காணாதே யெங்குமானீர்
கரையற்ற ரூபமானீர்
தோணாதே தோணிநின்று
சொரூபத்தின் முடிவாய்நின்று
பூணாதே பூணியெங்கும்
பூரணங் கடந்தமூர்த்தி
ஆணாத பாசம்போக்கி
யடிமைக் கின்றருள்தந்தீரே. *(பா. 805)*

எங்கும் பரவி நிற்கும் பிரப்பிரம்ம ரூபம் நீர்தான், சொரூபத்தின் எல்லையாய் நிற்பதும் நீர்தான், பூரணப் பொருளாய் நின்ற மூர்த்தியே பாசம் என்ற மாயையை அகற்றி அடிமையான என்னைக் கரை சேர்த்தீர்!

தந்ததோர் ரூபம்போலத்
தனிச்சுகம் வேறேயில்லை
வந்ததோர் வாசியான
மற்றெட்டும் போகவிட்டே
யந்தவோர் நாலைப்பார்த்தே
னதனாலு நீரேயாச்சு
கந்ததோ ரெட்டாற்சீவன்
கடுஞ்சட மெடுக்கும்பாரே. *(பா. 806)*

உம்முடைய தரிசனத்தைத் தவிர வேறொன்றும் எனக்கு சுகமில்லை. வாசியோகம் புரிந்து அதனால் நான்கு வகையான ஆனந்த எல்லையைக் கடந்து பார்த்தாலும் அங்கேயும் நீரே நிற்கிறீர். இதை அறியாமல் மாயையில் கூடி நின்றால் சீவனானது மாயையில் சிக்கிப் பல பிறவிகள் எடுக்கும்.

எடுக்குமே சடந்தான்கோடி
யிசைக்குமுன் னென்னசொல்வேன்
அடுக்குமோ வையாவுன்ற

னருள்தானோ வென்னசொல்லாய்
இடுக்குமோ தாய்தான்பிள்ளை
யியலொத்த பாசம்போலத்
தடுக்குமோ யெட்டுநாலுஞ்
சகலத்தி னின்றவாறே. *(பா. 807)*

இவ்வுலகத்தில் பல பிறவிகள் எடுத்து உழன்றும் மாயையின் பெருமையை அறியாமல் அதனால் கட்டப்பட்டு பாசம் என்ற வலையில் சிக்கி தத்துவத்துடன் கூடி நின்றேன். (எட்டும் நாலும் வாசியின் தத்துவமாகும்).

வாறான மாயப்பிள்ளை
வாசனை யென்றேவிட்டால்
நீறாக வெந்ததையா
நிமிஷத்திற் செகஜாலந்தான்
தாறான பேரைவந்து
தடுத்துநீ யடிமைகொள்வாய்
ஆறான கண்ணீர்மாற்றி
யடியேனை யாட்கொண்டீரே. *(பா. 808)*

தத்துவத் தொகுதிகளை மாயா வாசனை என்று விலக்கியதால் மாயையானது ஒரு வினாடியில் அழிந்து சாம்பலாயிற்று. எனவே என்னுடைய இந்த மாயை வாழ்வுக்கான துக்கத்தை அகற்றி என்னை உமக்கு அடியேனாக ஏற்றுக் கொள்ளும்.

ஆட்கொண்டீ ரடியேன்றானு
மனேகநாள் செய்தபூசை
தாட்கொண்ட குருவங்கேது
தனியுத்தி சீஷனேது
வேட்கொண்ட வீசனேது
வெளிக்குள்ளே வெளியாய்ப்போச்சு
நாட்கொண்ட பூரணத்தி
னாட்டியங் கண்டபின்னே. *(பா. 809)*

அனேக நாட்கள் அடியேனால் செய்யப்பட்ட பூஜையின் பயனால் உம்முடைய தரிசனம் கிட்டியது. குரு, சீடன், ஈசன் என்ற பேத புத்தியாவும் பூரணத்தின் நடனங்கண்டவுடன் விலகிற்று.

பின்னேது முன்னங்கேது
பேச்சுட னுரையுமற்ற
பன்னேது நூல்களேது

பலபல சமையமேது
வன்னேது சாதியேது
மாண்டது பிறந்ததேது
தன்னேது சீவனேது
சகலமு நீர்தானாச்சே. (பா. 810)

முன், பின், கேள்வி, பதில், ஞானம் தரக்கூடிய நூல்கள், சமயம், சாதி பிறப்பு, இறப்பு போன்ற பேத பாவனைகள் அகன்று உண்மை விளங்கிற்று. ஏனெனில் சீவன் முதல் ஜகத்வரை அனைத்துமாய் நிற்பது நீர் ஒருவரே!

ஆச்சேது வல்லாதேது
வாகிற பொருளங்கேது
மூச்சேது காற்றங்கேது
மூவுலக சைவங்கேது
பேச்சேது வார்த்தையேது
பேரின்பப் பொருள்தானேது
நீச்சேது நிலைதானேது
நின்மலக்குருவே சொல்வோம். (பா. 811)

இருக்கும் பொருள், அழியும் பொருள், உண்டாகும் பொருள் மூச்சுக்காற்று, மூன்று லோகங்களின் அசைவு, சொல், பேரின்பப் பொருள் போன்ற பேத புத்தியாவும் எதனால் உண்டாயிற்று. இவையாவும் என்றுப் உ.ள்ள மாயையே ஆகையால் நிற்குணமான குருதேவா! அடியேனை வாழ்த்தி உபதேசம் புரியும்.

சொல்லுவ தென்னயான்றான்
சொல்லெல்லாங் கண்டுபோனால்
வெல்லுவ தாச்சோவுன்னை
வேதாந்த ரூபமானாய்
மல்லுவ தேதுலோக
மாயையும் போக்கிவிட்டாய்
செல்லுவ தகண்டம்புக்கிச்
சிவன்போலே யிருந்துவாழே (பா. 812)

வாழென்று மூலமூர்த்தி
மத்தக முகர்ந்துகொண்டு
வேழன்ற னுரியன்பூசை

விரைந்தின்று லபித்ததப்பா
தாழென்று மாயிபாதஞ்
சதாநித்தங் கருத்தில்வைத்துக்
கோழன்றி மணித்தாயோடு
கூடிநீ குலாவியாடே. (பா. 813)

ஏ! சோழ மகாராஜனே! நீ வேதாந்த ரூபமானவன் எதற்கும் பந்தப் படாதவன், மாயை என்ற திரையையும் போக்கி விட்டாய் இனி சொல்லுவதற்கு என்ன இருக்கிறது. அகண்டத்தில் மனதை நிறுத்தி சிவன் போல் இருந்து வாழ்வாய்! மேலும் சிவனையும் பார்வதியையும், சதா சர்வ காலமும் பூஜித்து கருத்தை அவர்களிடம் வைத்து மகிழ்ச்சியில் திளைப்பாய்!

ஆடென்று மூலநாய
னப்புறங் கடந்தபின்பு
வீடின்றிச் சேனையின்றி
விளங்கிய பொருள்களின்றி
நாடின்றிப் பெண்டீரின்றி
நல்லதோர் பசு ...ற்றித்
தேடின்றிப் பதுன ...ம்
சித்திரம் போ... (பா. 814)

இவ்வாறு திருமூலர் உட ...ந்து விட்டு சென்ற பின்னர் அரசன் தன்னுடைய சேனை, பொரு ...ர், பிள்ளை. பசு, போன்ற உடமைகளை துறந்து சிலையைட ... அசையாமல் யோகத்தில் நின்றான்.

நின்றவன் கோடிகால
நிமிஷம்போற் றோன்றுமாபோல்
அன்றைய கெந்திச்செம்பை
யடக்கிறேன் வேதைபாரு
தன்றைய கெந்திச்செம்பைத்
தாக்கொன்று பத்துநாக
மன்றிய நவலோகத்தில்
மாட்டுநீ தசமாற்றாமே. (பா.

யோகத்தில் நின்றவனுக்கு கோடி காலம் ஒரு நிமிஷமாகசெல்வ... போல் தோன்றியது. இனி கெந்திச் செம்பை பற்றிக் கூறுகிறேன் கேள்! ஒரு பங்கு கெந்திச் செம்புடன் பத்து பலம் நாகத்தை சேர்த்து நவலோகத்தில் ஈந்தால் பத்து மாற்றுள்ள தங்கமாகும்.

ஆமிந்தச் செம்புதன்னை
யாடிய விரும்புக்குள்ளே
வாமிந்த வைந்துக்கொன்று
மாட்டிடச் செம்பேயாகும்
போமிந்த வெள்ளிமேலே
போடுநீ முப்பத்தொன்று
தாமிந்த மாற்றெட்டாகுந்
தனிக்காவிக் கேளுநாணே. *(பா. 816)*

கெந்தி செம்பை ஒரு பலம் எடுத்து ஐநூறு பலங்கொண்ட இரும்புடன் சேர்த்துருக்கினால் இரும்பானது செம்பாகும். இவ் இரும்பு செம்பை வெள்ளி முப்பதுக்கு ஒரு பலம் ஈந்தால் எட்டு மாற்றுடைய தங்கமாகும்.

காணிந்தக் கெந்திச்செம்பைக்
கருநாகம் ரெண்டிலூட்டி
பூணிந்த வெள்ளிமேலே
போடுநீ பத்துக்கொன்று
ஆணிந்த மாற்றுமூன்று
மறிந்துகொள் வாதிகாணீர்
தோணிந்த மார்க்கச்சூட்சஞ்
சொன்முறை கைகண்டேனே. *(பா. 817)*

கெந்தி செம்பை ஒரு பலம் எடுத்து இரண்டு பலம் கருநாகத்துடன் சேர்த்து வெள்ளியிலிட்டால் (பத்துக்கு ஒரு பங்கு வெள்ளியுடன் சேர்த்தால்) மூன்று மாற்றுக் கொண்ட தங்கமாகும். இம்முறைகளை யானும் செய்து பார்த்து சித்தியடைந்தேன்.

கண்டதோர் தாயாள்நாதங்
கடைசியாய்ப் போனாற்போல
வண்டர்க்கு ஞானஞ்சொன்ன
வழக்குப்போ லாச்சுதப்பா
பண்டல்லோ பழுத்ததாகும்
பருவம்போய் மாறினாற்போல்
கொண்டல்லோ கரத்திற்பூசை
குவித்தவ ராச்சுதென்னே. *(பா. 818)*

தாய் நாதம் இல்லாத வேதையும், பண்படாதவர்க்கு சொன்ன ஞானமும், காலம் தப்பி பழுக்கும் பழமும், மனங் குவியாத பூசையும். உபயோகமில்லாமல் போகும்.

ஆச்சுதே கெந்திசெம்பு
ளடங்கிய வாறுபோலே
போச்சுதே மாயையானாற்
புரியட்டந் தாண்டிக்காணும்
ஏச்சுதே லோகவாழ்க்கை
யிடிகரை யாக்கிப்போட
வாச்சுதே குளிகையானால்
வயதுண்டு ஞானமுண்டே. *(பா. 819)*

கெந்தி செம்பு அடங்கினால் வாதம் உண்டாகும், மாயை, மற்றும் உலகவாழ்க்கை இவை இரண்டையும் நீக்கினால் புரியட்ட காயமும் புலப்படும். (எட்டுவிதமான உடல்கள்: தூலம். சூக்ஷமம், காரணம், அன்னமயம், பிராணமயம், மனோன்மயம், விஞ்ஞானமயம், ஆனந்த மயம் இவை எட்டு விதமான உடல்களாகும்).

உண்டென்பார் ஞானந்தானு
முலகத்தி லுழன்றமாந்தர்
கண்டல்லோ சொல்லவேண்டுங்
கடுஞ்சாங்க நூலைப்பார்ப்பார்
பண்டல்லோ பெரியோர்சொன்ன
பழக்கங்கள் தமக்குமுண்டோ
விண்டல்லோ தவசியாவான்
வேதாந்த ரூபிதானே. *(பா. 820)*

தனக்கு ஞானம் உண்டு என்று சொல்ல நினைப்பவன் யோகமும் ஞானமும் பழகிப் பார்த்தே கூற வேண்டும். அவ்வாரின்றி உலகமக்கள் சாங்கிய நூலைப் பார்த்து அதில் கூறியுள்ள பெரியோரின் ஞானத்தை படித்து விட்டு தனக்கும் அது வாய்த்து விட்டது என சொல்லிக் கொள்பவன் மூடனாவான். முறையான தவசியே வேதாந்த ஞானம் பெறுவான்.

தானென்ற சுன்னப்போக்கைத்
தனித்தனி முறையேசொன்னேன்
கானென்ற சுன்னந்தானுங்
கறுப்பேறி நின்றிதென்றால்
வேனென்ற கல்லுச்சுன்னம்
விளங்கிய தேங்காய்மட்டு
மோனென்ற கல்லுப்போதா
னொருபலம் போடுபோடே. *(பா. 821)*

சுன்னத்தின் முறைகளை தனித்தனியாக கூறினேன், இச்சுன்னம் வெண்மையாக இல்லாமல் கரிய நிறமாக இருந்தால் அதை வெண்மை நிறமாக மாற்றுவதற்கு வழி ஒன்று கூறுகிறேன் கேள்! கல்லுச்சுன்னத்தை ஒரு தேங்காய் அளவு எடுத்து அதனுடன் கல்லுப்பை ஒரு பலம் சேர்க்க வேண்டும்.

போட்டுநீ யொன்றாய்ச்சேர்த்துப்
புகழ்பட வரைத்துக்கொண்டு
நீட்டுநீ சிமிழ்போல்ரெண்டு
நின்னதைப் பண்ணுபண்ணு
ஆட்டுநீ சுன்னமில்லா
மந்தந்த விதங்கள்வேறே
யூட்டுநீ பணம்போல்வில்லை
யுள்ளுக்குள் வைத்திடாயே. (பா. 822)

வைத்திடு குகைக்குள்வில்லை
வளம்பெற முக்கான்மட்டும்
தைத்திட வூதுவூது
தவளமாய் நீறமட்டும்
எய்த்திடுங் கறுப்பும்போகு
மெ(ா)திலே பஞ்சுபோலாம்
கைத்திடுஞ் சுருக்குஞ்சுன்னங்
காரமாங் கல்லும்பாரே. (பா. 823)

சேர்த்த இரண்டு சரக்குகளையும் நன்றாய் அரைத்து சிமிழ் போல் இரண்டு செய்துக்கொள்! இச்சிமிழினுள் கறுப்பேறிய சுன்னத்தை வில்லை தட்டி வைத்து மற்றொரு சிமிழால் மூடி குகைக்குள் வைத்து ஊதினால் சுன்னத்தின் கறுப்பு நிறம் அகன்று பஞ்சுபோல் வெளுக்கும் இதுவே சுலபமான முறையாகும் இம்முறையில் செய்யப்பட்ட எச்சுன்னமும் கடுங்காரமாயிருக்கும்.

பாருநீ சுன்னமெல்லாம்
பறந்திடுங் காரமுமில்லை
கோருநீ யண்டநீராற்
குமட்டியே வில்லைதட்டு
தாருநீ யண்டம்விட்டாற்
றனிச்சுன்னஞ் சுருக்குப்போச்சு
வாருநீ யண்டநீரை
மகததான விந்துதானே. (பா. 824)

சுன்னம் என்றால் மிகவும் லேசாகவும் காற்றில் பறக்கக் கூடியதாகவும் இருக்கும். இன்னுமொன்று கேள்! சுன்னத்தை அண்ட நீரால் அரைத்து வில்லைத் தட்டிட வேண்டும் இதை ஒருக்காலும் மறவாதே! அண்ட நீரே சுன்னத்திற்கு சுருக்கான முறையாகும். இதுவே சுன்னங்கக்கு விந்து.

விந்தென்று சொன்னவார்த்தை
வெறும்வார்த்தை யென்றிராதே
அந்தென்ற மூசைக்குள்ளே
யப்பனே யுயிருமாச்சு
கந்தென்ற மஞ்சள்தானே
கடுகிய சடமுமாச்சு
பந்தென்ற முட்டைவிம்மிப்
பளிச்சென்ற கூவிற்றென்னே. *(பா. 825)*

என்னதோர் மஞ்சளாலே
யிறகாச்சு சிறகுமாச்சு
பன்னதோர் விந்துவாலே
பருகின புசிப்புமாச்சு
அன்னதோ ரிரண்டினாலே
யடங்கிற்று சீவராசி
கன்னதோர் கருவைக்கண்டோர்
கைவிட்ட சித்தராமே. *(பா. 826)*

விந்து என்று கூறியதை சாதாரணமாக நினைத்து விடாதே, மூசைக்குள் வைத்தூதும் மருந்துக்கு இதுவே உயிர். முட்டையினுள்ளே இருக்கும் மஞ்சள் கருவே உடம்பாகும். இதுவே முட்டைக்குள் வளர்ந்து சிறகு முளைத்து உயிராக வெளிவரும். இதன் இடையில் இருக்கும் வெண்கருவானது மஞ்சள் கருவிற்கு உணவாக அமைகிறது. இவ்விரண்டு வகையான கருவால் சீவசெந்துக்கள் உண்டாயின். இதை அறிந்தவன் சித்தனாவான்.

சித்தரே யானாராகிற்
செயரசம் பண்ணவேண்டும்
சித்தரே யானாராகிற்
றெளிந்துள்ளே காணவேண்டும்
சித்தரே யானாராகிற்
செகமெல்லாம் புகழவேண்டும்
சுத்தத்தை யறியானாகிற்
சிகண்டியாஞ் சித்தன்றானே. *(பா. 827)*

செயரசம் செய்தவனும், தன்னுள்ளே இருக்கும் பொருளை அறிந்தவனும், செகமெல்லாம் புகழ்கூடிய வனும் சுத்தத்தை அறிந்தவனும் எவனோ! அவனே சித்தன்.

தானென்ற வாசையூன்றிச்
சமனொத்த நூலைப்பார்ப்பார்
தேனென்ற வதராபானந்
தித்திக்கு தென்றுபோவார்
வானென்ற வாசிக்குள்ளே
மறைத்திட்ட வாறுபோல
மானென்ற பெண்ணாற்கெட்டு
மாளுவார் மாளுவாரே. *(பா. 828)*

மேற்கூறியவற்றை அறியாதவன் பேடி எனப்படுவான்! இவன் மனதிலுள்ள ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு சித்த நூல்களை பார்ப்பான். மேலும் அதரபானத்தை பருகி மாயையில் உழன்று பெண் மாயையில் சிக்கி மாளுவான்.

மாளாத கற்பஞ்சொன்னேன்
வாசியாம் யோகஞ்சொன்னேன்
கேளாத பேர்கெட்டார்கள்
கேள்வியோ ருண்டிட்டார்கள்
வாளான மாயையோகம்
மகத்தான குளிகைசொன்னேன்
தாளான தேவிதாளைச்
சதாநித்தம் பிடிக்கநன்றே. *(பா. 829)*

மாளாமல் பிழைத்து வாழ கற்ப முறையும் வாசியோகமும், சொன்னேன். என்னுடைய வார்த்தையை கேட்காமல் பல பேர் மாண்டார்கள். சிலர் அதன்படி நடந்து சித்தரானார். மேலும் மாயை, யோகம், குளிகை போன்ற முறைகளை சொன்னேன். மாயை அகன்று யோகமும் குளிகையும் சித்தியாக வேண்டும் என்றால் தேவியை எப்பொழுதும் வணங்கிக் கொண்டிருக்கவேண்டும்.

நன்றென வொன்றுகேட்க
நன்றெல்லா மீவாள்தாயும்
பன்றெனச் சொன்ன யோகம்
பலித்திடும் பாழேபோகா

கன்றெனக் கேட்டுவென்ன
கசடரே கற்பமுண்டீர்
வின்றுநீ பார்த்தாயானால்
வேதையில் வெறிகொள்வாயே. (பா. 830)

வெறிகொள்வார் கசடர்தானும்
வேதையு மோடாதையா
பறிகொள்வார் வல்லோர்கையிற்
பார்க்கிலுங் காணேனென்பார்
நெறிகொள்ளப் பண்ணாதாலே
நிலைத்திட்ட தொழிலும்பொய்யாம்
குறிகொள்ளப் பூசிக்காத
குறையாது காணுங்காணே. (பா. 831)

தேவியை வணங்கினால் உனக்கு வேண்டியவைகளை அவள் கூறுவாள். இதனால் யோகம், வாதம், ஞானம் கற்பம் போன்றவையாவும் பலிதமாகும்.. தாயிடம் கேட்டு முறையாக கற்பமுண்ணு. பூசை செய்யாமல் வாதம் பார்த்தால் வாதம் பொய்யாகும். அதுமட்டுமின்றி அனைத்து விதமான தொழிலும் பாழாகும். ஆகவே பூசை செய்து பின்பு தொழிலைப்பார்.

காணவே செயநீரொன்று
காட்டுறேன் கனகமாரி
பூணவே துருசுச்சுன்னம்
புகழ்பெற்ற சாரச்சுன்னம்
ஆணவே காரம்ரெண்டு
மாகிய சுன்னத்தோடே
பூணவே உப்புரெண்டு
முறைப்பான சுன்னங்கூட்டே. (பா. 832)

தங்க மழையாகப் பொழியக் கூடிய செயநீர் ஒன்றை கூறுகிறேன் கேள்! துருசுச் சுன்னம். சாரச் சுன்னம் இவை இரண்டையும் வகைக்கு ஒரு பலமும், காரச் சுன்னம் உப்புச் சுன்னம் இவை இரண்டும் வகைக்கு இரண்டு பலமும் எடுத்து ஆறுபலங் கொண்ட இச்சரக்குகளை ஒன்றாய் சேர்த்து.

கூட்டிய சுன்னமாறுங்
குலாவிய பலமேயாறு
நீட்டிய வீரச்சுன்ன
நிறைந்தமால் தேவிச்சுன்னஞ்

சாட்டிய கெந்திச்சுன்னஞ்
சவுக்காரம் பூரத்தோடே
யாட்டிய வைந்துசுன்ன
மப்பனே பலங்கால்கூட்டே. (பா. 833)

பலமான வேழேகாலும்
பரவிட வொன்றாய்க்கூட்டி
நிலவான சாரங்கேளு
நீபலம் பத்துப்போடு
வலமாக வொன்றாய்ச்சேர்த்து
மத்திக்கச் செயநீராகும்
தலமான மணித்தாய்பாதஞ்
சாங்கமாய்ப் பூசைபண்ணே. (பா. 834)

பின் இச்சரக்குகளுடன் வீரச்சுன்னம், அரிதாரச் சுன்னம், கெந்திச் சுன்னம், சவுக்காரச் சுன்னம், பூரச்சுன்னம் போன்ற சரக்குகளை வகைக்கு கால் பலம் கூட்டி ஒன்றாக்கிக் கொண்டு இவற்றுடன் சாரத்தை பத்து பலம் சேர்த்து மத்தித்தால் செயநீராகும். இச்செயநீரைக் கொண்டு தேவியை பூசை செய்!

பண்ணிய செயநீர்க்குள்ளே
பரவிய வித்தைகேளு
யெண்ணிய பூரத்துக்கே
யிந்தநீர் வார்த்தரைத்துத்
தண்ணிய வில்லைபண்ணித்
தணலிலே பூதச்சுன்னம்
அண்ணிய பூரத்துக்கே
யந்தெடை வீரம்போடே. (பா. 835)

போட்டுநீ வீரந்தானும்
புகழாக வரைத்துக்கட்டி
யாட்டிநீ யூதுவூது
வப்பனே வீரச்சுன்னம்
கோட்டிந்தச் சுன்னம்பாதி
குழைத்தூட்டு மால்தேவிக்கு
நீட்டுநீ மால்தேவிக்கு
நிறையொன்று பூசிப்போடே. (பா. 836)

போட்டதைக் குகையினுள்ளே
புகழ்பெற வூதுவூது
காட்'_தைச் சுன்னமான
கடுங்குகைக் குள்ளேபோடு
நாட்டதை யூதிடப்பா
நலம்பெறச் சுன்னமாகுங்
கூட்டதை மூக்குபோனாற்
கொடுஞ்சுன்ன மானாற்பாரே. (பா. 837)

இந்த செயநீரைக் கொண்டு பூரத்தை அரைத்து வில்லைத்தட்டி தணலில் வைத்து ஊதினால் சுன்னமாகும். இப்பூரச் சுன்னத்தின் எடைக்கு சம அளவு வீரம் சேர்த்து குகையிலிட்டு ஊதினால் வீரச்சுன்னமாகும். இவ்வீரச் சுன்னத்தை சரிபாதி எடுத்து அரிதாரத்தின் மேல்பூசி குகையில் இட்டு ஊதினால் அரிதாரமானது சுன்னமாகும் இச்சுன்னத்தை கற்சுன்னச் சிமிழினுள் வைத்து குகையிலிட்டு ஊதினால் கொடிய சுன்னமாகும்.

பாரிந்த மாலின்றேவி
பறைப்பறச் சுன்னமாகில்
காரிந்த வங்கத்துக்குக்
காட்டுநீ சூதம்பாதி
வாரிந்த வங்கத்துக்கு
மாட்டுநீ சுன்னம்பாதி
தாரிந்த வண்டநீராற்
சாற்றிநீ யரைத்துக்கட்டே. (பா. 838)

கட்டிய வங்கவில்லை
கனலிலே போட்டூதப்பா
வெட்டிய சுன்னமாகு
முயர்ந்திடுங் குருவுமாகுந்
தெட்டிய வாதமெல்லாந்
திகைத்துன்றன் கையிற்சிக்கும்
அட்டிய சூதயானை
யகப்பட்ட வழிசொல்வேனே. (பா. 839)

வங்கத்தை ஒரு பலம் எடுத்து இதற்கு பாதி சூதமும் சூதத்தின் எடை அரிதாரச் சுன்னம் சேர்த்து அண்டநீரால் அரைத்து வில்லை தட்டி குகையில் வைத்து ஊதினால் வங்கமானது குருச்சுன்னமாகும். இக்குருச் சுன்னத்தால் வாதமானது நம் சொற்படி கேட்கும், இச்சுன்னம் பட்ட மாத்திரத்தில் சூதம் மடிந்து சாகும்.

சொல்லுவேன் சூதந்தானும்
துலங்கிய பலமதொன்று
மல்லுவே னென்றுநின்று
மகத்தான செயநீர்வாரு
கொல்லுவே னென்றுநின்ற
குருக்காலாம் வராகன்போடு
வெல்லுவேன் ரசத்தையென்று
விரலாலே குழப்பியாட்டே. (பா. 840)

ஆட்டையிற் சூதந்தானு
மப்பனே வெண்ணெயாகும்
காட்டையிற் சூதந்தன்னைக்
கபளித்துக் குகையில்வைத்து
நீடடையிற் காரங்குத்தி
நிலைபெற வுருக்கவாடும்
சூட்டையில் வேதையோடுஞ்
சுகத்தைநீ யறிந்துபாரே. (பா. 841)

சுத்தித்த ரசத்தை ஒருபலம் எடுத்து முன்சொன்ன செயநீரைவிட்டு அதில் வங்க குரு சுன்னத்தை கால் வராகன் போட்டு கையால் குழப்பினால் சூதம் வெண்ணையாகும். இச்சூத வெண்ணையை சூடனுட தீயில் வாட்டி கரண்டியிலிட்டு எண்ணைக் குத்தி உருக்கி குகையில் வார்த்து காரம் விட்டுருக்கினால் உருகி நின்று கண்விட்டாடும் இதனால் வேதை சித்தியாகும் இதை நீ அறிந்து செய்!

பாருநீ பாஷாணங்கள்
பலபல வெல்லாங்கட்டத்
தாருநீ செயநீராடு
சற்றந்தக் குருவைப்போடு
காருநீ துவைத்துவாட்டு
கரிக்குள்ளே மணிபோலாடும்
கோருநீ வேதையோடுங்
கொள்கையைக் கண்டுபோடே. (பா. 842)

பாஷாணங்களை கட்ட வேண்டுமானால் செயநீரில் வங்க குரு சுன்னத்தை சேர்த்துக் குழப்பிக் கொண்டு இதில் பாஷாணங்களை துவைத்து வாட்டி கரியிலிட்டு உருக்கினால் மணிபோல் கண்விட்டாடி நிற்கும். இதனால் வேதையும் பலிதமாகும்.

போடவே வேதைமார்க்கம்
புகழ்பெற்ற செயநீர்க்குள்ளே
நீடவே வேதைமார்க்கம்
நிலையில்லை கரையுமில்லை
யாடவே யாத்தாள்சொன்னா
ளப்படி யாடிப்பார்த்தேன்
தேடவே யரிதா(ர)மிந்த
செயநீரின் போக்குத்தானே. (பா. 843)

செயநீரால் ஏற்படும் வேதையைப் பற்றிக் கூறுதற்கு முடிவே கிடையாது. தாயான தேவி சொல்லியபடி நான் செய்து பார்த்தேன். இது மிகவும் எளிதான முறையாகும்.

தானென்ற சவுக்காரத்தின்
சௌரியஞ் சொல்லக்கேளு
கானென்ற வுவரின்மண்ணைக்
கலக்கியே வடித்துக்கொண்டு
வேனென்ற சுன்னம்போட்டு
வேண்டிய வுப்புப்போட்டுப்
பானென்று கலக்கிநல்ல
பானைக்குள் வார்த்துவையே. (பா. 844)

சவுக்காரத்தின் போக்கை கூறுகிறேன் கேள்! உவர் மண்ணைக் கொண்டுவந்து நீரிலிட்டுக் கரைத்து நன்றாக கலக்கி வடிக்கட்டிக் கொண்டு இந்நீரில் வேண்டிய அளவு சுன்னத்தையும். உப்பையும் சேர்த்து நன்றாகக் கலக்கி ஒரு பானையில் விட்டு வைக்கவேண்டும்.

வைத்ததி லெண்ணெய்வார்த்து
வளமாக வரைத்துப்போட்டுத்
தைத்திடக் கடைந்தாயானால்
தவளம்போ னுரையேகட்டும்
கைத்திதை வாங்கிவாங்கிக்
கடுகவே யுண்டைபண்ணு
மைத்திதைத் தீயில்வைக்க
மாயம்போற் பறந்துபோமே. (பா. 845)

போகவே யதற்குனின்ற
பொருளேது பறப்பதேது
வேகவே தீக்கேயெண்ணெய்
விளைந்தது விண்ணைப்பார்க்கும்

ஆகவே யுப்புங்கூட
வமளியா யுருகியேகுந்
தாகவே யிதனைக்கட்டத்
தனியுப்புச் சுன்னமாமே. (பா. 846)

மேலும் இதனுடன் எள் எண்ணெயை வார்த்து நன்றாக அரைத்து கடைந்தால் தவளம்போல் நுரைக்கட்டும். இந்நுரையை வாங்கி உருண்டையாக செய்து தீயில் வைத்தால் மாயம் போற் பறந்து போகும் அதாவது இம்மருந்திலிருக்கும் எண்ணையானது நெருப்பினால் சூடேறி ஆவியாய் போகும் உப்பானது உருகிவிடும் இதைக் கட்ட வேண்டுமானால் உப்புச் சுன்னத்தைக் கொண்டுதான் கட்ட முடியும்.

ஆமிந்தச் சுன்னம்விட்டா
லாகாது வாதங்கேளு
ஆமிந்தச் சுன்னந்தேசி
யதுமேலோ வுற்றுச்சூதம்
ஆமிந்தச் சுன்னமேது
மடியான வுப்பிதப்பா
ஆமிந்தச் சுன்னம்போனா
லடங்கலுஞ் சுன்னம்போச்சே. (பா. 847)

போச்சென்று சொல்வதேது
புகழ்பெற்ற சுன்னமெல்லாம்
காச்சென்று வூதவூதக்
கறுப்பேறும் வெளுப்பேறாது
தாச்சென்று சுன்னந்தோறும்
தனியிந்தச் சுன்னம்போட்டுப்
பாச்சென்ற கருவாலாட்டிப்
பணம்போல வில்லைபண்ணே. (பா. 848)

இச்சவூக்கார சுன்னத்தை விட்டால் வாதமும் சூதக் கட்டும் சித்தியில்லாமல் போகும். இச்சுன்னத்தை சேர்க்காமல் செய்யப்பட்ட சரக்குகள் எதுவும் சுன்னமாகாது மேலும் இச்சுன்னத்தை சேர்க்காமல் செய்யப்பட்ட எந்தஒரு சுன்னமும் வெண்ணை நிறமாய் இல்லாமல் கறுத்த நிறமாய் இருக்கும். ஆகவே இச்சுன்னத்துடன் கறுத்த சுன்னத்தை சேர்த்து முட்டையின் கருவால் அரைத்து பணம் போல் வில்லைதட்டி உலர்த்திக் கொள்.

பண்ணிய வில்லைதன்னைப்
பாங்காகவுலர்த்திக்கொண்டு
அண்ணிய சுன்னம்பத்து
அப்பனே யுப்பதொன்று
நண்ணிய நீரைவார்த்து
நலம்பெற வரைத் கதுக்கொண்டு
கண்ணிய குகைக்குள்பூசு.
கடுமெனச் சில்லும் பூசே. *(பா. 849)*

பூசியே யுலர்ந்தபின்பு
பொடித்ததற் குள்ளேவில்லை
வாசியை யாவுந்தாக்கி
வளமாக வூதுவூது
காசியே மயிலைச் சிலைக்
கடுவெள்ளை யானாற்போலத்
தேசியே சவுக்காரத்தின்
செயலிது கண்டுகொள்ளே. *(பா. 850)*

பிறகு பத்து பலம் கற்சுன்னத்தை எடுத்து அதனுடன் ஒரு பலம் உப்புகூட்டி நீர் விட்டரைத்து குகைக்கும் குகையை மூடும் சில்லிற்கும் பூசி உலர்ந்த வில்லைகளை குகைக்குள் வைத்து சில்லிட்டு மூடி ஊதினால் சுன்னங்கள் கடுங்காரங் கொண்டதாகவும், நல்ல வெள்ளை நிறத்தை உடையதாயு மிருக்கும். இதுவே சவுக்காரத்தின் செயல் முறைகளாகும்.

கண்டவர் ரசவாதத்தைக்
கரைகண்ட சித்தமூர்த்தி
பண்டவ ரியாரானாலும்
பலியாது சுன்னமார்க்கம்
தொண்டவர் செய்தகாலம்
சொல்லிந்தச் சுன்னப்போக்கைத்
தண்டவை கோடிதண்டம்
சரக்கெல்லாஞ் சுன்னமாமே. *(பா. 851)*

இச் சவுக்காரச் சுன்னத்தை சேர்க்காமல் இரசவாதம் செய்து பார்த்தால் அவர் சித்தராகவே இருந்தாலும் வாதம் பலிக்காது. ஆக சவுக்காரச் சுன்னத்தை முறையாக அறிந்து செய்தால், கோடி வகையான சரக்குகளும் முழுமையான சுன்னமாகும்.

ஆமிந்தச் சரக்கங்கேது
வாகவே தொகையங்கேது
ஓமந்த வுபரசங்க
ளொரு நூற்றொடன்பத்தொன்று
வாமிந்தப் பாஷாணங்கள்
வகையெல்லா மறுபத்தைந்து
தாமந்தச் சாரகாரஞ்
தனிமுப்பத் தொன்றேசொல்லே. (பா. 852)

சொல்லவே லோகங்கேளு
சுகமாகப் பதினொன்றப்பா
வல்லவே சூதத்தோடு
மைந்தினத் தொகையைக்கேளு
வொல்லவே யிருநூற்றோடு
முயரைம்பத் தொன்பதாச்சு
பல்லவே பரப்பாமெல்லாம்
பலபல சுன்னமாமே. (பா. 853)

சரக்குகளின் தொகையை கூறுகிறேன் கேள். உபரசங்கள் மொத்தம் நூற்றி ஐம்பத்தொன்று (151) பாஷாணங்கள் மொத்தம் அறுபத்தைந்து (65) காரசார தொகைகள் மொத்தம் முப்பத்தொன்று (31) லோகங்கள் பதினொன்றாகும் (11) சூதத்துடன் சேர்த்து இம்மொத்த சரக்குகளின் எண்ணிகையானது இருநூற்று ஐம்பத்தொன்பதாகும். (259) இவையாயும் சவுக்காரச் சுன்னம் பட்ட மாத்திரத்தில் கொடிய சுன்னமாகும்.

ஆமிந்தச் சுன்னமான
வடங்கலும் சுருக்குக்காண
ஆமிந்தச் சுன்னமான
வடங்கலுங் கறுப்புபோக
ஆமிந்தச் சுன்னத்துள்ளே
யதியிதில் வேதையாட
ஆமிந்தச் சவுக்காரத்து
ளடங்கிய சூட்சந்தானே. (பா. 854)

சரக்குகளை எளிதாக சுன்னமாக்கவும், கறுப்பு நிறத்தை போக்கவும், வேதை புரியவும் சவுக்காரச் சுன்னம் மிகவும் பயன்படுகிறது.

சவுக்காரம் அறியச் சுன்னம்

தானென்ற சவுக்காரந்தான்
றலையாச்சு வடியுமாச்சு
தானென்ற சவுக்காரந்தான்
சகலத்தி னுயிருமாச்சு
தானென்ற சவுக்காரந்தான்
சச்சிதா னந்தச்சுன்னம்
தானென்ற சவுக்காரத்தைச்
சமுசய மறவேபாரே. *(பா. 855)*

சவுக்காரமே வாதத்திற்கும் சுன்னமுறைக்கும் தலையாகவும் காலாகவும் நிற்கிறது. இச்சவுக்காரச் சுன்னமே அனைத்துக்கும் உயிராகும். இதற்கே சச்சிதானந்த சுன்னம் என்று பெயர். ஆகவே இதன் செய்முறையை சந்தேகமில்லாமல் தெரிந்து கொள்.

பாருநீ குருவைக்கேட்டுப்
பணிவிடை செய்துசெய்து
காருநீ குருவின்பின்னே
கைவந்து கூடுமட்டும்
தாருநீ பின்னேசுன்னஞ்
சகலமும் பண்ணிப்பாரு
வேருநீ யிதுதான்சுன்னம்
விளைகிற வேரதாச்சே. *(பா. 856)*

எப்படி அறிந்து கொள்வது என்று மயங்க வேண்டாம் ஒரு சற்குருவை அடைந்து அவருக்கு பணிவிடைகள் செய்து அவர் செய்யும் பொழுது பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டு பின்பு நீ தனியாகச் செய்து பார். இச்சவுக்கார முறையே சுன்னங்களின் ஆணி வேராகும்.

ஆச்சிந்தச் சவுக்காரத்தை
யப்பனே சுன்னம்பண்ணப்
போச்சிந்த மெத்தமார்க்கம்
பொல்லாது நல்லதுண்டு
காச்சிந்தப் புடமுமாகா
கருகிய வறுப்புமாகா
வாச்சிந்த ரவியிலெண்ணெய்
வாங்கிடி னன்மையெண்ணே. *(பா. 857)*

சவுக்காரத்தை சுன்னம் செய்ய பல முறைகள் உள்ளன. இவற்றில் சிலது கடினமாகவும் சிலது சுலபமாகவும் இருக்கும். புடபாகமும் வறுப்பு பாகமும் சவுக்காரத்திற்கு ஆகாது முதலில் இதிலுள்ள எண்ணெயை கக்கச் செய்தால்தான் வீர்யம் உண்டாகும்.

எண்ணவே தீயில்லாம
லெழுகிற நீர்தானன்மை
பண்ணவே சவுக்காரத்தைப்
பருவ் !யெண்ணெய்போகத்
தண்ணவே முன்னேசொன்னேன்
சவுகாரக் குருவின்மார்க்கம்
கண்ணவே மூத்தானுப்பிற்
கட்டிட வெகுநன்றாச்சே. (பா. 858)

சவுக்காரத்தை தீயில்லாமல் செய்வதுதான் சிறந்தது. இதிலுள்ள எண்ணையை வாங்க முன்னமே செய்முறையை கூறிவிட்டேன். இச்சவுக்கார குருவைச் சிறுநீர் உப்பிற் சேர்த்தால் மிகவும் நல்லதாகும்.

ஆச்சிந்தச் சவுக்காரத்தை
யளைத்திடு பத்துக்கொன்று
தாச்சிந்த வீரந்தானுந்
தாக்கிடு பத்துக்கொன்று
மாச்சிந்தப் பூரந்தானு
மாட்டிடு பத்துக்கொன்று
காச்சிந்த வரிதாரந்தான்
காட்டிடு பத்துக்கொன்றே. (பா. 859)

ஒன்றான சூதந்தானு
மூட்டிடு பத்துக்கொன்று
வன்றான மூத்தானாமம்
வந்திருந் துறைகடோறும்
கன்றான சீஷனுக்குக்
காட்டுநீ யிந்தமார்க்கம்
பன்றான மூத்தான்ரெண்டின்
பலமிது பகிர்ந்து கொள்ளே. (பா. 860)

சவுக்காரத்தை வீரம்., பூரம், அரிதாரம், சூதம் போன்ற சரக்குகளுடன் பத்துக்கொரு பங்கு சேர்த்து சுன்னம் செய்தால் மிகுந்த பலனைக் கொடுக்கும். மேலும் மூத்தானுப்பு மார்க்கத்திற்கெல்லாம் சவுக்காரத்தை சேர்க்கலாம். இம்முறையை உன்னுட பிரியமான சீடனுக்கு சொல்லிக்

கொடு. இரண்டு பலம், மூத்தானுப்பிற்கு ஒரு பலம் சவுக்காரத்தை சேர்த்தல் வேண்டும்.

பகுந்துதான் பாஷாணங்கள்
பலபல காரசாரம்
வகுந்துதான் பொடியாய்ச்சொல்வேன்
மகத்தான சித்தர்காண
மகிழ்ந்திடுங் கெந்தியோடு
மனோசிலை மாலின்றேவி
தகுந்ததாந் துருசுலிங்கந்
தனித்தபூ நாகங்கூட்டே. **(பா. 861)**

பஞ்ச பீசம்

கூட்டுநீ நிமிளையோடு
கொடிய கற்பூரச்சத்து
ஆட்டுநீ யன்னபேதி
யப்ரேகம் ராசாவர்த்தம்
காட்டுநீ வைக்கிராந்தங்
கற்காவி காந்தத்தோடு
நீட்டுநீ சத்திச்சார
நிலையெவாட் சாரந்தானே. **(பா. 862)**

தானான சாரமொன்று
த்ணிக்கடல் நுரையுங்கூட்டிக்
கானான சதுரக்கள்ளி
கடுகிய வுப்புங்கூட்டி
வேனான தொகையைக்கேளு
விளங்கப்பத் தொன்பதாச்சு
சேனான சமனாய்க்கூட்டிச்
சிறக்கநீ பொடியாய்ச்செய்யே. **(பா. 863)**

பாஷாணங்கள், கார சாரம், போன்ற மருந்துகளை சேர்த்து செய்யும் பொடியைப் பற்றி கூறுகிறேன் கேள்! கெந்தி மனோசிலை, மால்தேவி, துருசு, லிங்கம், பூநாகம், நிமிளை, கற்பூரச் சத்து, அன்னபேதி, அப்பிரகம், ராச வர்த்தம், வைக்கிராந்தம், காவிக்கல், காந்தம், சத்திசாரம், யெவச்சாரம், கடல்நுரை, சதுரக் கள்ளி, உப்பு போன்ற பத்தொன்பது வகையான சரக்கை, சம அளவு எடுத்து ஒன்றாய்க் கூட்டிப் பொடியாக இடிக்க வேண்டும்.

செய்திடும் பொடியின்பேருஞ்
சித்தர்கள் பொடியென்பார்கள்
கைதிடு மிதுதானப்பா
கடியதோர் பீடமென்பார்
தைதிடு மிதற்குட்சூதஞ்
சாரணை விடுவிப்பார்க
ளைதிடும் பொடிக்குள்ளாக
வளவில்லை யப்பாகேளே. *(பா. 864)*

இம்மருந்துப் பொடியைச் சித்தர்கள் பொடி என்று கூறுவார்கள் மேலும் இதற்குப் பீடம் என்ற பெயரும் உண்டும். இப்பொடியை தூவி குளிகைக்கு சத்தை யூட்டினால் சாரணையானது வெகு சுலபமாய் ரசத்தில் ஏறும்.

கேளிந்தப் பொடியாலப்பா
கெடியஞ்சு பீசஞ்சொல்வேன்
வாளிந்தத் தங்கமொன்று
வளமான செம்பதொன்று
கோளிந்தி யுருகும்போது
கொடியதோர் பொடியைத்தூவு
ஆளிந்தப் பொடியைத்தூவு
வற்றது செம்புபோமே. *(பா. 865)*

போமது செம்புசேரப்
பொன்னைநீ யெடுத்துப்பாரு
ஆமது வருணன்போலா
மப்பனே தங்கச் செம்பு
சேமது தங்கபீசஞ்
செய்திடும் வேதைக்கெல்லாம்
ஓமது ரசத்திலூட்ட
வுத்தமம் பாருபாரே. *(பா. 866)*

இப்பொடியைக் கொண்டு ஐந்து வகையான பீசம் செய்வதற்கு முறை சொல்கிறேன் கேள்! தங்கமும் செம்பும் வகைக்கு ஒரு பலம் சேர்தது பொடியைத் தூவி உருக்கினால் தங்கமானது சிவந்த நிறங்கொண்ட செம்பாகும். இத்தங்கச் செம்பை சேர்த்து வேதை செய்தால் அளவில்லாத மாற்று உண்டாகும். இச்செம்பை இரசத்திலும் சேர்த்து வேதை செய்யுங்கால் உத்தமமான பலனையளிக்கும்.

இரண்டுவிந்து பஞ்சபீசக் கிரமம்

பாரிந்தத் தங்கம்போலே
பார்த்திட வெள்ளைசெம்பு
கோரிந்த விரண்டேவித்து
கொள்ளையோ கொள்ளைவாதம்
சேரிந்த விரண்டுதானும்
செயித்திடுஞ் சூதத்துள்ளே
தாரிந்த விரண்டால்வேதை
தனிவெள்ளி பொன்னுமாமே. *(பா. 867)*

தங்கத்தைப் போல வெள்ளியை செம்புடன் சேர்த்து பொடிதூவி உருக்கினால் வெள்ளியானது செம்பாகும். இவ்விரண்டு வகையான செம்பால் வேதையானது கைக்குள்ளாகும். (இரண்டு வித செம்பு: வெள்ளிச் செம்பு, தங்கச் செம்பு). இச்செம்புகளால் சூதமானது திரண்டு கட்டும். தங்கச் செம்பையும், வெள்ளிச் செம்பையும் தனித்தனியாக வெள்ளியுடன் சேர்த்து உருக்கினால் வெள்ளியானது செம்பாகும்.

ஆமினிப் பீசமார்க்க
மறைகிறேன் வெவ்வேறாகத்
தாமினி யப்ரேகத்தில்
தனித்திரு வங்கங்கூட்டிப்
போமினி செம்புவைந்து
போடுநீ யதற்குள்ளொக்கச்
சேமினி யுருகும்போது
சித்தநற் பொடியைப்போடே. *(பா. 868)*

போடவே யுருகியெல்லாம்
போக்கெல்லாந் தள்ளிப்போடும்
ஆடவே யதற்குளப்பா
வப்பிரகச் சத்துநிற்கு
நீடவே சத்தியாக
நின்றது யிதுதான்பீசம்
கூடவே யப்பிரேகத்தின்
குலாவிய பீசங்கேளே. *(பா. 869)*

இனி பீச மார்க்கத்தை கூறுகிறேன் கேள்! ஒரு பங்கு அப்ர கத்துடன் இரண்டு பங்கு வங்கமும், ஐந்து பங்கு செம்பையும் சேர்த்து கரியிலிட்டு பொடித்தூவி உருக்கினால் அப்பிரகம் சத்தாக நிற்கும். இதுவே சத்தியான

அப்பிரகத்தின் பீசமாகும்.

கேளுநீ வெள்ளியோடு
கெடியான கருநாகந்தான்
வாளுநீ நிமிளையோடு
வைக்கிராந்தச் செம்புசேரு
தாளுநீ யுருகும்போது
தனிச்சித்தர் பொடியைப்போடு
வேளுநீ விடுவித்தேறு
வெள்ளியுஞ் செம்பதாமே. *(பா. 870)*

வெள்ளியுடன் கருநாகம்., நிமிளை,: வைக்கிராந்தம், செம்பு போன்ற சரக்குகளைச் சேர்த்து பொடிதூவி உருக்கினால் வெள்ளி செம்பாக மாறும்.

ஆமிந்தக் காந்தத்தோடே
யப்பனே யயமுங்கூட்டி
போமிந்தச் செம்போரைந்து
போடுகார் முகிதாலினொன்று
சேமிந்தக் குடவினொன்று
சேரவே யுருக்கியாட்டி
யோமிந்தச் சித்தர்சூர்ண
முறப்போடு சோதித்தேறே. *(பா. 871)*

காந்தத்துடன் அயத்தை சேர்த்து இதனுடன் ஐந்து பலம் செம்பும் கார்முகிலும், பித்தளையும் சேர்த்து சித்தர் சூர்ண பொடியைத் தூவி உருக்கினால் காந்தம் செம்பாக மாறும்.

ஏறவே காந்தச் செம்பா
மேழுல கெல்லாமெச்சத்
தேறவே யிரும்பைச்
செம்பாய்ச் செய்கிறமார்க்கங்கேளு
கூறுவே யிரும்புவங்கங்
கொண்டிடு செம்புபோட்டுப்
போறவே திராயும்தொட்டி
போட்டுநீ யுருக்கியாட்டே. *(பா. 872)*

ஆட்டியே சித்தர் தூளை
யதற்குள்ளே போட்டுப்போட்டு
நீட்டியே விடுவித்தாக்கா
னின்மல விரும்புச்செம்பு

வூட்டியே யைந்துபீச
மொவ்வொன்றின் வகையான்சொன்னேன்
ஓட்டியே சித்தர்சூர்ண
மொன்றுக்குப் பத்துபோடே. *(பா. 873)*

இரும்பைச் செம்பாக மாற்ற உபாயங் கூறுகிறேன் கேள்! இரும்புடன் வங்கம் செம்பு, திரா, தொட்டி போன்ற சரக்குகளைக் கூட்டி சித்தர் பொடியைத்தூவி உருக்கினால் இரும்பு செம்பாகும். இதுவரை ஐந்து வகையான பீச முறைகளை கூறினேன். இம்முறைகள் ஒவ்வொன்றுக்கும் பத்து பலம் சித்தர் பொடியைச் சேர்க்க வேண்டும்.

போடுநீ திரையாமஞ்சில்
போக்கெல்லாம் போகுமட்டும்
நீடுநீ பொடியைத்தூவு
நின்மல மாகுமட்டும்
தேடிநீ திரிந்தாலிந்தச்
செம்புபோற் கிடையாதப்பா
ஆடுநீ யிதற்குள்வேதை
யளவில்லை காணுகாணே. *(பா. 874)*

இவ்வைந்து வகையான பீசத்திற்கும் அதிலுள்ள தோஷங்கள் நீங்கி பிரகாசித்து செம்பாகும் வரை பொடியைத் தூவி உருக்கவேண்டும். இதை விடுத்து நீ உலகம் முழுக்க ஓடித்திரிந்தாலும் இதற்கு நிகரான செம்பைப் பார்க்க முடியாது. இதனால் ஏற்படும் வேதைக்கும் அளவே கிடையாது.

காணிந்தப் பீசமைந்து
கடியதோர் சித்திலூட்டி
பூணிந்தச் சித்தர்சூர்ணப்
பொடியதிற் போடுபோடு
தோணிந்த ராகம்வாங்கிச்
சோமபாகச் சூதம்நிற்கும்
ஆணிந்தப் பொடியாற்சூத
மனைத்துச் சாரணையைச்செய்யே. *(பா. 875)*

இவ்ஐந்து வகையான பீசத்தையும் (ஐந்து வகையான செம்பையும்) இரசத்துடன் சேர்த்து சித்தர் பொடியைத்தூவி உருக்கினால் ரசமானது சத்தை தன்னுள்ளே வாங்கிக் கொண்டு திடப்பட்டு நிற்கும். இதே போல் எச்சத்துடனும் இரசத்து ஊட்டினாலும் இப்பொடியைத் தூவி சாரணை செய்தல் வேண்டும்.

செய்ததோர் சித்தர் தூளைச்
செப்பாதே சீஷனுக்குக்
கைத்தோர் சித்தர்க்கப்பா
கைகண்டபொடிதான்பாரு
மைததோர் தேவிசொல்ல
மகத்துவம் பண்ணிப்பார்த்தே
னைததோர் செம்புபண்ண
வலைவார்கள் வாதிகாணே. (பா. 876)

இவ்வளவு மகிமை வாய்ந்த இச்சித்தர் பொடியை உன்னுட சீஷனுக்கும் சொல்ல வேண்டாம். இப்பொடியானது சித்தர்களுக்கு மட்டுமே சித்தியாகும் இதை தேவி எனக்கு கூறினாள் அவள் கூறியபடி நானும் செய்து பார்த்து சித்தியடைந்தேன். மேற்கூறிய பொடியை அறியாமல் வாதிகள் வாதச்செம்பு செய்ய அலைவார்கள்.

வாதிகள் வழக்கம்

வாதிக ளலையும்வேறு
வைத்ததைத் தைலம்வாங்கி
வேதிய விரும்பிலூட்டி
வெருவார விளங்கச் செய்வார்
ஓதிய வகாரங்குத்தி
யுருக்குவார் செம்பாமென்பார்
போதிய கிட்டம்போலப்
போய்விடும் பாருபாரே. (பா. 877)

வாதிகள் பலவகையான தைலங்களை செய்து அதை இரும்பில் சேர்த்து காரமிட்டு உருக்கி செம்பு செய்தேன் என்பார்கள். இது உண்மையில் செம்பல்ல இரும்பு கிட்ட மேயாகும். (இரும்புப் பொடியேயாகும்).

பாருநான் சொன்னசெம்பு
பராபரைக் கையன்சொன்னார்
தாருநான் சொன்னதைந்துந்
தனித்தனிப் பீசமப்பா
கோருநான் ரசத்துக்குள்ளே
குளிகைக்குள் பிலங்கள்மெத்த
ஆருநான் பீசம்பண்ண
வடைவிதே யறிந்து கொள்ளே. (பா. 878)

நான் கூறிய ஐந்து வகையான செம்பையும் முன்னொரு சமயம் பார்வதிக்கு சிவபெருமான் உபதேசம் செய்தார். இச்செம்புகளை ரசத்துடன் சேர்த்து சாரணை செய்தால் குளிகைக்கு அதிகமான பலமுண்டாகும்.

உலோக திராவகம்

அறியவே திராவகத்தி
னாண்மையைச் சொல்லக்கேளாய்
பொரியவே துருசுதன்னைப்
புகழ்பட வறுநீயப்பா
நெறியவே யிதுதான்பத்து
நீட்டிய விணங்கன்பத்து
சரியவே சவுட்டினுப்புத்
தனியிரு பத்துகூட்டே. *(பா. 879)*

கூட்டுநீ சீனம்பத்து
குலாவிய சாரமஞ்சு
நீட்டுநீ பலந்தான்கேளு
நிறையவே யைம்பத்தஞ்சு
வூட்டுநீ பொடியாய்ப்பண்ணி
யுகந்தொரு குப்பிக்குள்ளே
காட்டுநீ யரைவாசிக்குக்
கழுத்தின்மேற் குப்பிவையே. *(பா. 880)*

திராவகத்தின் ஆண்மையைக் கூறுகிறேன் கேள்! பத்து பலம் துருசை எடுத்து தணலில் இட்டு வறுத்துக் கொண்டு இதனுடன் பத்து பலம் வெடியுப்பு, பத்து பலம் சவுட்டுப்பு, பத்து பலம் சீனம், ஐந்து பலம் சாரம் போன்ற சரக்குகளை கூட்டி பொடியாய் செய்து எடை போட்டு பார்த்தால் ஐம்பத்தைந்து பலங்கொண்டதாயிருக்கும் இப்பொடியை சரியான அளவுக் கொண்ட குப்பிக்குள் கழுத்து வரை போட்டு அதன் மேல் மற்றொரு குப்பியைக் கொண்டு மூட வேண்டும்.

வைக்கின்ற குப்பிகேளு
விலாவிலே தமரைப்போட்டுத்
தைக்கின்ற குப்பினாளஞ்
சமநொக்கச் சீலைசெய்து
கைக்கின்ற தமரின்சந்து
காணாதே மண்ணைப்பூசு
நைக்கின்ற வடுப்பிலேற்றி
நாயகி பதத்தைப்போற்றே. *(பா. 881)*

போற்றிய பா ண்டத்துள்ளே
போடுநீ மணலையப்பா
மாற்றிய குப்பிதன்னை
வாகாக வதற்குள்வைத்துத்
தோற்றிய படிக்குமூடிச்
சுகமாகக் குப்பிமுக்கி
லாற்றிய பீங்கான்கிண்ணி
யதன்கிட்ட வைத்திடாயே *(பா. 882)*

வைத்திட்டு குப்பினாளம்
வந்திடும் புகைதான்பாரு
கைத்திட்ட புகையோடிடாக்கக்
கட்டியே சலமும்வீழும்
தைத்திட்ட புகைநின்றாக்கால்
திராவக நின்றுபோச்சு
வுய்த்திட்ட விதற்குநாம
முலோகநீ ரென்றுகாணே. *(பா. 883)*

இக்குப்பியின் வாய் விளிம்பில் ஒரு சிறு துளையிட்டு அத்துளையில் ஒரு குழாயை பொருத்தி சந்தில்லாமல் சீலை செய்து ஒரு பாண்டத்துள் பாதி வரை மணலைக் கொட்டி அதன் மேல் குப்பியை அசையாமல் வைத்து பிறகு குப்பியின் வாயில் சொருகியுள்ள குழாயின் மூக்கில் ஒரு பீங்கான் சாடியை வைத்து பானையை அடுப்பிலிட்டு தீமூட்டி எரித்து தாயை பூசை செய்தால் குழாயின் வழியாக புகையுடன் கூடிய சலமானது பீங்கானில் வந்து விழும். புகை நின்றால் சலமும் நிற்கும். இதற்கு உலோக நீர் என்று பெயர்.

காணுநீ முன்போலந்தக்
கடியஞ்சு சரக்கும்வாங்கிப்
பூணுநீ யிந்தநீரைப்
புகட்டியே வுலர்த்துலர்த்து
ஆணுநீ முன்போலகுப்பி
யடைத்துத்தா னீரைவாங்கு
வாணுநீ மறுசரக்கில்
வார்த்துமே யுலர்த்திப்போடே. *(பா. 884)*

போடுநீ வந்தநீரைப்
புகழ்பெறு ஈரக்கிலூட்டு
ஆடுநீ யிந்தவண்ண
மைம்முறை யேந்திவாங்கு
வேடுநீ யிந்தநீரில்
வேண்டிய வுலோகம்போடத்
தாடுநீ சலமேயாகுந்
தனிமலை நீருமாமே. (பா. 885)

மீண்டும் முன்கூறிய ஐந்து வகையான சரக்கையும் இந்நீரில் தோய்த்து தோய்த்து காயவைத்து பொடி செய்து முன்போல் குப்பிக்கேற்றி நீரைவாங்க வேண்டும். இதே போல் ஐந்து முறை மீண்டும் மீண்டும் சரக்கிற்கு நீரை ஏற்றி பொடி செய்து தீநீரை வாங்க வேண்டும். இவ்வாறு ஐந்து முறை செய்வதால் திராவகமானது மிகவும் பலப்படும். பலப்பட்ட இந்நீரை எந்த லோகத்தில் சேர்த்தாலும் லோகங்கள் தண்ணீராய் கரைந்து போகும், அதுமட்டுமின்றி இந்நீரை மலையின் பேரில் தெளித்தால் மலையானது நீராய்ப் போகும்.

ஆமிந்தத் திராவகத்தா
லறுபத்து நான்குந்தண்ணீர்
போமிந்த வுபரசங்கள்
பூட்டையிற் சலமேயாகும்
வேமிந்தச் சாரகாரம்
விடுபட்டுத் தண்ணீராகும்
ஓமிந்த லோகநீரி
னுண்மையைக் கண்டுகொள்ளே. (பா. 886)

இந்த லோகத் திராவகத்தில் பாஷாணங்கள், உபரசங்கள், காரசாரம் போன்ற எச்சரக்கை சேர்த்தாலும் தண்ணீராய் கரைந்து போகும். இவ்வளவு பெருமையையும் இந்த லோக திராவகத்தால் என்றறிதல் வேண்டும்.

கொள்ளவே யிந்தநீரிற்
குமுறின சரக்கதெல்லாம்
உள்ளவே சத்தாய்நிற்கு
முருகிடுந் தீக்கேகாது
தள்ளவே வேதைக்காகும்
சாரணை வழிக்குமாகும்

தெள்ளவே யூதார்சித்தர்
க்ஷணத்திலே யெடுப்பார்காணே. (பா. 887)

இந்நீரில் பிரட்டிய எச்சரக்கையும் குகையிலிட்டு உருக்கினால் புகையாமல் சத்தாய் நிற்கும். இச்சத்தானது வேதைக்கும் சாரணைக்கும் பயன்படக் கூடியதாகும். (இந்நீரை ரசத்துடன் சேர்த்து சத்தையீந்தால் ரசமானது சத்தை உட்கொண்டு தன் எடையில் மாற்றமில்லாமல் நிற்கும்). இதை அறியாமல் சில சித்தர்கள் வெறுமனே ரசத்துடன் சத்தை சேர்த்து உருக்குவார்கள்!

காணிந்தச் சத்தைச்சூதங்
கபளித்து விடுவித்தாக்கால்
பூணிந்தக் கவளமார்க்கம்
புரியஷ்ட்டந் தலைகாட்டாது
தோணிந்த நான்குந்தானுஞ்
சுகமாக வெளியாய்க்காணும்
ஆணிந்த நான்குக்குள்ளே
யாடலாம் பாடலாமே. (பா. 888)

ரசம் சத்தை தன்னுள்ளே வாங்காமல் நின்றால் கவுனமும், காயசித்தியும் இல்லாமல் போகும். ஆகவே முறையாக தீநீரை சேர்த்து சாரணை செய்யுங்கால் நான்கு விதமான நிலைகளும் நமக்கு புலப்படும். சித்துகளும் கைக்குள்ளாகும்.

ஞான வழக்கம்

பாடலா மாவதென்ன
பரம போதத்தைக்கண்டு
ஆடலா மாவதென்ன
வானந்த வெளியைப்பார்த்து
நாடெலாம் வெளியாய்நிற்க
நண்பற்ற மாண்பர்காணார்
கோடெலா மாயைக்குள்ளே
குளறுவா ருளறுவாரே. (பா. 889)

ஆனந்த போதத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பயன் என்ன! ஆனந்த மயமான பூரண வெளியை பார்ப்பதால் என்ன பயன்! இந்த உலகமே ஆனந்தமாய் இருக்கும் பொழுது இவை அனுபவிக்காமல் இருப்பது வீண்! என்று கூறி உலகமாயையில் என்றென்றும் சிக்கித் தவிப்பார்கள்!

உளறாதே யொளியாய்க்காண
வுத்தம சீஷாகேளு
தளறாதே மாயையான
தனிவிஷ நாபிக்காட்டைக்
கிளறாதே மனமூன்றாதே
கேள்வியில் செலுத்திடாதே
பளறாதே மனவிவேகம்
பார்குரு சீஷனாச்சே. *(பா. 890)*

ஞானப் பிரகாசத்தை அடைய வேண்டுமானால் சீடனே கேள்! மாயை வடிவான இவ்வுலகத்தையும் நாபி விஷத்திற்கு சமமான துன்பந்தரும் இவ்வுடலையும் உண்மை என்று நம்பியிறாமல் மனதை விவேகத்தால் அடக்கி நிலைப்படுத்துதல் வேண்டும்.

குருவது வேறேயில்லை
ருருசீஷன் வேறேயில்லை
வருவது வேறேயில்லை
வாராது வேறேயில்லை
தருவது வேறேயில்லை
தருபவன் வேறேயில்லை
அருவது மற்றுநின்ற
வானந்தத் தாண்மைதானே. *(பா. 891)*

தானென்று நானதென்று
தனித்தனி வேறேயில்லை
வானென் றுவாசியென்று
வந்தது வேறேயில்லை
கானென்று மாயையில்லை
கலந்தபி னெல்லாமாச்சு
பானன்று வுண்டாள்சொன்னாள்
பார்த்துநான் கடந்திட்டேனே. *(பா. 892)*

மனதை அசையாமல் நிறுத்தி ஆனந்த போதத்தில் நின்றால் குரு - சீடன், வருவது - வராதது, கொடுப்பவன் - வாங்குபவன், நான் - நீ போன்ற பேதங்கள் ஒழிந்து எல்லாம் ஒரே பிரம்ம மயமாய் நிற்கும். பேதங்கள் யாவும் மனதில் மாயை கூடி நிற்பதால் ஏற்படும் (தோற்றங்களாகும்) இதை மதுபானம் செய்யும் தாயானவள் எனக்கு கூறினாள் நான் அவள் கூறிய

வழியில் நின்று ஞானமடைந்தேன்!

கடந்திட்ட மனமேகேளு
காசினி மன்னர்கோடி
யிடந்திட்ட விந்தரர்கோடி
யெண்ணவு முடியாதப்பா
படர்ந்திட்ட வண்டங்கோடி
படைத்திட்ட பிரமர்கோடி
தடந்திட்ட மணலுமோவ்வா
சாகர மழிந்ததையா. *(பா. 893)*

அய்யனே போதமான
வருளான குருவேகேளு
தையின விவேகம்பாரார்
சமுசயத்தாலே மாண்டார்
கையினக் கண்டிருந்தும்
காணொட்டா தாசைபூர்ம்பூ
மையினக் கண்ணியென்றாய்
மாயத்தை நீக்கினாளே. *(பா. 894)*

மனமே கேள்! இவ்வுலகத்தில் எத்தனையோ கோடி மன்னர்களும் இந்திரர்களும் பிரம்மாக்களும் தோன்றி மிச்சமில்லாமல் அழிந்து போனார்கள். இவ்வுலகமும் ஒரு காலத்தில் அழியக் கூடியதாகும். இதை அறியாமல் சந்தேக எண்ணங் கொண்டவர்கள் விவேகத்தைக் கொண்டு மனதை அடக்காமல் மாண்டு போனார்கள். ஆகவே வாசமுள்ள பூவை சூடிக்கொண்டிருக்கும் தாயை பூசித்தால் அனைத்து விதமான மாயைகளையும் நீக்குவாள்.

நீக்கினாள் மாயைதன்னை
நிலையான குளிகையாலே
போக்கினாள் கருவியோடு
போக்கெல்லாந் தானாய்நின்றாள்
தாக்கினா ணாலுக்குள்ளே
தயங்காத வொளியைக்காட்டித்
தேக்கினாள் ராசாவீதி
சேரவும் வெளியதாச்சே. *(பா. 895)*

தாயானவள் ரசக்குளிகையுடன் கூடி நின்று கருவிகளால் ஏற்படும் மாயைகளை நீக்கி அனைத்தும் தானாய் நின்றுக் கொண்டு மூல அக்னியில்

தன்னுட ரூபத்தை வெளிக்காட்டி நின்றாள் இவளை சேர்ந்து நின்றால் யோகபாதை திறந்து ஞானமுண்டாகும்.

வெளியிற்குள் வெளியிற்புக்கி
வேதாந்த முடிவுந்தாண்டித்
தெளிவுக்குள் தெளிவுகண்டு
சேரநிர் மலமாய்நோக்கி
யொளிவுக்கு ளொளிவுதாண்டி
யொப்பொன்று மில்லாதரடே
களிவுக்குள் பழகிச்சையா
சூதத்தின் குளிகைதானே. *(பா. 896)*

ஞானத்தால் பரவெளியில் கலந்து வேதாந்த முடிவையும் கடந்து தெளிவான பூரணப் பொருளை பார்த்து இவ்வுலகத்தை மலமயமாய் கருதி பூரணமாய் நிற்றல் வேண்டும். இந்நிலையில் நிற்பவருக்கு சரிசமமான வஸ்து வேறொன்றும் இல்லை. இந்த ஞானமனைத்தும் சூதகுளிகையால் எளிதாக பெறலாம்.

குளிகையில் பெருமைதன்னைக்
கூறவும் முடியாதையா
குளிகையின் பெருமையன்றோ
கோடானு கோடிசித்தர்
குளிகையின் பெருமைசொல்லக்
கூடாதே யீசனென்றார்
குளிகையின் பெருமைபிர்மக்
கூறது கண்டுகொள்ளே. *(பா. 897)*

சூத குளிகையின் பெருமைகளை சித்தர்களாலும், பிரம்மா மற்றும் சிவனாலும் கூற முடியாது. இக்குளிகை பிரம்மத்திற்கு சமமான பெருமைக் கொண்டது.

மகாதிராவகம்

கண்டுகொள் மகத்தாநாமம்
கடியதிரா வகமுஞ்சொன்னேன்
வண்டுகொ ளுலோகநீரால்
வறுத்திடு துருசுதன்னைப்
பண்டுகொள் துருசுதன்னைப்
பதினான்கு பலமேதூக்கு

ஒண்டிகொ ளிணங்கன்றானு
முற்பன மிருபத்தெட்டே. (பா. 898)

எட்டாத சவுட்டுப்பப்பா
வெண்பத்து நான்குபோடு
மட்டாத வீரங்கேளு
மாட்டிடு பலந்தானான்கு
பட்டான காரந்தானும்
பலமஃ தெட்டுபோடு
கெட்டான வுருவியுப்பு
கூட்டிரு பலந்தானீயே.. (பா. 899)

மகா திராவகத்தை கூறுகிறேன் கேள்! லோக திராவகத்தால் துருசை வறுத்து பதினான்கு பலம் எடுத்துக் கொண்டு இதனுடன், வெடியுப்பு இருபத்தெட்டு பலமும், சவுட்டுப்பு எண்பத்து நான்கு பலமும், வீரம் நான்கு பலமும், காரம் எட்டு பலமும், நாயுருவியுப்பு இரண்டு பலமும்.

நீயென்ன பழகிதானு
நீட்டதிற் பலந்தாினெட்டு
மாயென்ன பொடியாய்ப்பண்ணி
வாரதி லுலோகநீரை
காயென்ன முக்கால்வாரு
கடுகியே குப்பிக்கூட்டு
தாயென்ன தாயைப்போற்றித்
தனிமுன்போ லடுப்பிலேற்றே. (பா. 900)

பழகி எட்டு பலமும், கூட்டி பொடி செய்து குப்பியிலிட்டு முக்கால் பங்கு லோகநீரை வார்த்து முன்போல் அடுப்பிலேற்றி தாயை வணங்கி பூசை செய்து பார்.

ஏற்றிய விதத்தைக்கேளா
யியனூற்று நாற்பத்தெட்டு
தோற்றிய குப்பிக்குள்ளே
சொரிந்துவை பாதிமட்டும்
ஆற்றிய குப்பிமேலே
யடைவாக முன்போற்கட்டு
மாற்றிய குப்பிவாயில்
வளமாகப் பீங்கான்வையே. (பா. 901)

பானையிலுள்ள மொத்த சரக்கின் எடை என்ன வென்றால் நூற்று நாற்பத்தெட்டு பலமாகும். இந்த சரக்குகளை முன்போல் அதாவது லோக திராவகத்திற்கு செய்ததுபோல் குப்பிக்கு பாதி வரை போட்டு விளிம்பின் வாயில் துளை செய்து குழாயமைத்து மண்சீலைக் கொண்டு வாயைமூடி குழாயின் மூக்கருகே ஒரு பீங்கான் சாடியை வைத்து.

வைத்தபின் னெரிக்கமார்க்கம்
வகைசொல்வேன் கேளுகேளு
கைத்தபின் ரெண்டுசாமங்
கலந்தெரி தீபம்போல
மைத்தபின் குப்பிமூக்கில்
வருகிற வேர்வையைப்பார்
தைத்தபின் கமலம்போலத்
தனியஞ்சு கடிகைபோடே. (பா. 902)

போடையில் குப்பிமூக்கில்
புறப்படும் வெள்ளைத்தூபம்
நாடையில் கடுந்தீப்போடு
தலம்பெறச் சிவங்குதூபம்
ஆடையில் பீங்கானுக்கு
ளப்பனே வீழும்நீர்தான்
தேடையில் மகத்தாநாமம்
திராவக மிதுதான்காணே, (பா. 903)

இரண்டு சாமம், தீபம் போல் எரித்தால் மூக்கின் வழியாக நீர் வடியும் இத்தருணத்தில் எரிப்புத் திட்டத்தை அதிகமாக்கி கமலம் போல் ஐந்து கடிகை நேரம் எரித்தால் வெள்ளை நிறமான புகை உண்டாகும். இச்சமயத்தில் தீயை அதிகரித்து காடாக்கினியாக எரித்தால் சிவந்த நிறமான புகையுடன் சலம் விழும். இதற்கே மகாதிராவகம் என்று பெயர்.

காணிந்தத் திராவகத்தைக்
காட்டிடிற் பொன்னாம்லோகம்
ஆணிந்த ரவியில்வைக்க
வப்பனே வெண்ணேயாகும்
பூணிந்தத் திராவகத்தைப்
பூட்டுமுன் சரக்கில்முன்போல்
தோணிந்தப் படிக்குவைத்துச்
சோம்பாக நீரைவாங்கே. (பா. 904)

வாங்குநீ நீரைத்தானு
மறுமறு சரக்கிலூட்டிப்
பாங்குநீ யஞ்சிரண்டு
பரிவேழ மேற்றினாக்காற்
றாங்குநீ நீரைவைக்கத்
தனியொத்த பாண்டமில்லை
தேங்கிநீ வரக்கால்நல்ல
சிதையாத குப்பிபண்ணே. *(பா. 905)*

இந்த திராவகத்தை லோகத்துடன் சேர்த்தால் பொன்னாகும் இதை ரவியில் வைத்தால் வெண்ணைப் போலாகும். திராவகத்தை முன்போல் சரக்குடன் சேர்த்து குப்பிக்கேற்றி சீலை செய்து திராவகத்தை வடித்துக் கொள்ள வேண்டும். மீண்டும் இத்திராவகத்தை முன் கூறிய சரக்குடன் சேர்த்து குப்பிக்கேற்றி திராவகம் வாங்க வேண்டும். இதே போல் பத்துமுறை செய்தால் கொடிய திராவகமாகும். இக்கொடிய திராவகத்தை கனத்த காசிக்குப்பியில் வாங்க வேண்டும். மற்ற லோகங்கள் உருகிபோகும்.

பண்ணிய குப்பிக்குள்ளே
பாய்ச்சிடா யிந்தநீரைக்
கண்ணிய மயிரில் தோய்த்துக்
கமரிபோல் விசிறினாக்கால்
அண்ணிய தேசரந்தா
னப்பனே விரிந்துபோகும்
தண்ணிய காயசித்தி
கனித்தேகம் பிளக்கும்பாரே. *(பா. 906)*

பிளக்குமே தேகமானாற்
பின்னொன்று மேகாதுண்டோ
வளர்க்குமே வாதவித்தை
வர்ணிக்கு மடங்காநூலாய்
அளக்குமே வீசைசூத
மதற்குள்ளே யொன்றேதுள்ளி
விளக்குமே வெந்துநீறாய்
விரியிது பாருபாரே. *(பா. 907)*

பாரிந்தச் சூதநீரைப்
பருகிய கரணிவாங்கி
வாரிந்த நவலோகத்தில்
மாட்டிட வெந்துநீராம்

தாரிந்த நீரைத்தாது
தனியாறு பத்தைவாட்டக்
கோரிந்த மணியாய்நிற்குங்
குறிகண்டு வேதைதானே (பா. 908)

இந்த திராவகத்தை முடியில் தடவி விசிறினால் முடி விரிந்து போகும். இந்திராவகத்தை உட்கொண்டால் காய சித்தி வினாடியில் ஏற்படும். காயசித்தி உண்டாக்குமளவிற்கு சக்தி இருக்கும்பொழுது வேறு எதை தான் செய்ய முடியாது? மேலும் இத்திராவகத்தால் ஏற்படும் வேதையைப் பற்றி வர்ணிக்க முடியாது. வீசம் அளவுக் கொண்ட சூதத்தில் ஒரு துளி மகா திராவகத்தை சேர்த்தால் சூதமானது வெந்து நீறாகும். இச்சூத நீற்றை நலலோகத்துடன் சேர்த்து வாட்டினால் நவலோகமும் வெந்து நீறாகும், இந்த லோக நீற்றை அறுபத்து நான்கு சரக்குடன் சேர்த்து வாட்டினால் மணிபோல் ஆகும். இதனால் வேதையும் ஏற்படும்.

வேதைக்கா மினத்தைக்கண்டு
விடுநூறு கோடிமட்டும்
பாதைக்குப் பிரித்துச்சொல்லப்
பக்குவ மெனக்குப்போதா
கோதைக்கவ் வீசன்சொன்னார்
குமட்டலாங் கோடிக்கொன்று
தாதைக்கு நவலோகத்தில்
தாக்கஞ்சு நூறுமாற்றே. (பா. 909)

சரியான இனத்தை அறிந்து நூறுகோடிக்கு ஒரு பங்கு லோகத்துடன் சேர்த்தால் வேதையுண்டாகும். இவ்வேதை முறைகளை தனித்தனியாக பிரித்து சொல்வதற்கு எனக்கு பக்குவம் கிடையாது. இந்த வேதை முறை பார்வதிக்கு சிவன் உபதேசிக்கையில் கோடிக்கு ஒரு பங்கு நவலோகத்துடன் சூதநீரை சேர்த்தால் ஐநூறு மாற்று உண்டாகும்.

மாற்றதை ஞ்ஞூறுபோக
மற்றதோர் சூதத்தூளை
யேற்றியே யெடுநீயப்பா
விதைநூறு சூதத்தூட்டிற்
காற்றிய வெண்ணெயாகுங்
கரண்டிக்கு ளுருகும்பாரு
போற்றியே வுருக்கவாடும்
போக்கிதில் மெத்தப்போமே. (பா. 910)

வேதை செய்தது போக மீதியுள்ள சூதநீற்றை ஒரு பங்கு எடுத்து நூறு பங்கு சூதத்துடன் சேர்த்தால் சூதமானது வெண்ணைப் போலாகும். இச்சூத வெண்ணையை கரண்டிக்குள் இட்டு உருக்கினால் மணி போல் உருளும். இம்மணியால் பல காரியங்கள் கைகூடும்.

போமிந்தக் சூதந்தானும்
பூட்டச்சா ரணைக்குநன்று
காமிந்த வேதைபோடக்
கடுந்தூர மோடுமோடும்
வேமிந்தத் திராவகத்தில்
வேண்டிய தெல்லாம்பாரு
ஆமிந்த நீரின்வேதை
யாத்தாளுக் கரன்சொன்னாரே. (பா. 911)

சூதமணிக்கு சாரணை தீர்த்து வேதை செய்தால் வெகு தூரமோடும். இன்னும் அனேக விதமான செயல்கள் இத்திராவகத்தாலுண்டாகும். அதை முறைப்படி அறிந்து பார்! இந்த திராவகத்தால் ஏற்படும் வேதையைப் பற்றி சிவபெருமான் - பார்வதிக்கு கூறினார்.

கெந்தகத் திராவகம்

அரன்சொன்னார் கெந்தி தானு
மகண்டமாந் தீநீராக
வரஞ்சொன்ன கெந்தியப்பா
வாழ்பலம் ரெண்டுபத்து
தரஞ்சொன்ன துருசுதானுந்
தனிப்பலம் பத்துப்போடு
கரஞ்சொன்ன சாரமஞ்சு
கடுஞ்சீனம் பதினஞ்சூட்டே. (பா. 912)

ஊட்டுநீ சவுட்டினுப்பை
யுயர்பல மிருபத்தஞ்சு
காட்டுநீ யிணங்கன்றன்னைக்
கடுகியே ரெண்டுபத்து
பூட்டுநீ வீரம்நாலு
புகழுநா யுருவிநாலு
யேட்டுநீ யெள்ளுநாலு
யேகநூற் றேழிதூக்கே. (பா. 913)

தூக்கிய சரக்கிதெல்லாந்
தூளைப்போற் பொடியாய்ப்பண்ணி
யாக்கிய லோகநீரை
யப்பனே வார்த்துக்கிண்டு
தாக்கிய முக்காலப்பா
தனிப்பட வூற்றிப்போடு
பாக்கிய மாகக்குப்பி
பாவிடு பாதிக்கென்னே. (பா. 914)

கெந்தியை தீநீராக செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள்! கெந்தி இருபது பலம், துருசு பத்து பலம், சாரம் ஐந்து பலம், சீனம் பதினைந்து பலம், சவுட்டுப்பு இருபத்தைந்து பலம், வெடியுப்பு இருபது பலம், வீரம் நான்கு பலம், நாயுருவியுப்பு நான்குபலம், எள்ளுப்பு நான்குபலம் ஆக நூற்றேமு பலங்கொண்ட இச்சரக்குகளை பொடிப் பண்ணி லோக திராவகத்தை வார்த்து கிண்டி பெரிய குப்பியில் பாதி வரை இச்சரக்குகளை போட வேண்டும். (லோகத்திராவகத்தின் அளவு என்னவென்றால் மொத்த சரக்கின் எடைக்கு முக்கால் பங்கு சேர்க்க வேண்டும்).

என்னவே நூற்றோடேழு
மெப்படி குப்பிகொள்ளும்
பன்னவே மயங்கவேண்டாம்
பாய்ச்சினால் மூன்றுக்குள்ளே
தின்னவே வெவ்வேறாகத்
திராவகம் வாங்கிவாங்கி
மன்னவே யொன்றாய்வார்த்து
வளம்பட வடைத்துக்கொள்ளே. (பா. 915)

நூற்றேமு பலங்கொண்ட இச்சரக்குகளை எப்படி பாதி வரை குப்பியில் போட முடியும் என்று கேட்பாயாகில் மயங்காமல் கேள்! இம்மொத்த சரக்குகளை பாதி வரை கொள்ளும் அளவிற்கு குப்பி இல்லை என்றால் சரக்குகளை மூன்று பங்காக்கி தனித்தனியாக மூன்று குப்பிகளில் போட்டு திராவகம் வாங்கி மூன்றையும் ஒன்றாக சேர்த்துக் கொள்!

அடைத்திட்ட நீரைமுற்று
மளவான சரக்கி லூட்டிக்
கடைத்திட்டஞ் சொன்னாற்போலக்
கலங்காதே தீரவாங்கு
உடைத்திட்டே யூட்டுவூட்டு

வுயரவே குப்பிவைத்துப்
படைத்திட்ட முறையஞ்சாகப்
பருவமாய் வாங்குவாங்கே. (பா. 916)

இத்திராவகத்தை முன்சரக்குடன் கூட்டி மேற்கூறியதைப் போல் மீண்டும் திராவகமாக வாங்கி மீண்டும் இத்திராவகத்தை முன்சரக்குகளுடன் சேர்த்து முன்போல் திராவகத்தை வாங்க வேண்டும். இவ்வாறு ஐந்து முறை செய்தல் வேண்டும்.

வாங்கியைந் தரமுந்தீர்ந்தால்
மகத்தான கெந்தித்தீநீர்
ஒங்கிய லோகமேது
வுறவான தாதுவேது
பாங்கிய சிலைமண்ணேது
படுமுன்னே தண்ணீராகும்
தாங்கியே வைக்குமுன்னே
சாற்றினே னரைக்குக்காணே. (பா. 917)

ஐந்து முறை மீண்டும் மீண்டும் செய்வதால் கெந்தநீருக்கு அதிக காரமுண்டாகும். இக்கெந்தக நீர் பட்ட மாத்திரத்தில் லோகம், தாது, சிலைமண் போன்ற எச்சரக்கும் நீர் போலாகும்.

காணுநீ துலாமாஞ்சூதங்
கடுகிய வொன்றில்வார்த்துப்
பூணுநீ மூன்று துள்ளி
பொட்டென விழுந்தபோதே
தாணுநீ சோறுபோலத்
தளபுள வென்றேபொங்கி
யாணுநீ வெண்ணெய்போலே
யப்பனே யாகுங்காணே. (பா. 918)

காணிந்த வெண்ணெய்தன்னைக்
கடுகிய குகையிலூட்டிப்
பூணிந்தக் காரம்போட்டுப்
புகழ்பட வுருக்கவாடுந்
தோணிந்தத் தொழிலைப்போலச்
சூட்சமாந் தொழில்வேறில்லை
வாணிந்த நாதநீரை
வல்லமை கண்டுகொள்ளே. (பா. 919)

துலா எடைக் கொண்ட சூதத்தில் மூன்று துளி கெந்தக நீரை வார்த்தால் சோறு போல் பொங்கி வெண்ணையாகும். இவ்வெண்ணையைக் குகையில் வைத்து காரமிட்டுருக்கினால் மணிபோல் நின்று கண்விட்டாடும். இதுவே சுலபமான தொழில் முறையாகும். இவ்வளவு வல்லமையும் நாதநீரால் என்றறிந்து கொள்!

கண்டுகொ ளிந்தநீராற்
கட்டின சூதவேதை
யெண்டுகொள் ளோடுமென்பே
னெம்மட்டு மோடுமென்பேன்
பண்டுகொள் ளுபரசங்கள்
பருகிடு கோடிக்கொன்று
தண்டுகொள் நவலோகத்திற்
றனியஞ்சு கோடிக்கொன்றே. (பா. 920)

ஒன்றியே கொடுத்தலோக
முடலது கறுத்ததானால்
பன்றியே பத்துலோகம்
பாய்ச்சிடப் பளிச்சென்றேறும்
அன்றியே மாற்று நூறு
ஆத்தாளே தீநீராலே
கன்றியே யாகவென்னக்
கடுவேதை சொற்பமாச்சே. (பா. 921)

கெந்தக திராவகத்தால் கட்டிய சூதமானது அதிக அளவு வேதையுண்டாக்கும். கட்டிய சூதத்தை கோடிக்கொரு பங்கு நவலோகத்துடனும், சேர்த்தால் நூறு மாற்று உண்டாகும். வேதையில் நவலோகம் கறுமை நிறங்கொண்டால் அதனுடன் பத்து லோகத்தை சேர்த்த மாத்திரத்தில் சூரியனைப் போல் பிரகாசிக்கும். ஆத்தாளின் நாதத்தால் வேதையானது மிக எளிமையாயிற்று.

சவ்வீரத் திராவகம்

ஆச்சிது சொற்பமென்று
அசையாதே மனமேகேளு
வாச்சிது வீரந்தானும்
வாழ்பலம் ரெண்டுபத்து
தாச்சிது சவுட்டுவுப்பு
தனிப்பலம் ரெண்டுபத்து

ஓச்சிது வெடியுப்பையா
வுயர்பலம் பதினைந்தூட்டே. (பா. 922)

ஊட்டுநீ சீனம்பத்து
வுறவான துருசுபத்து
காட்டுநீ சாரமஞ்சு
கதலியி னுப்பதஞ்சு
கூட்டுநீ தொகையொன்றாக்கிக்
குறையாதே யென்பத்தஞ்சு
ஆட்டுநீ பொடியதாக்கி
யதில்வாரு கெந்திநீரே. (பா. 923)

நீரொரு தரமேவார்த்து
நிலைக்கவே யுலர்த்திப்பின்பு
வாரொரு குப்பிக்குள்ளே
வளமாக வரையின்மட்டும்
தாரொரு குப்பிமேலே
தனியொரு குப்பியூட்டி
நேரொரு பாண்டத்துள்ளே
நிறுத்துநீ மணலைப்போடே. (பா. 924)

வீரம் இருபது பலம், சவுட்டுப்பு இருபது பலம், வெடியுப்பு பதினைந்து பலம், சீனம் பத்துபலம், துருசு பத்துபலம், சாரம் ஐந்து பலம், வாழையுப்பு ஐந்து பலம், ஆக இவ்வெண்பத்தைந்து பலமுள்ள சரக்கைப் பொடியாய்ப் பண்ணி, கெந்தி திராவகத்தை வார்த்து கிண்டி உலர்த்த வேண்டும். பிறகு உலர்ந்த சரக்கை குப்பியிலிட்டு மற்றொரு குப்பியால் மூடி ஒரு பானையில் பாதி வரை மணலை போட்டு அதில் மருந்துக் குப்பியை வைக்கவும்.

போடவே குப்பிமேலே
பூட்டுற குப்பிகேளு
ஆடவே யேணிபோலே
யப்பனே காய்ச்சிக்கட்டு
தேடவே நாலுநீறுஞ்
செய்கிற முறைப்பாடப்பா
கூடவே குப்பிமூக்கிற்
கொள்ளவே பீங்கான்வையே. (பா. 925)

வைத்துநீ பீங்கான்றானும்

வளமாக வடுப்பிலேற்றிக்
கைத்துநீ தீயைமூட்டிக்
கட்டாக வித்தைகட்டித்
தைத்துநீ தூமமேலே
தட்டாமற் றப்பிநின்றே
யைத்துநீ காற்றுவாட்டத்
தப்புறம் நின்றுதள்ளே! *(பா. 926)*

குப்பியின் மேல் மற்றொரு குப்பியை ஏணி போல் வைத்து சீலை செய்ய வேண்டும். பிறகு முன் திராவகத்திற்கு செய்ததுபோல் குழாயின் மூக்கருகே பீங்கானை வைத்து, குப்பியை அடுப்பிலேற்றி தீ முட்டி எரித்தால் புகையுண்டாகும். பிறகு சிறிது நேரங்கழித்து குழாயின் வழியாக நீரானது பீங்கானில் வந்து விழும்

தள்ளிடிற் குப்பிமூக்கில்
தனிவருந் தூபம்பாரு
அள்ளிடிற் புகையேபட்டா
லப்பனே கண்ணும்போகும்
தெள்ளிடும் புகைமேல்பட்டால்
தேகமும் விரிந்து போகும்
பள்ளிடில் தப்பிநீயும்
பருவமா யெரித்துக்கொள்ளே. *(பா. 927)*

கொண்டதோர் வீரத்தீநீர்
கொட்டுமுன் சரக்கைத்தூக்கிப்
பண்டதோ ரெடையைப்போலப்
பாய்ச்சினி யுலர்த்திப்போடு
அண்டதோர் குப்பிக்குள்ளே
யரைவாசி முன்போற்போட்டு
மண்டதோர் முன்போல்வைத்து
மார்க்கமா யெரித்திடாயோ. *(பா. 928)*

திராவகத்திலிருந்து உண்டாகும் புகைபட்டால் கண் பார்வை போய்விடும். உடலில் பட்டால் உடல் விரிந்து பாழாகும். இதை அறிந்து ஜாக்கிரதையாக எரித்து வாங்கு. வாங்கிய தீ நீரை முன் சரக்குகளுடன் சேர்த்து உலர்த்திக் கொண்டு குப்பியிலிட்டு முன்போல் திராவகமாக வாங்கி மீண்டும் சரக்குகளுடன் சேர்த்து உலர்த்தி குப்பியிலிட்டு தீ நீர் வாங்க வேண்டும்.

எரித்திடு முக்காலப்பா
வேழுல கெல்லாம்சாம்பல்
அரித்திடு முக்கணீச
னன்றுமன் மதனைப்பார்த்தான்
பரித்திடுமனு சூதத்திற்
பணிவெடை துள்ளிவாருந்
தரித்திடு சாம்பலாகுஞ்
சதகோடிக் கோடும்பாரே. (பா. 929)

பாருநீ யிந்தச்சூதம்
பாய்ச்சாதே மறந்துபோனேன்
தாருநீ தங்கம் நூறில்
தாக்கொன்று யிந்தச்சூதம்
கோருநீ சதகோடிக்குக்
கொடாயிதைக் கொடுத்தாயானால்
வாருநீ மாற்றேதென்னில்
வழங்கிற்றா யிரத்தினெட்டே. (பா. 930)

வெறும் சாம்பலைக் கொண்டு வேதை புரியாதே! இச்சூத சாம்பலை ஒரு பலம் எடுத்து நூறு பலம் கொண்ட தங்கத்துடன் சேர்த்துக்கொள். பின் இத்தங்கத்தை லோகத்துடன் பத்து கோடிக்கு ஒரு பங்கு சேர்த்தால் ஆயிரத்தெட்டு மாற்று உண்டாகும்.

எட்டாத வீரத்தீநீர்க்
கேதைநான் சொல்லப்போறேன்
கட்டாத புலனுங்கெட்டுக்
கனங்கெட்டு நீறுங்கெட்டு
வெட்டாத வளியுங்கெட்டு
வெறுவிய வெளியுங்கெட்டுத்
தட்டாத மனமுங்கெட்டுத்
தனிப்புத்தி கெட்டவாறே. (பா. 931)

வேதாந்தத்துரியம்

வாறுகேள் சித்தங்கெட்டு
வார்த்தையும் முறையுங்கெட்டுத்
தாறுகே ளிரண்டொன்றென்ற
தனிச்சொல்லின் முடிவுங்கெட்டுக்
கூறுகேள் போகமார்க்கக்

குறிப்பெல்லாங் கூடக்கெட்டு
ஆறுகே ளென்றுசொன்ன
ஆதாரங் கெட்டுப்போச்சே. (பா. 932)

போச்சிது சித்தங்கெட்டுப்
புகுந்திடும் வழியுங்கெட்டு
ஆச்சிது குளிகைகெட்டு
அடக்கின நினைவுங்கெட்டு
மாச்சிது நோக்கிப்பார்த்த
மார்க்கமும் வகையுங்கெட்டு
யேச்சிது முப்பாழுங்கெட்
டெழுகின்ற ஒளியுங்கெட்டே. (பா. 933)

கெட்டது வெல்லாந்தானுங்
கேள்வியு முறையுமில்லை
பட்டது மௌனமப்பா
பராபரை சொல்லும்போச்சு
நெட்டிது வென்றவார்த்தை
நிர்மூலமாகப் போச்சு
ஒட்டிது வென்றுசொல்லு
மொக்கநிர் மூலமாச்சே. (பா. 934)

மூலமாம் பரமும்போச்சு
மூதண்ட போதம்போச்சு
காலமாம் வேதாந்தத்தின்
காட்சியுங் கடந்துபோச்சு
கோலமாம் நிற்குணத்தின்
குணமது கடந்துபோச்சு
ஏலமாய் நின்றநேர்மை
யேதொன்றோ வறிந்திலேனே. (பா. 935)

அறியாத நேர்மைக்கொக்கும்
அப்பனே வீரத்தீநீர்
பிறியாகப் பின்னையொன்று
பேசவு மிடத்தைக்காணேன்
நெறியாகப் பண்ணவல்லோர்
நேர்மையாஞ் சித்தவாதி
பொறியாகும் வாதமென்ன

புலையருக் கெய்தாதென்னே. *(பா. 936)*

இணையில்லாத இந்நீருக்கு எதை ஒப்பாக கூறமுடியும். புலன், காலம், நீர், வெட்டவளி, மனம், புத்தி, சித்தம், வார்த்தை, சொல், போகம், குறி, ஆதாரம், வழி, குளிகை, நினைவு, சன்மார்க்கம், முப்பாழ், ஒளி, எல்லா வகையான பொருள்களும் கெட்டழிந்து போகும். கேள்வி, மௌனம், பராபரையின் சொல், வார்த்தை, பரம், மூதண்ட போதம், வேதாந்தக் காட்சி, நிர்குணத்தின் குணம், போன்றவை வீரநீர்க்கு எதிர்ப்பட்டு நிகரில்லாமல் கெட்டுபோயிற்று. இதன் பிறகு நான் இன்னும் என்ன சொல்ல முடியும்! இவ்வீரத் திராவகத்தை செய்பவன் நேர்மையான இரசவாதியாவான் (அதாவது நேர்மையான ரசவாதிக்கே இத்திராவகம் சித்தியாகும்) கெட்ட புத்தி கொண்ட புலையருக்கு ஒருக்காலும் பலியாது.

எய்யாத தென்னவேண்டா
மெய்திடு ஞானமெய்தில்
எய்தாது வாதமானா
லெய்தாது ஞானந்தானும்
எய்தாதே யெய்துமாசை
யெழும்பாம லடித்தபேர்கட்
கெய்தாத தொன்றுண்டோ
யானென்ற வாண்மைபோக்கே. *(பா. 937)*

பலிக்காது என்று விட்டுவிடாதே ஞானம் வந்தால் பலிக்கும். வாதம் வந்தால் ஞானம் சித்தியாகும். மனதிலுள்ள ஆசையை வென்றால் வாதம் பலிக்கும். ஆசை ஒழிய வேண்டுமானால் தான் என்ற ஆணவம் அகல வேண்டும்.

போக்கெல்லாம் போகாதெல்லாம்
பொருப்பையு மணியாக்கல்லாம்
தாக்கெல்லாம் வழியைக்கட்டிச்
சமுத்திரங் கரத்தேந்தலாம்
நீக்கலா மாகாசத்தை
நிமிஷத்திற் கிழித்தேயேறிப்
பார்க்கலா மெல்லாந்தானும்
பராபரத் தந்தமேறே. *(பா. 938)*

தான் என்ற ஆணவத்தை வென்றால் உப்பைக்கட்டி மணியாக்கலாம், கடலையும் கையால் அள்ளிவிடலாம், ஆகாசத்தில் பறந்து செல்லலாம். மேலும் உலகத்திலுள்ள அனைத்தையும் ஞானக் கண் கொண்டு பார்க்கலாம்.

ஏறவு மெளிதேயல்ல
விசைந்துநீ மெள்ளவேறு
ஆறவு மிதத்தைப்போல
வப்பனே வாதம்பாரு
தேறவு மனதுஒன்றாய்ச்
சிக்கெனப் பிடித்துப்பாரு
கூறவும் வாதத்திதொக்குங்
குலாவிய ஞானந்தானே. *(பா. 939)*

இவையாவும் கைகூடுவது மிகவும் எளிதா என்ன? அளவாக வாதம் செய்து மெதுவாக மனதை அடக்கினால் ஞானமுண்டாம் முறையாக செய்யப்படும் வாதம் உண்மையான ஞானத்துக்கு சமமாகும்.

ஞானந்தான் வந்ததென்பார்
நன்னூலுங் குருவுங்காணார்
கானந்தான் வந்ததென்ற
கண்கெட்ட வூமைக்கொக்கும்
தானந்தான் வந்ததென்பார்
சகலமுங் கொல்வேனென்பார்
ஊனந்தா னுலோகத்துள்ள
வுலுத்தருக் கடுத்தவாறே. *(பா. 940)*

உலகத்திலுள்ள மாண்பர்கள் தனக்கு ஞானம் வந்ததாக கூறிக்கொள்வார். ஆனால் அவர்கள் ஞான குருவை பார்த்திருக்கமாட்டார்? குருவில்லாமல் தனக்கு ஞானம் வந்ததாக கூறிக் கொள்ளும் மாண்பர்கள் கண்ணில்லாத ஊமைக்கு சமமாவார். இவர்களெல்லாம் பாஷாண்ட மார்க்கத்தை சேர்ந்தவர்கள்.

வாறேது ஞானத்துக்கும்
வளமான வாதத்துக்கும்
கூறேது சொல்வேனப்பா
குறிப்பாக நன்றாய்க்கேளு
பேறேது வரைப்பில்தப்பில்
பெருத்திடு மூத்தில் தப்பில்
தாறேது வாட்டுத்தப்பில்
தனிப்புடந் தப்பிற்றானே. *(பா. 941)*

தப்பதே யிடையதானாற்
றனிக்காய்ச்சல் முதிர்ந்துபோனால்
நிற்பது நிலைவிட்டேகும்
நின்மலக் குருக்காணாது

ஒப்பது சொன்ன நூலி
லுணர்ந்துநீ யுரைத்துப்பாரு
தப்பாது யென்னூலிலல்லாஞ்
சாதிப்போன் தப்புத்தானே. *(பா. 942)*

(ஞானத்துக்கும், வாதத்துக்கும்) ஞானமும் வாதமும் பலியாமல் போவதற்கு முக்கியமான காரணங்களை கூறுகிறேன் கேள். அரைப்பு முறை, தீ, வாட்டும் முறை, புடம் போடும்முறை கைபாகம் (எடை) போன்றவைகளில் தவறு ஏற்பட்டால் வாதம் விழலாகும். தன்னுட சொருபத்தை அறியாமல் போனால் ஞானம் பலியாமல் போகும். ஆகவே இந்த நூலில் கூறியுள்ள முறைகளை பிழையில்லாமல் செய்து பார்த்தால் சித்தியாகும்.

தானிது தப்பிற்றென்று
தயங்கியே யேங்கவேண்டாம்
வானிது வாசிபோல
மயக்கத்தால் மறதியப்பா
ஆனிது விந்தநூலை
யளவிட்டே யூன்றிப்பார்த்துத்
தேனிது மாயிக்கீந்து
சிறக்கநீ பூசைபண்ணே. *(பா. 943)*

பண்ணிட வல்லாயானாற்
பலித்திடும் வாதசித்தி
பண்ணிட வல்லாயானாற்
பகலிர வொன்றாய்ப் போகும்
பண்ணிட வல்லாயானாற்
பாருநீ மூடிதாண்டும்
பண்ணிட வல்லாயானாற்
பராபரை பேசுவாளே. *(பா 944)*

செய்யும் பொழுது தவறு ஏற்படுமானால் வாதம் தப்பும் ஆகையால் நீ மனதை ஒரு நிலைப்படுத்தி, மயக்கத்தையும் மறதியையும் போக்கி இந்த நூலை நன்றாக படித்து வஸ்து சுத்தி வைத்து தாயை பூசை செய்தால் வாதமும் ஞானமும் கைகூடும் குண்டலி விழித்தெழும். குண்டலி விழித்தெழுந்தால் பராபரையானவள் முன்னே நின்று பேசுவாள்.

பேசிய வீரநீரிற்
பேதித்த சூதந்தன்னை
வாசிய வச்சிரத்தில்
மாட்டிநீ யுலர்த்திப்பின்பு
காசிய புடமேபோட்டுக்
கைகண்ட குருவாம்வச்ரம்
ஆசிய குருவின்வேதை
யனந்தங்காண் சொல்லக்கேளே. (பா. 945)

முன் சொன்ன வீர திராவகத்தில் சூதத்தை சேர்த்தால் சூதம் சாம்பலாகும். இச்சூத சாம்பலை வைரத்தின் மேல் பூசிப் புடம் போட்டால் வைரம் குரு மருந்தாகும். இக்குரு மருந்தால் முடிவில்லாத வேதை யுண்டாகும்..

சொல்லவே கெந்திநீறுஞ்
சூதத்தில் வயிரஞ்சாகும்
சொல்லவே மகத்துநீறுஞ்
சூதத்தில் வயிரஞ்சாகும்
சொல்லவே லோகநீறுஞ்
சூதத்தில் வயிரஞ்சாகும்
சொல்லவே நாலுநீரிற்
சூதமும் வயிரநீரே. (பா. 946)

இதே போல் சூதத்தை கெந்தக திராவகத்தில், மகாதிராவகத்திலும் லோக திராவகத்திலும் சேர்த்து சாம்பலாக்கி அதை வைரத்தின் மேல்பூசி புடம் போட்டால் வைரம் குருச் சுன்னமாகும்.

நீறான வயிரமப்பா
நின்மல குருவுமாச்சு
தாறான சூதங்கட்டச்
சாற்றுமோர் முறையைக்கேளு
கூறான குருவிதொன்று
கூட்டிதில் சூதமொன்று
ஆறான முலைப்பாலாலே
யப்பனே யரைத்துக்கட்டே. (பா. 947)

கட்டியே லகுவாய்மெள்ளக்
கனலுக்குட் புடத்தைப்போடு
ஒட்டியே சூதநீறு
மொத்தெடை சூதஞ்சேரு

அட்டியே முலைப்பாலாலே
யப்படி யரைத்துக்கட்டு
கெட்டியே லகுவாய்மெள்ளக்
கெடிபடப் புடத்தைப்போடே. (பா. 948)

போடுநீ யெடைக்கெடைக்கு
பூட்டியே ரசத்தைபூட்டி
நாடுநீ முலைப்பாலாலே
நலமுற வரைத்தரைத்து
வூடுநீ பத்துத்தொந்த
முற்பன மாகவேறு
தேடுமிச் சூதம்போலச்
செகத்தினி லில்லைகாணே. (பா. 949)

சூதத்தை கட்டுவதற்கு இன்னுமொரு முறையைக் கூறுகிறேன் கேள்! வைர குருவை ஒரு பலம் எடுத்துக் கொண்டு அதனுடன் சூதம் ஒரு பலம் கூட்டி முலைப்பாலால் அரைத்து வில்லைதட்டி லகுவாய் ஒரு புடத்தை போட்டால் சூதம் பற்பமாகும். இச்சூத பற்பத்தின் எடைக்கு சம பங்கு சூதத்தை சேர்த்து முலைப்பாலால் அரைத்து வில்லை தட்டி புடம் போட்டால் சூதம் பற்பமாகும். மீண்டும் இப்பற்பத்தின் எடைக்கு சம அளவு சூதம் கூட்டி முலைப்பாலால் அரைத்து புடம் போடுதல் வேண்டும். இவ்வாறு பத்து முறை செய்தால் சூதம் மகாபற்பமாகும். இம்மகா பற்பத்திற்கு நிகரான பொருள் உலகத்தில் இல்லை.

காணிந்தச் சூதபற்பங்
காட்டொன்று தங்க நூறில்
வாணிந்த ரவிபோல்தங்கம்
வளம்பெறச் சிவப்பேயாகும்
தோணிந்த ரவிதங்கத்தைத்
துலைதுத்த நவலோகத்தில்
பூணிந்தித் தேய்க்கலோகம்
பளிச்சென்று பொன்னுமாமே. (பா. 950)

இச்சூத பற்பத்தை ஒரு பலம் எடுத்து நூறு பலங்கொண்ட தங்கத்துடன் சேர்த்தால் தங்கமானது சிவந்த நிறங்கொள்ளும். சூரியனைப் போன்று சிவந்து பிரகாசிக்கும் இத்தங்கத்தை நவலோகத்தில் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்தால் நவலோகமும் தங்கமாகும். (சூதபற்பம் சேர்த்த சிவப்பு நிறங்கொண்ட தங்கத்திற்கு தங்கச் செம்பு என்று பெயர்).

ஆமிந்தத் தங்கத்துக்கு
மளவற்ற சிவப்பேனாச்சு
காமிந்த ரவிதான்காலைக்
கடுஞ்சிவப் பாகும்போல
வோமிந்த ரவிதான்வச்ர
மொருங்கிய ராகம்பாலை
தாமிந்த நீரைத்தாயுந்
தங்கத்தி லூட்டினாளே. (பா. 951)

தங்கம் ஏன் இவ்வளவு சிவந்த நிறங்கொண்டதாயிருக்கிறது என்று கேட்பாயாகில் காலை நேர சூரியனில் சிவந்த நிறங்கொண்ட சிறுபெண் வாலை தேவியிருப்பதால் சூரியன் சிவந்து பிரகாசிக்கிறது. அதே போல் இத்தங்கத்திலும் சிவந்த நிறங்கொண்ட வச்சிர நீரை தேவியானவள் புகுத்தினாள்! அதனால்தான் தங்கம் சிவந்த நிறம் பெற்றது.

ஊட்டின வாறதேது
வொடுக்கின ராகமேது
காட்டின சூதந்தானுங்
கன்னியைக் கூடிராகம்
சூட்டின கணையைவாங்கித்
துலங்கின தங்கத்துள்ளே
நீட்டிய முறைப்பாடப்பா
நிலைசொல்வேன் கேளுகேளே. (பா. 952)

வச்சிரம் ஒடுங்கிய நீர் எங்கிருந்து உண்டாயிற்று, கேட்பாயாகில் அது சூதத்துடன் சேர்த்த வச்சிர குருவே என்றறி! சூதமானது வச்சிராயுதம் என்ற அஸ்திரத்தை வாங்கி தங்கத்துள் சேர்த்தது.

கேளுநீ யுலகத்துள்ளே
கெடியான பொன்னினாண்மை
யாளுநீ கரியுந்தீயு
மணுகிடி லடர்ந்துபற்றும்

வாளுநீ கடைக்கண்பார்வை
மாதரா மாயத்தீயில்
தாளுநீ யிளைஞோரென்ற
தனிக்காடு வேகும்பாரே. (பா. 953)

பொன்னானது நெருப்பைக் கண்ட மாத்திரத்தில் உருகுவது போல், இவ்வுலகத்தில் (பெண் மாயை என்ற தீயால்) பெண்ணின் கடைக்கண் பார்வை என்ற மாயத்தீயால் இளைஞர் என்ற பொன் உருகுகிறது.

பாருநீ யாசைக்குள்ளே
பரவிய பலத்தவாசை
யாருநீ பலமேதென்றா
லளவில்லை பெண்ணினாசை
கோருநீ யிவள்போனாக்காற்
குடியோடே யெல்லாம்போச்சு
காருநீ மனமேசொன்னேன்
கன்னியின் மாயைதானே *(பா. 954)*

ஆசைகளில் பெண்ணாசையே மிகவும் பெரியதாகும். இதற்கு அளவே கிடையாது இப்பெண்ணாசை ஒழிந்தால் அனைத்து விதமான ஆசைகளும் ஒழிந்து போகும். ஆகவே கன்னி மாயையிலிருந்து விலகி நில்!

தானென்ற பெண்ணைவிட்டாற்
றனியாசை போச்சுதென்பார்
கானென்ற காயப்பெண்தான்
கனவிலே யணைவாளேனோ
வானொன்று மனத்தினாசை
மாய்த்திடா யெல்லாமாயுந்
தேனென்ற தங்கச்செம்பின்
சேர்வையான் சொல்லக்கேளே. *(பா. 955)*

பெண்ணை கூடாமல் நின்றால் பெண்ணாசை விலகும் என்று சிலர் கூறுவார். ஆனால் இக்காயப் பெண்ணானவள் கனவில் வந்து கூடுவாள். மனதின் ஆசையே இதற்கு காரணம். மனதை அடக்கவில்லையானால் அனைத்தும் அழியும். ஆகவே நீ மனதை நிலைப்படுத்து. இனிமேலும் சிகப்பு நிறங்கொண்ட தங்கத்தைப் பற்றி கூறுகிறேன் கேள்!

கேளுநீ சிவந்த பெண்ணைக்
கெடிபட லிங்கம்வாரு
வாளுநீ தாயைவாரு
மகத்தான கணேசன்வாரு
தோளுநீ சொர்னக்காவல்
துலங்கநிர் வாணிவாரு
தாளுநீ பூசைபண்ணச்
சகலமுஞ் சித்தியாமே. *(பா. 956)*

சிவந்த நிறங்கொண்ட தங்கத்தை லிங்கம், கணேசன், பார்வதி, நிர்வாணி போன்ற வடிவங்களாக வார்த்துக் கொண்டு பூசை செய்தால் அனைத்தும் சித்தியாகும். (வார்த்தல் - பிம்பம் செய்தல், விக்ரகம்)

சித்தியே யாகக்காயஞ்
செப்புகிறேன் கேளுகேளு
அத்திய பிம்பத்துக்கு
அபிஷேகம் பாலைப்பண்ணி
ஒத்தியே கொண்டிடப்பா
வோரஞ்சு பத்துநாள்தான்
பத்தியே மேனிதானும்
பானுவைப் போலவாமே. (பா. 957)

இந்த விக்ரகங்களுக்கு அபிஷேகம் செய்து அப்பாலை ஐம்பது நாட்கள் உட்கொண்டால் தேகம் சந்திரனைப் போன்று ஒளிபெற்று பிரகாசிக்கும்.

ஆமிந்தக் குருசூதத்தி
லப்பனே சூதிமெத்தப்
போமந்தக் கோடிமட்டும்
புனைந்தேறுந் தொந்தம்பாரு
வாமந்த வச்ரிமொன்று
வன்கோடி சூதங்கட்டுந்
தாமந்தக் குருவினாண்மை
சதாசிவ ரறிவார்தானே. (பா. 958)

சூதபற்பத்தால் சூதத்தை நூறு முதல் கோடி வரை தொந்தித்தால் வச்சிர குரு பற்பமாகும். இப்பற்பத்தால் சூதத்தை வைரம் போல் கட்டலாம். இத்னுடைய பெருமையை சிவபெருமானாலும் அறிய முடியாததாகும்.

தானென்ற சூதநீரைச்
சாதிக்க வல்லாயானால்
பானென்ற மேனியாகும்
படர்மலை யுதைத்தால் தூளாம்
கானென்ற விந்த்ரன்வாளைக்
கைக்கொண்டே யொடிக்கலாகும்
வானொன்றிப் பாருபாரு
வாய்க்குநிர்க் குணமுந்தானே. (பா. 959)

சூத பற்பத்தை முறைப்படி செய்து. சித்தியடைந்தால் காயசித்திப்படும். காயம் சித்தியான பிறகு மலைகளை கையால் குத்தினா

தூள்தூளாகும். இந்திரனுடைய வச்சிராயுதத்தையும் கையால் ஒடித்துப் பொடியாக்கி விடலாம். நிற்குண சமாதியும் சித்தியாகும்.

வீர வைப்பு

குணமென்ற வேதைக்கெல்லாம்
கொள்கிறேன் வீரம்வைக்கத்
தணமென்ற விணங்கன்றானுந்
தனிப்பல மிருபதப்பா
வணமென்ற சவுட்டுப்பேதான்
வாழ்பல மிருபதப்பா
விணமென்ற சாரமஞ்சு
மியல்சீன மஞ்சுகூட்டே. *(பா. 960)*

கூட்டியே கல்லுப்பஞ்சு
குறையாமற் பொடியாய்ப்பண்ணி
நீட்டியே கலையத்தூட்டி
நேர்மேலே குப்பிகட்டி
யாட்டியே யெரிப்பாயானா
லப்பனே தீநீராகும்
ஏட்டியே தீநீர்தன்னை
யெண்பது வராகன்தூக்கே. *(பா. 961)*

வீரவைப்பு கூறுகிறேன் கேள். வெடியுப்பு இருபது பலம், சவுட்டுப்பு இருபது பலம், சாரம் ஐந்து பலம், சீனம் ஐந்து பலம், கல்லுப்பு ஐந்து பலம் ஆக இவ்வைம்பத்தைந்து பலங்கொண்ட சரக்கை பொடி செய்து கலயத்திலிட்டு குப்பி கொண்டு மூடி அடுப்பேற்றி எரித்து தீநீராக வாங்கிக் கொள். இத்தீநீரை ஒன்பது வராகன் எடுத்துக் கொண்டு,

தூக்கிய நீருக்குள்ளே
சூட்டெட்டுப் பலமேசூதந்
தாக்கிய குப்பிக்குள்ளே
தனிப்பாண்ட மணலில்வைத்து
ஆக்கியே யெரிக்கவற்று
மடுத்தந்தப் பதத்திற்கொட்டி
நோக்கியே யரைக்கச்சூதம்
நுண்மணல் தவளமாமே. *(பா. 962)*

இந்நீரில் சூதம் எட்டு பலம், சேர்த்து குப்பியிலிட்டு மண்பானைக்குள் மணலைக்கொட்டி அதில் இக்குப்பியை வைத்து தீமூட்டி எரித்தால் நீர்

வற்றும். இப்பதத்தில் சூதத்தை கல்லுரலில் இட்டு அரைத்தால் மணல் போல் பொடியாகும்.

தவளமாஞ் சூதத்துக்குச்
சாற்றவே மருந்துகேளு
நிவளமாய் வறுத்துக்கொண்ட
நின்மலத் துருசுரெண்டு
சுவளமாய் வறுத்துக்கொண்ட
கல்லுப்புப் பலமும்ரெண்டு
அவளமா மிணங்கன்ரெண்டு
மாகிய சீனம்ரெண்டே. (பா. 963)

ரெண்டொடு மன்னபேதி
நேரசம் பலமோமூன்று
தண்டொடு சாரந்தானுந்
தாக்கதிற் பலந்தானாலு
கண்டொடு மெல்லாங்கூட்டிக்
கலந்தது பொடியாய்ப்பண்ணிப்
பண்டொடு மேருவுக்குட்
பாய்ச்சரை வாசிதானே. (பா. 964)

அரைவாசி போட்டமேரை
யப்பனே பாண்டத்துள்ளே
தரைவாசி மேருவைத்துச்
சாரவே மணலைக்கொட்டி
யிரைவாசி யிருவிரன்மே
லியல்பாக மேருவைத்துக்
கரைவாசி கண்டகீழே
கண்டுநீ மணலைப்போடே. (பா. 965)

சுத்தமான சூதப்பொடியில் சேர்க்க வேண்டிய மருந்தை கூறுகிறேன் கேள்! சுத்தி செய்து வறுத்தெடுத்த துருசு இரண்டுபலம். கல்லுப்பு இரண்டுபலம், வெடியுப்பு இரண்டு பலம், சீனம் இரண்டுபலம், அன்னபேதி இரண்டுபலம், ரசம் மூன்று பலம். சாரம் நான்கு பலம், ஆக இவ்வேழு வகையான சரக்குகளை சூதப் பொடியுடன் சேர்த்துப் பொடி செய்து காசி என்னும் மேருவில் பாதிவரை போட்டு அதன் வாயில் மற்றொரு மேருவை வைத்து மூடி ஒரு மண் பானையில் அரைவாசி மணலைக் கொட்டி அதன் மேல் மேருவை வைத்து மணலைக் கொட்டி மூட வேண்டும்.

போட்டுநீ யடுப்பிலேற்றிப்
பூசித்தே யீசானத்தில்
மாட்டுநீ நாலுசாமம்
வளம்பெறத் தீபம்போலக்
கூட்டுநீ நாலுசாமங்
குலாவிய கமலத்தீயை
யாட்டுநீ பத்துசாம
மப்பனே கடுந்தீப்போடே. (பா. 966)

கடுந்தீயை யடுப்போடொக்கக்
கைப்படக் குளிருமட்டு
மடுந்திய குப்பிவாங்கி
வளமாக வுடைத்துப்பாரு
அடுந்திய வீரந்தானு
மப்பனே தேங்காய்போல
விடுந்தியே விறுகிநல்ல
வியல்பாக வெளுக்கும்பாரே. (பா. 967)

இப்பாண்டத்தை அடுப்பேற்றி ஈசானத்தில் சிவனுக்கு பூசை செய்து நான்கு சாமம் தீபம் போல் எரித்துப் பின்பு தீயை உயர்த்தி கமலம் போல் நான்கு சாமம் எரிக்க வேண்டும் பின்னர் மீண்டும் தீயை உயர்த்தி காடாக்கினியாக பத்து சாமம் எரித்து தீ யாறியபின் மேருவை எடுத்து உடைத்துப் பார்த்தால் வீரமானது தேங்காய் போல் வெண்மை நிறங்கொண்டதாய் இருக்கும்.

வெளுக்குமே வீரந்தானும்
வேதாந்த சாரம்போலத்
தளுக்குமே யிதுதானெட்டுத்
தனிப்பலந் தூக்கிக்கொண்டு
அளுக்குமே தூரிசிரெண்டு
அடவான யிணங்கன்நாலு
பளுக்குமே சீனம்நாலு
பறிந்தகல் லுப்புநாலே. (பா. 968)

நாலேதான் சாரம்போடு
நலமான வன்னபேதி
கோலேதான் ரெண்டுபோடு
குறையாமல் பொடியாய்ப்பண்ணு

பாலேதான் மேருவுக்குப்
பாய்ச்சிடா யரைதாநீயும்
வாலேதான் வாலுகைக்குள்
வைத்துநீ தீயைமூட்டே. *(பா. 969)*

தீயிட்டே யெரியும்போது
சிறந்திடு குப்பிவாய்க்கு
மாயிட்டுச் சில்லுவைப்பாய்
வளமாகப் பதங்கமட்டும்
காயிட்டுப் பற்பம்போட்டுக்
கடுஞ்சீலை சுற்றிப்போடு
பாயிட்ட மூன்றுசாமம்
பருகியே தீவத்தியே. *(பா. 970)*

இவ்வீரத்தை எட்டு பலம் எடுத்துக் கொண்டு இதனுடன் துருசு இரண்டு பலம், வெடியுப்பு நான்கு பலம், சீனம் நான்கு பலம், கல்லுப்பு நான்கு பலம், சாரம் நான்கு பலம் அன்னபேதி இரண்டு பலம், போன்ற ஆறு வகையான சரக்கையும் சேர்த்து பொடி செய்து காசி மேருவில் அரை வாசிப் போட்டு சில்லை வைத்து வாயை மூடி சீலை செய்து வாலுகையின் மேலே வைத்து தீபம்போல தீ மூட்டி எரிக்க வேண்டும்.

தீவந்தான் கடந்தபின்பு
சிறந்திடுங் கமலமூன்று
ஆவந்தானெட்டுச்சாம
மப்பனே கடுந்துப்போடு
கோவந்தான் பதங்கமேறுங்
குளிர்ந்தபின் குப்பிதானும்
பாவந்தான் போக்கவென்று
பலகைபோற் கொச்சியாச்சே. *(பா. 971)*

மூன்று சாமம் கமலம் எரித்து பின்பு காடாக்கினியாக எட்டு சாமம் எரித்து குளிரவைத்து குப்பியை உடைத்து பார்த்தால் கொச்சி வீரம் என்ற சரக்குகிடைக்கும்.

கொச்சிச் சவ்வீர வைப்பு

கொச்சியை மடக்கிப்பின்னுங்
கூட்டியு மேயவைத்தால்
மெச்சிய கோடாசூரி
விளங்கிற்று வேதத்தோர்க்கு

அச்சியே பறங்கிக்கன்று
ஆத்ட ஏ மருளாற்சொன்னாள்
எச்சியே யிளைத்திதன்றா
லேதநீ வாதம்போச்சே. *(பா. 972)*

கொச்சி வீரத்தை முன்போல் எட்டு பலம் எடுத்து முன் சரக்குகளுடன் கூட்டி மேருவில் வைத்து எரித்தால் கோடா சூரி என்ற சரக்காகும். வைப்பு முறைகளை பற்றி கூறும் பொழுது சிவன் பார்வதிக்கு இதை கூறினார். இவைகளை விட்டால் வாதம் கைகூடாது.

போச்சுது வாதம்பொய்யாய்ப்
புகழான வீரத்தாலே
வாச்சுது வீரமானால்
மகத்தான பரிசுகேளு
கோச் து விரும்புமேலே
கொடியதண் ணீரைக்குத்த
ஆச்சுது மெண்ணுகீழே
யப்பனே தமருமாமே. *(பா. 973)*

வீரம் அகன்று போனால் வாதம் பொய்யாகும். நீ செய்த வீரம் நல்ல முறையாக இருந்தால் அதை சோதனை செய்து பார். இரும்பின் மேல் இதை பூசினால் உடனே துளையுண்டாகும்.

தமராக விரும்பைமென்றால்
சகலமும் தண்ணீராகும்
கமராகுஞ் சாரணைக்குக்
காட்டுமுன் மென்றுதாண்டும்
சமராகுமலே கத்தோடே
சகலமுந் தண்ணீராகும்
அமராகும் வாதச்சொல்லி
லாம்வீரந் தளவாயாமே. *(பா. 974)*

இரும்பினுடன் சேர்த்தவுடன் இரும்பு தண்ணீர் போல் உருகினால் சகலசரக்கும் தண்ணீராகும். இவ்வீரத்தை சாரணைக்கு பயன்படுத்தினால் சரக்குகளை உட்கொள்ளும் எந்த லோகத்துடன் வீரத்தை சேர்த்தாலும் தண்ணீர் போல் கரையும், வாதமும் கைகூடும்.

தளவாய்க்கே பலம்போனாக்கால்
சமரெங்கே சண்டையெங்கே
தளவாய்க்கே சந்துபோனால்
தனிமாவி லேற்றிமங்கே

தளவாய்க்குக் கையில்லாட்டால்
தனிவெட்டுங் குத்துமெங்கே
தளவாய்க்கே வெகுமானந்தான்
சமச்சேறு குப்பிமூன்றே. (பா. 975)

பலம் இல்லை என்றால் போர்க்களத்தில் சண்டை எவ்வாறு செய்வது? புடம் போடுங்கால் ஒட்டில் துளையிருக்குமானால் பதங்கம் எவ்வாறு ஏறும்? போர்க்களத்தில் கையில்லாவிட்டால் எப்படி சண்டை போடமுடியும். ஆகவே எரிப்பு முறைக்கு சம அளவு கொண்ட மூன்று சேர் அளவு கொண்ட குப்பிகள் வேண்டும்.

மூன்றுக்குஞ் சரக்குச்சூத
மூட்டவே கெதியில்லாட்டால்
சாண்டுக்குப் பாதியோகஞ்
சமைத்துநீ யெடுத்துக்கொள்ளு
காண்டுக்குக் கைக்கில்லாட்டால்
கால்வாசி யோகம்வைநீ
வேண்டுக்கு வீரமானால்
வேண்டிய தனமுமாச்சே. (பா. 976)

இவ்வளவு பெரிய குப்பிக்கு மருந்து சேர்க்க சரக்குகளும் சூதமும் இல்லாவிட்டால் நான் கூறிய அளவில் சரிபாதி அளவு சரக்குகளை சேர்த்து செய்! அதுவும் இல்லாவிட்டால் கால்பாகமாவது சரக்குகளை வாங்கி செய் ஒரு துளியேனும் வீரத்தை சித்திசெய்து கொண்டால் வேதை கைக்குள்ளாகும்.

தனமாமோ வீரமானால்
சார்வேதிங் கென்றாயானால்
கனமான குருவின்மார்க்கங்
காட்டுறேன் கேளுகேளு
அனமான துருசுதானு
மரைப்பலம் வாங்குநீயும்
வனமான வீரமப்பா
வாழ்பண மஞ்சுதூக்கே. (பா. 977)

தூக்குநீ பூரமூன்று
சுகமான வுறமும்ரெண்டு
வாக்குநீ சூதம்நாலு
வாழ்குரு வண்டுநூறு

தாக்குநீ நாபியொன்று
தனியொக்கக் கோழிப்பிச்சால்
தேக்கிநீ யரைத்தேயொன்றாய்ச்
சிவன்மேலே யப்பிப்பூசே (பா. 978)

வேதை முறைக்கு வீரத்தை குருவாக்க சரியான வழியை கூறுகிறேன் கேள்! வீரம் ஐந்து பலம், பூரம் மூன்று பலம், உரம் இரண்டு பலம், சூதம் நான்கு பலம், குருவண்டு நூறு பலம், நாபி ஒரு பலம் ஆக இவ்வாறு வகையான சரக்கையும் கோழிபிச்சால் அரைத்து அரைபலங் கொண்ட துருசின் மேல் பூச வேண்டும்.

பூசவே தூரிசியீசன்
போறேனான் கைலைக்கென்பார்
தேசவே யுப்புமாயி
செல்வது மெங்கேயென்பாள்
பாசிவன் கபலுக்குள்ளே
படுகையால் ரவியின் தீயால்
மாசவே யூறலற்று
மகத்தான குருவுமாமே. (பா. 979)

பூசிய துருசை ரவியினுட ஒளியில் வைத்தால் ஊறலற்று குருவாகும். துருசான ஈசன் நான் கைலாயத்திற்கு போகிறேன் என்பார் தாயான உப்பு எங்கே போகிறீர் என்று தன்னுடன் சேர்த்துக் கொள்வாள்.

குருவானால் வேதையிங்கே
கூட்டுவ தென்னாதப்பா
அருவான குருவின்மேலே
யணுகிடிற் பொன்னேயாகும்
மருவான வெள்ளிசெம்பு
மாட்டிது நூற்றுக்கொன்று
தருவான பொன்னுக்கொக்கத்
தங்கத்தைச் சேர்த்துப்போடே. (பா. 980)

இதனால் வேதையாட அளவில்லாத பொன்னுண்டாகும். துருசு குருவை வெள்ளி செம்பில் நூற்றுக்கொரு பங்கு சேர்த்தால் பொன்னாகும். இப்பொன்னிற்கு சம அளவு தங்கம் சேர்த்து வேதையாடி பார்!

போடிந்தத் துருசுதன்னைப்
பூவுக்கு மிலைக்குமுள்ளே
யாடிந்தப் பாஷாணங்க
ளறுபதுந் துவைத்தேயாட்டு
நாடிந்தப் பாஷாணங்க

ணலம்பெறத் தங்கஞ்சேரு
வோடிந்த வேதைதூப
மோடிடுபணங் கண்டோடே. *(பா. 981)*

இதே போல் பாஷாணங்களுடனும், இக்குருவை (துருசு குருவை) சேர்த்து உருக்கினால் பொன்னாகும். இப்பொன்னிற்கு சம அளவு தங்கம் சேர்த்து வேதைபாடினால் அளவில்லாத பொன்னுண்டாகும்.

ஓட்டிய குருதான்கேளு
வொருபணந் தூக்குதூக்கு
ஆட்டிய பலமேசூத
மதற்குள்ளே யிதனைப்போடு
நீட்டிய ரசத்தைவார்த்து
நேரவே தேய்க்கவெண்ணெய்
கூட்டிய காரங்குத்திக்
குறையாம லுருக்கிப்போடே. (பா. 982)

இக்குருவை ஒரு பண அளவு எடுத்து ஒரு பலங்கொண்ட சூதத்துடன் சேர்த்து மத்தித்தால் வெண்ணைப் போலாகும் இவ் வெண்ணையை காரமிட்டு குகையில் வைத்துருக்கினால் மணிபோல் நின்றாடும்.

உருக்கிய ரசத்தை நூற்றுக்
கொன்றிடப் பத்துமாற்று
பருக்கியே தின்ன ஆ ஆ
படுவேகந் துருசுதானும்
நெருக்கிய சாரணைக்கு
நேரான நல்லசூதம்
தருக்கிய துருசுக்கொக்கச்
சகலமு மொவ்வாதென்னே. *(பா. 983)*

இம்மணியை லோகத்துடன் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்தால் பத்துமாற்று கொண்ட தங்கம் கிடைக்கும். மேலும் இச்சூத மணியை சாரணைக்கும் பயன் படுத்தலாம். இத்துருசு குருவிற்கு நிகர் வேறொன்றும் கிடையாது

ஒவ்வாத துருசுரெண்டு
வுத்தம வீரமொன்று
கவ்வாத தாழாயத்தைக்
கடுஞ்சுட்ட சாம்பலொன்று

செவ்வாகக் கூட்டியொன்றாய்ச்
சிறக்கவே யுமிநீர்க்குத்தித்
தவ்வாத வண்டமேலே
தனியொரு பொட்டுபோடே. **(பா. 984)**

குருத்துருசு இரண்டு பலம், வீரம் ஒரு பலம் கத்தாழை சுட்ட சாம்பல் ஒரு பலம் ஆக இம்மூன்றையும் ஒன்றாக சேர்த்து உமிழ்நீர் விட்டரைத்து அண்டத்தின் மேல் ஒரு பொட்டிட்டு ரவியில் வை.

துருசுப் போக்குக்கு வேதை

போட்டிடா யதனாற்செம்பு
புகழான கன்னிகோழி
ஆட்டிடு முதனாள் முட்டை
யடுத்திடு மிருநாள்முட்டை
தேட்டிடு முன்னாள்முட்டை
சிறக்கவே பாட்டைக்கேளு
கூட்டுற வொன்றிரண்டு
குறைமுறை மூன்றுபோடே. **(பா. 985)**

போடவே முதனாள்முட்டை
போட்டோடே ரவியில்வைத்து
ஆடவே யுச்சிநேர
மப்பனே காந்திகாட்டு
தேடவே கழஞ்சிமூன்று
சிறந்தது மேலேமுட்டை
கூடவே பத்தும்பாரு
கொழுந்தொடுஞ் சூடனென்னே. **(பா. 986)**

உடனே செம்பாகும். இதேபோல் கன்னிகோழி இட்ட முதல் முட்டை, இரண்டாம் முட்டை, மூன்றாம் முட்டையை எடுத்துக்கொண்டு அதன் மேல் மேற்படி மருந்தை பொட்டுபோல் இட்டு வெயிலில் வைத்தால் உச்சி வேளையில் தீப்பற்றி எரித்து போகும்.

சூடன்போல் வெந்தேயண்டஞ்
சுழன்றது வெளுப்பேயேறி
வூடன்போல் மஞ்சள்வெள்ளை
யுடன்சேர்ந்து வெளுப்பேயாச்சு
நாடன்போ லண்டநாகம்

நலங்கிய ரசமுங்கெந்தி
வேடன்போல் வார்த்ததற்கு
விரவிற்றுப் பாருபாரே. (பா. 987)

கற்பூரத்தைப் போன்று முட்டையானது எரிந்து குருவாகும். இக்குருவை இரசம், கெந்தி, நாகம் இம்மூன்றையும் சேர்த்து நன்றாக அரைத்து புடம் போட்டால் குருவாகும்.

பாரிந்தக் குருவுக்கொவ்வாப்
பருகிய வச்ரந்தானும்
பாரிந்தக் குருவுக்கொவ்வாப்
பறக்கிற மூத்தான்றானும்
பரிந்தக் குருவுக்கொவ்வாப்
பறியான குருவுந்தானும்
பறியான குருவுக்கொக்கப்
பாரத நில்லாதென்னே. (பா. 988)

நில்லாது நாலுமானால்
நிலையாக நிற்பதேது
வல்லானை பதங்கொண்டாக்கால்
மற்றொன்று நில்லாதப்பா
கல்லானை கரும்பைத்தின்னக்
காட்டிய சொக்கன்காண்பான்
வல்லான கயற்கண்ணானா
மார்க்கத்தை யறிவாள்காணே. (பா. 989)

இக்குருவிற்கு நிகரான வஸ்து உலகில் வேறொன்றும் கிடையாது. சூதகுரு. மூத்தான்குரு, வச்சிரசம், பரிகுரு போன்ற சரக்குகளும் சமமாகாது. இந்நான்கு வகையான வஸ்துவே நிகரில்லை என்றால் வேறு எதுதான் நிகராகும். இதற்கு நிகர் சிவபெருமான்தான். ஆகவே அவருடைய பதத்தை அறிந்து போற்றினால் உனக்கு நிகரான வஸ்து வேறொன்றும் இருக்காது. கயற்கண்ணான தாயைத் தவிர வேறு யாரும் அவரை முழுமையாக அறிந்ததில்லை.

பூணிந்த வண்டநீரைக்
காட்டுமுன் சூதஞ்சாகும்
பூணிந்தச் சூதங்கட்டப்
போக்கெல்லாஞ் சொல்லக்கேளு

ஆணிந்தச் சூதமேலே
யந்தெடை சூதம்வாரு
தோணிந்த ரவியில்வைத்துச்
சூதத்தைச் சூட்டிவாரே. (பா. 990)

வார்க்கிற படியேதென்னில்
வரிசையாய் ரெட்டித்தேறு
தாக்கிற படியேதென்னிற்
றனிச்சமன் சூதம்வாரு
ஆக்கிற தொந்தம்பத்து
மடைவாக ரவியிலேற்று
போக்கிற போக்கேதென்னிற்
புரிசடைச் சிவன்காண்பாரே. (பா. 991)

இவ்வண்ட நீரை சூதத்துடன் சேர்த்தால் சூதம் மடிந்து சாம்பலாகும். இச்சாம்பலுடன் சம அளவு சூதத்தை சேர்த்து ரவியில் வைத்தால் சூதம் மடிந்து போகும். மீண்டும் இம்மடிந்த சூதத்திற்கு இருமடங்கோ அல்லது சம அளவோ மீண்டும் சூதத்தை சேர்த்து ரவியில் வைக்க வேண்டும். இவ்வாறு பத்து முறை செய்தால் மகாரசமாகும். இதனுடைய போக்கை சிவனும் அறியார்.

காண்பாயே சூதக்கட்டு
கைகண்ட வாறுபோலே
பூண்பாயே பாஷாணங்கள்
போக்கெல்லாங் கட்டிப்போகும்
நீண்பாயே தொந்தமேறும்
நிலைநிலை வேதையாகும்
ஆண்பாயே யிந்தச்சூத
மணைக்கச் சாரணைக்குநன்றே.. (பா. 992)

சூதங்கட்டி திடப்பட்டது போல் பாஷாணங்களும் கட்டி மணியாகும். அண்ட குருவால் கட்டிய சூதத்தை முன்செய்தது போல் நூறுமுறை ரசம் சேர்த்து தொந்தித்தால் சாரணைக்கும் வேதைக்கும் பயன்படும்.

நன்றான ரெண்டாமுட்டை
நல்லாண்மை யிதற்குப்பாதி
கன்றான மூன்றுமுட்டை
கண்டுகொ ளிதற்குப்பாதி

வண்டான கூட்டஞ்சென்று
மலருக்குண் மாண்டாப்போலே
பண்டான சூதத்தொடு
பலபல சரக்குச்சாமே. *(பா. 993)*

முதல் நாள் இட்ட முட்டையை காட்டிலும் இரண்டாம் நாள் முட்டை சிறிது தாழ்ந்தது அதைகாட்டிலும் மூன்றாம் நாள் முட்டை மிகவும் தாழ்ந்ததே. ஆனால் எல்லா குருவாலும் சூதம் மடிந்து கிட்டும்.

சாகவே சரக்குக்குள்ளே
சாரவே வீரராசன்
ஆகவே வீரராச
ணணைத்திடத் துருசியோடே
வேகவே தீயும்வேண்டாம்
வெருவியே ரவியில்போடு
பாகவே யெல்லாம்வெந்து
பலபல குருவுமாமே. *(பா. 994)*

வீரம், மற்றும் துருசு இரண்டை அரைத்து சரக்கின் மேல் பூசி ரவியில் இட சுன்னமாகும். தீ வேண்டியதில்லை

ஆமிது வேதோவென்று
ஆள்விட்டு வூன்றிப்பாரு
தாமிது துருசுசத்தி
தயங்கிய வீரமீசன்
ஓமிது ரெண்டுங்கூடி
யொடுங்காம லோடிற்றையா
நாமிது வென்றுபார்க்க
நலக்கறக் கண்டவாறே. *(பா. 995)*

துருசே சக்தி வீரமே ஈசன் இவர் இருவரும் சேர்ந்து நின்றால் மகா குருக்கள் உண்டாகும்.

வாறேது மனந்தான்சத்தி
வழங்கிய புத்தியீசன்
தாறேது சத்திக்கோபந்
தயங்காத சித்தமீசன்
கூறேது ரெவ்வெண்டாகக்
கொள்கிற்றே யுலகமெல்லாம்
வேறேது நாலுமல்ல
விரைந்தநிற் குணத்தின்நேர்ப்பே. *(பா. 996)*

மனமே சக்தி, புத்தியே ஈசன் சக்தியே கோபம், சித்தமே ஈசன், இவ்வாறு இரண்டாக உலகமெல்லாம் வியாபித்து நின்றது.

நேர்ப்பென்றாற் கோபத்தாலே
நிலையாத பிறப்பங்கேது
ஆர்ப்பென்ற கோபச்சத்தி
யாண்பிள்ளைச் சித்தம்பெற்றாள்
வார்ப்பென்ற கோபம்வந்தால்
மைந்தன்வந்தணைப்பான் சாந்தம்
கார்ப்பென்ற பொருளைக்கண்டோர்
கடும்பிறப் பறுப்பார்காணே. (பா. 997)

கோபத்தால் அனைத்தும் பாழாகும். கோபமான சக்தி சித்தம் என்ற மகனை பெற்றாள். ஆகவே மனிதர்கள் கோபம் கொள்ளும் பொழுது சாந்தம் என்ற சித்தன் வந்து அணைத்துக் கொள்வான. இதை அறிந்தவர் பிறப்பு இறப்பை ஜெயிப்பார்கள்.

ஞானதுரியம்

காணுமுன் மனந்தானப்பா
கடியநின் மலமாய்நிற்கும்
தோணுமுன் னலைச்சலாலே
சுழன்றது மனந்தான்நின்று
பூணுமுன் புத்தியூன்றிப்
புக்கிடில் ரெண்டுமில்லை
ஆணுமிவ் விரண்டுக்குள்ளே
யாங்காரி செனித்தவாறே. (பா. 998)

மனம் என்பது நிர்மலமான பொருளாகும். இம்மனமானது தன்னுட நிலையில் நில்லாமல் சுழன்றுக் கொண்டிருக்கும் சமயத்தில் புத்தி வந்து தடுத்து நிறுத்தினால் (பிறப்பு இறப்பு) எனப்படும் இரண்டும் ஒழியும். இம்மனமும் புத்தியும் கூடி ஆங்காரம் உண்டாயிற்று.

வாறேதிங் காங்காரிக்கு
மைந்தனோ நல்லபிள்ளை
கூறேது நாலுமந்தக்
கொடியதோர் சித்தில்தோற்றம்
பேறேது யென்றுபாரு
பிறப்பில்லை யிறப்புமில்லை
தாறேது வேதாந்தத்தைச்
சதநித்த மளைந்து பாரே. (பா. 999)

ஆங்காரம் என்ற தாய்க்கு சித்தம் என்ற பிள்ளை உண்டாயிற்று. இதை அறிந்துக் கொண்டவர்க்கு பிறப்பும் இறப்பும் ஒழியும்.

பாருநீ வேதாந்தத்தைப்
பலகாலும் போதம்பாரு
பாருநீ போதமுன்னிப்
பலநினை வெல்லாம்போக்கிப்
பாருநீ குளிகைகையிற்
பலித்திடப் பரிசித்தப்பா
பாருநீ பார்த்தால்முத்தி
பார்க்காட்டால் சித்தி தானே. *(பா. 1000)*

இந்நான்கு வகையான கருவிகளையும் அடக்கி வேதாந்த பொருளை அனுதினமும் போற்றி மன அலைச்சலை வென்று ஆனந்த போதத்தில் திளைத்து நின்றால் குளிகையும் சித்தியும் ஞானமும் உண்டாகும். வேதாந்தம் பாராமல் வெறுமனே பூசை செய்தால் சித்தி மட்டுமே ஏற்படும்.

சித்தியாய்க் காயம்பண்ணித்
தேசத்தே திரிந்துசித்தா
மத்தியாய் வேதைபோட்டு
மணிகொண்டே யாடுவார்க
ளைத்தியாம் பூரணத்தி
னகண்டத்தை நோக்கானாகி
லெத்தியாஞ் சித்தையாடி
யெவனும்பின் னிறப்பான்தானே. *(பா. 1001)*

காயத்தை சித்தி செய்து தேசம் முழுக்கவும் சஞ்சரித்து குளிகைக் கொண்டு விண்ணில் பறந்தாலும் பின்னொரு காலத்தில் இறந்து மடிவான்.

இறக்காத படியான்சொல்வே
னெளிதாகக் கேளுமப்பா
மறக்காதே மனதைநீயு
மாட்டிடு போதத்துள்ளே
திறக்காத கபாடவாசல்
திறந்துபோங் குளிகையாலே
கறக்காத பாலையுண்டு
களித்துநீ யொன்றாய்க்கூடே. *(பா. 1002)*

இறக்காமல் இருப்பதற்கு வகை சொல்கிறேன் கேள்! மனதை போதத்துள் செலுத்தி குளிகையால் கபாலவாசலை திறந்து அமுர்த பாலை உட்கொண்டால் இறப்பை செயிக்கலாம்.

கூடாதே போனாயாகிற்
குளிகையுஞ் சித்திபொய்யாம்
கூடாதே பஞ்சகர்த்தர்
கூட்டோடே யிறந்துபோனார்
கூடாதே புவனமண்டங்
கோலாட்டுந் துருவன்போனான்
கூடாதே யிருந்தபேர்கள்
கோடானு கோடிபேரே. *(பா. 1003)*

மனதை ஆனந்த போதத்தில் நிறுத்தவில்லை என்றால் வாதமும் சித்தியும் பொய்யாகும். பஞ்ச கர்த்தாக்களும் மனதை போதத்தில் சேர்க்காததால் இறந்து போனார். துருவன் மனதை போதத்தில் செலுத்தியதால் எல்லாவற்றை தாண்டி சாகாமல் நின்றார். மனதை போதத்தில் சேர்க்காமல் கோடிக்கணக்கான மனிதர்கள் மடிந்தனர்.

கோடிதான் துருவனின்று
கூறினே னிலக்கமில்லை
நாடிதா னெருப்பாறப்பா
நலம்பெறு மயிரேபாலந்
தடிதா னிட்டேயேறித்
தாயையுங் கடந்துபோனா
லாடிதான் கண்டசோதி
யதுகண்டாற் பிறப்பும்போச்சே. *(பா. 1004)*

நெருப்பே ஆறு! மயிரே பாலம்! இதை தடி கொண்டு ஏறி தாயையும் கடந்து நின்று கண்டத்திலுள்ள சோதியைக் கண்டால் பிறப்பு போகும்.

போச்சுது பிறப்புமென்று
புகழ்கண்டார் மூலமூர்த்தி
வாச்சுது யென்றுயானும்
வழியோடே யேறிப்போனேன்
ஏச்சுது மாயைக்குள்ளே
யெழுமோச வாதிசெத்தார்
ஆச்சுது யென்னவாழ்க்கை
யகண்டத்தின் வாழ்வுநன்றே. *(பா. 1005)*

இம்முறையை மூலர் எனக்கு கூறினார். அதன்படி நானும் நின்று பிறப்பையும் இறப்பையும் கடந்து நின்றேன். வாதம் செய்யும் வாதிகள் மாயையில் அழுந்தி மாண்டனர். இதை விடுத்து பரவாழ்க்கையை மேற்கொள்ளுவதே சிறந்ததாகும்.

நன்றென்ற மணியும்வாதம்
ஞானிக்கே யீசனென்றார்
தண்டென்ற வாதங்கண்டு
தனிப்பெண்ணால் மாளவேண்டாம்
கண்டென்ற ஞானத்துக்குக்
கண்மணிக் குளிகையப்பா
வண்டென்ற தெல்லாந்தள்ளி
யகண்டத்திற் புக்குபுக்கே. (பா. 1006)

மணி, வாதம் இவை இரண்டையும் ஞானியர்களுக்காக சிவ பெருமான் கூறினார். ஆகவே வாதம் செய்து பெண் மாயையில் சிக்கி மாளவேண்டாம். மணியைக் கொண்டு ஞானமடைந்து மாயையைத் தள்ளி அகண்ட சச்சிதானந்த பொருளுடன் கூடி நில்..

புக்குமுன் னாயிரத்திற்
புகழ்தாது பிறப்பைச்சொன்னேன்
தக்குமிவ் வாயிரத்திற்
சகலமு மடக்கிவிட்டேன்
மக்கும்பின் னாயிரத்தில்
வழங்கிய வழக்கஞ்சொல்வேன்
அக்குமிந் நடுவைப்பாரு
ஆனந்தி பணிசெய்வாளே. (பா. 1007)

முதல் ஆயிரத்தில் தாதுவின் பிறப்பை பற்றியும் இந்த காண்டத்தில் சகல விதமான வாதத்தையும் பின் காண்டத்தில் வாத வழக்கத்தைப் பற்றியும் கூறியுள்ளேன். இந்த நடுக்காண்டத்தில் கூறியுள்ளவைகளை செய்து பார்த்தால் உன்னை ஆனந்தம் வந்து கூடும்.

பணிசெய்யு மாவதேது
பார்க்கின்றோன் பார்த்தோனென்று
அணிசெய்து நடுவேநின்று
ஆடிய பொருள் தானப்பா
தணிசெய்த த்ரிபுடிக்குள்ளே
சகலமுந் தோற்றிமாளு
மணிசெய்த செயலேதென்னின்
மகத்துவங் காணுகாணே. (பா. 1008)

பணி செய்து பார்ப்பது பார்க்கும் பொருள் என்ற பேதங்கள் ஏது எல்லாம் இந்த யோக மாயையின் மகத்துவமாகும். இதனால் தான் சகலமும் தோன்றி மறைகிறது.

காணிது தூரமல்ல
காதத்தின் பொருளதல்ல
காணிது வண்டரண்டங்
கடந்துமுன் னாடுதப்பா
காணிது மனத்தையுன்னிக்
கலந்துநீ கூட்டினாக்கால்
காணிது வேறேயில்லை
கரையில்லை கவிதான்முற்றே (பா. 1009)

ஆனந்த மயமான போதம் வெகு தூரத்தில் இல்லை. அண்டரண்டங் கடந்து நிற்கும் அப்பொருள் உன்னுள்ளேயே இருக்கிறது. அதை மனதால் அறிந்து நில்! நிற்கும் பொழுது அதுவும், நீயும் ஒன்றென்று விளங்கும்.

கொங்கணவர்

வாதகாவியம் 3000

இரண்டாம் காண்டம்

முற்றிற்று.

தாமரை
நூலகம்